

# தொப்புள் கொடி

## (பன்னீர்க்குடம் முதல் கொள்ளிக்குடம் வரை)

திருமதி கலாநிதி ஜீவகுமாரன்

# தொப்புள்கொடி

– பன்னீர்குடம் முதல் கொள்ளிக்குடம் வரை –

திருமதி கலாநிதி ஜீவகுமாரன்

ஜீவநதி வெளியீடு

தொப்புள்கொடி
-பன்னீர்குடம் முதல் கொள்ளிக்குடம் வரை -

ஆசிரியர் : திருமதி கலாநிதி ஜீவகுமாரன்
முதற்பதிப்பு: 2017 மார்கழி
©திருமதி கலாநிதி ஜீவகுமாரன்
அட்டைப்பட வடிவமைப்பு:க.பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம்: 308
விலை: 400.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**ஜீவநதி வெளியீடு - 88**

## சமர்ப்பணம்

எம் அப்பா அம்மாவின் அந்திமக்காலத்தில் அவர்கள் இருவரையும் தம் பெற்றாராக அரவணைத்துப் பராமரித்த பூச்சித்தப்பா, பூஅன்ரி, சின்ன சித்தப்பா, சின்னம்மா, கிளியக்கா மற்றும் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், வைத்தியத் துறையைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும்

# வாழ்த்துரை

அன்புமகள் கலாநிதிக்கு எழுதும் வாழ்த்து மடல்.

கு. சின்னப்பாரதி அறக்கட்டளையின் பெரும் பாராட்டைப் பெற்ற கலாநிதி டெனிஷ் மொழியில் எழுதிய "ஹேர்ளி ஹில்சன் மோவா"வின் தமிழ் மொழிபெயர்ப்பான "இப்படிக்கு அன்புள்ள அம்மா" உடனடியாகவே ஹிந்தி, மலையாளம், ஆங்கிலம்ஆகிய மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு இலக்கிய உலகில் பெரிதும் அறியப்பட்டார்.

அச்சமயத்தில் தொலைபேசியில் உரையாடிய பொழுது, "நான் உங்களை அப்பா என்று அழைக்கலாமா. இந்த விருதுகளை விட தங்களை என் இலக்கியத் தந்தையாக நினைப்பது எனக்குப் பெருமை" என்றார்.

அந்த சத்திய வார்த்தையும் அவர் காட்டும் பாசமும் இன்று வரை தொடர்கின்றது.

தற்பொழுது தனது தாயாரின் ஒரு வருட அந்திமச் சடங்கிற்காக தனது தாய் தந்தை இருவரின் வாழ்க்கை வரலாற்றை இலக்கியச் சுவையுடன் கூடிய ஒரு நவீனமாக கொண்டு வருகின்றார்.

அது முன்னைய "இப்படிக்கு அன்புள்ள அம்மா"வை விட இன்னும் சிறப்பும் அவருக்கு பெயரும் புகழும் அளித்திட வேண்டும் என என் மகளுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அன்புடன்**

**கு. சின்னப்பபாரதி**

**நாமக்கல்**

15-12-2017

## ஆசியுரை

## தாய்மையின் சாசுவதமான குறியீடு : தொப்புள்கொடி

*கருவிலே வளரும் சிசுவுக்கு ஊட்டமளிக்கும் ஊடகமாகத் திகழும் தொப்புள்கொடி தாயுடன் சேயை இணைக்கும் பணியை மட்டுமா செய்கிறது?*

*கருவினுள் உயிர் தோன்றிய நாளிலிருந்தே அந்த உயிரைப் பேணிப் பராமரித்து உரிய காலம் வந்ததும் உலகுக்குப் பரிசாக அளிப்பதும் அந்தத் தொப்புள்கொடி தானே!*

*பிறந்ததுமே தொப்புள் கொடியைத் துண்டித்து தாயிடமிருந்து சிசுவைத் தனியாகப் பிரித்தாலும் அந்தப் புனித உறவு என்றும் நிலைத்திருக்கும்.*

*ஆயிரம் பசுமாடுகள் மந்தையாகச் செல்லும்போதும் கன்று தன் தாய்ப்பசுவை சரியாக அடையாளம் கண்டு கொள்வதன் காரணம் இந்தத் தொப்புள்கொடி உறவே. மரத்திற்கு ஆணிவேர் போல முக்கியத்துவம் வாய்ந்தது மனிதகுலத்திற்குத் தொப்புள்கொடி. ஆகவே தொப்புள்கொடியை தாய்மையின் சாசுவதமான குறியீடு எனலாம்.*

*தாய்மார் வந்தும் போயும் இருக்கலாம். சேயும் ஒருநாள் தாயாகலாம். ஆனால் தொப்புள்கொடி பரம்பொருள் போல நிலையானது.*

*இத்தனை மகிமையும் புனிதமும் வாய்க்கப்பெற்ற தொப்புள்கொடியின் பெயரால் ஒரு காப்பியம் இயற்றியுள்ளார் பிறவியிலேயே கலாநிதியாக உதித்த கலாநிதி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருவிதாங்கூர் மன்னராக உதித்த சுவாதி திருநாள் ராம வர்மா மகாராஜாவை "கர்ப்பச் சீமான்" என்று அழைப்பார்கள். அதாவது "கருவிலே திருவுடையார்"*

என்று அழைப்பார்கள். மருமக்கத்தாய வழக்கத்தின்படி அவரது தாய்மாமனான அரசர் மறைந்தபோது அடுத்த பட்டத்துக்கு உரிய அந்த மன்னர் தாயின் கர்ப்பத்தில் இருந்தார். கருவிலே திருவுடையார் எனப் போற்றப்பட்ட சுவாதி திருநாள் ராம வர்மா சாகித்திய விற்பன்னராகவும் சங்கீத கலாநிதியாகவும் திகழ்ந்தார். அதேபோல கருவில் வாசம் செய்யும்போதே இந்த நூலாசிரியை யும் அதீதமான விழிப்புணர்வுடன் இருந்திருக்க வேண்டும். ஆகவே தான் தந்தை சேதுகாவலனார் இவருக்கு கலாநிதி என்று பெயரிட்டார் போலும். காந்திஜியின் அடியாராக - பாரதி பக்தராகத் - திகழ்ந்த சேதுகாவலர் இவரைப் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வளர்த்திருகிறார் காந்தியடிகளின் சத்தியத்தில் அஞ்சாநெஞ்சுடன் நிற்கப் பழக்கியிருக்கிறார். ஈழத்தமிழில் “கலாநிதி. என்ற சொல் முனைவர் பட்டத்தைக் குறிப்பதாகும். அவ்வாறு இட்ட பெயருக்குப் பங்கம் விளையாமல் இவர் பிறவிக் கலாநிதியாகவே விளங்குகிறார்.

சுபத்திரையின் கர்ப்பத்திலிருந்த போதே அபிமன்யு கேட்கும் திறன் பெற்றிருந்தான் என்கிறது மகாபாரதம். இந்த இதிகாச உண்மையை இன்றைய அறிவியல் ருசுப் படுத்துகிறது. அதன்படி பார்த்தால் கலாநிதியும் கருவில் வாசம் செய்கையிலே புறவுலகச் சலசலப்புகளைக் கேட்டிருக்க நியாயம் உண்டு. உள்ளும் புறமுமாக இருந்த பழக்க வாசனை காரணமாகத் தானோ என்னமோ, கனவை நிமித்தமாக வைத்துக் கொண்டு, தாம் குடியிருந்த கோயிலுக்குள் அடிக்கடி போய் வருகிறார்.

ஒரு குடும்பத்தை வியாஜமாக வைத்துக் கொண்டு ஒரு சமூகத்தின் ஓர் இனத்தின் சரித்திரத்தை இந்தப் படைப்பு ஆவணப்படுத்துகிறது. நிகழ்காலத்தில் காலூன்றியபடியே நினைத்த போதெல்லாம் கருவறை நோக்கி கடுகதியில் பறந்து தொப்புள்கொடிச் சரித்திரத்தைப் பதிவு செய்கிறார், அதன் பயனாக குடும்பத்தை மையமாகக் கொண்டு ஈழத் தமிழினத்தின் வரலாறு இங்கே ஆவணமாகிறது. அந்த வரலாற்று ஆவணம் கருவறைப் பிரவேசங்கள் மூலமாக இலக்கியத் தரம் பெறுகின்றது. இன்னொரு சுவையான விடயம், தொப்புள்கொடிக்கு அடிக்கடி பயணம் செய்தாலும் பன்னீர்க்குடம் முதல் கொள்ளிக்குடம் வரை தாயும் தாய்மையும் முக்கியப்படுத்தப் பட்டாலும், கலாநிதிக்கு

தாயைகாட்டிலும் தந்தையிடம் தான் அளவற்ற பாசம். இது நவீன உளவியல் உண்மையை ருசுப்படுத்துகிறது. எனது கணிப்பில் இது அவ்விருவரின் முற்பிறப்பு நெருக்கத்தைச் சுட்டுகிறது.

குடும்பம் என்றால் சைவம்-தமிழ் காந்தி இம்மூன்று சக்திகளுக்கும் வாரிசாக விளங்கும் குடும்பம். இடையிடையே இயேசுவும் சேர்ந்துகொள்கிறார். அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா தொடங்கி கணவர் குடும்பத்தில் தொடர்ந்து நேற்றுப் பிறந்த மிதிலாவின் குஞ்சுமகன் வரையிலும் பரஸ்பரம் நிலவும் அன்பும் பாசப் பிணைப்பும் ஒற்றுமையும் ஆதர்சமானவை. இத்தகைய அன்பும் ஒற்றுமையும் சமூகத்தில் - நாட்டில் உலகில் பரவலாக இருக்கப்பெற்றால் இந்த வையகமே சொர்க்கமாகி விடும் என்பதில் ஐயமில்லை.

கலாநிதி, ஜீவகுமாரன் குடும்பத்தின் அன்பிலும் பாசத்திலும் திளைக்கக் கிடைத்த அனுபவத்தினை இன்னமும் அசைபோட்டுக் கொண்டிருக்கிறேன். 2012 ஜூலைத் திங்களில் இரண்டு வாரம் டென்மார்க்கில் விருந்தினனாக அன்று, மிதிலா மீராவின் அம்மப்பாவாகத் தங்கினேன். கலாநிதி-ஜீவகுமாரன் தம்பதியர் மட்டுமன்றி இவர்கள் அழைத்துச் சென்ற தமிழ்க் குடும்பங்கள் அனைத்திலும் தமிழ் மரபு விடாமல் காக்கப்படு வதைக் கண்டு வியந்தேன். ஒரு பாணை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற முதுமொழிக்கு இணங்க, ஆடிப் பண்டிகையன்று பாயாசமும் கொழுக்கட்டையும் சுவைக்கக் கிடைத்தது - ஏழ்கடல் தாண்டிய அந்த நாட்டில்.

இப்படிக்கு அன்புள்ள அம்மா என்ற காவியப் புதினம் இயற்றி அதை இந்தியில் மொழிபெயர்க்கையில் என்னைப் பலமுறை கண்ணீர் சிந்தச் செய்த மகள் கலாநிதி இப்போது “தொப்புள்கொடி”க்கு ஆசியுரை வழங்கக்கோரி மீண்டும் நெஞ்சை நெகிழக் செய்துள்ளார். கனிந்த நெஞ்சுடன் அவரை “வாழ்க வளமுடன்”என மனமார வாழ்த்துகின்றேன்.

**முனைவர் ஹரி. பாலசுப்பிரமனியம்**
**முன்னாள் வருகைதரு பேராசிரியர்**
**ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புது தில்லி**
**15-12-2017**

# அணிந்துரை

*மனைவியின் படைப்புக்கு கணவனே அணிந்துரை எழுதிய சம்பங்கள் இலக்கிய உலகில் நிகழ்திருக்கின்றதா என நானறியேன்.*

*பக்கச் சார்பாகவும் எழுத முடியாது. பக்கம் மாறி நின்றும் எழுத முடியாது. நடுநிலையில் நின்று எழுதியே ஆக வேண்டும்.*

*இந்த நவீனத்தில் அடிக்கடி வரும் "சாமிட பிள்ளை"யாக என்னை நான் வரித்துக் கொண்டு என்னையும் என் எழுத்தையும் இறுதிவரை நேசித்த என் முதல் வாசகியான என் மாமியாரின் வாழ்க்கைப் பதிவுக்கு அணிந்துரை வழங்குவதை பெருமையாக நினைத்தே இந்தப் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.*

*இது ஒரு கல்வெட்டா?... இது ஒரு நினைவு மலரா?... இது ஒரு நவீனமா? என்ற கேள்விகள் என்னுள் எழுந்த பொழுது ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் ஒரு கல்வெட்டுத்தான். ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் ஒரு நினைவு மலரைத் தந்து விட்டே போகின்றது. ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் ஒரு நவீனம் தான் என்ற பதிலை இந்த "தொப்புள் கொடியுடன்" நான் பயணப்பட்ட பொழுது நானே கண்டு கொண்டேன்.*

*சப்ப தீவுகளில் ஒன்றான அனலைதீவில் வாழ்ந்திருந்த கணபதிப்பிள்ளை, சுந்தரம், வேலுப்பிள்ளை, விசாலாட்சி என்ற நான்கு வெள்ளாந்தி மனிதர்களின் வாழ்வின் ஓட்டமும்... அந்த ஓட்டத்தில் பெற்றெடுத்த பிள்ளைகள்... வீட்டுக்கு வந்த மருமக்கள்... அவர்களின் வழித் தோன்றலான பேரப்பிள்ளைகள்... என முதலாவது பூட்டப் பிள்ளையின் தோற்றம் வரை நடந்த அஞ்சல் ஓட்டம் தான் இந்த நவீனம்.*

*இயற்கையுடனும் விவசாயத்துடனும் கல்வியுடனும் கோவில்களுடனும் இணைந்த அனலைதீவின் அமைதியான*

வாழ்வு.... அவசர உலகமாக மாறிக் கொண்டிருந்த யாழ்ப்பாண கொழும்பு வாழ்வு... இடம் பெயர்வு என்றும் புலம் பெயர்வு என்றும் இன்றுவரை மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் அவல வாழ்வு... என இந்த மூன்று வாழ்வும் இந்த நவீனத்தின் நாயகியையும் நாயகனையும் தாலாட்டியும், போட்டுப் பிரட்டி எடுத்த விதமும் தான் இந்த நவீனத்தின் கருப்பொருள்.

இந்த நவீனத்தின் சம்பவக் கோவைகளை குடும்ப நிகழ்வுகள் மட்டும் இணைத்தும் இழுத்தும் செல்லாமல் ஆன்மீகத் தத்துவங்களும் வாழ்வியல் தத்துவங்களும் நகர்த்திச் கொண்டு செல்கிறன. இந்த தத்துவங்கள் அனைத்தும் சொர்ணலட்சுமி என்ற தாயும் சேதுகாவலர் என்ற தந்தையும் கலாநிதி என்ற மகளுக்கு கொடுத்த தாய் வீட்டுச் சீதனமாகவே இவற்றை நான் பார்க்கின்றேன்.

இந்த நவீனத்தை சுவை குன்றாமாலும்... ஒரு பரம்பரையின் வாழ்வியலின் அழகியல் சிதைவுறாமலும் நகர்த்திச் செல்வதற்கு கலா எடுத்துக் கொண்ட உத்தியை பாராட்டியே ஆக வேண்டும்.

பன்னீர்க்குடத்தினுள் தொப்புள் கொடியுடன் தன் வாழ்வைத் தொடங்கும் சிசு ஒரு கலாநிதி.

சரன் தோளில் கொள்ளிக் குடத்துடன் முன் செல்ல, வாசல் கேற்றுக்குப் பக்கத்தே பிரித்த வேலியினூடு பின்னால் ஓடும் 57 வயதும் வாழ்பனுபவமும் நிரம்பிய இன்னோர் கலாநிதி.

இந்த இரு கலாநிதிகளின் சந்திப்பு நிகழும் பொழுது பன்னீர்க்குடமும் உடைகிறது.

கொள்ளிக் குடமும் உடைகிறது.

இந்தப் புள்ளியில் இந்த நினைவுமலர் ஒரு நவீனம் என்ற வடிவத்தைப் பெறுகிறது என்று நான் உணர்கின்றேன்.

கலா தனது தாய்க்கும் தந்தைக்கும் தம் பரம்பரைக்கும் ஆற்றிய பெரிய கடமையாக இந்த நவீனத்தை நினைத்துப் பெருமைப் பட்டால்... கலாவின் கையெழுத்துப் பிரதியை கணினியில் எழுதி அதனுடன் பயணப்பட்ட பெருமையை, என்னை என்றும் நேசித்த மாமியாரும் - என் இலக்கித் தோழியுமான திருமதி. சொர்ண லட்சுமி சேதுகாவலரின் காலடியில் சமர்ப்பிப்பதில் எனக்கு

கண்ணீர் கலந்த கௌரவம்.

வேறு என்ன?

அஞ்சல் ஓட்டம் தொடர்கிறது.

எங்களுக்கு முன்னால் இளம் ரத்தங்கள்.

இன்று முன்னதாக எம் பேரன் யுவன் ஓடிக்கொண்டு இருக்கின்றான்.

பின்னால் ஆருரனும் அரிகரனும் மிதிலாவும் மீராவும்.

இவர்களுடன் அப்பாவினதும் அம்மாவினதும் வழித் தோன்றல்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பூட்டப் பிள்ளைகளும் யுவன்களாகவும் யுவதிகளாகவும் தொடர்கிறார் கள்... தொடர்வார்கள்...

அந்த அனலைமண்... வானுயர்ந்த பனைகள்... பச்சைப் பசேலென்ற தோட்டங்கள்... வயல்கள்...சோளகக் காற்று... லோஞ்சுப் பயணம்...லோஞ்சு வரும் பொழுதெல்லாம் பரபரப் பாகும் கோட்டையடி... ஐயனாரையும் புளியந்தீவானையும் சுற்றிய "அரோகரா" ஒலிகள்... இன்னும் மனிதத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் அந்த மண்ணின் வெள்ளாந்தி மனிதர்கள்... எதுஎதையோ எமக்கு சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.

அன்புடன்

வி. ஜீவகுமாரன்.

15-12-2017

## என்னுரை

நான் இந்தப் பூமிக்கு வந்து என் தொப்புள் கொடி அறுபட்டு இன்றுடன் 57 வருடங்கள் ஆகிவிட்டன. என் தம்பிமாருக்கும் முறையே 54, 51 வயதாகின்றன.

நாட்டை விட்டு நான் அகதியாகப் புலம்பெயர்ந்து 32 வருடங்கள் ஆகிவிட்டன.

யார் அது?

கலாவா?

எந்தக் கலா?

எந்த ஊர்?

யார் அப்பா?

யார் அம்மா?

அனலைதீவா?

எந்த வட்டாரம்?

இந்தச் சமுதாயம் கேட்கும் கேள்விகளை என்னை நோக்கி நானே பலமுறை கேட்டுப் பார்த்துள்ளேன்.

மண் விளையாடி... மரம் செடி கொடிகளுடன் கதைத்தபடி திரிந்த அந்தச் சின்னபாப்பா கலாக்கும் சரி....

இன்று 57 வயதில் முதுமையை நோக்கி நடைபயிலும் கலாவுக்கும் சரி...

"நான் யார்?" என்ற தேடல் ஒரு பெரும் தேடலாகவும், அதுவே ஒரு பெரிய சவாலாகவும் இருந்து வந்துள்ளது.

கற்பப்பை வாசம்... அனலைதீவு வாசம்... மன்னார் வாசம்... கொழும்பு வாசம்... யாழ்ப்பாண வாசம்... என்று சொந்த மண்ணில் பறந்து... பறந்து...பின் கண்டம் விட்டு கண்டம் மாறி... நாடு விட்டு நாடு மாறி... தேய்ந்து போய்க்

கொண்டிருக்கும் என்னுள் எப்பொழுதும் "நான் யார்" என்ற இந்தக் கேள்வி பிரமசூத்திரமாகவே இருந்து வந்துள்ளது.

அப்பா இறந்தால் நானும் இறந்து விடுவேன் என நினைத்திருந்தேன். இல்லை. நான் இறக்கவில்லை.!

அம்மா இறந்தால் நானும் இறந்து விடுவேன் என நினைத்திருந்தேன். இல்லை. நான் இறக்கவில்லை!!

அம்மாக்கு இறுதிக் கிரியைகள் நடந்த பொழுது என் வயிறு துடித்தது. கைகால்கள் எல்லாம் நடுங்கின... மூச்சுவர மறுத்தது... என் வயிற்றில் என் தொப்புள் கொடியை யாரோ வெட்டியது போல இருந்தது.

அம்மா என்ற அந்த தெய்வம் என் வயிற்றுக்குள் குடியிருந்ததா?

இல்லை...இந்த 57 வயதுக் கலா அவாவின் வயிற்றினுள் இருந்தாளா?

இல்லையே!

அம்மாவையும் என்னையும் பிணைத்திருந்த அந்தத் தொப்புள் கொடி உறவை வெட்டிப் பிரித்து அவாவை கொண்டு போய் தீயிட்டு விட்டனர்.

நான் தேடினேன்.... தேடினேன்.... அந்தத் தேடலில் அப்பா... அம்மா எங்கே என்று தேடினேன்.

திருவிழாவில் தொலைந்து போன குழந்தையாக என் கேள்விக்கான பதிலைத் தேடினேன்.

என்னுள் என் பரம்பரை மரபணுக்கள் ஒரு இராஜங்கமே நடத்துகின்றன என அறிந்தேன்.

அப்பா அம்மாவின் எச்சம் நானன்றி வேறுறொன்று மில்லை என அறிந்தேன்.

வெட்ட வெட்ட தழைக்கும் மரங்களைப் போல்... வெடித்த விதை மீண்டும் மரமாவது போல்... அப்பா அம்மா என்னுள்... என் ரத்தத்தில் குடியிருந்தனர்.

என்னுள் அவர்கள் வாழுகின்றார்கள் என்பதே ஒரு நிறைவு. அந்தர்யாமியாக காற்றோடு காற்றாக... என் மூச்சுக் காற்றாக... என் சுவாசப்பைகளை தினம் தினம் நிரப்பியபடி... அந்த அனலையின் புண்ணிய ஆத்மாக்கள் என்னை ஆசீர்வதித்த படி... இப் பிரபஞ்சத்தில் நிறைந்து இருப்பார்கள்.

## நன்றியுரை

*"நன்றி" என்பது மூன்றெழுத்து. அதில் நான் சொல்ல வருவது ஒரு கோடி எழுத்து.*

*நான் கையெழுத்துப் பிரதியாக எழுதிய இந்நூலை கணினியில் அச்சேற்றியதும்... கூடவே பெத்த பிள்ளையைப் பராமரிப்பது போல என் நினைவுகளுக்கு உருக்கொடுத்து... தன் நித்திரையை தியாகம் செய்து... இந்த தொப்புள் கொடி என்னும் புதினத்தை ஜீவா பெற்றுத் தந்துள்ளார். எனக்கு அப்பா அம்மாவாகவும்... எல்லாம் ஆகவும்... இருக்கும் அந்த நல்ல இதயத்துக்கு நன்றிகள். ஓடும் நதியில் விழும் மழைத்துளிகளாக என் நன்றிகளும் அவரிடம் சங்கமிக்கட்டும்.*

*அடுத்து இந்த நூலுக்கு ஆசியுரை தந்த இந்திய இலக்கியத் துறையில் மாபெரும் தடம் பதித்த இரண்டு முதுபெரும் ஆளுமைகள்.எம் இலக்கியப் பெற்றோர்கள் திரு. சின்னப்பபாரதி ஐயா, திரு. பாலசுப்பிரமணியம் ஐயா இருவருக்கும் என் கோடான கோடி நன்றிகள். எனக்கும் ஜீவாக்கும் அம்மையாயும் அப்பனா யும் இருந்து எம்மை வழிநடாத்தும் இந்த இரு இனிய இதயங் களின் ஆசீர்வாதம் இந்நூலுக்குக் கிடைத்தமை என் பூர்வ ஜன்ம பாக்கியமே. எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் எழுத்துப் பிழை பார்த்துத் தந்த, எம் தமிழ் அன்னை தந்த அண்ணா புத்திசிகா மணிக்கும், குஞ்சக்கா என அன்புடன் நான் அழைக்கும் காலம் சென்ற எழுத்தாளர் முல்லையூரானின் துணைவியார் திருமதி. நாகேஸ்வரி சிவராஜா அவர்கட்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் இந்நூலின் இடம் பெற்ற படங்களை தம் கணினித் திறமையால் மெருகூட்ட உதவிய எனது மகள் வினோத், மருமகன் காமராஜ் இருவருக்கும் என் பாசம் கலந்த நன்றிகள். இந்நூலை அழகாக சீராக அமைத்து நூலுருவாகி வாசகர் கைகளில் தவழ விட்ட தம்பி பரணீதரனுக்கும் என் உளமார்ந்த நன்றிகள்.*

இங்ஙனம்

திருமதி. கலாநிதி ஜீவகுமாரன்

டென்மார்க்

15-12-2017.

# பன்னீர்க்குடம்

*சுற்றிவரத் தண்ணீர்!*
*ஆம் - என்னை சுற்றிவரத் தண்ணீர்!!*
*சிவத்த நிற*
*சின்ன சின்ன வலைகள்*
*என்னைச் சுற்றி!!!*
*கடலா?*
*குளமா??*
*ஆறா???*
*தெரியவில்லை!*
*நான் இங்கு ஒரு சதைப்பிண்டமாய் இருக்கின்றேன்.*

*இந்தப் பிண்டத்தில் ஆங்கேங்கே புறத்தள்ளல்கள்.*

*கொஞ்சம் கொஞ்சமாக கை, கால், காது, கண், முகம் எல்லாம் வருகிறது.*

*இதயம் "டிக்"... "டிக்" என்று அடிக்கிறது.*

*கைகாலை நீட்டி நீச்சலடிக்க முடிகிறது.*
*நன்றாக இருக்கின்றது.*
*குஷியாக இருக்கின்றது.*
*மீன் தொட்டியுள் மீன்கள் நீந்துவது போல...*
*மேலும் கீழும் போய் வந்து கொண்டிருக்கின்றேன்.*

*இந்தக் குளத்தின் சுவரைத் தொட்டுப் பார்க்கின்றேன்.*

*வழுக்கு வழுக்கு என்று இருக்கிறது.*

*என்ன இது?*

*குளத்தின் சுவரில் இருந்து ஒரு கயிறு வந்து என்ரை வயிற்றில் முடிச்சுப் போட்டு இருக்கிறது.*

*என்ன இது?*
*என்ன இது கட்டு?*
*ஏன் இந்தச் சிறையடைப்பு?*

*கட்டுடைத்து வெளியே போகப் பார்க்கின்றேன்.*

*கட்டுடைப்பு என்பது ஒரு புதிய உலகத்திற்கான தேடல்.*

*அந்த தேடலை இந்த சின்ன இதயம் இப்போ சிலநாட்களாகத் தேடுகின்றது.*

*ஆனாலும் இந்தச் சிவத்தக் கயிறு விடுகுதில்லை.*

*மீண்டும் மீண்டும் முயற்சிக்கின்றேன்.*

*ம்...ம்... என்ன முயன்றும் முடியவில்லை.*

*ஒவ்வொன்றிற்கும் அது அதற்கான காலம் வரவேண்டும் போலும்.*

*000*

*இது என்ன இடம்?*
*சிறைக்கூடமா? கர்ப்பக்கிரகமா??*

*கத்திக் கத்திப் பார்க்கின்றேன் - எவராவது உதவிக்கு வருகிறார்களா என்று!*

*சத்தம் வெளியில் வருகுதில்லை!*
*களைத்து விட்டேன்!!*

*சுற்றிவர ஒரே சத்தம்*
*காதைத் துளைக்கின்றது*
*என்ன சத்தமிது?*
*சப்பாத்துக் காலடிகளா?*
*பொலிசா? ஆமியா?*

*நான் ஓடிறன்.*
*கள்ளிப் பற்றைகள்...*

*கிளுவை மர வேலிகள்...*
*பாறையாய் பிளந்து கிடக்கும் எங்கள் ஊர் தரிசு நிலங்கள்...*
*அத்தனையூடும் ஓடுகின்றேன்.*

*அதிகாலை ஐந்திற்கு வைத்த அலாரம் அடிக்கின்றது.*

*விழித்துக் கொள்கின்றேன்.*

*இது கனவா??*

*அலாரத்தை அமைதிப்படுத்தி விட்டு கண்களை மூடப் பார்க்கின்றேன்.*

*முடியவில்லை.*

*நெஞ்சின் படபடப்பு கண்களுக்கு தடை போடுகிறது.*
*உடம்பின் உதறல் மனதைப் போட்டு அலைக்கழிக்கின்றது.*

*000*

## பனிபடர் நாட்டின் ஒரு அதிகாலைப் பொழுது...

*மீண்டும்அலாரம் - வேறு தொனியில்!*

*இது ஜீவாவின் அலார மணிக்கூடு.*

*விடியப் போகிறது.*

*காலை 5 மணி.*

*ஆனாலும் சுற்றி வர வின்ரர்கால இருட்டு.*

*வின்ரர்கால இருட்டு நீண்டது சம்மர்கால இருட்டு குறுகியது எங்கள் சந்தோசங்களையும் துன்பங்களையும் போன்று.*

*சேவல்களின் கூவல்கள் இல்லை...*

*கோயில் மணியோசைகள் இல்லை...*

*வீதியில் விரைந்து போகும் வாகனங்களின் ஒலிகள் இல்லை...*

*பால்காரனின் சைக்கிள் மணிச்சத்தமும் இல்லை...*

*பத்திரிகைகள் வந்து விழும் அசுமாத்தங்களும் இல்லை...*

*யன்னலினூடு எட்டிப் பார்த்தால் மட்டும் ஆங்காங்கே வீடுகளில் விளக்குகள் போடப்படுவதைக் காணலாம்.*

*ஒன்றிரண்டு வீடுகளில் தொடங்கி அடுத்து அடுத்து அந்த எண்ணிக்கைகள் கூடும். திருப்பள்ளியெழுச்சி பாடாது துயில் எழும் காலைப் பொழுதுகள் அவை.*

*வருமானத்தேடல்கள் தூக்கத்தின் போர்வையை விலத்தி விட*

விழித்துக் கொள்ளும் வேளை அது.

யன்னலால் எட்டிப் பார்க்கின்றேன். அடிவானத்தில், சூரியனின் ஆத்தா மெதுமெதுவாய் கோலம் போடத் தொடங்கி விட்டா.

பற்பசையும் பற்தூரிகையும் என்னிடம் வா.. .என்னிடம் வா என போட்டி போட்டுக் கொண்டு என்னைக் கூப்பிடுகின்றன.

இரண்டும் இணைந்தால் தான் எனக்குப் பலன்.

ஆனாலும் போட்டிகள்... பிரிவினைகள்...

ஒற்றுமையின் பலன் புரியாத பிரிவினைகள் உலகத்தை ஆட்டி படைத்துக் கொண்டிருக்கின்றன. உலகம் முழுக்க குண்டு வைத்துக் கொண்டிருக்கிறது பயங்கரவாதம். கொளுத்திப் போட்ட சீனவெடி போல் மனித உயிர்கள் சிதறிப் போகின்றன.

ஆளுக்காளான அரசியல்கள் குடும்பங்கள் இடையே தாச்சிக் கோடு விளையாடுகிறன...

பழங்களை எட்டித் தொட்டதை விடகாய்க்கை பழம் ஆகியவையே அதிகமாய் இருக்கிறன...

“சேம் சைட் கோல்கள்” என்பன எங்கள் வாழ்க்கையில் அதிகமாகவே காணப்படுகிறன...

முகம் கழுவி தேத்தண்ணி ஊத்தி ஜீவாக்கும் குடுத்திட்டு வெளியே எட்டிப் பார்க்கின்றேன். உடுப்பில்லாத மரங்களில்“உர்”... “உர்”... என அடிக்குது பனிக்காற்று!

ஒழுங்காக எங்களை கொஞ்சம் படுக்க விடு என கத்துதுகள் தாம் கட்டிய கூட்டினுள் இருந்த குருவிகள்.

வாழ்க்கை என்பது போராட்டம் தான் - கருவறைவரையில் இருந்து கல்லறைவரை.

கொஞ்சம் கொஞ்சமாக வானத்தில் மிதந்தபடி வெடித்த இலவம்பஞ்சில் இருந்து எழும் பூக்கள்போல பனிப்பூக்கள் கீழே இறங்குகின்றன. அது ஒரு அழகான காட்சி!

காணக்கண்கள் கோடி வேண்டும்!!

திருப்பதி தரிசனம் போல மனமும் உடலும் குதூகலிக்கும்!!!

யன்னலை மெதுவாகத் திறக்கின்றேன் - சுகமான பனித் தென்றல் என்னை முத்தமிடுகின்றது பிறந்த குழந்தையை ஸ்பரிக்கும் சுகம்!

அந்தப் பனிக்காற்றின் வருடல் அம்மாவின் சேலைத் தலைப்பில் தொங்குவது போலவும் அப்பாவின் முதுகில் சவாரி செய்வது போலவும் ஒரு சுகத்தைத் தருகிறது.

அடுக்கு மாடியில் இருப்பவனுக்குத் தான் தெரியும் காற்றின் அருமை. அந்த மாடியால் இறங்கி வந்தால்தான் தெரியும் மண்ணின் அருமை. பனிக்காலம் வந்தால்தான் தெரியும் பகலவனின் சூட்டின் அருமை. எம் இரட்டைப் பெண் குழந்தைகளும் திருமணமாகி,டென்மார்க்கின் மற்றத் தீவில் வாழ்கின்றார்கள்!

தீவுகளின் கூட்டம் தான் டென்மார்க்!!

பருத்திதீவு, எழுவைத்தீவு,அனலைதீவு, நயினைதீவு போல சின்ன சின்ன தீவுகள். அவை அவற்றின் அழகு அவையவைக்கு. மாமா மாமியும் தங்கள் வாழ்வை முடித்த பின்பு…எங்கள் பிள்ளைகள் தங்கள் புது வாழ்வைத் தொடங்கிய பின்பு… நிலத்துடன் அமைந்த வீட்டை விற்று விட்டு இந்த மாடி வீட்டுக்கு வந்து விட்டோம்.

இங்கு புல்லு வெட்டத் தேவையில்லை.வீட்டைச் சுற்றி வேலி வெட்டத் தேவையில்லை.காலத்திற்கு காலம் வீட்டிற்கு வெளியில் பெயின்ற் அடிக்கத் தேவையில்லை. இது வேறு ஒரு வாழ்க்கை! வாழ்வினை வேறு பார்வைகளினால் பார்க்கும் வாழ்க்கை!! மாடியின் எதிர் எதிர்பக்கயன்னலைகளைத் திறந்து விட்டால்காற்று ஒரு பக்கமாக உள்ளே வந்துமறுபுறத்தால் வெளிச் செல்லும்.

மெரினா பீச்சும் இதுதான்

கோல்பேசும் இதுதான்

வேறென்ன வேண்டும்?

6.30 மணிக்கு ஜீவா வேலைக்குப் புறப்பட்டு விடுவார்.

ஜீவா மாநகரசபையில் கணினிப்பொறுப்பாளராக இருக்கின்றார். அது அவரின் கல்வி சம்மந்தமான வேலை. மொழிபெயர்பு வேலையும் நூலக ஆலோசகர் வேலையும் அவரின் மனத்திருப்திக்காக அவர் பார்க்கும் வேலைகள்.

கிழமையில் 5 நாள் வேலை. இரு நாள் விடுப்பு. தவிரவும் வருடத்தில் 6 கிழமை லீவு.

செம்பாட்டுத் தரைகளில் கால்கள் படநடந்து திரியவும் அதிகமாக இலக்கியங்கள் பேசவும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான எமது பயணங்களின் எதிர்பார்ப்பிலும் வருடத்தின் மிகுதி வாரங்கள் ஓடிவிடும்.

எனக்கு தீராத மூட்டு வலியும் முழங்கால் வலியும் வந்துமுழுநேர வேலையை என்னிடம் இருந்து பறித்து விட்டன. பாடசாலையொன்றில் கிழமைக்கு நான்கு நாட்கள் வேலை. அதுவும் தினமும் 3 மணித்தியாலம் தான். அதைவிட அவ்வப்போது மொழிபெயர்ப்பு வேலை. அழைப்பு வந்தால் மட்டுமே அந்த வேலை.

அவ்வாறு அழைப்புவேலை வருவதாயின், யாராவது இந்த நாட்டில் அகதி அந்தஸ்து கேட்க வேண்டும்... அல்லது யாராவது நோய்வாய்ப்பட வேண்டும்... அல்லது குடும்பச் சச்சரவுகள் நீதிமன்றம் வரை செல்ல வேண்டும்.

ஆம்

கண்களையும் மனத்தையும் மூடிக்கொண்டு... காதையும் வாயையும் திறந்து வைத்துக் கொண்டு செய்யும் தொழில் அது.

உங்களுக்கு பத்து திங்களில் ஒரு பிள்ளை பிறக்க இருக்கின்றது என்பதையும் நாமே சொல்வோம்...

உங்களின் கணவருக்கு இனி வைத்தியத் துறையால் உதவ முடியாது என்பதையும் நாமே சொல்வோம். இரண்டிற்கும் ஒரு

மணித்தியாலச் சம்பளம் தான். இதில் பொசிற்றிவ்வான சம்பளம் என்று ஒன்றும் இல்லை. நெக்கற்றிவ்வான சம்பளம் என்று ஒன்றும் இல்லை. இலங்கைப் பெறுமதிக்கு ஒரு குறோன்களுக்கு எத்தனை ரூபாய் என்பது தான் நிஜம்.

காலை 7.30 மணிக்கு எமது மாடித்தொடரின் வாழ்வின் அழகை யன்னலால் ரசித்தால் ரம்மியமாக இருக்கும்.

சந்திரமண்டலம் செல்லும் விண்வெளிவீரர்கள் போல பனிக் குரிய உடுப்புகளைப் போட்டபடி முதுகில் புத்தககப்பைகளைச் சுமந்தபடி சின்னஞ் சிறுசுகள் பாடசாலைக்குச் செல்வார்கள்.

7.30க்கு ஒன்று இரண்டு எனத் தொடங்கி ஏழு... எட்டாகி... 7.45ஆகும் பொழுது இருபத்தைந்து முப்பதாக அவர்களின் தொகை கூடும்.

புற்தரையின் மீது பனிபடர்ந்திருக்க அதன் மீது ஊர்ந்து செல்லும் எறும்புகள் போலப் போய்க் கொண்டு இருப்பார்கள்.

8 மணிக்கு பாடசாலை தொடங்கிவிடும்.

அவர்கள் சென்ற காலடித் தடங்கள் பனியில் படிந்திருப்பது மிக அழகாக இருக்கும்.

முதலாம் வகுப்பிலேயே தனியே பாடசாலைக்கு போய் வரப் பழகிவிடுவார்கள்.

அம்மா அப்பா கூட்டிச் செல்லவும்.. மதியம் சாப்பாட்டுடன் சென்று காத்திருக்கவும்... பின்னேரம் மீண்டும் கூட்டி வரவும் தேவையில்லை.

இங்கு அப்பா அம்மா மட்டுமில்லை. பாட்டா பாட்டியும் வேலைக்குப் போய்விட்டிருப்பார்கள்.

பிள்ளைகள் தாங்கள் தாங்களாகவே வளர்வார்கள் - தங்கள் தங்கள் சுயத்துடனும்... சுயமரியாதையுடனும்.

பாடசாலைக்குப் போகவும் வரவும் சைக்கிள் பாதை வேறு.. நடைபாதை வேறாக இருக்கும்.

பாலர் பாடசாலைப் பிள்ளைகள் தான் பெற்றோர்களுடன்... நடந்து அல்லது சைக்கிளின் பின்னால் உட்கார்ந்தபடி... அல்லது காரினுள் இருக்கைப்பட்டியைப் போட்டபடி.... தத்தம் தினசரி வாழ்க்கையை ஓட்டுவார்கள்.

பின்பு மாலையில் அனைவரும் இல்லம் என்னும் கூட்டினுள் வந்தடைவார்கள்.

*000*

## சூழலும் சுற்றாடலும்

கடந்த இரண்டு நாட்களாக ஒரு குப்பைப் பை இந்த நடைபாதையில் அனாதரவாகக் கிடக்கிறது.

அதற்குள் என்ன இருக்கிறது என்பது பரம ரகசியம்.

“என்னைப் பார்... என்னைப் பார்” என அந்தப் பை கத்துகிறது.

“போடா... போ... இதுக்கு எங்களுக்கு நேரம் இல்லை” என்று சொல்லியபடி சின்ன வண்டுகள் பள்ளிக்கூடம் செல்லுகின்றன.

இந்தக் குப்பைபையை குப்பைக் குழியுள் சேர்த்து விடு என ஒரு தாய் தன் பிள்ளையிடம் கொடுத்து விட்டிருக்கலாம்.

அல்லது... யாரோ ஒரு குடிகாரன் கடையில் வாங்கிய பொருட்களை அந்தப் பையுடன் மறந்து போய் விட்டிட்டுப் போயிருக்கலாம்.

எது எப்படியாக இருந்தாலும் இப்ப அனாதரவாக நிற்பது அந்தப் பை தான்.

திடீரென தேசாந்திரம் போன வெண்புறாக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து இறங்குகின்றன.

பனிபடர்ந்த இந்த மண்ணின் மீது கொத்திக் கொத்தி இரை தேடுகின்றன.

அது சரி! அங்கே என்ன கிடைக்கும்? பனிக்குளிரில் எப்படி புழுக்கள் உயிர் வாழும்? நம்மைப் போலஅது என்ன உடம்பை மூடி ஜக்கற்று போட்டு, கழுத்தைச் சுற்றி மௌளரும் கட்டியபடி வாழவா முடியும்?

ஏதோ ஒரு நப்பாசையில் இந்தப் புறாக்கள் அடிக்கடி இந்தப் பனிப்பூமியை முத்தமிடுகின்றன. இச்சு இச்சு என பூமியை முத்தமிடுவதும்... எழும்பிப் பறப்பதும் அவையின்ரை கூத்து பெரிய கூத்தாகிப் போச்சு.

இந்தப் பறவைக் கூட்டத்தில் இரண்டு மூன்று புறாக்கள் மட்டும் ஏதோ சி.ஐ.டி. வேலை பார்ப்பது போல அந்தப் பையை சுற்றி சுற்றி மீண்டும் வருகின்றன.

மெல்ல மெல்லமாக நீ, நான் என்று போட்டி போட்டு அந்தப் பையை முட்டி மோதி கொத்திக் கொத்திக் கிழிக்கின்றன.

ஒரு கொத்து கொத்துவதும் பிறகு பறப்பதுமாக பாடு படுகின்றன. ஆனால் அவர்களால் முடியவில்லை.

பகீரதப் பிராயத்தனப்பட்டு ஒரு வழியாக போரை முடிவுக்கு கொண்டு வந்தன.

இந்த நாட்டில் சாப்பாட்டுக் குப்பைகள் தெருவீதியில் கிடப்பது மிக அருமை.

குருவிக்குரிய சாப்பாட்டைச் சரி... பூனை நாய்க்குரிய சாப்பாட்டைச் சரி கடைகளில்தான் வாங்க வேண்டும்.

இங்கு பாரதி போல் சமைக்க வைத்திருந்த அரிசியை எல்லாம் எடுத்து அவற்றிற்குப் போடமுடியாது. போட்டாலும் அவை உண்ணாது. அவைகளுக்கான சோள உருண்டைகளை கடை களில் காசு கொடுத்து வாங்கிக் கட்டித் தொங்க விட வேண்டும்.

அவ்வாறே நாய்களும் பூனைகளும் கோப்பையில் எஞ்சிய சோற்றையும் மீன் முட்களையும் உண்ணும் இனங்கள் இல்லை. அவர்களுக்கு என்று அரசியல் கட்சிகள் மட்டும் இல்லையே தவிர மற்ற எல்லா வசதிகளும் பிரத்தியோகமாக உண்டு.

இங்கு எவரும் நேர்த்திக்கடன் வைத்து சுவாமிகளுடன் வரவு செலவு பார்ப்பதில்லை...பாவ புண்ணியக் கணக்குகள் பார்ப்பதில்லை... பதிலாக செல்லப் பிராணிகளை மிகவும் கவனமாகப் பார்ப்பார்கள். கிறிஸ்மஸ்க்கு அவைகளுக்கு கூட

பரிசுப் பொருட்கள் அன்பளிப்புச் செய்வார்கள்.

நிலத்தில் சாப்பாட்டுக் குப்பையிருந்தால் எலிகளும் பெருச்சாளி களும் படையெடுக்கும் என்பதால் நிலத்தில் சாப்பாட்டை வீசமாட்டார்கள்.

எனக்கு அந்தப் புறாக்களைப் பார்க்க பாவமாய் இருக்கின்றது. மனசு கேட்கவில்லை. யாரும் பார்க்காத நேரத்தில் காய்ந்த பாண் துண்டுகளை யன்னலினூடு அந்தப் புறாக்களை நோக்கி வீசுகின்றேன்.

சின்ன வயதில் பாடசாலையில் தரும் பாணுக்குள் பையன்கள் கிளாஸ் துண்டுகளை வைத்து வீசுவதை நினைத்துப் பார்க் கின்றேன். அவை செத்து விடுமா என இன்றுவரை எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவங்களைப் பார்த்து "நீங்கள் அடுத்த பிறவியில் காகங்களாய்தான் பிறப்பீர்கள்" என நான் சபித்தது ஞாபகம் இருக்கிறது.

சில புறாக்கள் இரண்டாம் மாடி உயரத்திற்கு எழுந்து வந்து என் பாணைக்கௌவ்விச் செல்லுகின்றன.

சில நிலத்தில் விழுந்த பாண் துண்டுகளுக்கு கிட்டவாக சென்று முகர்ந்து சோதித்த பின்பே உண்ணுகின்றன.

உணவுக்கும் உறையிடத்திற்கும் தானே இந்தப் புறாக்களும் ஓடிக் கொண்டு இருக்கின்றன.

நாங்களும் இதுக்காகத்தானே நாட்டை விட்டு இத்தனை காததூரம் பறந்து அகதிகளாக இந்த நாட்டுக்கு வந்தோம்.

000

# அகதி வாழ்வு

*நாம் டென்மார்க் வந்து **31** வருடங்களாகி விட்டது.*

*அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, பிறந்து வளர்ந்த சொந்த ஊர்... தவழ்ந்து விளையாடிய சொந்த மண்...சொந்த தோட்டம்... சொந்த வீடு... "அ" எழுதி விளையாடிய எங்கள் வீட்டு முற்றம்... வியர்க்க வியர்க்க ஓடி விளையாடிய சொந்த வெயில்... கடல் கொண்டு வந்து கரையிறக்கும் சொந்தக் காற்று... சொந்த ஆடு,மாடு, நாய், பூனை, புத்தகம், உடை, செருப்பு... இத்தியாதி... இத்தியாதி சொந்தங்களை விட்டு விட்டு, பறந்து பறந்து வந்து இங்கு அகதிகளாக மறுஅவதாரம் எடுத்தோம்.*

*இங்கு வந்து ஆறுதலாகவா இருந்தோம்?*

*மணிக்கூட்டுக்கும் கலண்டருக்கும் பயந்து பயந்து ஓடி ஓடி உழைத்தோம்.*

*இங்கு கிழமைக்கு சட்டத்தின் படி. **37** மணித்தியால வேலைதான். நாம் **3**யையும் **7**யையும் முன்பின்பாக மாற்றி **73** மணித்தியாலமாக உழைத்தோம்.*

*என்ன உலகம் இது?*

*குழைக்கட்டுக்குப் பின்னால் ஓடும் ஆடு மாடுகள் போல காசைக்காட்டிக் கொண்டு வெள்ளைக்காரன் முன்னால் போக போக நாம் பின்னால் ஓடிக்கொண்டு இருந்தோம். ஆடு மாடு*

கூட வயிறு நிறைந்தால் நின்று அதனை அசைபோட்டு விட்டுத்தான் போகுங்கள். ஆனால் நாம் அசைபோடும் நேரத்தில் கூட இரண்டொரு டொலர் உழைக்கலாம் என்று ஓடினோம்.

காலைத் தேனீர் ஆறும் வரையில் சிந்தனையில் மூழ்கி விட்டேன்.

மெல்ல மெல்ல மணிக்கூடு ஊர்ந்து மணி பத்தை தொட்டு விட்டது.

கீழே போய்த் தபால் பெட்டியைத் திறக்கின்றேன்.

"எமது சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தவிர்க்க பறவைகளுக்கு யன்னல்களால் சாப்பாடு போடவேண்டாம்"

இது எனக்காக தைக்கப்பட்ட தொப்பிதான் என உள்மனம் சொல்லுகிறது.

என்ன செய்வது?... சகல ஜீவராசிகள் கஸ்டப்படும் பொழுது கண்ணை மூடவா முடியும்??

இப்படித்தான் நான் சின்னவளவாய் இருந்த பொழுது தோட்டத்து கிணற்றை நோக்கி வரும் மாடுகளுக்கு தண்ணி அள்ளி வைப்பேன். முதலில் ஒன்றிரண்டு என்று தொடங்கி பின் அவை மற்றவையும் கூட்டிக் கொண்டு நாலு ஐந்து என கடைசியில் இருபது இருபத்தைந்து என லைனிலை நிற்பினம். நல்ல பண்பு அவைகளிடம். பஸ்சுக்கு துண்டு போட்டு இடம் பிடிக்கிறமாதிரி இடிபடாமல் கிரிசாம்பாளாக பொறுமையாக நின்று தண்ணீ குடித்து விட்டுப் போய்விடுங்கள்.

நன்றியைச் சொல்லவோ என்னவோ பக்கத்து தோட்டத்து மாடுகள் கூட எங்கள் தோட்டத்தில் பசிய சாணத்தை போட்டு விட்டுப் போகுங்கள்.

"ம்மா..." "ம்மா..." என அவை கத்தும் ஓசை இப்பவும் காதைக் குடைந்து கொண்டு இருக்கிறது.

இந்த மாடுகள் இரைமீட்டுவது போல என் நெஞ்சாங்

கூட்டுக்குள்ளே நிரம்பியிருக்கும் நினைவுகளை அசை போடுவதில் அப்படி ஒரு சந்தோசம்... சுகம்.

அந்தக் கூடுகளுள் உள்ள முட்டைகள் எல்லாவற்றயைும் பொரிக்க வைத்து வானில் பறக்க வைக்க மனம் துடிக்கின்றது.

யன்னலைத் திறந்து குளிர்காற்றை வீட்டின் உள்ளேயும் மனத்தினுள் உள்ள புழுக்கங்களையும் வெளியேயும் பறக்க விடுகின்றேன்.

இப்போ அந்தப் புறாக்கள் அந்தப் பையை கொத்திக் கிழிப்பதில் வெற்றி கண்டு விட்டன. இரண்டு நாள் போராட்டம் இன்று முடிவுக்கு வந்து விட்டது போலும். ஆனந்தமாக உணவுகளை கொத்தி கொத்தி எடுப்பதும் அதில் உள்ள சின்ன சின்ன துண்டுகளை தூக்கிக் கொண்டு பறப்பதிலும்தான் எத்தனை சந்தோசம் அவைக்கு.

சுதந்திரமாக அவை இறகுகளை விரிக்கும் போது காற்று அவற்றை சுமந்து கொண்டு போவது போலத் தெரிகின்றது. அவையின் பறப்பில் என்னவொரு இலாவகம்.

அனைத்தும் சேர்ந்து மேலே எழுதலில்தான் என்னதோர் ஆனந்தம்!

ஒன்றாய் இருப்பதிலும் ஒன்றாய் உண்பதிலும்தான் எத்தனை கோடி இன்பம் கொட்டிக் கிடக்கின்றது.

ஆனால் நாங்கள் தான்?

புறாக்கள் போல சிறகுகளை விரிக்க, எமக்குள் உள்ள பந்தங்களும் கடமைகளும் எம்மை விடுவதில்லை. நாங்களாக எங்கள் சிறகுகளில் கல்லுகள் கட்டியது போலவும்... நாங்களாக எங்கள் கால்களில் விலங்குகள் பூட்டியது போலவும்... கடமை... கடமை... கடமை என்று மூன்றெழுத்தே எங்கள் வாழ்க்கையைச் சிறை வைத்து விடும். இத்தகைய எண்ணங்களும் செயல்களும் எங்களை கட்டி வைத்திருக்கும் பொழுது எவ்வாறு சிறகை விரித்துப் பறப்பது?

மற்றது எங்களுக்குள் உள்ள பொறாமை... ஒற்றுமை யின்மைகள் என்பன கிணற்றில் இருந்து மேலே வர விரும்பும் நண்டுகளை மற்ற நண்டுகள் கீழே இழுத்து விடுவது போல.... மீண்டும் மீண்டும் பாழ் கிணற்றில் குடித்தனம் பண்ணு கின்றோம்.

எந்தச் சிறகையும் எம்மால் சுதந்திரமாக விரித்து மேலே பறக்க முடிவதில்லை.

மொத்தத்தில் எம்மையும் எம் எதிர்காலத்தையும் போர் வேறு திண்டு பசியாறி விட்டது. அதன் பசி இன்னமும் ஆறவில்லைப் போலும்.

காலச்சக்கரம் சுற்றுகின்றது.

உண்ட களை முடியமுன்பு குச்சிகள் பொறுக்கின்றன புறாக்கள். பக்கத்து காட்டினுள் குடி வரப்போகினம் போல இருக்கு. அதுகள் ஒன்றாக வாழவும் ஒன்றாக இருக்கவும் கொடுத்து வைத்திருப்பவை போலும்.

“பாஸ் போட் வேண்டாம்... விசா வேண்டாம்... வந்து குடி புகுங்கள் மக்களே“, என கை நீட்டி அழைக்குது காடு. ஒன்றாக உறங்கவும்... ஒன்றாக உண்ணவும் ஒரு கோடி இன்பத்தை கொட்டித் தந்திருக்கிறான் இறைவன். மனுசன் தான் காடுகளை அழித்து அவற்றின் நிம்மதியைக் குலைக்கின்றான்.

பக்கம் பக்கமாக பாயைப் விரித்து அப்பா அம்மாக்கு நடுவில் நானும் தம்பிமாரும் படுப்பதும்...அவர்களில் காலைப் போட்டுக் கொண்டு அவர்கள் கதை வாசிப்பதைக் கேட்பதும்... அவர்கள் கண்ணயர்ந்ததும் நாங்கள் மூவரும் தலையணியால் அடிச்சு சண்டை போடுவதும் மீளப் பெற முடியாத சந்தோசங்கள்.

இப்போது நான் இங்கு டென்மார்க்கிலும் தம்பிமார் இருவரும் கனடாவிலும்.

யுத்தம் எல்லோரையும் குண்டக்க மண்டாக்க தூக்கி பூமிப்பந்தின் வெவ்வேறு மூலைகளில் எறிந்து விட்டது.

வட துருவம் தொடக்கம் தென் துருவம் வரையிலும்... கிழக்காசிய நாடுகள் தொடக்கம் மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் கல்லெறிபட்ட தேன்கூடுகள் போல கலைந்து போய் இருக்கிறது எம் தமிழ் இனம்.

முகமூடி போட்டு ஆள்காட்டி மனுசன் வீடுவீடாக வலம் வந்த காலம் அது.

கூடவே ஆமி வாகனங்கள் மனித விருந்துண்ண தமிழர்கள் வீடுகளுக்கு வந்த நேரமது.

கம்பங்களில் தொங்கும் மனித உடல்களுடன் காலைகள் கண் விழித்த நாட்கள் அவை.

எங்கே எதுக்கு எனச் சொல்லாமல் கொள்ளாமல் எம்மிளம் குழந்தைகள் தலைமறைவாய் மறைந்த காலங்கள்.

அப்போது தான் எங்கள் மூத்த தம்பியை வெளிநாட்டுக்கு அனுப்பினோம். அனுப்பி விட்டு இரண்டு மூன்று கிழமையாக யார் முகத்தையும் யாரும் பார்காமல் தவித்துக் கொண்டு திரிந்தோம்.

நெஞ்சம் கனக்க கனக்க கண்கள் அடைமழை பொழிந்த காலம் அவை.

எப்பவும் தானுண்டு தன் வேலையுண்டு என இருப்பவன் அவன். யாரையும் ஒரு வார்தை திட்டிப் பேசியறியாத ஒரு ஜீவன் அது.

பெயர் நிர்த்தானந்தன். நித்தன் என்று கூப்பிடுவோம்.

இப்போ வயது 54 ஆகுது.

வாழ்க்கை வாழ ஒரு பொம்பிளைத் துணை தேவையில்லை என வாழ்ந்து வரும் ஒரு கட்டைப் பிரமச்சாரி. அம்மா ஆஞ்சனேயரைக் கும்பிட்ட பலனோ தெரியாது... அவன் அவரின் வாரிசாகி விட்டான்.

““விருப்பமில்லாதவனுக்கு கட்டிக் கொடுத்தால் வாற பொம்பிளையின்ரை வாழ்க்கை வீணாகிப் போய் விடும்” என

அம்மா அடிக்கடி சொல்லுவா.

வீட்டுக்கு வராத யாரோ ஒரு மருமகளுக்கு அம்மா நல்ல மாமியாராய் இருந்திருக்கின்றா என்பதில் எனக்கு அம்மாவை நினைத்து எப்பவுமே பெருமை.

சின்னத்தம்பியின் பெயர் நிருத்தாசரன். வயது 51. காந்தி நல்ல நிறமாக இருந்தால் எப்படி இருப்பாரோ அப்பிடி இருப்பான். அவன் உடுப்பதும் வெள்ளை. அவனின் மனதும் வெள்ளை.

கல்யாணம் ஆகி இரண்டு மகன்களுடன் கனடாவில் வாழ் கின்றான். மனைவி வாணி. அவரும் டாக்டர். என்னை டாக்ட ராக பார்க்க முடியாத அப்பா அம்மாவின் கனவு அவர்கள் இருவராலும் நனவாகியது.

அப்பாவையும் அம்மாவையும் நீண்டகாலம் கொழும்பில் வைத்து அணைத்துப் பார்த்தது அவர்கள் தான்.

தலைப்பிள்ளை ஒன்றை யமனுக்கு தாரை வார்த்துக் கொடுத்து விட்டு அம்மா அழுத கதைகளை கதை கதையாக கேட்டிருக்கின்றேன்.

1958 பிரசவத்துக்காக அம்மா யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில்!

"ஆலமரம் வெட்டப்பட்டு பால் ஒழுகக் கனவு கண்டேன்... நான் மெயில் லோஞ்ச்சுக்கு ஆஸ்பத்திரிக்குப் போகப் போறன்", தம்பி மாமா ஐயாட்ட சொல்லிப் போட்டு பெரியாஸ்பத்திரிக்கு வாறார்.

அவர் வந்து சேர முதல் அம்மாக்கு பிரவசம் ஆச்சுது. நிறை கூடிய குழந்தை பெற்று எடுக்க முடியாமல் ஆயுதம் போட்டு இழுத்து எடுக்க.... தலையில் இரத்தம் வந்து... பிள்ளை இறந்து விட்டது.

மாமா கனவு கண்டது போல அம்மாக்கு தாய்ப்பால் ஓடிக் கொண்டிருந்ததாம்.

பிறந்து இறந்த பிள்ளைக்கு அப்பா "இளங்கோ" எனப் பெயர் வைச்சாராம்.

அந்தச் சோகம் எம் குடும்பத்தை ஓர் ஆட்டு ஆட்டு வித்துப் போட்டுப் போனதாம். அதனால் அடுத்துப் பிறந்த என்னைப் பையனாகவே வளர்த்தனர். ஆண்பிள்ளை உடுப்பு, கட்டை கால் சட்டை, வீர விளையாட்டுகள், ராக்கிங் கதைகள், முதலாளித்துவ போக்குகள் என நான் வைத்தது தான் வீட்டில் சட்டமாயிருந்தது.

காலம் உருண்டோட அந்த அல்லிராணி வெளிநாடு வந்தா.

ஜீவாவின் அப்பா அம்மாவை டென்மார்க்கில் பராமரித்தது போல என் அப்பா அம்மாவைப் பக்கத்தில் வைத்துப் பார்க்கவில்லை என்ற குற்றவுணர்வு எப்போதும் எனக்குண்டு.

நெஞ்சாங்கூட்டுக்க முள்ளுக் குத்த குத்த அவர்களை பிரிந்து வந்த துயரமும், குற்ற உணர்வும் கை கோத்து என்னைச் சிறைப்பிடிக்க அவர்களுக்கு தூரத்து தண்ணியாகப் போனேன் நான்.

அப்பாக்குச் சரி... அம்மாக்குச் சரி... எந்த ஒரு வருத்தம் என்றாலும் உடனே விமான ரிக்கற் எடுத்து ஜீவா என்னை இலங்கைக்கு அனுப்பி விடுவார். அப்புறம் என்ன? மாதக் கணக்காக சாப்பிடாத அப்பா என்னைக் கண்டால் எழும்பி உட்கார்ந்து விடுவார். இப்படி அடிக்கடி போய் அவர்களின் பற்றரியைச் சார்ச் செய்வதுதான் என் வேலையாய் இருந்தது.

தேசாந்திரம் போன காற்றாகிப் போன எனக்கு கடைசியில் அப்பாவுக்கு வாய்க்கரிசி போட முடியாமல் போய்விட்டது.

நான் எப்ப விழுந்தாலும் "அப்பா" என்றுதான் அழுவேன். "அம்மா" என்று சொல்லி அழத் தெரியாத பிறவிநான்.

அப்பா செத்துப் போனால் நானும் செத்துப் போவேன் என்றுதான் நினைத்திருந்தேன் - கடந்து போன 54 வருடங்களாக.

"நீ நினைப்பதெல்லாம் நடப்பது என்றால் நீ என்ன கடவுளா?" என எக்காளம் கொட்டிச் சிரித்தது காலம்.

கடிவாளம் பூட்டிய குதிரையாக காலம் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. சூரியனும் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் ராஜபவனி வந்து கொண்டிருக்கின்றான்.

காலனும் அப்பப்ப கள்ள வேடம் போட்டு ஆட்களை கடத்திக் கொண்டுதான் இருக்கின்றான்.

ஆச்சி... அம்மம்மா... ஐயா.. தாடி ஐயா.அம்மம்மா.... நாகலிங்கத் தாத்தா-சின்ன அம்மம்மா... தம்பிமாமா... சித்தப்பா-சித்தி-பிள்ளைகள், பெரியய்யா-பெரியம்மா... கமலா சித்தப்பா... இந்த வரிசையில் களவாணி யமன் வந்து அப்பாவையும் களவாடிப் போனான்.

000

# ஐயா என்றொரு ஆலமரம்

*அப்பா இறந்து போன பின்பு அம்மா தன் தங்கைமாருடன் வவுனியாவில் வாழ்கின்றா . தினமும் பூஜை முடிய அம்மாக்கு டெலிபோன் எடுக்காமல் என் அன்றைய நாள் நகரப்போவ தில்லை.*

*ஒரு அண்ணா, மூன்று தங்கைகள், இரண்டு தம்பிமார் என ஆனந்தமான குயில்களின் கூடாக இருந்தது அம்மா குடும்பம்.*

*தில்லைநாயகம், சொர்ணலட்சுமி, சிவஞானம், பூமாவதி, சோதி நாதன், தவநாயகி என முத்துமுத்தாக தம் ஏழு பிள்ளைகளுக்கும் பெயர் வைத்திருந்தனர் அம்மம்மாவும் ஐயாவும்.*

*அந்தக் காலத்தில் "பஞ்சம்" ஊரில் தலைவிரித்தாடிய பொழுது தன் கடையிலுள்ள அரிசி சாமான்களை சனங்களுக்கு இலவசமாக ஐயா எடுத்துக் கொடுத்திருக்கிறார். இலவசத்தைப் பெற்றவர்களும் மற்றவர்களும் சேர்ந்து "இவருக்கு மாறாட்டமா?" என வியந்து கதைத்ததே பின்னாளில் இவருக்கு "மாறாட்டம்" என்ற பட்டப்பெயர் தொற்றிக் கொள்ளக் காரணமாய் விட்டது. அன்றிலிருந்து ஐயாவை "மாறாட்டம் கணபதிப்பிள்ளை" என ஊரில் அழைப்பார்களாம்.*

*இப்படி எங்கட ஊரில் எல்லோருக்கும் ஒரு பட்டப்பெயர் உண்டு. அந்தளவு கவித்தத்துவம் வாய்த்த மக்கள் எம்மூரவர்.*

*மருந்துக்கடை, கூப்பன்கடை, கொன்றாத்து வேலை, விவசாயம், புகையிலை வியாபாரம் என பன்முகம் கொண்ட*

உழைப்பாளி எங்கள் ஐயா.

அந்தக் காலத்தில் ஊரில் பல புதுமைகளைப் பண்ணுவதிலும் அவரே முன்னோடி.

முதன் முதல் ஊரில் சைக்கிள் வாங்கி ஓடியது... தையல் மிசின் வாங்கியது... என பல பல முயற்சிகளைச் செய்தவர்.

ஊரில் அதிகமான தோட்டக் காணிகளை வைத்திருந்தவர்... கொன்றாத்து எடுத்து புளியந்தீவுக்கும் அனலைதீவுக்கும் இடையில் பாலம் கட்டியவர்... சொந்த மச்சாளான அம்மம்மா வைக் கல்யாணம் கட்டி ஊர் மெச்ச வாழ்ந்தவர்... அம்மம்மா வுக்கு அப்பா இறந்த பொழுது ஆச்சிக்குத் துணையாக அவவைப் பாசமாக வளர்த்தவர்கள் அவரின் அண்ணாமார் - தக்காளி ஐயா காசி ஐயா - இவர்களின் பிள்ளைகள் மச்சான் மச்சாளாக இருந்தாலும் கூடப்பிறந்த சகோதரர்களாக எப்பவும் இருந்தார்கள்.

காசி ஐயாக்கும் "பிறவி" என்று ஒரு பட்டப்பெயர் உண்டு. காரணம் அவர் சகோதர பாசத்தால் தங்கையைச் சரி... யாரையும் சரி... "பிறவி" "பிறவி" என்றே சொல்லுவார். இந்தப் பிறவியில் "எதுவும் மாறலாம். ஆனால் நமக்கு அப்பா அம்மாவும் கூடவுள்ள பிறவிகள் மட்டும் மாறப் போவதில்லை", என அடிக்கடி சொல்லுவார். அம்மம்மாவில் அவ்வளவு பாசம் அவருக்கு.

அம்மா குடும்பம் ஆலமரம் போல பல பல விழுதுகளைக் கொண்டது.

உற்றார்... உறவினர்... அயலவர்கள் என்பதனையும் தாண்டி ஐயாவுக்கு வேறு சில உறவுகளும் இந்து சமுத்திரத்தால் வந்து சேர்ந்த வரலாறு உண்டு.

பிழைப்புத் தேடி அந்தக் காலத்தில் அகதிகளாக இந்தியாவில் இருந்து மக்கள் வந்து எங்கள் ஊர்க்கரையில் ஒதுங்குவார்கள். அவர்களை வீட்டுக்குக் கூட்டி வந்து சாப்பாடு கொடுத்து ஆதரித்து பின் அவர்களை வவுனியாவில் தன் காணிகளில்

குடியமர்த்தியவர் ஐயா.

எங்கள் வீட்டில் “வடக்கத்தியர் கிடாரம்” என ஒரு கிடாரம் இருந்தது. காரணம் அந்தக் காலத்தில் அதில்தான் சமையல் செய்து அவர்களுக்கு கொடுத்தார்கள். மேலும் விவசாயம், வியாபாரம், கொன்றாற்க் வேலை என சுறுசுறுப்பாய் உள்ள அந்த வீட்டுக்கு அம்மாவும் தம்பி மாமாவும் தான் முதலாளிமார்.

நிர்வாகத் திறனிலும் சமையல் கலையிலும் அம்மாக்கு நிகர் அம்மா தானாம் என சோதிமாமா கதைகதையாக சொல்லக் கேட்டிருக்கின்றேன். வேலைக்கு வரும் கூலியாட்களுக்கு கூட இட்லி தோசை என சமைச்ச கை அம்மாவின்ரை கை என எப்போதும் சொல்லுவார்.

அந்தக் காலத்தில் ஐயா செய்த புண்ணியத்தின் ஏதோ ஒரு எச்சம்தான் பின்னடியில் அம்மா தன் தங்கைமாருடன் வசித்த வவுனியாக் காணி. பத்து ஏக்கர் வளவு. பெரிய பண்ணை போல வீட்டைச் சுற்றி ஐந்தாறு சின்ன சின்ன வீடுகள். அதில் வாடகைக்கு ஆட்கள் குடியிருக்கிறார்கள்.

அப்பாவும் அம்மாவும் இப்படி ஒரு வீட்டில் தான் தம் அந்திமக் காலத்தில் வசித்தவர்கள்.

பூ அன்ரியும் சித்தப்பாவும் தான் எல்லாரையும் பொறுப்பாக பார்த்துக் கொள்வது.

பூ அன்ரியின் 4 பிள்ளைகளுக்கும் வெளிநாட்டில் தான். சித்தப்பாக்கு 80 வயதாகிறது. ஆனாலும் இப்பவும் மார்க் கண்டேயர் போல நாட்டு வைத்தியங்களுடன் குடையை வோக்கிங் ஸ்ரிக்காகப் பிடித்துக் கொண்டு கம்பீரமாக நடந்து திரிவார்.

அவர் எக்கவுண்டனாயிருந்து உதவி ஆணையாளராய் இருந்ததால் கணக்கு வழக்கு எல்லாம் சுண்டு விரலில் இருக்கும்.

உன்ர காசு... என்ர காசு... உங்கட ஆட்கள்... எங்கட ஆட்கள்... என்ற கதை, நினைப்பு ஒரு போதும் சித்தப்பாக்குச்

சரி... பூ அன்ரிக்குச் சரி இருந்ததில்லை.

ஏன்!... இந்தக் கூட்டுக் குடும்ப அமைப்பில் இருந்த யாரிடமும் இந்தக் குணாதிசயம் இல்லை.

அம்மாவை நான் "நான்முகி" எனப் பகிடி பண்ணுறதுக்கு காரணம் எனக்கும் என் தம்பிமாருக்கும் ஒரு அப்பா ஒரு அம்மா இல்லை. அம்மா, சின்னம்மா, பூ அன்ரி, கிளியக்கா என இந்த நான்கு உருவமும் சேர்ந்ததுதான் எங்கள் "அம்மா".

இந்தப் பாச மலர்களுடன் என் தொப்புள் கொடியும் சேர்ந்தே கட்டப்பட்டு இருந்தது.

அவ்வாறே இந்த தொலைபேசித் தொடுப்பும்.

போன் எடுத்தால் எல்லோருடனும் நான் கதைத்த பின்பு தான்அம்மா என்னுடன் கதைப்பார்.

அப்படி ஒரு சம்பிரதாயம் அங்கு.

எப்பவோ அறுத்துப் போட்ட தொப்புள் கொடிக்கு உயிர் கொடுத்தது இந்த தொலைபேசி தொடுப்புத்தான். "பக்"... "பக்"கென்று அடிக்கும் நெஞ்சாங்கூட்டுக்கு ஒத்தடம் கொடுப்பதும் இதுதான். தூரத்து தண்ணீர் ஆபத்துக்கு உதவாது என்றாலும் தூரத்து தொலைபேசித் தொடர்புகள் தான் மனதுக்கு உரமாவதும் இதமாவதும். சதா கடிதங்களை நினைத்துக் கொண்டிருந்த கண்களுக்கு இப்ப வேலை கொஞ்சம் குறைந்து விட்டது. சந்தனக் கட்டை தேய தேய மணப்பது போல முதுமையின் சுகமாக மணத்தையும் நான் உணர்ந்தது இந்த தொலைபேசி என்ற தொப்புள் கொடி மூலம்தான்.

எம் தோற்றங்கள் மாறும்... தோல் சுருங்கிப் போகும்.. பற்களும் தொலைந்து பொக்கைவாய் மிஞ்சும்... தலைக்கு வெள்ளை அடிச்சு இயற்கை சிரிக்கும். ஆனாலும் இந்த முதுமையில் பாசம் மட்டும் வற்றாத ஆறாய் ஓடும்.

காலம் அதிகமில்லை... கதைக்கவும் நேரமில்லை... மேலே போக எப்போது ரிக்கற் வரும் என ஆயிரம் எண்ணங்கள்.. ஆயிரம் பயங்கள்... மீதியுள்ள குறுகிய காலத்தை எண்ணி

நமக்கு ஞானம் வந்து அது ஆனந்தமாய் மாறுவது இப்படித் தான் போலும்.

என்னதான் இருந்தாலும் பூமி மட்டும் சுற்றுவதை நிறுத்துதா? மணிக்கூடு ஒரு வினாடி வேகமாக சுற்றுதா?... அல்லது ஒரு வினாடி தாமதமாக சுற்றுதா?... நாம மட்டும் விதிவிலக்கா என்ன!

வேலைக்குப் போய்... வீடு வந்து... சமைத்துச் சாப்பிட்டு... ரி.வி. பார்த்து....படுக்க, அன்றைய நாள் “டாட்டா” காட்டும். மறுபடி விடியும்.

நாளை மற்றொரு நாளாகும்.

மணிக்கூடுதான் எங்கள் வீட்டு முதலாளி. திட்டமிட்டு வாழவும் திருப்தியாக வாழவும் நாம் காலத்துக்கு கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். இங்கு கலண்டரும் மணிக்கூடும் தான் நாட்டாமை கள். இந்த இரு நாட்டாண்மைகளின் சட்டதிட்டங்களுக்கு பயந்து ஒழுங்காக இருந்தால் வாழ்க்கையில் எந்தப் பஞ்சாயத் துக்கும் போக வேண்டி வராது.

தூக்கத்தினதும் சோம்பலினதும் போர்வையை தூக்கி எறிவது இவை இரண்டுமே.

இரவு படுக்க முதல் பேரனின் குரலையும் மக்கள் மருமக்கள் குரலையும் கேட்காவிட்டால் எனக்குத் தூக்கம் வராது.

சின்னனின் சிரிப்புகளை சின்ன சின்ன வீடியோ கிளிப்புகள் மூலம் ஐபோனில் பார்த்து விட்டு... பல் துலக்கி விபூதி பூசி சுவாமிகளுக்கு குட் நைற் சொல்லி தலைமாட்டில் உள்ள புத்தகத்தை எடுத்து வாசிக்கப் போனால் சொர்க்கம் என் கையில் என மூச்சு சொல்லும்.

வாசித்துக் களைத்த கண்கள் சொல்லாமல் கொள்ளாமல் தாழ்ப்பாளைப் போடுகின்றன.

போடப்பட்ட தாழ்ப்பாள்களின் கதவுகளை மெதுவாக திறந்து கொண்டு தாழ்ப்பாள்களுக்கு கை காட்டிவிட்டு திரும்பி அனலை மண்ணில் நடக்கின்றேன்.

000

## என்னைச் சுற்றி அனலை உறவுகள்

இதமான சோளகக்காற்று வந்து இச்சு இச்சு என உடலெங்கும் முத்தமிடுகிறது.

வழியெங்கும் முள் முருக்குப் பூத்துக் கிடக்குது. கண்ணைப் பறிக்குது சிகப்பு நிறம். சிலேற்று அழிக்கப்பயன்படும் என முருக்கம் பூக்கங்களை பொறுக்கி பொறுக்கி எடுக்கின்றேன். இஞ்சை வா இஞ்சை வா என எலும்புருக்கி மரம் எட்ட நின்று கை காட்டுது. கிட்டப் போனால் தலைகால்களை எல்லாம் தடவி விடுகிற மாதிரி அள்ளிக் கொட்டுகிறது பூக்களை. கை யால் அள்ள முடியாது என கடகம் எடுத்து வர நான் திரும்பி ஓடுகிறன்.

வழியில் மூக்குக்கை பூந்து நாடி நரம்பெல்லாம் கரண்டைப் பாய்ச்சி மயக்க வைக்குது மல்லிகைப் பூவின் வாசம். ஏணி வைத்து ஏறி மல்லிகைப் பந்தலை ஒரு உலுப்பு உலுப்புகின்றேன். பக்கத்திலுள்ள பசுபதியப்பா வீட்டில் மல்லிகை தோட்டமே இருக்குது.

“பத்திரமாக இறங்கு மோனை”, என பசுபதியப்பா சொல்லுகிறார்.

கடகம் நிறைய பூக்களை நிரப்பித் தருகின்றா கண்மணியக்கா.

பூக்கடகத்தை தூக்க முடியாமல் தூக்கி வந்து வைத்து விட்டு முகம் கழுவ கிணற்றடிக்குப் போகின்றேன்.

வாளிக்கயிறு வழுக்க அதனை நான் இழுக்க நானும் சேர்ந்து

கிணற்றுக்குள் விழுந்திட்டன்.

“ஜில்” எண்டு இருக்குது சுற்றவரவுள்ள தண்ணீர். ஆனால் ஓடி வந்த வேகத்தில் இதயம் “டிக்கு”... “டிக்கு” என்று அடிக்கிறது.

கிணத்துக்குள் ஒரு சிவப்புக் கயிறு. கையில் அதனைப் பிடித்துக் கொண்டு ஊஞ்சலாடுகிற மாதிரி அங்கும் இங்கும் ஆட்டம் போடுகின்றேன்.

வெளியில் யாரோ கதைக்கிறது வடிவாக கேட்குது.

“நல்ல தச்சனைக் கொண்டு வந்து எங்கட அன்ன ஊஞ்சலைத் திருத்திக் கட்ட வேணும். ஏணைச் சீலை கட்டவும் இடம் பார்க்க வேணும். நல்ல முதிரை மரத்திலை தொட்டில் செய்ய வேணும் எண்டு ஓடர் குடுத்திட்டன்”

“என்னடா... இப்பவா?”

“பின்னை சோதியா? கொக்கா??... என்ர மருமகப் பிள்ளைக்கு நான் செய்யாமல் வேறு ஆர் செய்கிறதாம்” சோதிமாமா ஒரே குசியில் நிறையக் கதைக்கின்றார்.

“சுந்தரம் இந்தா.. இந்தக் குங்குமப் பூவை பெரியவளிட்டைக் குடு. பிள்ளை வெள்ளையாய்ப் பிறக்கும்.” ஐயா என்னமோ சொல்லுகின்றார்.

“மருமகனும் மகளும் வெள்ளை தானே... பிறகென்ன?... உங்கடை நிறம் வந்து விடும் என்று பயந்து வாங்கினீங்களா?” அம்மம்மா ஐயாக்கு நக்கலடிக்கிறா.

“கமலா... இஞ்சை வா. இதிலை இருக்கிற குங்குமப்பூவை எடுத்து இரண்டாகப் பிரிச்சு வேற வேற டப்பாவிலை போடு. ஒண்டு கொக்காக்கு... மற்றது அண்ணிக்கு... பின்னேரம் ஒரு எட்டு எட்டி குணத்தைப் பார்த்திட்டு இந்தக் குங்குமப் பூவையும் குடுத்திட்டு வரவேணும்”

“ஒரு வருடத்திலை இரண்டு பேரப்பிள்ளைகள் வரப்போற புளுகத்திலை மனுசிக்கு தலைகால்கள் தெரிய வில்லை”, ஐயா சொல்ல அம்மம்மா வெண்கலமாகச் சிரிக்கின்றா.

"ஏன் உங்களுக்கு புளுகம் இல்லாமலா இவ்வளவு வேண்டினீங்கள்?" இது அம்மம்மா.

"சோதி… பெரியவன் வீட்டுக்கும் ஒரு தொட்டிலுக்கு சொல்லி வை. அங்கையும் அன்ன ஊஞ்சல் கட்ட வேணும்", இது ஐயா.

"பொன்னர் மாமாவிடமும் சொல்லுறன்", இது சோதி மாமா.

பெரியவள் குளிச்சிட்டு வாறாள். பாலைச் சுண்டக் காச்சி குங்குமப் பூவைப் போட்டுக் கொண்டு வா கமலா" அம்மம்மா அவசரப்படுத்திறா.

"நான் கும்பிட்டுட்டு வாறன் அம்மா"

அம்மா கும்பிடப் போறா போலும்.

"கும்பிடேக்கை கோளறுபதிகம் படி பிள்ளை. என்ர பூட்டப் பிள்ளையை எந்தக் கெட்ட கிரகமும் அண்டப்படாது" அம்மம்மாட அம்மா போல இருக்க. "டக்கு"… "டக்கு" என்று பொல்லுச் சத்தம் கேட்குது.

தொடர்ந்து "சறுக்"…"சறுக்"கென்று சத்தம் கேட்கிறது.

"சொன்னால் கேட்டால் தானே… ஏனம்மா சதா வீட்டைக் கூட்டித் திரிகிறயள். ஒரு கையிலை பொல்லு. மற்றக் கையிலை ஈர்க்கு கட்டு. பிறகு முதுகுக்கை பிடிக்கப் போகுது"அம்மம்மா குரலை உயர்த்துகின்றா.

"நீ கொஞ்சம் பேசாமல் இரு பார்ப்பம். என்ர கையும் காலும் இருக்கிறவரை இந்த வளவு வாய்க்காலுக்கை ஒரு தூசு பட விடமாட்டேன் கண்டியோ…பார்… எங்கையும் சோறு போட்டுத் தின்னலாம். என்ர தோல் எல்லாம் ஒட்டிப் போனாலும் வீட்டிலை குப்பை ஒட்ட விடமாட்டன்" ஆச்சி மறுதலித்துப் பேசுறா.

"கிளி இஞ்சை வாடி பிள்ளை. காகம் மீன் முள்ளைக் கொண்டு வந்து போடுது….அண்டை அயலட்டைக் கோழியள் வளவுக்கை வந்து பீச்சப்போகுதுகள்… சீ.. சீ…"

"சைவக்கார வீடு எண்டு அதுகளுக்கு தெரியுமா ஆச்சி?"

"அது என்ன தோல் ஒட்டிப் போறது?" புரியேல்லையே... யாரிட்டை கேட்கலாம்? நான் பேசினால் அவைக்கு கேட்குமா?... நான் இருக்கிற தண்ணிக்குடம் ஏன் ஆடி அலையுது. எனக்கு மூச்சு முட்டுது!

"கிளி என்ன செய்யிறாய்... அக்கா எங்கையெண்டு பார்?" ஆச்சி தொணதொணக்கிறா.

"அவா அருட்டாணம் பார்க்கிறா... குழப்ப வேணாம்"

ம்... அம்மா மூக்கைப் பிடிச்சு மூச்சை விட்டு விபூதியை குழைத்து ஏதோ மந்திரங்கள் சொல்லி... இருந்து.. எழும்பி... என்னன்னவோ பண்ணுகிறா. அதுதான் நானும் இந்தக் குளத்துக்குள்ளை ஆடி ஆடி அசைகிறன் போலும்.

"டிங்", "டிங்" என்று ஏதோ சத்தம் வேலிக்கு வெளியில் கேட்குது.

"மெயில் லோஞ்சி வந்திட்டுது போலை கிடக்கு... பியோன் கனகன்தான். ஏதோ கடிதமாக்கும். ஒரு எட்டு எட்டிப் பார் கிளி" ஆச்சி மீண்டும் குரலெடுக்கிறா.

"அக்கா கும்பிட்டு முடிஞ்சுதா... அத்தார் தான் பாசல் அனுப்பி யிருக்கிறார்"

"பெரியவளே என்ன செய்யிறாய்... கெதியாய் வா" அம்மம்மா அவசரப்படுத்துகின்றா. கூடவே ஆனந்தப்படுகின்றா. இருக்காதா பின்னே? தன்ர மகளை மருமகர் நல்லாய் பார்க் கின்றார் என்றால் எந்த தாய்க்குத் தான் ஆனந்தம் அலை பாயாது.

"அம்மா இஞ்சை பாருங்கோ... சின்னப் பிள்ளைகள் படிக்கிற கதைப்புத்தகங்கள்... அம்புலி மாமா... ஆத்திசூடி... எல்லாம் அனுப்பியிருக்கிறார். கூடவே பாதாம் பருப்பு, முந்திரிப் பருப்பு, கச்சான், பிஸ்கட்டுகள் எல்லாம் நிறைய வந்திருக்குது"

"சாப்பாட்டு சாமான் அனுப்புறது சரி... அதுக்கு எதுக்கு சின்னப் பிள்ளைப் புத்தகங்கள்?" ஆச்சி ஆச்சரியப்படுகின்றா.

"தன்ர பிள்ளைக்கு இப்பவே வாசிச்சுக் காட்டட்டாம். அப்பதான் பிள்ளை அறிவோடை பிறக்குமாம். வயிற்றுக் குள்ளை இருக்கிற பிள்ளைக்கு 3 மாதம் போன பிறகு காது கேக்குமெண்டு உங்களுக்கு தெரியாதா?" இது அம்மா.

"வாத்தி பரம்பர வாரிசுக்கு நீ வாத்திவேலை பார்க்கப் போறியா?" ஆச்சி சிரிக்கிறா.

நானும் குஷியிலை காலைக் கையை அடிச்சுச் சிரிக்கின்றேன்.

"வயித்துக்கை குத்துதம்மா" அம்மா முனங்குகின்றா.

"வேளாவேளைக்கு சாப்பிட்டு படு மோனை. நான் சொல்லு றதை கேட்டால் தானே. சும்மா சும்மா வெறுவயித்தோடை திரியுறாய்... "

ஆச்சி புறுபுறுக்கத் தொடங்கி விட்டா.

இனி அம்மா போய் படுத்து விடுவா.

"மந்திரமாவது நீறு" என்று சொல்லியபடி "செல்லத்துக்கு ஒரு குறையும் வராது" என வயித்திலை தடவி விடுகிறா போல இருக்குது.

எனக்கும் நித்திரை வருகுது.

"ஐ லவ் யூ அம்மா... உம்மா...", என சொல்லுறன்.

அவாக்கும் கேட்குமோ தெரியாது.

இந்தக் குளத்துச் சுவர் எல்லாத்துக்கும் முட்டுக்கு நிற்குது.

இரு... இரு... ஒருநாள் உன்னை உடைச்சுவிட்டிட்டு நான் வெளியே போயிடுவன். போய் நானே அம்மாக்கு விபூதி பூசிவிடுவன். அம்மா எப்பிடி இருப்பா? அப்பாவும் அம்மாவும் நல்ல வெள்ளை, நல்ல வடிவு எண்டுதானே அம்மம்மா கதைக்கிறவா. அதுதான் அம்மம்மா கேட்டவா ""இவளுக்கு ஏன் குங்குமப்பூ" எண்டு.

குங்குமப்பூவை பாலிலை கலந்து குடிச்சால் நான் வெள்ளையாய்ப் பிறப்பனாம்.

*எப்போது நான் பிறப்பது? எப்ப எல்லாவற்றையும் பார்ப்பது??.*

*எனக்கும் நித்திரை வருகுது. அம்மாவும் நித்திரை போலும்.*

*கையை நல்லாச் சூப்ப சூப்ப நல்லாய் இருக்குது.*

*ம்... ம்... யம்மி... யம்மி... குட் நைற் அம்மா... இது குட் நைற் இல்லை... இது குட் ஈவினிங்.*

*000*

# போரும் சக்கரவியூகமும்

"பெரியவளே எழும்பு பிள்ளை. செக்கலுக்கை படுக்கப்படாது. பிரமசக்தி பிடிக்கிற நேரம். சும்மா சும்மா படுத்தால் பிள்ளைக்கு தலை வளர்ந்து பிறகு பெத்தெடுக்கக் கஷ்டமாகிப் போகும்." ஆச்சி மீண்டும் தன் அர்ச்சனையைத் தொடங்கி விட்டா.

"நீங்கதானே ஆச்சி படுக்கச் சொன்னது" அம்மா சிரிக்கின்றா.

"விளக்கு வைச்சு சாமி கும்பிட்டிட்டு வா மோனை. பாரதக் கட்டை வாசி பிள்ளை... நேற்று எதிலை விட்டனி?.... எல்லோரும் வாருங்கோ. பெரியவள் பாரதம் வாசிக்கப் போறாள்". தன் பொல்லைத் தட்டி தட்டி தண்டோரா போடிறா ஆச்சி.

"இந்தக் குடும்பத்துக்கு ஆச்சிதான் மகாராணி. சுருங்கிப் போன தோலும், வளைஞ்சு போன முதுகும், கையில இருக்கிற உருத்திராட்ச மாலையும் அவாக்கு அழகு சேர்த்திடும். கையிலை இருக்கிற பொல்லு என்ற செங்கோல் அவாவை எல்லாரையும் நிமிர்ந்து பார்க்க வைக்கும். அப்பிடி ஒரு கம்பீரம் ஆச்சிக்கு. இல்ல... இல்ல... எங்க மகாராணி பொன்னாச்சிக்கு" சோதிமாமா ஆச்சியை வம்புக்கு இழுக்கிறார்.

அம்மா பாரதம் வாசிக்கத் தொடங்குகிறா.

"அந்தப்புரத்து அழகிய மஞ்சத்தில் சுபத்திரை தன் நிறைகுடமான வயிற்றைத் தடவிக் கொண்டு இருக்கின்றாள். அர்ச்சுனன் அவளுக்கும் அவள் வயிற்றினுள் உள்ள தன் மகனுக்கும் போர்க்கதைகளைச் சொல்லிக் கொண்டு இருக்கின்றான்.

*மாவீரனான அர்ச்சுனன் தன் வாரிசும் தன்னைப் போல் சிறந்த வீரனாக வர வேண்டி இப்போதே தன் குழந்தைக்கு குருவாக உபதேசம் செய்கின்றான்".*

*“சக்கரவியூகம் எப்படி இருக்கும்?”*

*மஞ்சத்தில் சரிந்திருந்த சுபத்திரை கண் அயர்ந்து விடுகிறாள். அர்ச்சுனன்அதைக் கவனியாது தன் முயற்சியில் சற்றும் மனம் தளராது தன் வித்தைகளை உபதேசித்தபடி இருந்தான். சுபத்திரையின் வயிறு மேலும் கீழும் ஏறி இறங்குகின்றது. வயிற்றில் இருந்த குழந்தை தந்தை சொல்லும் கதையைக் கேட்கிறது. ஊம்... ஊம்...என தன் அப்பன் கதைக்கு ஊம் கொட்டிக் கொண்டிருக்கின்றது.*

*“கொஞ்சம் நிற்பாட்டு பிள்ளை... இப்பிடித்தானே இரணியன் மனைவி லீலாவதியின் கர்ப்பத்தில் இருந்த பிரகலாதனுக்கு நாரதர் உபதேசம் செய்தார்” ஐயா குறுக்கிட்டார்.*

*“ஓமப்பா அதுதான் மருமகனும் இப்பவே தன்ர பிள்ளைக்கு படிப்பிக்க விரும்புறார்”*

*அது என்ன சக்கரவியூகம்? அது என்ன போர்? ஏன் ஆட்களை ஆட்கள் வெட்டுகிறார்கள். ஏன் ஆட்களை ஆட்கள் கொல்லு கிறார்கள்? ஏன் எல்லா இடத்திலும் குருதியின் கறைகள் படிகின்றன? தலை வேறாய்... கால் வேறாய்... கை வேறாய்... பிணவாடை... கரும் புகை... நெருப்பு... அந்த நெருப்பில் வெந்தும் வேகததுமான மனித உடல்கள்... எல்லோரும் திக்குத் திக்காக ஓடுகிறார்கள். ஆமிக்காரர் என்னைப் பிடிக்க ஓடி வருகிறார்கள். “நீ என்ன புலியா” என்றபடியே என்னைத் துரத்துகிறார்கள்.*

*நான் அம்மாவின் வயிற்றில் இருந்து குதித்து ஓடுகிறன் போலும்.*

*ஓடி?...ஓடி??...ஓடி???*

*கையுக்கை பிடிபடாத காற்றுப் போலை பிடிபடாமல் பறக்கின்றேன்.*

எனக்கு செட்டை எல்லாம் முளைச்சிட்டுது. பறந்து பறந்து பின்னால் உள்ள மேகக்கூட்டங்களைத் தள்ளியபடி சூரியனை நோக்கிப் பறக்கின்றேன்.

ஐயோ செட்டையில் நெருப்பு பிடித்து விட்டது. மழையுடன் வந்த கருமேகம் என்னை நெருப்பில் இருந்து காப்பாற்றி பூமிக்கு காவிக் கொண்டு வருகின்றது.

நான் அழுகின்றேன். அழுகின்றேன். ஐயோ எனக் கத்து கின்றேன்.

"எதுக்கு இப்ப நித்திரையிலை கத்துறாய்?" என ஜீவா என்னை உலுக்கி எழுப்புகின்றார்.

"பொல்லாத கனவப்பா... கை கால்கள் எல்லாம் உதறுது"

"நீயும் உன்ரை கனவும். போய் தண்ணியைக் குடித்து விட்டு வந்து படு" எனக் கூறிவிட்டு திரும்பி படுத்து விட்டார்.

என் இமைகள் மூட மறுக்கின்றன. கைகால்களின் நடுக்கம் குறையவில்லை. நெஞ்சாங்கூட்டுக்குள் ஊழிக்காற்று கூத்தடிக்கின்றது. மனசுக்குள் காட்டுக் குரங்குகள் வாலைச் சுருட்டிக் கொண்டு தலையைச் சொறிந்தபடி படாத பாடு படுத்துகின்றன.

ஹோலுக்கு வந்து ரி.வீ.யைப் போட்டேன்.

நேரம் அதிகாலை 3 மணி.

000

# அப்பா என்ற அழகன்

என் கை கால்களின் மூட்டு வலி என்னை ரி.வி.யைப் பார்க்க விடாமல் வில்லத்தனம் பண்ணுகிறது. சோபா மேசையில் காலை நீட்டுகிறேன்.

கால் வீங்கி இருக்கிறது.

இந்தக் கால்கள் எத்தனை மகத்தான காரியங்கள் புரிந்தவை?

அம்மாவின் வயிற்றில் இருந்த பொழுது அம்மாக்கு உதைத்து விளையாடிய கால்கள்.

ஆச்சி, அம்மம்மா, கிளி அன்ரி, கமலா அன்ரி, பூ அன்ரி, தம்பி மாமி எல்லோரும் எண்ணை பூசி தேய்த்து குளிக்க வார்த்த கால்கள்.

தம்பிமாரோடை சண்டை போட்டு உதைத்துக் குதியம் போட்ட கால்கள்.

ஊர்க் கல்லுகள்... முள்ளுகள் எல்லாம் குத்திக் கீறிய கால்கள்.

வெள்ளைச் சப்பாத்துப் போட்டு மிடுக்காக பள்ளிக்கு நடந்து போன கால்கள்.

வயல் வெள்ளத்தில் ஓடி விளையாடி கால் சிரங்கை வாங்கிக் கொண்ட கால்கள்.

கால் எல்லாம் புண் வர அம்மா தேய்த்துக் கழுவ.. நான் அழ... அம்மாவை வில்லியாக்கி பூ அன்ரியிடம் முறையிட்டு அம்மாக் கும் பூ அன்ரிக்கும் சண்டையை மூட்டி விட்ட கால்கள்.

என்னதான் குளப்படி செய்தாலும் எனக்கு கால்கள் நோகின்றது என்றால் அப்பாவும் அம்மாவும் எனக்கு பாதபூஜை செய்யத் தொடங்கி விடுவார்கள்.

அந்த பால்கடல் துயிலும் பரந்தாமனுக்கு மகாலட்சுமி கால் பிடிப்பது போல எனக்கு கால் பிடித்து விடுவது அப்பா தான். எனக்கு 50 வயதுவரும் வரை அப்பா கால் பிடித்து விட்டிருக் கின்றார். அவரின் மூளையின் இயங்கங்கள் குறைந்த பொழுது தான் என் கால்பிடிக்கும் அவர் கைகளும் ஓய்ந்து போனது.

எனக்கும் என் தம்பிமாருக்கும் அம்மா தான் அப்பா அப்பா தான் அம்மா.

பத்து வயதில் தன் தாயை இழந்து அந்த தாய்ப்பாசத்துக்காக ஏங்கி ஏங்கி தானே தாயாக மாறி வாழ்ந்த ஒரு ஜீவன் எங்கள் அப்பா.

அழகன் எண்டால் அப்படி ஒரு அழகன். நீண்ட மூக்கு. சீரிய நெற்றி. நிமிர்ந்த நடை. வெண்ணிறத் தேகம். கன்ன உச்சி வைத்து வாரப்பட்ட தலை. தினமும் யோகாசனம் செய்து ஜிம்மென்று இருக்கும் உடம்பு. அவர் உடுப்புகளும் எப்போதும் அயன் பண்ணப்பட்டதாகவே இருக்கும்.

எனக்கு எப்பவும் அப்பாதான் எல்லாம். உலகிலேயே என்ர அப்பாதான் வடிவு. என்ர அப்பாதான் படிச்சவர். எல்லாம் தெரிந்தவர். அந்தச் சின்னஞ் சிறுமியின் பென்னம் பெரிய ராசா - அது என்ட அப்பா.

அலாவுதீனின் அற்புதப் பூதம் போல நான் என்ன கேட்டாலும் மண்டியிட்டுச் செய்வார். பாசமும் கட்டுப்பாடும் அவரின் இரு கண்கள். சிக்கனமாக வாழவும் கடன்படாது வாழவும் சீவிக்க கற்றுக் கொடுத்த ஆசான் அவர். பணத்தாசை பதவி ஆசை என எதுவும் இன்றி ஒரு காந்தியவாதியாக வாழ்ந்து காட்டினார். தனது துணிகளை தானோ துவைப்பார். அம்மாவிடமோ யாரிடமோ கொடுக்க மாட்டார். அவரது வேலைகளை அவரவர்களே செய்ய வேண்டும் என்று எமக்கு பழக்கியவர். எங்கள் வீட்டில் எப்போதும் வேலைக்காரப் பிள்ளைகள்

இருந்ததில்லை. மலைநாட்டில் இருந்து பெத்ததுகளைப் பிரிந்து நம்மோட இருக்கிறது எவ்வளவு பாவம் - கறும வாழ்க்கை எனக் கூறுவார்.

ஆம்பிளைப் பிள்ளைகள் அது செய்யப்படாது... இது செய்யப் படாது... என்ற பாரம்பரிய கலாச்சாரச் சட்ட திட்டங்கள் ஒன்றும் எங்கள் வீட்டில் இல்லை. தாய் இல்லாது வளர்ந்த அப்பா சமையல் கலையிலும் சிறந்து விளங்கினார். அவரைப் போலவே என் தம்பிமாரும் நளபாகத்தில் சிறந்தவர்கள். அது என்ன பொம்பிளை பிள்ளைகள் மட்டும் சமைக்கிறது எனச் சொல்லி சொல்லி அவர்களுடன் பெண் விடுதலை கதைச்சு கதைச்சு நானும் என் தம்பிமாருக்கு எல்லா சமையல்களும் பழக்கி விட்டிருக்கின்றேன்.

பெண் விடுதலை என்பது எம் குடும்பத்தில் ஐயாவால் விதைக்கப்பட்ட ஒரு விதை. அந்தக் காலத்தில் தமிழரசுக் கட்சிக்கு வாக்குச் சேர்க்க அம்மாவை அனுப்பினவராம். ஊரில் இவ்வாறான விடயங்களுக்காக பெண் பிள்ளைகள் வெளியே போவது மிகக் குறைந்த காலம் அது.

“பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது” மற்றும் “கோல் எடுத்த பிள்ளை குருட்டுப் பிள்ளை”, எனப் பல பழ மொழிகளை வீட்டு பாலபாடத்தின் மூல மந்திரங்களாகச் சொல்லித் தந்து தந்து வளர்த்தவர் எம் அப்பா.

காந்தியின் சத்தியச் சோதனையை எத்தனை தடவைகள் படிக்க வைத்திருப்பாரோ தெரியாது. சின்ன வயதில் அதனையே வாசித்து வாசித்து அந்த சத்திய நதியில் சரணடைந்த ஒரு சின்ன மழைத்துளிதான் நான்.

குஜராத்தில் காந்தியின் பக்கத்து வீட்டில் பிறந்து வளர்ந்த பிள்ளை போல ஒரு நினைப்பு எனக்கு. அவர் என்னுடன் என்றும் கதைத்துக் கொண்டிருக்கின்றார் என்ற நினைப்பு எனக்கு. அடிவளவில்... தோட்டக்காணிகளில்... வயல் வெளியில்... கோயில் வீதியில்... குளத்தடியில்.... கிணற்றடியில்... துறைமுகத்தில் எங்கு திரும்பினாலும் அப்பாவும் காந்தியும்

தான் எனக்கு.

அப்பா டயறி எழுதச் சொல்லி வாங்கித் தந்தார். ஆனால் எத்தனை பொய்களை எந்த எந்த நாளில் சொன்னேன் என எழுதி பின் பாவக் கணக்குகளை கூட்டிக் கழித்து அந்த பாவக் கணக்குகள் எனக்கு வேண்டாம் என்று டயறி எழுதுவதையே விட்டு விட்டேன்.

பதிலாக சுத்தமான ஒரு ஆன்மாவாக வாழ வேண்டும் என்று வாழப்பழகி விட்டேன்.

நான் அப்பப்பாவை கண்ணால் கண்டதில்லை. அப்பாக்கு கல்யாணம் ஆக முதலே அவர் போய்ச் சேர்ந்து விட்டார்.

கண்ணால் காணாத கடவுள் நிஜத்தில் எம்மை ஆழ்வது போல அப்பா சொன்ன கதைகள் மூலம் அப்பப்பா என் மனதிலும் சிம்மாசனம் போட்டு இருக்கத் தொடங்கி விட்டார். உடுக் கடிக்க உடுக்கடிக்க அம்மாள் ஆச்சி பூ மரத்தில் ஏறுவது போல அப்பப்பாவின் கதைகளை அப்பா சொல்ல சொல்ல எனக்குள் இருந்த பூமரமும் பூத்துக் காய்ச்சு பழுத்து விதையாயிற்று.

அப்பப்பாவின் பூர்வீகம் நெடுந்தீவு. வெள்ளைக்காரன் காலத்தில் அனலைதீவுக்கு பாடம் கற்பிக்க வந்தவர்தான் வேலுப்பிள்ளை வாத்தியார்.

ஹிண்டு போர்ட் இராஜரட்ணம் என்ற பெரிய கல்விமானின் வலது கையாக இருந்து கல்விச் சேவை செய்தவர். ஏழு தீவு களிலும் பாடசாலைகள் உருவாகுவதற்கு அயராது உழைத்தவர். அப்பப்பா பிறவிச் சைவம். தீட்சை வைக்காமல் உணவு உண்ண மாட்டார்.

அப்பப்பாவும் அப்பம்மாவும் குமாரசாமி, மனோன்மணி, சேது காவலர், துரைசாமி, குகதாசன் என ஐந்து அற்புதமான குழந்தை களைப் பெற்று அவர்களை நன்மக்களாக்கி ஆனந்தமாக வாழ்ந்தனர்.

அப்பாக்கு பத்து வயதும் சித்தப்பாக்கு ஐந்து வயதான பொழுது அப்பமம்மா இறந்து விட்டார்.

வளர்ந்து ஸ்டேசன் மாஸ்டராக வேலையில் சேர்ந்து கொஞ்ச நாளில் துரைச்சாமிச் சித்தப்பாவும் மறைந்து போனார்.

பின்பு அப்பாவின் அக்கா மனோன்மணி மாமியும் கல்யாணம் ஆகி இரண்டு குழந்தைகள் பிறந்த பின்பு இறந்து போனா.

மறுமணம் புரியாது தன் குழந்தைகளுக்கு தாயாயும் தகப்பனாயும் இருந்து அவர்களைப் படிப்பீத்து நல்ல நிலைக்கு கொண்டு வந்தார் அப்பப்பா.

பொன்னம்மா என்ற குணவதியை பெரியய்யாக்கு மணம் முடித்து வைத்தார் அப்பப்பா. பின்பு அப்பாவாக... அம்மாவாக இந்தக் குடும்பத்தை பெரியய்யாவும் பெரியம்மாவும் தான் காத்து வந்தனர்.

யாழ். இந்துக் கல்லூரி தொடங்க முதலே எங்கள் அனலை சதாசிவ மகா வித்தியாலயம் தொடங்கி விட்டது.

அந்தக் காலத்தில் அப்பப்பா வீடு வீடாய் சென்று பெற்றோர் களுடன் கதைத்து பிள்ளைகளைப் பாடசாலைக்கு கூட்டி வருவாராம். சாதி குறைந்த பிள்ளைகளையும் பாடசாலைக்கு கூட்டி வருவாராம். அதனைப் பொறுக்காத ஊர்ப் பிரமுகர்கள் சிலர் பாடசாலைக்கு தீ வைத்து கொளுத்தி விட்டனராம். ஆனால் பாடசாலை மீண்டும் கட்டப்பட்டு அப்பப்பாவின் கல்வித்தானப் பணி தொடர்ந்ததாம்.

நிலா வெளிச்சத்தில் முற்றத்து மணலில் அப்பாவின் மடியில் இருக்க... அம்மா சாப்பாடு தீத்த... இப்படி எத்தனையோ கதைகளைக் கேட்டிருக்கின்றேன்.

என் கையெழுத்து நன்றாக வர வேண்டும் என்று முற்றத்து மணலில் என் சுண்டு விரலைத் தேய்த்து தேய்த்து அ, ஆ பழக்கி... ஆத்திசூடி கொன்றைவேந்தன் சொல்லித் தந்து... அம்புலிமாமா புத்தகம் மாதாமாதம் வாங்கித் தந்து... வாசிக்கப் பழக்கி... இன்று அவர் கதையை நான் எழுத, இறந்தும் இறவாமல் என்னுள் உறைந்துள்ள அப்பா அம்மா செய்யும் மந்திர வித்தைகளை எப்படி எடுத்துரைப்பேன்.

நான் யார்?அப்பா செல்லமா? அம்மா செல்லமா? ஐயாட ரத்தமா?அப்பப்பாட ரத்தமா? இந்த பரம்பரைகளின் இயல்புகளை கலந்து வந்த ஒரு கலவையா?

எனக்கு பேரன் பிறந்த பொழுது நினைத்தேன் அவனது குருதி O+ வகையாக ஆக் இருக்க வேண்டும் என்று. ஏன் என்றால் அவன் எமக்கும் சரி... எம் சம்மந்த பகுதிக்கும் சரி பொதுச் சொத்தல்லவா?

இப்படித்தானே எல்லாக் குழந்தைகளும் பிறக்கின்றனர்.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராயும் அன்னை வளர்ப்பிலே” என்ற புலமைப்பித்தனின் பாடல்வரிகள் என்னை அடிக்கடி தாலாட்டும்.

எந்த ஒரு குழந்தையையும் எந்தவொரு பெற்றாரும் தம் சொத்து என உரிமை கொண்டாட முடியாது என ஒரு யோகி சொன்ன வரிகள் எனக்கு ஞாபகம் வருகிறது. குழந்தைகளின் ஆத்மா பூமிக்கு வரவும் அது வளரவும் ஒரு கருவியாகவும் உதவியாகவும் இருப்பவரே பெற்றோர். அந்த ஆன்மா மீது உரிமை கொண்டாடுவது தவறு.

என்னதான் வாதப் பிரதிவாதங்களை முன் வைத்தாலும்... தாய்க்கும் பிள்ளைக்கும் வாயும் வயிறும் வேறு வேறு என ஐரோப்பிய பாணியில் தத்துவங்கள் கதைத்தாலும் நான் என்பது நான் மட்டுமில்லை என்பது தான் உண்மை.

என்னைச் செதுக்கிய சிற்பிகள் எத்தனை பேர்? பேரன்மார், பேத்திமார், அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்திமார், மாமாமார், மாமிமார், அன்ரிமார், அண்ணாமார், அக்காமார், ஆசிரியர்மார், அயலவர்கள், சொந்தங்கள், பந்தங்கள் அனைவரும் அடங்குவார்கள்.

பெண் விடுதலைக்கு ஐயா! தையலுக்கு பூ அன்ரி!! சமையலுக்கு அம்மா!!! சங்கீதத்துக்கு மணி அக்கா!!! என என் மூத்தோர் எனக்கு முன்மாதிரி இருந்தனர்.

அந்தக் காலத்தில் பெரிஐயா மணியக்காவை இந்தியா அனுப்பி அண்ணாமலை பல்கலைக் கழத்தில் சங்கீதபூசணம் பட்டம் எடுக்க வைத்தார். ஊரில் அவாவின் அரங்கேற்றம் நடந்த பொழுது தமிழரசுக் கட்சி எம் பி. க.பொ.இரத்தினம் அவர்கள் தலைமை தாங்கினார்.

அப்போது நான் நினைத்தேன் ““நானும் வளர்ந்து பெரிய வளாகி.... அரசியல் தலைவராகி.... எங்கட ஊருக்கும் ஊர்காவற்துறைக்கும் பாலம் கட்ட வேண்டும்.... எத்தனை நாளைக்குத்தான் லோஞ்சில் பயணம் செய்வது” என்று.

இப்படியாக என்னை விட மூத்த பெரியவர்களை அண்ணாந்து பார்த்து பார்த்து... அவர்கள் பேசுவதைக் கேட்டு கேட்டு... அவர்கள் குணநலன்களை உள்வாங்கி... எனக்கு நானே கதைத்து... அவர்களைப் போல் கதைத்து நடித்து விளை யாடி... பின் அவர்களாகவே மாறி... அப்படி இப்படி யோசித்து... இப்படி இன்று இந்த நான் என்ற நான் உருவாக்கப்பட்டுள்ளேன். அல்லது உருவாகியுள்ளேன்.

நம்மை நம் தாய் வயிற்றில் பிரமன் படைக்கின்றான். இந்தப் பூமியில் வந்த பின்பு நம்மைச் சுற்றியுள்ள பெரியவர்கள் தாமும் பிரமாக்கள் ஆகி நமது குணங்களைப் படைக்கின்றார்கள். அதனால் தான் என்னவோ நமக்குள்ளும் பற்பல முகங்கள். பத்து தலை இராவணாக பற்பல சிந்தனைகள். சிந்தனைகள் கனக்க கனக்க சோபா என்னை அணைத்துக் கொள்கிறது. சரிந்து படுத்தபடி ரி.வி. சனல்களை அழுத்துகின்றேன்.

*000*

# அனலையின் அதிகாலைப் பொழுது

சுப்பிரபாதம், காலை மலர், ஆலய தரிசனம் என விடியலுக்கான ஆராதனைகளை ஆசிய நாட்டு சனல்கள் போட்டி போட்டு ஒலிபரப்பிக் கொண்டு இருக்கின்றன.

எப்பவும் அம்மா சுப்பிரபாதம் பாடித்தான் எங்கவீட்டு பெருமாளை எழுப்புவார். விடிய 4.30 அல்லது 5.00 மேல் வீட்டில் யாரும் படுக்க முடியாது. எங்கள் வீட்டில் தரித்திரம் பிடிக்கப் போகுது எண்டு கத்திக் கொண்டு செம்புத் தண்ணியுடன் அம்மா வருவா.

ஒரு பக்கம் திரும்பிப் பார்த்தால் அலாரம் அடிக்கும். சத்தம் போடாதே என அதன் தலையில் குட்டி விட்டு மறுபக்கம் திரும்பி படுத்தால் அம்மாவின் செம்பு தண்ணி நாட்டாமை பண்ணும்.

அதிகாலை கோவில் மணிச் சத்தம் கேட்க... கோழி கூவ... அம்மா புறுபுறுக்க... வெள்ளி காரிக்க நானும் என் தம்பிமாரும் எழும்பி விட வேணும்.

குளிச்சு சாமி கும்பிட்டு, நெற்றியில் பட்டை பட்டையாய் விபூதி பூசியபடி அம்மா சுண்ட சுண்ட தரும் பாலை குடித்து முடிக்கவும் ரியூசன் வாத்தியார் வீட்டை வரவும் சரியாக இருக்கும். 5.30க்கு தொடங்கும் வகுப்பு 7.00 மணி வரை தொடரும்.

வாத்தியார் வரப் பிந்தினால் எங்கட விளையாட்டுகள்

தொடர்ந்து விடும். புத்தகப் பையுள் ஒளித்து வைத்திருந்த சீட்டுக் கட்டு வெளியில் வந்து விடும். அல்லது நான் ஆசிரியையாய் வகுப்பெடுத்து தம்பிமாரை சித்திரவதைப் பண்ணுவேன்.

மீண்டும் மீண்டும் கோழி கூவியபடி இருக்கும். கோயில் மணி அடித்தபடியே இருக்கும்.

அம்மாக்கு இந்தக் கோழி ஏதோ அவாவின் சொந்த சகோதரம் மாதிரி கோழி கூவுது என்று அவாவும் கூவிக் கொண்டு திரிவா.

"டேய் கோழி கூவியா சூரியன் வருகுது? அல்லது சூரியன் வருவதால் தான் கோழி கூவுதா?" என நான் நித்தனிடம் கேட்பேன்.

"ஏன் நீ நியூட்டனைக் கேட்கவில்லை" என அவன் சிரிப்பான்.

நியூட்டன் என்பது சரன் - சின்னத் தம்பி.

""அம்மா பெருமாளை எழுப்ப... பெருமாள் சூரியனை எழுப்ப...சூரியன் கோழியை எழுப்புது" என்பான்.

"இதை கோழி உன்னட்டைச் சொன்னதா?" என நான் கேக்க அவன் சிரிப்பான்.

சிலவேளை சிலரை நினைத்தால் சிரிப்புத்தான் வரும். அவ்வாறு தான் சிலர் இன்று நினைத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

"நான் தான் குடும்பத்தை சுமக்கின்றேன்" எனச் சொல்லும் குடும்பத் தலைவன்...

"அவருக்கு என்ன தெரியும். வேறு ஒருத்தி வந்திருந்தால் தெரிந்திருக்கும்" எனச் சொல்லும் குடும்பத் தலைவி....என மாறி மாறி கிரீடங்களைப் போட்டு கொண்டு இருக்கின்றார்கள்.

இந்தச் சேவல் சத்தம் கேட்டு நித்திரை விட்டு எழும்பி எத்தனை ஆண்டுகள் ஆகி விட்டது.

நினைத்துக் கொண்டு கண் அயர ஜீவாட அலாரம் அடித்து ஐந்து மணி எனச் சொல்லுகிறது.

மீண்டும் ஒரு நாளுக்கான ஓட்டப் பந்தயம் ஆரம்பமாகப் போகுது.

எழும்பு... எழும்பு எனச் சொல்லும் சூரியனும்.... இனிப்போய் தூங்கு... தூங்கு எனச் சொல்லும் சந்திரனும்... என்னைப் பார்... என்னைப் பார்...வாழ்க்கையில் எத்தனை நாட்களை வீணடிக்கிறாய் என்று சொல்லும் கலண்டரும்... எதுவும் சொல்லாமல்... எதுவும் கேட்காமல்... ஆரவராமற்று போக்குவரத்துப் பண்ணும் இந்தச் சுவாசக் காற்றும் உலக இயத்திற்கான சாட்சிகள்.

நானும் சோம்பலை முறிச்சுக் கொண்டு குளியறையில் பைப்புக்களுள் அடைபட்டுக் கிடங்கும் கங்காமாதாவுடன் ஐக்கியமாக ஆயத்தமாகின்றேன்.

000

# வாசிப்பும் எழுத்தும்

*நல்ல சுடுதண்ணியில் கங்காஸ்தானம் செய்தாயிற்று.*

*புண்ணியம் தேடி காசிக்கோ, கங்கைக்கோ, கதிர்காமத்திற்கோ போகத்தேவையில்லை. எம் வீட்டுச் சாமியறையே கோயிலாக வும் குழாய்த் தண்ணீரே தீர்த்தமாகவும் வாழத்தொடங்கி இப்போ 31 வருடங்கள் ஆகி விட்டன.*

*யுத்தப்பேய் துரத்தியடிக்க சொந்தப் பூமியில் இருந்து நாம் மட்டும் அகதிகளாக வரவில்லை. அனலை ஐயனார், புளியந்தீவு நடராசர், நயினை நாகபூசணி, நல்லூரான், சன்னதியான், கொம்மாசல்லி வயிரவர், மருதடியான், வயல் ஆச்சி இப்படி தெய்வங்களும் கூட இங்கே என் சாமியறையுள் வந்து தஞ்சம் புகுந்து விட்டார்கள். கூடவே திருப்பதியானும் பழனி யாண்டவனும் இன்னும் பிற தெய்வங்களும்.*

*வீட்டில் இருந்து ஏதாவது எழுதுவது என்றால் அது முடிகிற காரியம் இல்லை.*

*அடிக்கடி சிணுங்கிக் கொள்ளும் தொலைபேசிக்கும், சித்திரம் தொலைக்காட்சிக்கும், தும்புத்தடிக்கும், சட்டி பானைக்கும் இடையே பாய்ந்து பாய்ந்து நொந்து நூலாகிப் போகும் மனதும் மூளையும்.*

*எனவே நூலகக் கதவுகள் பத்து மணிக்கு திறக்கும் பொழுது அங்கே போயிருந்து என் தொப்புள் கொடி உறவுகளுடன் உறவாடுவது என தீர்மானித்து விட்டேன்.*

அந்தச் சூழல் என் மன அலைகளின் பிரசவத்துக்கு ஏற்ற அமைதியைத் தரும்.

எங்கள் கோயில்களுக்குப் போனால் ஒரு வைபிறேசன். அதேமாதிரி வேறு ஒரு வைபிறேசன் என இந்தச் சக்திப் பிரவாகங்கள் பற்றி சனங்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக் கின்றேன்.

சின்னமாமா, ஐயா, அப்பா எல்லோரும் வாங்கிக் குவித்திருந்த புத்தகக் கட்டுகளுக்குள் தவழ்ந்து தவழ்ந்து வளர்ந்தவள் நான்.

“சிவா, சிவா”, என்று சொல்வது போல “வாசி, வாசி”, என்ற மூல மந்திரம் கேட்டு வளர்ந்தவள் நான். கூடவே வளர்க்கப் பட்டவள். மா அரிக்கும் பேப்பரைக் கூட வாசிச்ச பிறகே அம்மா மா அரிக்க உபயோகிப்பா. சிறுவயது முதல் அவாவிற்கு ஐயா அதிக புத்தகங்கள் வாங்கிக் கொடுத்துள்ளார்.

“ஏனம்மா சரஸ்வதிக்கு மட்டும் கோயில்கள் இல்லை” என இடுப்பில் கையை வைத்துக் கொண்டு அம்மாவுடன் விவாதம் பண்ண அந்தக் காலத்து சின்னக் கலாக்கு அப்படி ஓர் ஆசை.

“அது பிரமதேவர் தான் சிவபெருமானின் அடிமுடியைக் கண்டதாகப் பொய் சொன்னதால் பிரமாக்கு கோயில்கள் இல்லாமல் போனது. பிரமாக்கு இல்லாது போனதால் அவர் மனைவி சரஸ்வதிக்கும் இல்லாது போனது”

“அப்போ ஏன் நூலகங்களில் சரஸ்வதியின் சிலையும்... எதுக்காக கீழே புத்தகங்கள் விழுந்திருந்தால் அதனைத் தொட்டுக் கும்பிடவும் வேண்டும்?”

“அதுவா.... எல்லாப் புத்தகங்களையும் எழுதிப் படைக்கிற எழுத்தாளர்கள் எல்லாம் பிரமாக்கள் தான். எல்லாப் புத்தகத்திலும் குடியிருந்து சரஸ்வதி எமக்கு புத்தி சொல்லித் தாறா”

“அப்போ நூலகமும் ஒரு கோயில் தானே அம்மா?”

“ஊம்.. அதுவும் சரிதான்”

எப்போதும் கேள்விகளுக்கு மேல் கேள்வி கேட்டு என்னை நான் வளர்த்ததும் மற்றவர்களைக் குடைந்தெடுப்பதும் சிறுவயதில் இருந்தே என் இயல்பாய் போய் விட்டது.

“கோயிலில் கும்பாபிசேகம் நடைபெறும் முன்பு நாம எல்லாம் மூலஸ்தானம் வரை போறம். எண்ணைக் காப்பு சாத்திறம். அன்று நாம எல்லாம் ஒரே ஒருநாள் மூலஸ்தானத்துக்கு போக விடுகிறார்கள். பிறகு ஏன் போகவிடுவதில்லை?”

“அதுக்குப் பிறகு சண்டாளப் பிராயத்தனம் பண்ணி சுவாமியை வாலஸ்தாபனம் செய்வினம். அதுக்குப் பிறகு நாம போகப் படாது.”

“ஏனம்மா நாம எல்லாரும் சண்டாளரா?” சாமி வராத சிலைக்கா நாங்கள் எண்ணைக் காப்பு சாத்தினோம். இந்தக் கோயில் களுக்குப் போறதை விட லைபிரறிக்குப் போறது நல்லது தானே?”

“சரி…சரி.. அதுதான் சொன்னனான்… நீ உலகத்தையும் சடங்குகளையும் மாத்துறது எண்டால் நீ படிச்சது பத்தாது… மேலே மேலே படி… நீ கற்றது கையளவு… கற்க வேண்டியது கடலளவு… சும்மா சும்மா வானத்திற்கும் பூமிக்கும் இடையில் துள்ளாதே. இப்படி நீ அலட்டினால் யாரும் உன்னை மதிக்கமாட்டினம். முதலிலை நிறைய படிச்சிட்டு வா. அதுக்குப் பிறகு கதைப்போம்” என அம்மா வாய்ப்பூட்டு போட்டு விடுவா.

அந்தச் சின்ன வயது முதல் நான் படித்தது போதாது… போதாது என்ற தேடல் என்னில் குடி கொண்டு விட்டது. அதனால் தான் எப்பவும் லைபிறறிக்குப் போவது என்பது அப்பா அம்மா மடியில் தவழுற மாதிரி ஒரு நினைப்பு… ஒரு சுகம்…. ஒரு தேடல்…. ஒரு ஞானம்…. ஒரு முத்தி.

எந்த ஒரு புத்தகத்தைத் தொட்டாலும் அந்தப் புத்தகத்தை படைத்த பிரமனின் உணர்வும் உயிரும் கலந்திருப்பதை நாம் உணர முடியும்.

அவர்களின் சிந்தனைகளிலும் எண்ணங்களிலும் நனைந்து

நனைந்து இந்தப் பூமி பூத்துக் குலுங்க வேண்டும்.

அப்படிப்பட்ட புண்ணிய பூமியான நமது யாழ். நூலகம் எரிந்த பொழுது நான் வேம்படியில் உயர்தரம் படித்துக் கொண்டிருந்தேன். பரீட்சை நடக்க இருந்த வேளையில் யன்னலினூடு வந்த கரிய புகை எம்மை வீட்டுக்கு விரட்டின. நாம் எல்லோரும் பயந்து ஓடிப்போனதை இப்போ நினைத்தா லும் என் சுவாசப்பை மூச்சு விட மறந்து போகும். அது அந்தக் காலம்.

இப்போது இந்த டெனிஷ் லைபிறறியில் நின்று கொண்டு என் எண்ண அலைகளுக்கு அணை போடப்பார்க்கின்றேன்....ம்... முடியவில்லை.

சுமார் **6** வருடங்களுக்கு முன்பு "இப்படிக்கு அன்புள்ள அம்மா" என்ற எனது டெனிஷ் நூல் வெளியான பொழுது இந்த நூலகம் எனக்கு மிகப்பெரிய வரவேற்பையும் ஆதரவையும் தந்தது.

டெனிஷ் பத்திரிகைக்காரர் என் வீட்டுக்கு வந்து என்னைப் பேட்டி எடுத்தனர். கூடவே கமராக்காரனும் வந்தான். ஒரு வயதுக் குழந்தையான என்னை அப்பா தூக்கி வைத்திருந்த படம் புத்தக அலுமாரியில் இருந்தது. என் சின்னக் கையில் அப்பாவின் பேனா. அதன் ஒரு முனை என் வாயில்.

அந்தப் படத்தை படம் பிடித்த கமராக்காரன் பெரிதாக பேப்பரில் போட்டிருந்தான்.

அந்தப் படத்துடன் கூடிய பக்கத்தை இந்த லைபிறறியில் பெரிதாக்கி வைத்திருந்தார்கள்.

என் டெனிஷ்தோழி சொன்னாள், "அட இங்கே பார்... நீ பிறந்த உடனேயே அப்பா உனக்கு பேனையை உன் கையில் தந்திருக்கிறார்".

உண்மைதான்!

**08-02-1960.**

நான் பிறந்த நாள். அன்று அப்பா என் நினைவாக கடையில்

போய் இந்தப் பேனையை வாங்கியிருக்கின்றார். அந்தப் பேனைதான் என் சின்னக் கையில் இருந்த பேனை. முன்பெல்லாம் எனக்கு அதன் மகத்துவம் புரிவதில்லை.

கட்டைக் கால் சட்டையோட பொடியன் போலத் திரிஞ்ச அந்தச் சின்னக் கலாவின் உலகில் இந்தப் பேனை பெரிய இடம் எதனையும் பிடித்ததில்லை.

நன்கு நினைவிருக்கு. யார் எதனைக் கேட்டாலும் எடுத்துக் கொடுக்கும் பழக்கம் இருந்த நான் ஒரு நாள் இந்தப் பேனையை எடுத்து சித்தப்பாவிடம் கொடுத்து விட்டேன். அப்பா என் நினைவாக வாங்கி வந்ததை யாருக்கும் கொடுக்க கூடாது என என் கர்ணபரம்பரை மூளைக்கு அப்போ எதுவும் எட்டவில்லை. என் சித்தப்பாக்கும் அதன் மகத்துவம் புரியவில்லை. அவர் அதை எங்கோ ஞாபக மறதியாக வைத்து விட்டார். அப்பா மீண்டும் பேனாவைத் தேடிய போது நான் “திரு... திரு“வென முழித்து... சித்தப்பாவைக்கலைத்துப் பிடிச்சு... அவர் அதை எங்கேயெல்லாமோ தேடி எடுத்து... அது மீண்டும் அப்பாவின் கைக்கு வரும்வரை என் நாடி நரம்புகள் மத்தளம் அடிப்பதை நிறுத்தவில்லை.

சித்தப்பா அப்பாவின் தம்பி கடைக்குட்டி தாயில்லாது 5 வயதில் இருந்து எல்லோராலும் செல்லமாக வளர்க்கப் பட்டவர். அவர் எல்லோருக்கும் பொதுவானர். எல்லோருக்கும் உதவுபவர். எல்லா உறவுகளிலும் தன் தாயைத் தேடியவர்.

என்னையும் என் தம்பிமாரையும் கண்ணுக்குள் வைத்து வளர்த்தவர். நீச்சல் பழக்குவது...சையிக்கிள் ஓட்டக் கற்றுத் தருவது... எக்ஸ்செற்றா... எக்ஸ்செற்றா என பல பல வித்தைகளுக்கு அவர்தான் குரு எமக்கு.

ஒல்லித் தேங்காயை எம் முதுகில் கட்டி விட்டு நாட்கணக்கில் புளியந்தீவுக் கேணியில் நீச்சல் கற்றுத் தந்திருக்கிறார்.

சோழகக் காற்று தாலாட்ட தாலாட்ட என்னையும் என் தம்பிமாரையும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு ஊர் எல்லாம் சுற்றுவார்.

அப்படிப்பட்ட சித்தப்பா கடைசி காலத்தில் நடக்கமுடியாது... உண்ண முடியாது... உறங்க முடியாது... படாத பாடு பட்டு அகதியாக அனாதரவாக இந்தியாவில் இறைவனடி எய்தினார். அப்பப்பாவின் தங்கை கமலம் மாமியின் மகள் மலர் அக்காவும் அவர் கணவனும் தான் சித்தப்பாவை கடைசி காலத்தில் பராமரித்தவர்கள்.

காசிக்குப் போனாலும் கங்கையில் மூழ்கினாலும் ஆறாத ஆன்மாவாக என் ஆயுள் துடித்த நாட்கள் அவை. நாடு விட்டு நாடு வந்து... கடிதங்களைக் காணாது.... உறவுகளின் சுக துக்கங்களில் பங்கு கொள்ள முடியாது... அனாதைகளாக இந்தப் பூமிப்பந்தின் ஒவ்வோர் மூலையிலும் எம் இனம்... காற்றில் குடிநீர் பெற்று குடும்பம் நடத்தும் கள்ளிச் செடிகளாக எம்மவர் வாழ்வு டார்வினின் தக்கெனப் பிழைத்துக் கொள்ளும் தத்துவத்தை மெய்ப்பித்துப் கொண்டிருந்தது.

எம் உயிரை ஊரில் புதைத்து விட்டு இரத்தமும் சதையுமான இந்தக் காற்றடைத்த பைகளுடன் நாம் வெளிநாட்டில் அகதிகளாக....

புதிய மொழி, புதிய சூழல், புதிய காற்று, புதிய மண், வேர் விடமுடியாமலும்... செத்துப் போக முடியாமலும்...ஒரு மரண அவஸ்தையுடன் வாழ்ந்த நாட்கள் அவை.

புலம் பெயர் வாழ்வு என்பது திறந்த வெளி ஜெயில்தான்.

நினைவுகள் மட்டும் எங்கள் பூமி மீது.

ஆபத்துக்கு உதவாத தண்ணீராக இங்கு நாங்கள்.

000

# அலைகளுடன் போன எம் அனலைமக்களும் என் சித்தப்பா குடும்பமும்

நாட்டில் போர் மேகங்கள் கருக்கட்டியிருந்தன.

போர் அரக்கனின் ரௌத்திரம் தாங்காது திக்குத் திக்காக குடும்பங்கள் சிதறியோடிக் கொண்டிருந்தன.

எம் ஈழதேசம் எங்கும் ஆகாய விமானங்களும் கெலிகொப்டர் களும் குண்டு போட்டுக்கொண்டிருந்ன.

உண்ண உணவின்றி... உடுக்க உடையின்றி... ஓடிக் கொண்டிருந்த எம் மக்களுக்கு ஆகாயத்தில் இருந்து உணவுப் பொதிகள் போட்டன இந்திய விமானங்கள்.

கூடவே வேதம் ஓதிக்கொண்டே சாத்தான் இறங்கியது.

ஆம்! இந்தியன் ஆமி இலங்கையில் கால் பதித்தது.

ஆயுதம் தாங்கிய அதுக்கு பெயர் அமைதிப்படை.

எம் உறவுகளை சந்து பொந்து எல்லாம் சல்லடை போட்டு நம் சொந்த பந்தங்களை அது வேட்டையாடியது.

இராணுவம் சூழ முகமூடி மனிதன் உலா வந்தான்.

ஆம் எனத் தலையாட்டினால் கிட்டத்தட்ட ஆயுள்தண்டனை தான்.

எம் இனம் வறுத்தெடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்பது கேட்டுச் சலித்துப் போன விடயமானது.

காக்கிச் சட்டையையே காணாத எங்கள் மண்ணில் இரத்த வாடை வீசியது.

ஒவ்வோர் வீட்டு வாசலிலும் கண்ணாடிச் சட்டத்தினுள்ளும் இருந்தபடி பூவும் பொட்டும் வாங்கிக் கொண்டிருந்த காந்தியும் நேருவும் சுபாஸ் சந்திரபோசும் அடித்து நொறுக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டனர்.

வந்தே மாதரம் பாடிய பாரதி பரதேசியாக எம் ஊரை விட்டு ஓடினான்.

எம்மூர் மக்களும் மூட்டை முடிச்சுகளுடன் ஓடவே முயன்றார்கள்.

சுற்றிவரக் கடல்!

எங்கே ஓடுவது?

இந்த வேளை கரைவந்து ஒதுங்குகின்றனபணத்திற்காக இந்திய பயண வள்ளங்கள்.

சித்தப்பா சித்தியும் தம் ஐந்து மகள்மாருடனும் இரவல் தாய் நாட்டின் கரையில் போய் ஒதுங்க முடிவெடித்தனர்.

எல்லா நகைகளையும் விற்றுக் கையில் காசை எடுத்தார்.

சின்ன சின்ன பொதிகளுடனும் மற்றும் ஊரவர்களுடனும் இராமேஸ்வரம் நோக்கி பயணப்பட்டார்கள்.

"போகாதீர்... போகாதீர் என் மக்காள்... பொல்லாத பயணமிது கேளுங்கள் மக்காள்" என ஐயனார் குரலெடுத்துக் கத்துகின்றார்.

சோழகக் காற்று வேண்டாம் வேண்டாம் என தடுக்கிறது.

பனையோலைகளும் தென்னோலைகளும் வேகமாக கைகாட்டி தடுக்கின்றன.

அலைகள் எல்லாம் பொங்கி பொங்கி அழுகின்றன.

இவையெல்லாம் வள்ளத்தில் இருந்தவர்களுக்கோ வள்ள மோட்டிக்கோ கேட்கவில்லை.

பணத்தாசை பிடித்த வள்ளக்காரன் அதிகமாகவே மக்களை வள்ளத்தில் ஏற்றியிருக்கின்றான்.

கச்சதீவைத் தாண்டி நடுக்கடலில் வள்ளம் சென்று கொண்டிருந்த பொழுது அது ஆட்டம் காணத் தொடங்கியிருந்தது.

வள்ளத்தில் ஒரு வெடிப்பு.

வெளித் தண்ணீர்உள்ளே வர முண்டு முண்டு பயணிகள் ஊற்றினார்கள்.

வெடிப்பு பெருக்க பெருக்க உள்ளே வந்த தண்ணி அதிகமாக ஆறாம் அறிவு அபாயச் சங்கிலியை ஊதியது.

“ஐயனாரே காப்பாற்று” என்று ஒரே ஓலம்.

அவருக்கு அது கேட்கவில்லை.

குஞ்சுகள்... குட்டிகள்... சிறுசுகள்... குமருகள்... இளசுகள்.. பெரிதுகள்... எல்லாம் கூக்கிரலிட்டுப் பார்த்தன.

அடுத்து வந்த பெரிய அலை அனலைமக்களை ஆழ்கடலுக்குள் இழுத்துப் போய் விட்டது.

வள்ளத்தின் பாகங்கள் துண்டு துண்டாக தண்ணீரில் மிதந்தன.

68 பேரில் 11 பேர் மட்டும் கரை ஒதுங்கினர்.

மிகுதி அனைவரும் கடலின் கீழ் ஒதுங்கி பின் மேல் மிதந்தனர்.

கொள்ளி வைக்காத பிணங்களாயினர்.

என்ன பலன்?

சித்தியையும் கண்ணான கண்மனிகள் ஐந்தையும் கடல் திமிங்கிலம் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது.

சித்தப்பா நீந்தி நீந்தி அவர்களைத் தேடித் தேடி இந்தியக் கரை ஒதுங்கினார்.

தன்னைப் போல் அதுகளும் தரையையில் ஒதுங்கியிருப்பார்கள் என்று ஏங்கி இந்திய மண்ணின் ஒவ்வோர் அகதி முகாம்களில்

அவர்களைத் தேடி... தேடி... தானும் ஒரு அகதி முகாமில் வாழ்ந்து... அங்கிருந்த அகதிகளுக்கு அண்ணாவாக அப்பா வாக தம்பியாக. மகனாக தோழனாக எத்தனையோ அவதாரங் கள் எடுத்து... வாழ்ந்து களைத்து வாழ்வினை அதன்பாட்டில் ஓட விட்டு கடைசிக்காலத்தில் பாரிசவாதத்தினால் பாதிக்கப் பட்டு... அக்கா மகள் மலரால் ஆதரிக்கப்பட்டு... பராமரிக்கப் பட்டு... அமைதியாக ஆண்டனிடம் போய்ச் சேர்ந்தார்.

கயிறறுத்த கன்னுக் குட்டியாக என் மனம் நாலா பக்கமும் ஓடுது. முட்டிக் கொள்ள என் தாய் மடியை தாய் மண்ணை நாடுது.

சும்மா இருந்த என் கைத்தொலைபேசி ஏதோ சொல்லுகிறது.

“வெளியே சரியான மழையாயிருக்குது. நீ பஸ்சில போக வேணாம்... நான் வாறன் - கூட்டிப் போக” ஜீவா மறுமுனையில் இருந்து சொல்லுகிறார்.

டென்மார்க் வந்து 31 வருடமாகி விட்டது. நான் குடைபிடிச்சு நடந்ததில்லை. மழை எண்டால் அம்மளவு கொள்ளை விருப்பம் எனக்கு. ஜீவா அதற்கு நேர் எதிர்மாறு. மழை வருகுது... குளிர் வருகுது என்றால் கொள்ளைக்காரன் வாறான் என்ற நினைப்பு அவருக்கு.

இந்தக் கங்கா மாதாக்குத் தான் எத்தனை அவதாரங்கள். நீர் இன்றி அமையாது உலகு என்று சும்மாவா சொன்னான் வள்ளுவன்?

தாகத்தினால் தவிர்ப்பவர்களுக்கு அவள் அமிர்தம்.

நல்ல வெயிலில் குளத்திலும் கடலிலும் நீச்சலிடிப்பவர்க்கு அவள் தேவதை.

அலையாக மாறி நம்மை தடவும் போதும் அவை பொங்கி, நுரை தள்ளி, கரை வந்து எமை அவள் முத்தம் இடும் போதும் அவள் குழந்தை.

மேகம் பாடும் மெல்லிசையாய் அவள் எம்மை தொடும் போதும் உயிர்க்கூடு பூப்பூத்துக் கொட்டுதல்லோ.

இந்தக் கடல் மாதாவே சுனாமியாக உயிர்க்காவு கொள்ளும் போது உலகே இருண்டல்லவா போகிறது.

இந்தச் சிங்கார அலைகள் தானே என் சித்தியையும் தங்கை மாரையும் வள்ளத்தோடு புரட்டிப் போட்டு, பின் இது விதியின் விளையாட்டு என்று சொன்னது.

கடல் அலைகளைக் குற்றம் கூறி என்ன பலன்?

காசுக்காக வள்ளம் நிரம்ப மக்களை ஏற்றிய வள்ளக்காரனை குறை கூறி என்ன பலன்??

வள்ளக்காரனையும் தானே அலை கொண்டு போனது.

தமிழரை நசுக்கும் சிங்கள அரசை நோவதா?

இல்லை சிங்கள அரசுக்குத் துணை போன இந்திய அரசை நோவதா??

பகல் நிலவாகவும்

நள்ளிரவு சூரியனாகவும்

வாழ்ந்தும் வாழாத

இந்த அகதி வாழ்க்கை

என்னத்தை தந்துவிடப் போகிறது நமக்கிது?

இந்த வலிகளையும் ஓலங்களையும் தவிர என்றோ ஒரு நாள் என் கண்முன்னே கடல் கொண்ட என் தங்கைகள் வருவார்களா?

வரவேண்டும்!

இந்த நம்பிக்கையில் தான் இந்தப் பூமி சுற்றிக் கொண்டு இருக்குது.

000

## வளரும் பன்னீர்க்குடமும் நானும்

*என்னை சுற்றியுள்ள தண்ணீரில் கால்களையும் கைகளையும் அடித்து அடித்துப் பார்க்கின்றேன்.*

*நீந்த முடிகின்றது…*

*இது ஆழ் கடலா?*

*இந்து சமுத்திரமா?*

*ஏழாத்துப் பிரிவா?*

*என் தங்கைமார் கடல்கன்னியராக ஆழ்கடலில் குடியிருப்பார்களா?*

*கீழே கடல் கோட்டை உண்டா?*

*கடல் ராசா, கடல் ராணி எப்பிடி இருப்பினம்?*

*அவைக்கு கால் இருக்கா? இல்லை வால் இருக்கா?*

*கடலுக்கடியில் முத்துண்டா? சிப்பிக்குள் உள்ள முத்தா?*

*எப்படி?*

*நான் அம்மாக்குள்ள இருக்கிறமாதிரி?*

*என்னைச் சுற்றி எல்லாம் ஆடுது!*

*நான் அந்தச் சிவத்தக் கயிற்றை கெட்டியாகப் பிடிக்கிறன்.*

*000*

டிர்... டிர்... டிர்...

மெயில் லோஞ்ச் எஞ்சின் ஸ்ராட் பண்ண முயற்சி நடக்கிறது.

"கொஞ்சம் பெற்றோலை மூடியிலை எடுத்து காட்டிக் கொண்டு அடி. சுகமாக ஸ்ராட் பண்ணும்... தபால் எடுக்க நேரம் ஆகுது"

"எப்பிடிச் சுகம் நாகலிங்கண்ணை?.... இன்னும் 2 லோஞ்சிவாங்கிறியளாம்?"

"ஓம் தம்பி... எல்லாம் அந்த ஐயனார் துணைதான்"

கடலில் லோஞ்சு மிதக்கிறது.

கடற்காற்று தடவுகிறது.

இந்த உலகத்தின் உச்சக் கட்ட சந்தோசம் இந்தக் காலை மெயில்லோஞ்ச் பயணம் தான்.

நாகலிங்கத்தார் நெற்றியில் கையை வைத்துத் தூரத்தே பார்த்தபடி.... "ஸ்பீற்றைக் கொஞ்சம் குறை விசுவலிங்கம். எழுவைதீவு நெருங்குது."

"என்ன பெரியக்கா ஒரு மாதிரி இருக்கிறியள்... ஏதும் பிரச்சனையோ?" விசுவலிங்கமாமா அம்மாவ துளாவுறார்.

"இல்லையடா... அம்மாவை விட்டிட்டுப் போக மனசில்லை"

"அட விடு அக்கா! நீ அத்தாரை யோசி... அவர்தான் பாவம். மனுசன் கொழும்புக்கும் அனலைதீவுக்கும் மாறி மாறி வந்து நொந்து நூலாகிப் போனார்"

அப்பா அவருடன் சேர்ந்து கொள்கிறார்.

"நான் எப்படி தாயையும் பிள்ளையையும் விட்டிட்டு இருக்கிறது?"

"எனக்கு தலையை சுத்தி வயித்தைப் பிரட்டுதப்பா" இது அம்மா.

"இந்தா இந்த யன்னல் கரையில் இருந்து கடலைப்பார். காத்துப் பட்டால் சுகமாக இருக்கும்" அப்பா சொல்லி முடிக்க முதல்,

"குவக்...குவக்" அம்மா சத்தி எடுக்கிறா.

நான் இருக்கிற குளம் ஆடுது.

எனக்கும் தலையை சுத்துது.

மீண்டும் குவக்...குவக்...

"அடக் கடவுளே... உங்கட சட்டை எல்லாம் சத்தியப்பா..."

"சரி... விடு ஊறாத்துறையிலை கழுவுவம்"

"சிவகுரு அண்ணை கடையிலை ஒரு பிளேன் சோடா வேண்டித் தாறன். குடிச்சா வயிற்றைப் பிரட்டு நிண்டு போகும்"

நிமிடக்கம்பிகள் அசைய வள்ளம் கரை அணைகிறது.

சிவகுரு அண்ணை கடைக்கு போய் சோடா குடிச்ச பின்பு அப்பாவின் கால்களும் அம்மாவின் கால்களும் பஸ்சினுள் ஏறுகின்றன.

ஒரு மணித்தியாலமாக பஸ் பயணிக்கிறது.

பஸ்சினுள் இருக்கும் பொழுது கடற்காற்று வீசும் சுகம் தெரிகிறது.

பின் சீற்றில் இருந்து, "இதுதான் பண்ணைப்பாலம்", என ஒரு அப்பா தன் மடியில் இருந்த மகளுக்கு சொல்லிக் கொண்டிருக் கின்றார்.

என் அப்பாவும் என்னை மடியில் வைத்து எல்லாம் சொல்லித் தருவாரா என மனம் நினைத்துக் கொண்டிருக்க யாழ். புகை யிரத நிலையம் வந்து விட்டது.

பஸ்ஸால் இறங்கும் பொழுது தூரத்தில் "குக்கூ... குக்கூ..." என்று சத்தம் கேட்கிறது.

என்றுமே கேட்காத ஒரு சத்தம்.

இதுதான் றெயின் போலும்.

சீறி வந்த பாம்பு அடங்கியது போல் மெதுவாக பிளாட்

பாரத்தில் வந்து நிற்கிறது.

அம்மா முதல் ஏற அப்பா பின்னால் ஏறிக் கொள்கின்றார்.

"எப்பிடியும் 2 மணி யாழ். தேவி கொழும்புக் கோட்டைக்கு இரவு பத்து மணிக்கு போயிடும்" -அப்பா சொல்கிறார்.

சுக்குப் புக்கு... சுக்குப் புக்கு... சுக்குப் புக்கு.....

ஆகா... ஆகா... தாளம் போட்டு ரயில் தண்டவாளத்தில் போகிறது.

ஊஞ்சல் கட்டி ஆடுவது போல இருக்குது.

நானும் விரலைச் சூப்பியபடி நித்திரையாகின்றேன்.

000

""நான் நடந்து போட்டு வாறன்" சொல்லிப் போட்டு ஜீவா நடக்கப் போறார்.

மழை விட்டு விட்டது.

நான் உண்ட களைப்பில் சோபாவில் ரி.வி.யைப் பார்த்தபடி அயர்ந்து போய் இருக்கின்றேன்.

நேரம் மாலை 7.30ஆகி விட்டது.

ஜீவா தினமும் ஒரு மணித்தியாலம் அல்லது ஒன்றரை மணித்தியாலம் நடப்பது வழமை.

ஐம்பது வயதுக்கு மேல் நோய் நம் உடம்பை குத்தகைக்கு எடுக்கும். ஏலம் விட்டு நம்மை ஆட்டிப் படைக்கும். சலரோகம்... கொலஸ்ரோல்... இத்தியாதி... இத்தியாதி நோய்களை நாங்கள் குறைக்கின்றோம் என தங்கள் மருந்துகளை விற்க பல கம்பனிகள் போட்டி போடுகின்றன. இந்த நோய்களை மருந்துகள் ஏதுமின்றி தடுக்கும் தற்பாதுகாப்புக் கலை தான் இந்த நடை.

எனது நடை பெரும்பாலும் இந்த அடுக்குமாடிக் கட்டங்களை சுற்றியும் அருகில் உள்ள கடைக்குப் போய் வருவதும் தான்.

சற்றுத் தள்ளிப் போனால் மரங்களும் பச்சைப் பசேல் என்று புதர்களும் குடித்தனம் பண்ணும். அழகிய சிறு காடு... சிறு மேடு.... எல்லாம் அழகுதான்.

நானும் என் ஊன்று தடியைக் கூட்டிக் கொண்டு சின்ன நடை நடக்க தொடங்கி விட்டேன்.

பக்கத்து மாடியில் குடியிருக்கும் ஓர் ஒற்றைக் கிழவி யன்னல் கரையில் மஞ்சள் நிற பூக்களை வைக்கின்றாள்.

இயேசுவின் உயிர்த்தெழுந்த ஞாயிறு வரப்போவதை பறைசாற்றும் இந்த மஞ்சள் நிறப்பூக்களும்... கூடவே பக்கத்தில் வைக்கும் சின்ன சின்ன மஞ்சள் நிற கோழிக்குஞ்சுப் பொம்மைகளும்.

பனி அரக்கனிடம் இருந்து விடுதலை அடைவதற்கு இனி அதிக நாட்கள் இல்லை. மரங்கள் துளிர்க்த் தொடங்கி விடும். நிர்வாண நிலையில் இருந்த மரங்கள் தங்களுக்கு தாங்களே இளம் பச்சை நிறத்தை பூசிக்கொள்ளும்.

குளிருக்கு ஒதுங்கிய குருவிக் கூட்டங்கள் மெல்ல மெல்ல தம் சுதிப்பெட்டிகளுக்கு தூசு தட்டி சுருதி சேர்க்கின்றன.

கதிரவன் பச்சைக் கம்பளம் விரிக்கப் போகின்றான். வசந்தகாலம் வயசுக்கு வந்திடப் போகின்றது.

கிழவி வீட்டு யன்னலில் இருந்த அதே பூக்களும் இன்னும் பல மஞ்சள் நிற வகைப் பூக்களும் கடைகளுக்கு வரத் தொடங்கி விட்டன.

கோழி முட்டைகள் போன்ற சொக்கிலேட்டுகள்... முயல் வடிவிலாக சொக்கிலேட்டுகள் இந்த உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக்கான பிரத்தியோக இனிப்பு வகைகள்.

வசந்த காலத்தை வரவேற்பதற்கான ஆயத்தங்கள் தன் பாட்டில் நடக்கின்றன.

நான் என்பாட்டில் நடக்கின்றேன்.

*வயிற்றைத் தள்ளியபடியும்... குழந்தை வண்டியைத் தள்ளிய படியும்... தாய்மார்கள் தனிநடை போடுகின்றனர்.*

*தெத்தி தெத்தி நடக்கும் குழந்தைகள்....*

*பொல்லுக் கொண்டு நடக்கும் பாட்டா பாட்டிகள்...*

*ஓடுகின்ற கார்... பஸ்... புகையிரதம்...*

*பறக்கின்ற விமானம் அத்தனையையும் தாங்கிக் கொண்டு தானும் சுழன்று கதிரவனையும் சுற்றி சுற்றி வருகின்றா பூமியம்மா.*

*சூரியக் குளியலுக்கான பரவசமும் ஆர்ப்பாட்டமும் மக்களிடம் உற்சாகத்தை கிளப்பி விட்டுள்ளது.*

*வீட்டினுள்ளும் கராஜ்யுக்குள் இருந்த சாமான்கள் இனி வெளியே வந்து விடும்.*

*பின்னிருப்பதை முன்னே எடுத்து வந்து வைப்பது போல மணிக்கூட்டின் கம்பியும் ஒரு மணித்தியாலம் முன்னே வந்து விடும். அவ்வாறே பனி வரமுதல் முன்னே வந்த சாமான்கள் இலையுதிர் காலத்தில் பின்னே போய் விடும். மணிக்கூட்டுக் கம்பியும் கூடவே பின்னே சென்று விடும்.*

*றோட்டுக் கரையில் பனிகரைந்து ஓடும் சின்ன வாய்க்காலில், இப்போது மழை தந்து விட்ட தண்ணீர் ஓடிக்கொண்டு இருக்கின்றது.*

*குழந்தைகள் கல்லைப் போட்டு விளையாடுகின்றன.*

*புத்தக்கட்டுகளை முதுகில் சுமந்தபடி வீட்டை போக மறந்து விளையாடிக் கொண்டிருக்கின்றன குழந்தைகள்.*

*வெள்ளத்தில் விளையாடுவதும்... உள்ளங்கால் நீர்ச்சிரங்கும் மாறி மாறி வந்து என்னை என் பள்ளிப் பருவத்துக்கு இழுத்துப் போகின்றன.*

*000*

# என் ஆரம்பக் கல்வி

கொழும்பு கொச்சிக்கடை...

அன்னம்மா ஸ்கூல்...

ஏடு தொடக்கிய சிஸ்டர்...

நகம் எல்லாம் ஒழுங்காக வெட்டியிருக் கிறமா என சோதிக்க பிரம்புடன் திரியும் இன்னேர் சிஸ்டர்...

கட்டிப் பிடித்து படிப்பிக்கும் வகுப்பாசிரியை சிஸ்டர்...

வெள்ளைச் சட்டை வெள்ளைச் சப்பாத்து தண்ணீர்ப் போத்தல் - பள்ளிப் பை என எல்லா நினைவுகளும் என்னைக் கூவி அழைக்கின்றன.

ஒன்று, இரண்டு எழுதப்படித்து... பின் ஏழு எழுத தெரியாமல் அப்பாட்ட அடி வாங்கியது... பின் என்னைச் சமாதானப்படுத்த அப்பாவே கோல்பேசுக்கு கூட்டிச் சென்று ஐஸ்கறீம் வேண்டித் தருவது...

ஆம்!

சுதந்திரமான அந்தக் காலத்தில் பட்டம் விட்டு விளையாடியது எல்லாம் இப்போ கனவு போல இருக்குது.

கத்தரிக்கோல் எடுத்து வெட்டிப் பழக அப்பாவின் புது வேட்டியைப் பலியாக்கி அம்மாவிடம் அடி வேண்டியிருக் கின்றேன். அதுக்காக அம்மா அப்பாவிடம் ஏச்சு வேண்டியிருக் கின்றா.

*சின்னனில் நான் வேதப் பள்ளியில் படிச்சதாலை எல்லா சுவிசேகங்களையும் ஒழுங்காக ஒப்புவிப்பேன்.*

*ஊருக்குப் போனால் அதை பெரிய புதினமாக என்னைச் சொல்லச் சொல்லி கேட்பார்கள்.*

*நான் சொல்லச் சொல்ல எல்லோரும் நாடியில் கைவைத்து ஆச்சரியமாக பார்ப்பார்கள்.*

*சொல்லி முடித்தபின்பு தூக்கி உச்சி மோவார்கள்.*

*அவர்கள் ஐயனாருக்கும் அந்தோனியாருக்கும் இடையில் வேறுபாடு பார்த்ததேயில்லை.*

*புகையிலை வியாபாரத்திற்கு கொழும்புக்கு வாற தாடி ஐயா எங்க வீட்டில் தங்குவார். அவர் மடியில் இருந்து கணக்கு படிச்சிருக்கிறன். 9 உடன் எதைக்கூட்டினாலும் 1 என்பதைப் போட்டு பின்னால் ஒரு எண்ணை குறைச்சு எழுதினால் விடை வரும் என்று சொல்லித் தந்ததே அவர் தான்.* (9+2=11, 9+3=12,9+4=13.....9+9=18*). எல்லாம் பசுமரத்தாணியாகப் பதிவாகியிருக்கிறது.*

*அப்போது எனக்கு ஐந்து வயது.*

*ஆச்சி இறந்து விட்டதாக ஊருக்குப் போக வேணும் என அப்பா எம்மை ஊருக்கு கூட்டிப் போனார்.*

*அப்போது அம்மாவின் வயிறு பெரிதாக இருந்தது. எங்களுக்கு புதுப்பாப்பா வரப் போகுது என்று சொன்னார்கள்.*

*காலம் உருண்டோடிக் கொண்டிருந்தது.*

*எப்போ பாப்பா வரும்?*

*எப்படி வரும்?*

*தம்பியா? தங்கையா? இப்படியே அப்பாவையும் அம்மாவை யும் கேள்வி கேட்டு துளைத்துக் கொண்டு இருப்பேன்.*

*திடீரென ஒருநாள் நாம இனி ஊருக்குப் போவோம் என அம்மா சொன்னார்.*

அம்மம்மாக்கு கான்சர் வந்து குடும்பத்திலை எல்லோரையும் நிலைகுலை வைத்த நேரமது.

என்னையும் நித்தனையும் ஊர்ப்பள்ளிக் கூடத்தில் சேர்த்தனர்.

ஊர்ப்பள்ளியில் அப்போது எல்லோரும் நிற உடுப்புத்தான் போடுவார்கள். ஆனால் நான் வெள்ளை உடுப்பும் வெள்ளைச் சப்பாத்தும் தான் போடுவேன் என அடம் பிடித்து போட்டுக் கொண்டு போவேன்.

எல்லாரும் புது முகங்களாக இருந்தார்கள்.

மஞ்சுளா மட்டும் கிட்ட வந்து சொன்னாள், ““என்னை உன்னோடு சேரச் சொல்லி எங்கட அம்மா சொன்னவா” என்று. மஞ்சுளாதான் என் முதல் தோழி. அப்புறம் ஊரில் நிறைய தோழியர் கிடைத்தனர்.

மனோன்மணி ரீச்சர் பாடம் எடுத்தா.

பள்ளி வேலிகள் எல்லாம் முருக்கம்பூ பூத்து அழகாக இருக்கும்.

000

# சரன் பிறப்பும் அம்மம்மாவின் மறைவும்

*திடீரென வீட்டில் எல்லோரும் அழுதார்கள்.*

*அம்மம்மாக்கு வருத்தம் கூடி மகரகம ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்போகினமாம்.*

*““பிள்ளைகளுக்கு அடிக்காதே என அம்மாக்கு சொல்லி விட்டு தோட்டத்துக்குப் போய் அந்த மண்ணை முழங்காலில் இருந்து தொட்டு வணங்குகின்றா அம்மம்மா.*

*அவர்களை நிமிர்ந்து வாழ வைத்த பூமித்தாயை மண்டியிட்ட அந்தத் தாய் என்னுள் இன்றும் பசுமையாக உள்ளார்.*

*கோட்டை பொன்னம்பலம் அண்ணையின் வண்டில் வந்து அம்மம்மாவை கூட்டிப் போகின்றார்கள். பூ அன்ரிதான் அம்மம்மாவுக்கு துணையாகப் போகப் போகின்றா என சொல்லுகின்றார்கள்.*

*அந்த நேரம்தான் அம்மாவும் ஆஸ்பத்திரிக்குப் போய் தம்பிப் பாப்பா கொண்டு வந்திருந்தார். வெள்ளையா குண்டா இருந்தது அந்தப் பாப்பா.*

*பாப்பாக்கு பெயர் வைக்கிறது பெரிய விடயமாகப் பேசப் பட்டது.*

*சூடாமணி, நிகண்டு எல்லாவற்றிலும் அப்பா பெயவ தேடினார். யாருக்கும் இல்லாத பெயராக இருக்க வேண்டுமாம். எத்தனையோ பெயர்கள் எழுதி சல்லடை போட்டு கடைசியில் நிருத்தாசரன் என அவனுக்கு நாமகரணம் சூட்டப்பட்டது.*

அந்தப் பாப்பா வளர்ந்த பின்பு நானும் நித்தனும் அவனுக்கு நியூட்டன் எனப் பட்டப் பெயர் வைத்தோம். காரணம் பெரிய அறிவாளி மாதிரி எப்பவும் கதைப்பதனால். ஆனால் உண்மையில் அறிவாளியாகவே அவன் வளர்ந்து வந்தான்.

அம்மம்மா மாதிரி வெள்ளை குண்டுப் பிள்ளை. அந்தப் பாப்பா வந்த நேரம் தான் அம்மம்மாக்கு நோய் கூடியது என எல்லோரும் சொன்னார்கள். ஐயா அனைவரையும் ஏசினார். அப்பாவிப் பிள்ளையுடன் அறிவீனத்தை இணைக்க வேண்டாம் என்று.

அப்புறம் அம்மம்மா திருப்பி வருகின்றா. தொண்டைக் குழியுள் ஒரு வயருடன். வாயால் சாப்பிட முடியாத அவாவுக்கு பழச்சாறுகள் கொடுக்கும் வழியது என சொன்னார்கள்.

பின்பு ஒரு நாள். ஐயர் வந்தார். மாடு தானம் குடுத்தார்கள். அம்மம்மாக்கு வருத்தம் கடுமை என்றார்கள்.

வீட்டில் எல்லாச் சொந்தக்காரரும் கூடி விட்டனர். பக்கத்து வீட்டுச் சிவராசா, காசி, பவானி, சாரதா, நான் எல்லோரும் சேர்ந்து வட்டக்கோடு விளையாடினம். பின்பு தம்பி மாமா, மாமா, சிறி, வித்தியா எல்லாரும் வந்தார்கள்.

பெரிய ஆட்கள் எல்லாரும் தேவாரம் படித்தபடி இருந்தார்கள்.

தீடீரென எல்லோரும் அழுதார்கள்.

பறைமேளச் சத்தம் பெரிதாக இருந்தது.

எல்லாத்தையும் பார்த்து நான் அழத் தொடங்கி விட்டன்.

அந்தப் பறைமேளச் சத்தம் இப்பவும் நெஞ்சங்கூட்டுக்க வந்து டங்கு...டங்கு என்று அடிக்குது. பக்கு... பக்கு என்று ஏதோ செய்யுது. ஏதோ ஒரு சூனியம் வந்து உசுப்பி விட்டுப் போகும்.

நான், நித்தன், சிறி, வித்தியா எல்லோரும் தீப்பந்தம் பிடித்தோம். பிறகு அம்மம்மாவை தேர் போன்ற பாடையில் கொண்டு போனார்கள்.

அம்மம்மாக்கு கொள்ளி வைத்துப் போட்டு வந்த பின்பு

தம்பிமாமா, தம்பி மாமி, அம்மா, சின்ன மாமா, சோதி மாமா, சோதி மாமி எல்லோரும் கட்டிப் பிடிச்சு அழுகினம். வட்டமாக நிற்கினம்.

பாசக்கயிறுகள்.... அந்தத் தொப்புள் கொடியின் உறவுகள்... ஒன்றை ஒன்று தாங்கி ஆறுதல் அடைகின்றனர். இந்த ஏழு குழந்தைகளைச் சுமந்த அந்த கற்பப்பை நெருப்போடு நெருப் பாகி காற்றோடு காற்றாகி கற்பூரமாகி மறைந்து விட்டது.

அம்மம்மாவின் பாடைக்குப் பின்னால் எங்கள் வீட்டு நாய் ராமனும் போனது. பிறகு திரும்பி வரவே இல்லை. நாலு நாட் களுக்குப் பின்பு வீட்ட வந்து தானாகவே செத்துப் போனது.

சரன் உடம்பு பிரட்டத் தொடங்கினான்.

பறுவத்திலை பிறந்து அம்மம்மாவை விழுங்கியவன் என்று சனம் கதைத்த அதே சரன் வளர்ந்து.. படிச்சு.. டாக்டராகி... அதிலும் மகரகமையில் கான்சர் ஸ்பெசலிட்டாகியது அம்மாம்மாவின் ஆசியே தவிர வேறு ஏதுமில்லை.

இன்று அவன் எத்தனையோ அம்மம்மாக்களை காப்பாற்றப் போகிறான் என அன்று யாரும் கற்பனை பண்ணியிருக்க மாட்டார்கள்.

காலம் கடந்து தான் இயற்கை பல பாடங்களை பலருக்குச் சொல்லித் தரும்.

உலகம் உருண்டை என சொன்னவனை கழுவேற்றுவது பிழை என அதே உலகம் உருண்டு வந்துதான் உலகத்தவர்கட்கு சொன்னது.

அப்படித்தான் எல்லா நிகழ்வுகளுக்கும் நன்மை தீமைகளுக்கும் ஒரு பாதையும் சுழற்சியும் உண்டு.

சில சுழற்சியில் காணாமல் போகும். சில நீண்ட காலம் வாழும்.

எல்லாம் சுற்றிச் சுற்றியே வரும் - நான் இந்தத் தொப்புள் கொடியைச் சுற்றி வருவது போல.

000

# கோழி மிதித்து குஞ்சு சாகாது

கடுகதியில் ஓடிப்போன என் எண்ணங்களை இழுத்து நிறுத்து கின்றது ஒரு குழந்தையின் அழுகுரல்.

எம் நடைபாதையில் ஒரு டெனிஷ்தாயும் அவளது சின்ன மகளும் வாக்குவாதப்படுகிறார்கள்.

"நான் நடந்து வர மாட்டேன். என்னைத் தூக்கு" என அடம் பிடிக்கிறது அந்தக் குட்டி.

"உனக்கு இரண்டு கால்கள் இருக்கு. நட. நல்லாய் நட" என மறுதலிக்கின்றாள் அம்மாக்காறி.

நம்மைப் போல "டக்"கென்று குனிந்து தூக்கி இடுப்பில் வைக்கவில்லை.

பிள்ளை மீது கோபிக்கவில்லை... அடிக்கவில்லை.... நுள்ள வில்லை... சனியனையும் நாயையும் கூப்பிட்டு திட்டவில்லை... தடி எடுத்து விரட்டவில்லை.. மேலாக சொக்கிலேற் வாங்கித் தாறன் என இலஞ்சம் கொடுக்க கூட முயற்சிக்கவில்லை.

உனக்கு பிள்ளை வளர்க்கத் தெரியவில்லை என்று தாயின் உறவினர்கள் யாரும் தாயைக் குறை சொல்லவில்லை.

அப்போ அந்த அம்மா என்ன செய்தா?

ஆற அமர்ந்து அந்த றோட்டில் சப்பாணி கொட்டி இருந்து விட்டா.

அம்மாக்கும் குட்டிக்கும் போர்.

மௌனப் போர் நடக்கிறது.

5 நிமிடம்... 10 நிமிடம்... 15 நிமிடம்...

அம்மாக்காரி அசையவே இல்லை.

மௌனப் போர் தொடர்கிறது.

குட்டி தாயைப் பார்த்த படியே நிற்கிறது.

நம்மட நாட்டாமை அம்மாவிடம் இனிச் சரிவராது என நினைத்துக் கொண்டு தாயைப் பார்த்து புன்னகைக்கின்றாள்.

மெல்ல மெல்ல புன்னகைகள்.

கன்னத்தில் முத்தங்களின் பரிமாற்றங்கள்.

கடைசியாக கை கோர்த்தபடியே அம்மாவும் குட்டியும் பாடிக்கொண்டு போகினம்.

அந்த டெனிஷ்தாயை பார்க்க பார்க்க எனக்கு எங்கம்மாவின தும் அம்மம்மாவினதும் நினைப்பு வந்து தொண்டையை அடைக்குது.

“மாடு சாகேக்கை கன்றுக்கு புல்லுப் பிடிங்கிப் போட்டிட்டா சாகுது” என அம்மம்மா சொல்வா என அம்மா சொல்வா.

“கல்லுக்கை இருக்கிற தேரைக்கும் கடவுள் வாழ்க்கையை வாழ கற்றுக் கொடுத்திருக்கிறான்” என சொல்லுவா அம்மா.

பாசம் என்ற பெயரில் எப்பவும் செல்லம் தந்து எம்மைக் குட்டிச் சுவராக்க அப்பா அம்மா விரும்பியதில்லை.

கோழி மிதித்து குஞ்சு சாகாது என்று சொல்லிச் சொல்லி எல்லா விதப் பழக்கவழக்கங்களையும் கண்டிப்புடன் பழக்கி விட்டனர் இருவரும்.

அம்மா என்றால் எப்போதும் கண்டிப்பும் போதனையும் தான் என்பது மனதில் பதிந்து விட்டது.

அம்மம்மா இறந்த பின்பு குடும்பத்தில் அந்த இடத்தை நிரப்ப வேண்டிய நிலையில் அம்மா இருந்தா.

அந்த வேளையில் சோதி மாமா, மாமி, பெரியமாமா, மாமி எல்லாரும்ம் எம் வீட்டிலேயே தங்கியிருந்தார்கள். அச்சமயம் சின்ன மாமாவுக்கு திருமணம் ஆகவில்லை.

அம்மம்மாவை நாம் இழந்த பொழுது தாடி ஐயா, அம்மம்மா, நாகலிங்கப்பா, சின்ன அம்மம்மா, காசி ஐயா, காசி அம்மம்மா, தக்காளி ஐயா, தக்காளி ஆச்சி, பெரியய்யா, பெரியம்மா, பசுபதி யப்பா வீட்டார், லட்சுமியக்கா வீட்டார், சபாபதி பெரியய்யா வீட்டார் என எல்லோரும் வந்து ஆறுதல் சொன்னார்கள்.

காலம் ஓட ஓட வாழ்வும் தனது பாட்டுக்கு ஓடத் தொடங்கியது.

அம்மம்மா செத்து விட்டா என சூரியன் உதிக்காமல் விட்டதும் இல்லை...

உதித்த சந்திரன் மறையாமலும் விட்டதும் இல்லை....

உலகத்தின் சுழற்சியில் பிறப்பும் இறப்பும் இயற்கையே என சிறிய வயதில் எனக்கு போதித்தது அம்மம்மாவின் மரணமே.

*000*

# சின்னக்கலா என்றால் அது கலா மட்டுமல்லை

அம்மம்மா இறந்த பின்பு நானும் அம்மாவும் தம்பிமாரும் ஊரில் இருக்க அப்பா கொழும்பில் வேலை செய்வது என்பது முடிவாகியது. நாம் ஊர்ப் பள்ளிக்கூடத்தில் படிப்பது என முடிவாகியது. இடையில் பூ அன்ரி யாழில் படிப்பித்த பொழுது என்னையும் கூட்டிச் சென்று நாவலர் பள்ளியில் படிப்பித்தா. அது கொஞ்சநாட்கள் தான். மற்றும்படி சதாசிவ மகா வித்தியாலயம் தான் எனது ஆரம்பக் கல்விக்கு வழிகாட்டியது.

ஆரம்பத்தில் அப்பாவை விட்டு விட்டு இருப்பது மிகவும் கஷ்டமாகவே இருந்தது.

ஆனாலும் அப்பா அடிக்கடி விளையாட்டுச் சாமான்களுடன் வந்து அந்தப் பிரிவை நிரப்பிக் கொண்டேயிருப்பார்.

விளையாட்டுச் சாமான்களுக்கு எப்போதும் எங்கள் வீட்டில் குறைவிருக்காது.

அப்பா வாங்கித் தந்த பெரிய றெயின்.... சின்ன மாமா வாங்கித் தந்த 3 சில்லு சைக்கிள்... தம்பி மாமா வாங்கித் தந்த குதிரை...பெரிஐயா மகள் மணியக்கா இந்தியாவில் படித்திட்டு வந்த பொழுது கொண்டு வந்து தந்த தலையாட்டிப் பொம்மை கள்... தேனீர் குடித்து விளையாட மாபிளால் செய்யப்பட்ட கப் அண்ட சோசர்கள்...வாட்டர் கலர் முத்திரை கள்... பயணம் சென்று விளையாட சிவத்த றங்குப் பெட்டிகள்...

பெரிஐயா வீட்டிலும் சரி... அம்மா குடும்பத்திலும் சரி... நான்

ஒரு குட்டி ராசகுமாரி போலவே வலம் வந்தேன்.

நானும் நித்தனும் எல்லாச் சாமான்களையும் கொண்டு பக்கத்து வீடுகளுக்கு போய் விடுவோம்.

அயல் வீட்டுப் பெரியக்கா, சின்னக்கா, சுந்தரக்கா, பவானி, சிவராசா, சாரதா, ரமணி, ரவி, காசி, மகாலிங்கம் என எல்லோருடனும் விளையாடப் போய்விடுவோம்.

சாமி கட்டி விளையாடுறது, திருவிழா செய்வது, திருவிழாவில் நாடகம் போடுவது, பள்ளிக்கூடம் நடத்துவது, பயணம் போவது... அப்படி இப்படி பல பல விளையாட்டுகள். இந்த விளையாட்டுகள் எம்மை பல “றோல் மொடல்களாய்” விளங்கவும் எங்களை நாங்களே வளர்க்கவும் உதவிசெய்தன.

சாப்பாடு நேரம் வரும் பொழுது எல்லாக் கூட்டாளிக்களுக்கும் அம்மா சாப்பாடு தீத்தினால் தான் நானும் சாப்பிடுவேன் என அடம்பிடிப்பேன். அப்படியே அம்மாவும் என் சொல்லுக் கேட்டு நடப்பா... நான் பொல்லாத ராங்கிக்காரியாம்.

ஸ்ரீ, வித்தியா, தம்பி மாமா பிள்ளைகள் வந்தால் வைக்கல் பட்டடை ஒண்டும் மிச்சமில்லாமல் ஏறி குதிச்சு விளையாடு வோம். சிரட்டைக்கு கீழே வெடியைக் கொளுத்தி சிரட்டை பறப்பதை பார்த்து குதூகலிப்போம். வைக்கல், மண், புழுதி என்று ஒன்றையும் விட்டு வைப்பதில்லை. மாலையானதும் உடம்பு முழுக்க சொறியும். கூடவே கடிக்கும்.

தம்பி மாமி எல்லோரையும் கிணற்றடியில் வரிசையில் வைத்து குளிக்க வைப்பா. கீச்சம் காட்டி... கீச்சம் காட்டி...ராணி சோப்பு போட்டு போட்டு குளிக்க வைப்பா. குளித்து விட்ட அனைவருக்கும் மாமா ஈரம் துவட்டி விடுவார். பிறகு சாம்பி ராணி போட்டு விடுவினம். பவுடரும் போட்டு பொட்டும் வைத்து அழகு பார்ப்பார்கள். அதுக்கும் பின் மாமியே அனைவருக்கும் சாப்பாடு தீத்துவா.

அது ஒரு நிலாக் காலம் - கனாக்காலம்.. இப்போதும் நினைத்தாலும் கண்கள் ஓரத்தில் கண்ணீரை வரவழைக்கும்.

இந்த கூட்டு வளர்ப்பினால் எங்கள் குடும்பத்தின் மூத்தவர்களின் இயல்புகளை இளையவர்ளிடம் காணலாம். ஒரு சின்னக் கலாவில் அம்மா... அப்பா... தம்பி மாமி... பெரியம்மா... பூ அன்ரி... சின்னம்மா.. கிளியக்கா... லலிதா அக்கா... மணி அக்கா... வசந்தா அக்கா என பலர் குடிபுகுந்தனர்.

இன்றும் அம்மாவின் புத்தக வாசிப்பையும் ஆன்மீகத்தையும் மச்சாள் நித்திலத்தில் காணலாம்.

அம்மாவின் சமையல் கைப்பக்குவத்தையும், குடும்ப நிர்வாகத் திறனையும், சுத்தம் பார்க்கும் திறனையும் மச்சாள் தேவியிடம் காணலாம்.

ஆட்களை அரவணைத்துப் போவதையும், அன்பு பாசத்தைக் காட்டுவதையும், இரக்க குணம் மேலோங்கி நிற்பதையும் மச்சாள் ராசாத்தியிடம் காணலாம்.

சகோதர பாசத்திலும், மனத் தைரியத்திலும், இரக்க குணம் மேலோங்கி இருப்பதையும், எடுத்த காரியம் எதையும் முடிப்பதிலும் பூஅன்ரி மகள் கௌரி அம்மாவேதான்.

இல்லாததவர்களை இருப்பவர்களில் தேடுவது மனித இயல்பு. எனக்கு எப்போதும் என்ர மச்சாள்மாரைப் பார்க்கும் பொழு தும் எங்கட அம்மாவைப் பார்ப்பது போலவே இருக்கும்.

“கொஞ்சம் இரு... கொஞ்சம் இரு...” என கால்கள் கெஞ்சத் தொடங்க புல் தரையில் அப்படியே அமர்கின்றேன்.

றோட்டைக் கடந்து ஒரு வாத்தம்மா தனது நாலு குஞ்சுகளுடன் அலுக்காமல் குலுங்காமல் அழகாக புல்தரையை நோக்கி வருகின்றா.

எங்கிருந்தோ இரு வாண்டுகள். அதுகளுக்கு இரண்டு மூன்று வயது மதிக்கலாம். ஒருவரை ஒருவர் துரத்தியபடி வந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் வாத்தம்மாவை கண்டதும் இருவருமே தங்கள் வேகத்தைக் நிறுத்திக் கொண்டு தங்கள் இருவரைரின் கைகளை

யும் பிடித்துக் கொண்டு அவற்றைக் கண் கொண்டாமல் பார்க்கின்றார்கள்.

ஆளை ஆள் பார்த்து குறும்பாகச் சிரிக்கிறார்கள்.

பின்பு அந்த வாத்தம்மாவையும் குஞ்சுகளையும் விட்டுத் துரத்துகின்றார்கள்.

இன்னொரு துருக்கி நாட்டு மூதாட்டி “டேய் நில்லுங்கடா வாலுகளே” எனக் கத்துகின்றாள்.

“பிடி... பிடி... பிடி...” எனக் கூறியபடி குட்டிகள் வாத்தம்மாவை துரத்துகின்றார்கள்.

வாத்தம்மா பாவம் என்பது பற்றி அந்த குட்டி வாலுகள் இருவருக்கும் என்ன புரியப் போகிறது.

அவரவரது வேடிக்கைகளே அவர்களுக்கான உலகம்.

அந்தக் காலத்தில் நானும் சரனும் நித்தனும் சேர்ந்து எத்தனை வாழைமரங்களை பரலோகம் அனுப்பியிருப்போம்.

அம்மாவுக்குத் தெரியாமல் கத்தியை எடுத்துக் கொண்டு தோட்டத்துக் போய் எல்லா வாழை மரங்களுக்கும் நோய் வந்து விட்டது எனக் கூறியபடியே அவற்றிற்கு வைத்தியம் பார்ப் போம். தென்னங்குச்சியை எடுத்து சரன் வாழை மரங்களுக்கு ஊசி போடுவான். நானும் நித்தனும் அதுக்கு மேலே போய் ஒப்பிரேசன் செய்கின்றோம் என்று கத்தியால் வெட்டுவோம்.

பிறகு சொல்லவா வேண்டும்.

2-3 நாட்களில் வாழை மரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வாடி வாடி மெல்ல மெல்ல சரிவதைக் காணலாம்.

சரிந்த வாழையைக் கண்டு ஐயா துடித்துப் போவார். அம்மா திட்டுவா. எங்கள் முழிகள் பிதுங்கும். இனிச் செய்யமாட்டோம் எனச் சத்தியம் செய்வோம். பின்பு சத்தியம் காற்றோடு காற்றாகப் போக நாங்களும் எல்லாத்தையும் மறந்து மீண்டும் வாட் றவுண்ட் போவோம்.

அப்பா கொழும்பால் வரும் பொழுது வாங்கி வரும் விளை யாட்டுச் சாமான்களில் செஸ்ம் காட்ஸ்ம் எப்போதுமிருக்கும்.

விடுமுறையின் பொழுது மூளை வளரட்டும் என்றே அதனை வாங்கி வருவார்.

ஆனால் விடுமுறை முடிந்த பின்பும் அதனை நாங்கள் விடுவ தில்லை. நாம் அடிக்கடி படியாது விளையாடிக் கொண்டே யிருப்போம். சிலவேளை படிப்பது போல காட்டிக் கொண்டு கொப்பியினுள் மறைத்துக் கொண்டு விளையாடுவோம்.

ஒரு நாள் ஐயா வாறார்.

"என்ன நடக்குது"

"படிக்கிறம்"

"புத்தகத்தை தா பார்ப்பம்"

ஐயா புத்தகத்தை விரிக்க காட்ஸ் நிலத்தில் சொரிகிறது கர்ணன் பிடித்திழுக்க துரியோதனின் மனைவியின் சேலையின் முத்துகள் நிலத்தில் ஓடியது போல.

ஆவர் எரிமலையானார்.

"இப்ப எதுக்குப் பொய் சொன்னீர்கள்"

"சும்மா"

"சும்மா பொய் சொல்லலாமா?" சொன்னபடியே குசினியுள் சென்ற ஐயா தீப்பெட்டியுடன் வருகிறார்.

எங்கள் காட்ஸ் பைக்கற்றுக்கு எங்கள் கண் முன்னாலேயே கொள்ளி வைப்பு, காடாத்து, சாம்பல் கரைப்பு அனைத்தும் நடைபெறுகிறன.

யாரும் அழவில்லை. ஐயாவும் அடிக்கவில்லை.

அதுக்கு பிறகு யாரும் காட்ஸ் விளையாடியதில்லை.

ஒரு முறை நானும் நித்தனும் நெருப்பு பெட்டி தட்டி பழக வெளிக்கிட்டு அது எங்கள் வைக்கல் போரில் பட்டு விட்டது.

பின்பென்ன எங்கள் வீட்டில் அன்று சொக்கப்பானைதான். எங்கள் சொக்கைகளும் சிவந்தன. அம்மாவிடம் நல்லாய் வேண்டிக் கட்டினோம்.

மாம்பழக் காலங்களில் மரத்தில் ஏறி மாம்பழம் பிடுங்குவோம். அம்மாவும் சேர்ந்து மரம் ஏறுவா. முற்றிய காய்களைப் பிடிங்கி வைக்கல் போட்டு அலுமாரிக்குப் பின்னால் ஒளிச்சு வைப்பா. கோயிலுக்கும், சொந்த பந்தங்களுக்கும் என்று ஒரு பங்கீடே நடைபெறும்.

அம்மா எடுத்து அடுக்கி வைத்து விட்டுப் போன பின்பு நாங்கள் கள்ளப் பூனைகளாக அவற்றைக் சுவைத்து விட்டு கொட்டை களை தூரத்தில் எறிந்து விடுவோம்.

இது போதாது என்று மரத்தின் மீதேறி மீண்டும் அங்கு பழுத்திருப்பவற்றையும் சாப்பிடுவோம்.

ஒரு முறை நித்தன் மரத்தில் ஏறி நிற்க நான் கீழே நின்று கொக்கைச் சத்தகத்தால் விளையாட்டுக் காட்ட நித்தன் கால் தவறி மரத்தால் விழுந்து விட்டான். எனக்கு கை கால்கள் எல்லாம் உறைஞ்சு போச்சுது. நெஞ்சாங்கூடு பயத்தால் பறை மேளம் அடித்தது.

விழுந்த நித்தனுக்கு பல்லும் போச்சுது. நினைவும் தவற மயக்க நிலையில் அவனை அள்ளிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு போனார்கள்.

பின்பு அவன் மயக்கம் தெளிஞ்சு... கதைச்சு... சாப்பிட்டு... வீட்டை வரும் வரை நான் பட்டபாடு இருக்கே.... அப்பப்பா.... இப்ப நினைத்தாலும் இதயக்கூட்டுக்குள் தேள் கொட்டிப் போகுது நினைவுகள்.

நித்தன் விழுந்த கதையை அம்மா அப்பாக்கு அறிவிக்கவே யில்லை. பிள்ளைகளுக்கு ஏதாவது என்றால் அவருக்கு அதிர்ச்சி வந்து விடும். கூடவே அவசரப்பட்டு ஊருக்கு வந்து விடுவார் என்று.

ஊருக்கு வரும் போது அவற்றை அம்மா சொன்னாலும்

அச்சமயத்தில் தான் நிற்கும் மூன்று நாட்களில் பிள்ளைகளுடன் போர் தொடுக்க மாட்டார். வீடு சமாதான ஒப்பந்தம் செய்த சமரச பூமியாக இருக்கும். எனவே அம்மாவின் எந்தக் குற்றப் பத்திரிகைகளும் அப்பாவின் நீதி மன்றத்தில் வழக்குக்கு எடுக்கப்படுவதில்லை.

பின்னாளில் “அப்பா வரட்டும் சொல்லிக் கொடுக்கிறன்” என அம்மா மிரட்டினாலும், தீர்ப்பு எவ்வாறு இருக்கும் என எங்களுக்கு முன்பே தெரியும்.

நான் இடிச்சுப் பழக குட்டி கல் உரல், தோட்ட வேலை செய்து விளையாட குட்டி பட்டை குட்டி மண் வெட்டி என ஐயா எல்லாம் வாங்கித் தருவார். பொம்பிளைப் பிள்ளை எப்போதும் தைரியமாக இருக்க வேணும். சுதந்திரமாக இருக்க வேணும். நல்லாய் படிச்சு பெரிய ஆள் ஆகவேணும் என நிறைய பெண் விடுதலை விதைகளை என்னுள் விதைத்தவர் ஐயா தான்.

காளை மாட்டைப் பிடிச்சு அடக்கி கட்டு... கன்றுக் குட்டியைப் பிடிச்சுக் கட்டு... சாணம் அள்ளிப் பழகு... புல்லுப் பிடுங்கிப் பழகு... விறகு கொத்திப் பழகு... உடம்பு இறுகிற தென்றால் நிறைய வேலை செய்ய வேணும்... அப்பதான் புத்தியும் இறுகும்... நீயும் பெரிய கெட்டிக்காரியாய் வருவாய் என ஐயா சொல்லுவார்.

புகையிலை வெட்டி முடிய அந்தக் கட்டையில் முளைக்கிற சின்ன புகையிலைகளைப் பிடுங்கி.. காய வைத்து... கஞ்ச லாக்கி... பிறகு அதை நிறுத்து... எவ்வளவு கஞ்சல் சேர்த்திருக் கிறம் எனப்பார்த்து அதுக்கு சம்பளம் தருவார். ஐயா. யார் அதிக காசு உழைப்பது என்று எங்களுக்குள் போட்டியே நடை பெறும்.

அம்மா வீட்டார் மட்டுமன்றி அப்பா வீட்டாரும் எமக்கு நிறைய நிறைய செல்லம் தருவார்கள். பெரியம்மா வீட்டில் ஓர் ஆர்மோனியப் பெட்டி இருந்தது. அதில் பெரியம்மா சங்கீதம் சொல்லித் தருவார். பெரியய்யா மடியில் வைத்து சித்திரம் வரையக் காட்டித் தருவார்.

வசந்தா அக்கா பெருக்கல், பிரித்தல் எல்லாம் காட்டித் தருவார். லலிதா அக்கா தலைசீவி கண்ணுக்கு மைபூசி விடுவா. அப்போ நடேசண்ணா கிருபாண்ணா மகேஸ் அண்ணா யாழில் இருந்ததால் லீவுக்கு மட்டும் வந்து போவார்கள்.

ஆம்!

அம்மா வீட்டுச் சொந்தங்களுக்கும்... அப்பா வீட்டுச் சொந்தங் களுக்கும் நான் ரொம்பச் செல்லம்.

அதுக்கு காரணம் அம்மாதான்.

யாரையும் பாகுபாடு இல்லாமல் பார்க்க எம்மை பழக்கி யிருந்தா. எந்த ஒரு நஞ்சையும் எங்கள் பிஞ்சு மனதில் விதைத்த தில்லை.

அம்மாக்கு பெரியைய்யா வீட்டுப் பிள்ளைகள் என்றால் கொள்ளை ஆசை.

“ நீ பெரியம்மா மாதிரி எதுக்கும் கலங்காமல் இருக்கிறாய்”.... “நீ சிரிச்சா மணி மாதிரி இருக்கிறாய்”... “நீ நடந்தா லலிதா மாதிரி இருக்கு...” “மகேசன் மாதிரி பிடிவாதம் பிடிக்கிறாய். ஒண்டுக்கும் பயப்பிடுவது இல்லை”... இப்படி எல்லோரும் சொல்ல சொல்ல நானும் பெரியய்யா வீட்டு பெரிய சகோதரங் களை அண்ணாந்து பார்த்து பார்த்து அவர்களின் ஆளுமை களை என்னையுமறியாமல் உள்வாங்கி இருக்கின்றேன் என்பது தான் உண்மை.

ஆனால் ஒன்றே ஒன்று! கிருபா அண்ணை மாதிரி டொக்டர் ஆக வரவேண்டும் எண்டது மட்டும் இந்த மரமண்டைக்கு சரிவரவேயில்லை.

அப்பா அம்மாவின் சொந்தங்களை விட அம்மாவின் இரத்த உறவுகள் மச்சான்மார், மச்சாள்மார் என ஒரு பெரிய வட்டத்தையே அம்மா அன்பால் பிணைத்திருந்தா. அம்மாவின் மச்சான் மச்சாள் எல்லோருக்குமே அவாவுடன் சகோதரங்கள் போலவே பழகுவார்கள்.

*இன்று எனக்குச் சரி, என் தம்பிமாருக்குச் சரி இந்த உறவுகள் என் அப்பா அம்மா விட்டுப்போன சொத்துகளாய் இருக்கின்றனர்.*

*அப்பா சரி... அம்மா சரி வில்லத்தனம் பண்ணி போட்டி பொறாமைகளை பழக்கி விட்டிருந்தால் இன்று இந்த சொந்த பந்தங்கள் எதுவும் இல்லாமல் அனாதைகள் போலாகி யிருப்போம்.*

*மெல்ல மெல்லமாக...இதுகளை நினைத்து நினைத்து...நடந்து நடந்து...மீண்டும் வீடுவரை வந்து விட்டேன்.*

*000*

# மாடிக்கட்டடத்தின் மாலைப்பொழுதுகள்

*சூரியனும் அதிகாலை 4.30 தொடங்கி இரவு 10.00 வரை சுத்தி சுத்தி களைச்சு படுக்கப் போகப் பல்துலக்கிக் கொள்கிறது. பொன் அந்தி வானம் செக்கச் சிவந்து சிலிர்த்துக் கொள்கிறது.*

எம் மாடிக்கட்டடத்தின் முன்னால் உள்ள வாங்கு மேசைகளில் மொட்டாக்குப் போட்ட பெண்கள் கூடியிருந்து உணவருந்தி தேனீர் குடித்து குதூகலித்துக் கொண்டு இருக்கின்றார்கள். சின்ன சின்னக் குட்டிகள்... இளவயசுக் குமரிகள்... கூன் விழுந்த கிழவிகள் என எல்லோரும் கூடி இருக்கின்றார்கள். பார்க்க கொஞ்சம் பொறாமையாகவே உள்ளது.

இவர்களும் எம்மைப் போல வெளிநாட்டு மக்களே. என்ன ஒற்றுமை இவர்களுக்கிடையே?

இந்தப் புறாக்கூட்டம்... காகக்கூட்டம் போல கூடிக் கூடி யிருந்து உணவு அருந்தி மகிழ்கிறார்கள்.

நானும் ஜீவாவும் கூட இரு கிழக்காகங்கள் போல இரண்டாம் மாடியில் கூடுகட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறம்.

படிகளைத் தாண்டி மாடி வந்து வீட்டுக் கதவைத் திறக் கின்றேன்.

ரி.வி.யில் இந்திய அரசியலில் மெய்மறந்த பக்தனாக ஜீவா.

சந்தையில் நின்று சண்டை பிடிக்கிற கூட்டம் போல ரி.வி. நிகழ்ச்சிகளில் சண்டை பிடிக்கும் இந்திய அரசியல் வாதிகள் சண்டை பிடித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

தி.மு.க., அ.தி.மு.க., அதிலும் அம்மா அணி, புரட்சித் தலைவி அம்மா அணி, தே.மு.க. பாஜ.க... இன்னும் இத்தியாதி இத்தியாதிகள்...

"சவுண்டைக் குறையுங்கப்பா... நாம சண்டை பிடிக்கிறம் எண்டு பக்கத்து வீட்டுக்காரன்கள் நினைக்கப்போறான்கள்" என்றவாறு முகம் கழுவ போகின்றேன்.

கை, முகத்தை கழுவ கழுவ நினைவுகள் படைபடையாக....

முகத்திலும் கைகளிலும் வெளியில் வாங்கி வந்த தூசிகள் கரிகரியாக பைப்தண்ணியில் கரைகின்றன.

அந்தக் காலத்தில் எங்கள் வீட்டுச் சுவர்களை தி.மு.க.காரரின் படங்களும் இந்தியத் தலைவர்களின் படங்களுமே அலங்கரித் திருந்தன. இவர்கள் இலங்கைக்காரர் இல்லை என அறிந்து கொள்ள அதிக காலம் எனக்கு எடுத்தது.

சின்னமாமா பத்திரிகை நிருபராக இருந்ததால் பெரியாரின் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டவராய் இருந்தார்.

கண்ணாடி போட்ட பாரதிதாசன், தாடி வைத்த பெரியார், சால்வையுடன் அண்ணா, நடு உச்சியுடன் கருணாநிதி... மேலாக நேரு - காந்தி பாரதி வரிசையாக எங்கள் வீட்டுச் சுவரில் குடியிருந்தனர்.

புத்தக அலுமாரிகளில் முழுக்க இவர்களின் படைப்புகளே. இன்னமும் அந்தக் கால பேப்பர் கட்டுகள் என்வசம் உண்டு. இவைகளில் இருந்து எனக்குப் பிடித்தவைகளை கத்தரித்து ஒட்டி நானாக புத்தகம் மாதிரி வடிவமைத்து விளையாடி யிருக்கின்றேன்.

தினமும் குளித்து, முழுகி, தீட்சை வைக்க வேண்டும் - இது அம்மாவின் கட்டளை குளிக்காவிட்டால் முகம் குடுத்துப் பேச மாட்டா.

வீட்டில் தீண்டாமை.... மௌனவிரதம்.... இத்தியாதி... இத்தியாதி... இப்படி பல கூத்துகள் நடக்கும்.

“இந்தா தேவாரம் எல்லாத்தையும் பாடமாக்கு”

“ஏனம்மா... வேற வேலை இல்லையா?”

“ஐந்தில் நீங்கள் வளையாவிட்டால் ஐம்பதில் வளைய மாட்டீர்கள்... நீ இப்ப இதுகளைப் பாடமாக்காட்டி உருப்பட மாட்ட...”

“உருப்பட்டு என்ன பண்ண?”

“உனக்கு கொழுப்பு மெத்திப் போச்சு”

“அந்தக் காலத்தில் எங்கட பெரியண்ணா எனக்கு, கிளி, கமலா, பூமா எல்லோருக்கும் தேவாரப் போட்டி வைப்பார். நிறைய பரிசுகள் வேண்டித் தருவார். நாங்கள் எம்மளவு ஆசையாக பாடமாக்குவம் தெரியுமா?”

“சரி...சரி... புளுகிறியள்... சொல்லுங்கோ”

“உனக்கு எங்கட பரம்பரை பற்றி என்ன தெரியும்? ஐயாட தகப்பன்ர பரம்பரையில் பலர் திருவாவடுதுறை ஆதீனத்தில் தம்பிரானாக இருந்தார்கள். நாங்கள் பெரிய சைவப் பரம்பரை கண்டியோ...”

“அதுக்கு இப்ப என்ன?”

அம்மாவுடன் அன்று வாயடித்தாலும் அம்மாவின் தம்பிரான் களும், அப்பாட காந்தி, மாமாட பெரியார் என பெரிய ஆளுமைகள் பலர் என்னைக் குழப்பிக் கொண்டேயிருந்தார்கள்.

இந்த மூளைக் குழப்பத்தில் இருந்து விடுபட பூ அன்ரியிடம் தையல் விளையாட்டுக்கு போய் விடுவேன். அவா தைப்பதற்கு இலகுவாக நான் மிசினினை என் சின்னக் காலால் ஆட்டிக் கொடுத்துக் கொண்டிருப்பேன். எனக்கு எல்லாச் சட்டையும் பூ அன்ரிதான் தைப்பா. அப்போது அவா தையல் டிப்ளோமா படிச்சு முடிச்சிருந்தா. அந்தப் படிப்புக்கு தேவையான எல்லா வகையான தையல்களினாலும் தைத்த சட்டைகளும் என்னிடம் இருந்தன. இரண்டு பெரிய பெட்டகம் நிறைய என்ர சின்ன வயசுச் சட்டைகள் இருந்தது எனக்கு நினைப்பில் இருக்குது.

எல்லாச் சட்டையும் தடவி தடவிப் பார்த்து மடிச்சு மடிச்சு வைப்பா அம்மா. அம்மாக்கும் சட்டை தைக்கத் தெரியும் என எனக்குத் தெரியாது.

எனக்கு பொக்கிளிப்பான் வந்து இருந்த பொழுது உடம்பெல் லாம் தொப்பளம் போட்டிருந்தது. அம்மா என் படுக்கைக்கு வேப்பம் இலை பரப்பி அதால உடம்பு தடவி இரவு முழுக்க படுக்காமல் இலையான் கலைத்தபடி இருப்பா. உடம்புடன் ஒட்டாத சட்டை மாதிரி தைச்சுப் போட்டு விசிறியபடி இருந்தா. அப்போது தான் அம்மாக்கும் தைக்க தெரியும் என எனக்கு தெரிய வந்தது.

பத்தியச் சாப்பாடு... தயிர், மோர், வெண்டிக்காய், உப்பவியல் என்பவற்றுடன் பச்சை வெங்காயம் உரிச்சு தந்து சோறு தீத்தி விடுவா.

இப்போது நினைத்தாலும் அந்த வெண்டிக்காய் உப்பவியலும் மோரும் சோறும் வேணும் போல இருக்கு. அதுக்காக பொக்கிளிப்பான் வந்தாலும் சரிதான். ஆனால் அம்மாவும் சோளகக் காத்தும் எங்க வீட்டு வேப்ப மரத்து இலையும் இன்னம் பிறவும் வேண்டிக் கிடக்குது. இது என்ன நடக்கிற காரியமா?

“சூரிய புத்திரன் கர்ணன் தொடர் பார்க்க வாறியா?” ஜீவா கேட்கிறார்.

“அம்மாட்ட கேட்காத கதைகளையா உங்க பொலிமர் ரி.வி.யும், விஜய் ரி.வி.யும் காட்டப் போகுது” என்றபடி வந்து ஜீவாக்கு அருகில் அமர்கின்றேன்.

இப்படிப்பட்ட இதிகாச தொலைத் தொடர்களை நாம் இருவரும் சேர்ந்திருந்து பார்ப்பது வழமை.

மற்ற சீரியல்களை ஜீவா பார்க்கமாட்டார். இரண்டு ஆண்களுக்கு இடையில் தவிக்கும் பெண்ணின் காதலையும் காமத்தையும்...அதேபோல இரண்டு பெண்களுக்கு இடையில் தவிக்கும் ஒரு ஆணின் காதலையும் காமத்தையும்...

அதன்சமுதாய கலாச்சார சீரழிவுகளையும் பார்த்து தனது நேரத்தை ஜீவா செலவழிக்க விரும்ப மாட்டார்.

அம்மாவிடம் இருந்து இதிகாச வசனங்களை ஒரு நாளைக்கு பல முறை கேட்டிருப்பேன். திட்டும் பொழுதும் கூட அதில் ஒரு பழமொழி இருக்கும். உவமான உவமேயம் இருக்கும். உண்மை யில் அவ ஒரு நடமாடும் பல்கலைக்கழகம்.

பெரியவளாகி பல்கலைக்கழகம் போன பின்பும் ஆய்வுக்கு கட்டுரைகள் எழுத அம்மாவிடம் பாரதக்கதைகள் கேட்ப துண்டு.

"எண்ணிய எண்ணம் எங்கே என் இலக்கண குமரன் எங்கே கண்ணனும் தேரும் எங்கே என் கண் கொள்ளாக் காட்சி எங்கே" என கர்ணன் இறந்த பின்பு துரியோதனன் பாடுவதாக அமைந்தபாடல் அது.

எப்போதெல்லாம் வீட்டில் படிக்காமல் குழப்படி செய் கின்றோமோ... படிக்காமல் டக்கரடிக்கின்றோமோ... அப்போதெல்லாம் இப்பாட்டை பாடுவா.

"பயத்துக்க இருக்கிற வண்டு மாதிரி உனக்குள் உலகம் எண்டு நினையாதே"

"பூமிக்கு பாரமாக வாழாதே"

"கட்டுச் சோறும் சொல் புத்தியும் எத்தனை நாளைக்கு"

"செய்வன திருந்தச் செய்"

"கற்றது கையளவு... கல்லாதது உலகளவு" எனப் பல பல திட்டுகளும் அறிவுரைகளும் எமக்கு நித்திய பூஜையாக அமையும்.

அம்மா எப்போதும் எனக்கு வில்லிதான். நான் அம்மாக்கு வில்லிதான்.

ரி. வி. யில் திருதராட்டினன் சஞ்சயன் மூலம் போர் நிலைமை களை நேர்முக வர்ணனை போல தன் அகக்கண்களால் பார்த்துக்

கொண்டிருக்கின்றான்.

குருசேத்திரம் ரத்த வெள்ளத்தில் மிதக்கிறது.

ஏன் இந்தப் போர்? போர்! போர்!! போர்!!!

தர்ம யுத்தம்.

அன்றும் - இன்றும்.

பரித்ராணாய ஸாதூனாம் விநாஷாய சதுஷ்க்ருதாம் தர்ம சம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே யுகே

தர்மம் நிலை குறையும் பொழுது மீண்டும் மீண்டும் வந்து இந்தப் பூமியில் பிறப்பேன் எனக் கூறிவிட்டான்.

தர்மம் அழிஞ்சு அதர்மம் மேலோங்கும் பொழுது கண்ணன் பிறந்தான். ராமன் பிறந்தான்.

சூரியன் மகிழ்ந்தான். சந்திரன் குளிர்ந்தான். நட்சத்திரங்கள் நீந்தின.

“கண்ணன் நிஜமாக வருவாரா?” கேட்டேன்.

“நம்பிக்கையில் தானே உலகம் இயங்குது” அம்மா சொன்ன பொழுது விளங்கவில்லை.

இப்போது எல்லாம் விளங்குது.

இப்போது படுத்தால் விடிய எழும்புவேன் என்ற நம்பிக்கை.

பசிக்கும் பொழுது சாப்பிடுவது செமிக்கும் என்று நம்பிக்கை.

உள்ளே செல்லும் காற்றுக்கும் வெளியே செல்லும் காற்றுக்கும் ஒரு சமநிலை உள்ளது என்ற நம்பிக்கை.

நான் நித்திரைக்குச் செல்லும் பொழுது என் இதயம் நித்திரை கொள்ளாது என்ற நம்பிக்கை.

வேறு என்ன வேணும்.

புத்தகத்தை கையில் எடுத்தால் நித்திரை மின்னலாய் வரும் என்ற நம்பிக்கை.

வருகுதே... வருகுதே...

பகலைத் துரத்தும் இரவு வந்தாச்சு...

வந்து ஐந்து மணி நேரம் ஆகியாச்சு...

இரவு 11 மணியாகி விட்டது.

ஜீவாவோடை சேர்ந்து ஊர்ப்புழுக்கொடியலை ஒரு கை பார்த்தாச்சு!

இரவு 8 மணிச்சாப்பாட்டுக்குப் பிறகு

இனிப்பு தா.. இனிப்பு தா என்று கேட்கும்

குடல் புழுக்களுக்கு

இந்தா பிடி... இந்தா பிடி எனக்

கொடுக்கும் தீனிதான் இந்தப் புழுக்கொடியல்.

இது இல்லையென்றால்...

பொப்கோர்ன்... சிப்ஸ்... சொக்கிலேற் போன்ற

தின்பண்டங்கள் வயிற்றுக்குள் போய் உடம்பை ஒரு கை பார்த்து விடும்.

இனியும் இருந்தால் இன்னமும் உடம்பினுள் கலோரி கூடிவிடும்.

சோபாவில் அமர்ந்திருக்கும் சோம்பல் போர்வையை எடுத்து ஒரு பக்கம் போட்டு விட்டு எழுந்து போய்... முகம் கழுவி... விபூதி பூசி... காலைக்கடன்கள் போல இரவுக் கடன்களையும் முடிச்சு...

இறைவா! என்னிடம் அடிக்கடி வாற கனவை நிற்பாட்டு இந்த தொப்புள் கொடியும் அந்த குட்டிப் பாப்பாவும் என்னைப் படுத்துற பாடு கொஞ்ச நஞ்சமில்லை! கடவுளே என்ர கனவுகளை நீயே எடுத்துக் கொள்" எனச் சொல்லி விட்டு அலாரத்தை அதிகாலை 5 மணிக்கு வைத்து விட்டு படுக்கப் போகின்றேன்.

000

# கொழும்பு வாழ்வும் அம்மாவின் பன்னீர்க்குடமும்

"ஏன் எனக்கு குழப்பமாய் இருக்குது?"

இந்தக் குளம் ஆடுவது போல இருக்குது... ஏழாத்துப் பிரிவில் நாகலிங்கப்பாவின் லோஞ்ச் ஆடுவது போல... தலையைச் சுத்துது... ஐயோ அம்மா.... அம்மாவின் இந்தத் தொப்புள் கொடியையை கெட்டியாகப் பிடிக்கின்றேன்.

"குவக்...குவக்"

"இந்த சத்தியாலை நீ படுகிற பாட்டைப் பார்க்க ஏலாமல் இருக்கு" அப்பா பரிதாபப்படுகிறார்.

"சரியாய் போயிடும்" அம்மா சமாதானப்படுத்துகின்றா.

அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும் எண்டு சொல்லிறது இப்போதான் புரியுது.

"நீ கஸ்டப்பட்டு பெத்து தா.. பிறகு நானே வளர்க்கின்றேன்"

"எல்லாம் நம்மட கையிலையா இருக்குது"

"அவன் பார்த்துப்பான்"

"இப்ப நீ சாமி சாமி எண்டு சொல்லு. பிறகு சாப்பிடாமல் விரதம் இருக்கிறாய்... இண்டைக்கு நானே சமைக்கிறன்... நீ இருந்தபடி வெங்காயத்தை உரிச்சுத் தா! ... இல்லை வேண்டாம்... உனக்கு கண் எரிஞ்சால் என்ரை பிள்ளைக்கும் கண் எரியும்... கொஞ்சநேரம் வெங்காயத்தை உரிக்க முதல் தண்ணிலை

போடுவம்... உலை கொதிக்கட்டும்... நான் ஒரு எட்டு எட்டிப் போய் நல்ல மரக்கறி வாங்கிக் கொண்டு வாறன்"

அக்கறையில் எழும் அப்பாவின் கோபம் அனுதாபமாய் மாறி அன்பைக் கொட்ட ஒரு நிமிடம் போதும்.

அப்பா போயிற்றார் போல் இருக்குது.

அம்மா பாவம்.. என்னால் தானே சத்தி வருகுது... சொறி அம்மா...

நான் வெளியாலை வந்து... பெரியவளாகி... அப்பா இப்ப உங்களைப் பார்க்கிறமாதிரி நானும் உங்களைப் பார்ப்பன் சரியா!

என்னம்மா நான் சொல்லுறது கேட்குதா?

இல்லையா??

இந்தச் சுவருக்கு காலால் ஒரு உதைதான். அம்மாவின் வயிறு சுருங்கி விரிவது போல இருக்கிறது.

"ஏன் செல்லம் இப்படி உதைக்கிறாய்... என்ன வேணும் இப்ப..." அம்மா வலியிலும் கூறும் அன்பான வார்த்தைகள் இவை.

சைக்கிள் நிற்பதும்.... கதவு திறக்கும் சத்தமும் கேட்கிறது... அப்பா வந்திட்டார் போலை இருக்குது.

"இந்தாப்பா நல்ல புளி மாங்காய் வேண்டினனான். உப்புத்தூள் போட்டுச் சாப்பிட்டால் சத்தி வராது"

"தூள் கூடப்போட்டால் பிள்ளைக்கு உறைக்குமப்பா"

"ஓ!... அம்மா நீங்கள் எல்லாத்துக்கும் என்னைப் பற்றி யோசிக்கிறியள்.... பறவாயில்லை சாப்பிடுங்கோ... நானும் உறைப்புச் சாப்பிட்டு பழகிறன்..."

அம்மா சின்ன சின்னத் துண்டு மாங்காயை உப்பிலும் மிளகாய்ப் பொடியிலும் தொட்டு தொட்டு சாப்பிடுறா.

ம்... யம்மி...யம்மி... நல்லாயிருக்கம்மா!

"மாங்காய் வெட்டிய கத்தியை தள்ளி வையப்பா... " அப்பா குசினியை ஒதுக்கிறார் போலை கிடக்கு!

ஐயோ அம்மா கத்தி வேண்டாம்... அதை தள்ளி வையுங்கோ.... இந்தச் சிவத்தக் கயித்திலை பட்டால் எல்லாம் போச்சு... பிறகு எனக்கு சாப்பாடும் கிடையாது... காத்தும் கிடையாது... எதுவும் கிடையாது.

கத்தி! வாள்! கோடாலி... ஐயோ எதுவும் வேண்டாம்... இரத்தம்... வெட்டுப்பட்ட தலைகள்... கைகள்... கால்கள் கருகின மனித உடல்கள்... பிண்டங்கள்.... அதில் இருந்து பிண வாடை... செத்த எலி போல பிணவாடை.... ஐயோ... நெருப்பு எரியுது... கோல்பேஸ் கடலில் இரத்தம் கலக்குது... நீல நிறக் கடல் கொஞ்சம் கொஞ்சமாக சிவப்பு நிறமாக மாறுது.... ஐயோ....

நான் இருக்கிற இந்தக் குளமும் சிவப்பு நிறம் தானே!

எனக்கு பயமாய் இருக்கிறது... அம்மா... அப்பா...

"ஏனப்பா கனவிலை கத்துறாய்..." ஜீவா என்னை உலுப்பி எழுப்புகின்றார்.

அவரே தொடர்ந்து "இப்பிடியே போனால் உனக்கு டிப்பிறேசன் வரப்போகுது... இதைப்பற்றி டொக்கரோட கதை..."

"என்ரை கனவுகளுக்கு டொக்டர் என்ன செய்யுறது? எதுக்கு இப்படி ஒரு கனவு இப்போது? அதுவும் கர்ப்பப்பை, தொப்புள் கொடி, சிசு எண்டு ஒன்றோடு ஒன்று தொடர்பு இல்லாமல் வருகுது"

"அதுபடியாலை தான் நீ டொக்டரோடை கதை"

"இண்டைக்கு நேரமில்லையப்பா... றெட் குறோஸில் மொழிபெயர்ப்பு வேலை இருக்குது... சரி.. பிறகு பார்ப்பம்"

000

# ஒரு அகதி இன்னோர் அகதிக்கு மொழிபெயர்ப்பாளராக...

*யன்னல் திரையை மெதுவாக விலக்குகின்றேன்.*

*வெள்ளையும் கறுப்புமாய் பறவைக் கூட்டங்கள்.*

*க்கா... க்கா... கா... கா... என்று காகங்கள் கத்துகின்றன. அட வெளிநாட்டுக் காகங்களும் கா... கா.. என்று தானா கத்துகிறன? இந்தக் காகங்களும் வடை தின்னுமா? அல்லது குருவிகளின் சாப்பாட்டுக் கடைகளில் போடும் அரிசிதான் தின்னுமா? டெனிஷ்மக்கள் மணமக்களை வாழ்த்துவதற்கு கூட சும்மா சமையலுக்கு பாவிக்கிற சிவத்த அரிசியைப் பாவிப்பதில்லை - இவர்களுக்கு அது பிரக்கேறி விடும் என்றும் இந்த அரிசி அவைக்கு வயிற்று வலியை உண்டாக்கி விடும் என்று. பணக்காரக் காகங்கள் இவை... பொறாமையாய் இருக்கு... உடைஞ்ச அரிசியை மலிவாக வாங்கி எங்கடை சனங்கள் சமைத்து உயிர்வாழுதுகள்... இதுகளுக்கு ரொம்பத்தான் கொழுப்பு! அதுகளின் நாட்டில் வந்து நான் நியாயம் கதைக்கிறன் என்று அதுகள் கோபப்படப் போகுதுகள்.*

*இனி காக்கா குருவிகளைப் பார்த்துக் கொண்டு நிற்க நேர மில்லை.*

*எங்கட இடத்தில் இருந்து நூறு கிலோ மீற்றர் தூரத்திலை இருக்கிற செஞ்சிலுவைச் சங்க அகதி முகாமுக்கு போக வேண்டும்.*

*அவசர அவசரமாக அலுவல்களை முடிச்சு வீட்டின்*

கதவுகளையும் என் எண்ணங்களையும் பூட்டிக் கொண்டு வெளிக்கிட்டாச்சு.

சிலதுகளைப் பூட்டினால்தான் சிலதுகளைத் திறக்கலாம்.

என் காலடி ஓசை கேட்டு காகங்களும் குருவிகளும் எழுந்து பறக்கிறன.

நான் அப்பால் சென்றதும் மீண்டும் அவை கீழே வரும் - ஆமிக்கு பயந்த எம் இடம்பெயர்வுகள் போல.

இப்போது மணி 10.00.

10.30க்குத் தான் மொழிபெயர்ப்பு வேலை.

செஞ்சிலுவை சங்க வளாக வாசலில் நிற்கின்றேன்.

"அலறொட்" முகாம்.

இதுதான் டென்மார்க்கின் பெரிய அகதி முகாம்.

இங்குதான் நாம் ஒருகாலத்தில் தஞ்சம் கேட்டு நின்றோம்.

இப்போ தஞ்சம் கேட்டு வருபவர்களுக்கு நான் மொழிபெயர் பாளராக... காலம் எப்படி ஓடியிருக்கிறது.

பொலிஸ் விசாரணை தங்குமிடம் - உணவு சுகாதாரம் - வைத்தியம் எல்லாமுமே இங்கு நடக்கும். 2 கிழமைக்கு ஒரு தடவை கைச் செலவுக்கு காசு வேறு.

பூமிப்பந்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து உரிமைகள் பறிக்கப் பட்டும்... அடித்து விரட்டப்பட்டும்... அதிகார வர்க்கத்தால் நசுக்கப்பட்டும் அடிமைகளாக நடாத்தப்படும் மக்கள் தஞ்சம் அடையும் ஆயிரம் ஆயிரம் ஆல மரங்களில் இதுவும் ஒன்று.

அனைத்து இன... அனைத்து மத.... மக்களையும் இங்கு காணலாம். மொட்டாக்குப் போட்டவர்கள்... போடாதவர் கள்... தாடி வளர்த்தவர்கள்... தலையில் சீப்பை செருகியவர் கள்... காது கிழியப் பேசுபவர்கள்... அமைதியா விலத்திச் செல்வர்கள் என பல்வேறு மனிதர்கள் ஒரு குடையின் கீழ்.

"புலம் பெயர்வு வாழ்வு" என்பது காலம் காலமாக நடப்பது தான்.. ஆனால் வேதனைகளும் வலிகளும் தொய்யாமலும் தேயாமலும் இருந்தது.

ஊரில் இருந்து யாழ்ப்பாணம் வந்தது... யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வந்தது.... கொழும்பில் இருந்து இந்தியா வந்து சிறிது காலம் வாழ்ந்தது. அப்பொழுதெல்லாம் மொழியும் கலாச்சாரமும் ஒன்றாக இருந்ததால் எதுவும் தெரியவில்லை.

இங்கு அனைத்தும் 180பாகையூடு திருப்பி வைக்கப் பட்டிருந்தது.

இலங்கையில் இருந்ததைப் பிடுங்கி முதலில் இந்தியாவில் சில நாள் நட்டு... பின் பிற நாடுகளில் நட்டு... பின் மீண்டும் மீண்டும் பிடுங்கி பிடிங்கி நட்டு நட்டு கடைசியாக டென்மார்க் கிற்கு வந்த போது நிலத்தில் ஊன்றவே அதிக வேர்கள் இருக்க வில்லை. உடம்பிலும் மனத்திலும் கூட அதிக சக்தி இருக்க வில்லை.

வலிந்து வலிந்து தண்ணீரை உறிஞ்சி உறிஞ்சி உயர வளர்ந்த உறுதியான இனம் இந்தப் பனிக்குளிரில் மீண்டும் வேர் ஊன்றவே செய்தது.

காற்றுச் சுமந்து வரும் விதைகளும்.. காகங்களினதும் குருவி களினதும் எச்சங்கள் சுமந்து வரும் விதைகளும் மண்ணில் விழுந்து... உறங்கு நிலையில் இருந்து... தன் சக்தியை எல்லாம் திரட்டி மீண்டும் மேலே எழுந்து வருவது போலவே இந்த அகதி வாழ்வும் மீளத் தலையெடுத்தலும்.

ஆனாலும் "இது எங்கள் நாடு இல்லை" என்று உணர்ந்த போது வலித்தது. இப்படித்தானே இந்தியாவில் இருந்து தோட்டத் தொழிலுக்கு வந்த எங்கள் தொப்புள் கொடி உறவுகளுக்கும் இருந்திருக்கும்!

எண்ண ஓட்டங்களுக்கு தடையில்லை.

அவை விரிந்து கொண்டே போகின்றன. இறைப்புக் கிணற்றின் நீர் வாய்க்கால் வழியாலும் பின் பாத்திகளுக்கு இடையாலும்

ஓடுவது போல....

இந்த 38 வருடத்தில் எத்தனை ஓட்டங்கள்.

பாதுகாப்பிற்கான ஓட்டங்கள்....

பணத்திற்கான ஓட்டங்கள்...

கௌரவதிற்கான ஓட்டங்கள்....

முதலில் ரீ.வி. வேண்டுவதில் தொடங்கி பின் பாவித்த கார்... பழைய வீடு எனத் தொடங்கி இப்போது புதிய கார்.. புதிய வீடு... இத்தியாதி இத்தியாதி எல்லாவற்றிக்கும் போட்டியும் அதற்கான ஓட்டங்களும்....

இன்னும் பத்து நிமிடத்தில் என்னை உள்ளே அழைத்துக் கொண்டு போவார்கள்.

யாரோ ஒரு தமிழ் தாயின் அல்லது தந்தையின் சோகத்தை தமிழில் இருந்து டெனிசிற்கு மொழிபெயர்க்க.

000

"இதுதான் இடமாக்கும்" வயதான ஒரு அப்புவும் ஆச்சியும்.

தமக்குள் கதைத்தபடி... என்னைக் கண்டதும் முகம் மலர்ந்தபடி...

"நீங்கள் தமிழா"புன்னகையுடன் ஒரு கேள்வி

"ஓம் நான்தான் மொழிபெயர்ப்புக்கு வந்திருக்கிறன்" புன் சிரிப்புடன் என் பதில்.

விசாரிப்புகள் தொடங்கமருத்துவர் வந்து இவர்களைப் பெயர் சொல்லி அழைக்கின்றார்.

"பிள்ளை... இது ஓடலியோ"

"இல்லையம்மா... இங்கு எல்லாமே டாக்குத்தர் தான்" வியந்து பார்த்தனர் இருவரும்.

"நாங்கள்தான் வெள்ளைக்காரனை விடவில்லை. வெள்ளைக்

காரன் தன்னை என்றோ விட்டு விட்டான்"என மனதுள் நினைத்துக் கொண்டேன்.

மூவரும் மருத்துவர் முன்னால் அமர்கின்றோம்

பிள்ளைகளிடம் உல்லாசப்பயணிகளாக வந்தவர்கள். பிள்ளை களுடனேயே தங்கியிருக்க விரும்பி அகதி அந்தஸ்துக் கோரி யிருந்தார்கள்.

அகதி அந்தஸ்து கிடைக்கும் வரைசெஞ்சிலுவைச் சங்கம் தான்அவர்களுக்கு அனைத்தும்.

இன்று எழுதும் வைத்தியப் பதிவுகள்இவர்களின் ஆயுள் முடியும் வரை அவர்களுடனேயே பயணிக்கும்.

இனி யெங்கும் அவர்கள் தம் சுயவரலாற்றைமீண்டும் ஒரு முறை ஒப்பிக்கத் தேவையில்லை.

ஆச்சிக்கு பயம்... நடுக்கம்...அடிக்கடி அழுவது...பயத்தில் நித்திரையின்மை...இதுமனோவியாதி வேர்விடும் குறியீடுகள்.

அப்புவுக்கு சக்கரைவியாதி... பிறசர்... ஆமிக்காரன் அடித்ததில் இடுப்பில் நோ...

பதிவுகள் முடிய மருத்துவரும் நன்றி கூறுகின்றார்.

அப்புவும் ஆச்சியும் மாறி மாறி நன்றி கூறுகின்றார்கள்

என் கன்னங்களைத் தடவி"என்ரை ராசாத்தி நன்றியாச்சி.. நன்றி...என்ரை பிள்ளைபோலையே இருக்கிறாய்...கவனமாகப் போய் வா"என்னை வழி அனுப்பி வைக்கின்றார்.

ஆனாலும் என்னை விடமனம் அவருக்கில்லை.

எனது தொலைபேசி எண்ணைக் கொடுத்துவிடை பெற்றுக் கொண்டேன்.

"என்ரை ராசாத்தி...என்ரை ராசாத்தி...என்ரை பிள்ளை போல இருக்கிறாய்...", ஆச்சியின் குரல்என் நெஞ்சாங்கூட்டுக்குள் சப்பாணி போட்டுக் குந்திவிட்டது.

ஆச்சியின் குரலில்எல்லோரையும் அழைக்கின்றேன்

நான் பெத்த பிள்ளைகள்...
நான் பெறாத பிள்ளைகள்...
என்னைப் பெத்த அம்மா அப்பா என்னைப் பெறாத அம்மாக்கள் அப்பாக்கள் தாத்தாக்கள் பாட்டிகள் தொப்புள் கொடியை மட்டும் பிடிச்சு தொங்கி தொங்கி பிறந்தால் மட்டுமா பிள்ளை?

சுனாமி கொண்டு போனதுகள்...

முள்ளி வாய்க்காலில் யமனுக்கு ஆகுதி ஆனதுகள்...

மலையகத்தில் மண்சரிந்து மண்ணுடன் மண்ணாகப் போனதுகள்...

பிள்ளைகளை இழந்த பெற்றார்...
பெற்றாரை இழந்த பிள்ளைகள்...
காற்றிடம் முகவரி போட்டு
கடலில் புகலிடம் கேட்டு
நெருப்பினில் முத்தம் கேட்டு
பங்கரில் உறக்கம் கேட்டு
தாகத்தில் தண்ணீர் கேட்டு
யமனிடம் பிச்சை கேட்டு
யுத்தம் வறுத்தெடுத்த
எத்தனை பிள்ளைகள்!
எத்தனை அப்பன்கள்!
எத்தனை அம்மாக்கள்!!!

இவர்கள் எல்லோரையும் தேடி தேடி என் விழிகள் உலகம் சுற்றப்புறப்பட்டு விட்டன.

திரும்பி வரும் பொழுது தாலாட்டும் ரயிலில் ஒரு ஓரத்தில் வானத்தையும் மரங்கள் செடிகள் கொடிகளையும் பார்த்தபடி யன்னலில் தலைசாய்த்துக் கொண்டிருந்தேன்.

"மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச்சிறுதொட்டில்
பேணியுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ"

பெரியாழ்வாரின் திருமொழியை எனக்குள் முணுமுணுத்தப் படி அந்த மாயவனை உறங்கவைக்கப் பார்க்கின்றேன்.

அவனோடு சேர்ந்து என் கண்களும் உறங்கலாம் அல்லவா.

""தத்துப் பிள்ளை வியாபாரத்தை முதல் முதல் தொடக்கியவன் நீதானே கண்ணா? உன் மாய நாடகம் எப்போது முடியும்?"

பெத்தவள் தேவகி... வளர்த்தவள் யசோதை... அவளை என்ன பாடு படுத்தினாய் கேசவா?

எங்களைப் பெற்றது அம்மாவானாலும் எங்கள் மூவரையும் சீராட்டிப் பாராட்டி பார்த்த யசோதை பூ அன்ரி.

1970ல் அவாக்கும் சித்தப்பாக்கும் கல்யாணமாகி வவுனியாக்குப் போன பொழுது எம் வாழ்வில் ஒரு திருப்புமுனை.

எமது விளையாட்டுகள் குறைந்தன.... பிரிவு என்றால் என்ன என்று புரிந்தது... நமக்கும் செட்டை முளைக்க நாமும் பறக்க வேண்டும் என்னும் நிலைப்பாடு வந்தது.

திருக்கேதீஸ்வரத்தில் சித்தப்பா பூ அன்ரிக்கு தாலி கட்டிய பொழுது எனக்கு 10 வயது.

நான் அழுதேன்.

அந்த அழுகை என்னை விழுத்தி விடவில்லை. மாறாக என்னை உரமாக்கியது.

இந்த ரயில் பெட்டியுள் உள்ள ஆட்கள் ஒவ்வோர் ஸ்டேசனிலும் இறங்குவது போல வாழ்க்கையிலும் ஒவ்வோர் ஸ்டேசனிலும்

எம்முடன் பயணம் செய்தவர்கள் இறங்குவார்கள் எனப் புரிந்தது.

இப்போ பூ அன்ரி புறப்படுகிறா... அடுத்து சின்னம்மா... பின்பு கிளியக்கா.... நாங்களும் வளர்ந்து பெரியவர்களாக நாங்களும்... இப்போதுதான் உலகம் புரிகிறது.

அப்போதே புலம் பெயர்வு என்பது எம் குடும்பத்துள் அதிகாரபூர்வமாக குடியேறியது.

அதன் அடுத்த கட்டம் தான் யாழ்ப்பாணத்திற்கு நாங்கள் இடம் பெயர்ந்தது.

எந்த ஒரு விதையும் வெடித்தால்தான் முளைக்கும்.

இரவு வந்தால் தான் பகல் வரும்.

அப்படித்தான் பூ அன்ரி பிரிந்ததும்... பின்பு கௌரியைப் பெற்றெடுக்க மீண்டும் எம்மிடம் வந்ததும்.

கௌரி பூ அன்ரியின் மூத்த மகள் - நான் தொட்டுத் தூக்கிய முதல் பாப்பா.

எல்லாம் கனவு போல இருக்குது...காலம் உருண்டு ஓடுகிறது...

புலம்பெயர்வு என்பது தவிர்க்க முடியாத ஒரு நிலைப்பாடாக எம் வாழ்வில் அமைந்து விட்டது.

எம் முதல் இடம் புலம் பெயர்வு அனலைதீவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஆரம்பமானது.

சாமான்கள் கட்டியாச்சு... யாழில் வீடு பாத்தாச்சு.. ஊர்க்கோயில்களுக்கும் பூசை முடித்தாயிற்று... கடைசியில் பக்கத்து வீட்டு வைரவருக்கும் சூடம் காட்டியாயிற்று.... மெயில் லோஞ்சியில் யாழ் நோக்கிய பயணம் ஆரம்பமாயிற்று.

அப்பாட சம்பளம்.... ஊர்த் தோட்டக்காணிக் குத்தகைக்காசு... இரண்டையும் மட்டும் நம்பி யாழ்ப்பாணதில் குடித்தனம் பண்ணுவது என சங்கல்பம் பண்ணிக் கொண்டு ஊரை விட்டுப் புறப்பட்டாச்சு.

"என்ன பெரியவள்... பிள்ளையளை படிப்பிக்க வெளிக் கிட்டாச்சோ.."

"ஓமக்கா"

"காணி பூமியளை விற்காமல் படிப்பிச்சுப் போடு... பிள்ளை யளை படிப்பிக்க பட்டணம் போய் பிள்ளையளும் படிக்கா மல்... காணி பூமியும் வித்து... நடுத்தெருவில் நிக்குது நம்மட சனங்கள்... யோசிச்சு நடவுங்கோ"

"விளங்குதக்கா"

""அது சரி... இந்த முறை குத்தகை ஆருக்குக் குடுக்க போறியள்... ஒரு முறை உங்கட தோட்டம் குத்தகை எடுத்தால் ஒரு குமரைக் கரைசேர்க்கலாம்... அப்பிடி ஒரு ராசி உங்கள் காணிக்கு.... யோசிச்சு சொல்லு... நான் குத்தகைக்கு எடுக்கிறன்"

"ஓம் யோசிச்சு சொல்லுறன்"

மெயில் லோஞ்சியில் சொல்லப்பட்ட ஆலோசனைகள் அம்மாவின் மனசில் ஆழமாய்ப் பதிந்து போச்சுது. அம்மாக்கு மட்டுமில்லை. எமக்கும் தான்.

*000*

## எளிமை என்பது மூலமந்திரம் எமக்கு!

ஒட்டு மொத்தக் குடும்பமும் வைராக்கியத்தை மனசுல விதைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் வாழத் தொடங்கினோம்.

எந்தவொரு ஆடம்பரச் செலவும் யாரும் செய்வதில்லை என்பதில் அப்பா பிடிவாதமாய் இருப்பார்.

கொப்பிக் கடைக்காரனுக்கு மாதம் 30ம் திகதி பணம் கட்டப்படும்.

ஒருநாள் பிந்தினால் "அவன் ஒரு மாதிரிப் பார்க்கிறான் போல கிடக்கு... எனக்கு ஒரு மாதிரி இருக்கு" என வீட்டில் ஆச்சா பூச்சா என புலம்புவார் அப்பா.

கடன்படக் கூடாது என்பதே வீட்டின் தாரக மந்திரம்.

நான் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் சரனும் நித்துவும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் அப்பா கச்சேரிக்கும் தினம் தினம் போய்க் கொண்டிருந்தோம்.

அதிகாலை 5 மணிக்கு எழும்பி அம்மா சமைப்பா. எல்லோருக்கும் சாப்பாட்டு பாசல் கட்டப்படும். அம்மா சிவத்த பச்சை அரிசிதான் சமைப்பா. அதில்தான் சத்து அதிகம் என்பது அப்பாவின் நியாயப்படுத்தல். இந்த சிவத்தப் பச்சை சமாச்சாரத்தில் இன்னுமோர் சிக்கனமும் இருந்தது. உலையில் வடிக்கும் கஞ்சியில் தேங்காய்ப் பாலும் கலந்து காலையுணவாகும். இதனைப் போல சத்துணவு எதுவும் இல்லை என்பது யாரும் அறிந்த உண்மையே.

இரவு புட்டு, இடியப்பம், தோசை என வேறு வேறு சாப்பாடுகள் இருக்கும்.

வீட்டு வாடகை, ரியூசன் காசு, பால் காசு, கொப்பிக் கடைக் காரன் காசு என காசை மிகக் கச்சிதமாகவே கையாண்டோம்.

"அண்ணை உப்பு என்ன விலை" என சரன் விலைகேட்டு வாங்குவதை கடைக்காரன் நித்தனுக்கு சொல்லிச் சிரிப்பான்.

ஆனால் நித்தனோ ஹோர்லிக்ஸ், ஓவல்ரின் என விலையானதை கொப்பிக் கணக்கில் வாங்கி வருவான்.

"எதுக்கிப்ப இது?" என சரன் கேப்பான்.

ஆனால் அம்மாவோ ""வளரும் பிள்ளையள் நல்லாய் சாப்பிட வேண்டும்" என சப்போட் பண்ணுவா.

நிறச்சேட்டுகளும் கால் சட்டைகளும் போட்டால் கையிருப் பில் எத்தனை உடுப்பு என மற்றவர்கள் கணிப்பீடு செய்து விடுவார்கள் என சரன் எப்போதும் வைற் அண்ட வைற்தான் போடுவான்.

அக்காக்குத்தான் நிற உடுப்புகள் வேண்டும். குடும்ப கௌர வத்தை அவவில் தான் ஆட்கள் பார்ப்பினம் என்று என் தம்பி மார் இருவரும் எனக்காக உடுப்புக் காசை ஒதுக்கி தருவார்கள்.

அம்மா ஒரு சேலைக்கு தாற காசில் மூன்று கைத்தறி சேலையை வாங்கி வருவேன். சிக்கனம் என்பதும் எளிமை என்பதும் சந்தோசமான விடயமாகவே எமக்கு கற்பிக்கப்பட்டது. தேவைக்கு அதிகமாக பொருட்கள் தேவை இல்லை என காந்தித்தாத்தா சொல்லிக் கொண்டிருந்தார் - சுவரிலும் இருந்தும் புத்தக அலுமாரியில் இருந்தும்.

தன் சிக்கன வாழ்க்கைக்கு காந்தியை எப்போதும் துணைக்கு இழுத்தபடியே அப்பா தானும் வாழ்ந்து எங்களுக்கும் பழக்கி விட்டிருந்தார்.

குஜராத்தில் பிறந்த காந்தி கோட்டுப் போடாமல் இங்கிலாந் திற்குப் போனார். அனலை தீவில் பிறந்த எம் நாகலிங்கப்பா

சேட்டுப் போடுவதில்லை. இவைகளை கதையாக சொல்லி எளிமையாக வாழ்ந்த அப்பாவும் ஊருக்குப் போகும் போது நீளக்காற்சட்டை போடுவதில்லை.

கோயில் திருவிழாக்குப் போனாலும் என்ரை பிள்ளை கைக்கு ஒரு ரப்பர் காப்பு கூட வேண்டாது என அம்மா என்னைப் பற்றி புளுகுவார். அந்தப் புளுகில் மயங்கி ஏதும் சின்ன சின்ன ஆசை இருந்தாலும் எல்லாத்தையும் விழுங்கி விட்டு நானும் நல்ல பிள்ளைக்கு இருந்து விடுவேன்.

சின்னனில் பெட்டகம் முழுக்க எனக்கு நிறைய உடுப்பு இருந்தது. பூ அன்ரி தைச்சு தைச்சுப் போட்டா. வளர்ந்த பொழுதும் என்ன சிக்கனம் என்றாலும் அம்மா நல்ல உடுப்பு, நல்ல சாப்பாடு இரண்டிலும் எந்தக் குறையும் விட்டதில்லை. ஆனாலும் எளிமை என்பது எங்கள் பரம்பரைச் சொத்தாக மாறி விட்டது.

அப்பாவின் சிறாப்பர்சம்பளத்தில் யாழில் வீடு வாங்க முடியாது. ஊர்க் காணிகளை விற்று யாழில் வீடு கட்டினால் குத்தகைக் காசு பறந்திடும். எனவே ஒவ்வொருதடவையும் வாடகை வீட்டுக்காரன் முகம் சுழிக்கும் பொழுதும் ஒவ்வோர் வீட்டுக்கு மாறிச் செல்ல வேண்டியிருந்தது பூனை தன் குட்டிகளை காவிச் செல்வது போல அப்பாவும் அம்மாவும் எங்களை வீட்டுக்கு வீடு மாற்றி மாற்றிக் கொண்டு படிப்பித்துக் கொண்டிருந்தார்கள்.

அறிவுரை என்ற பல விதமான திறவு கோல்களை ஆத்திசூடி யிலும் கொன்றைவேந்தனிலும் மகாபாரதத்திலும் இருந்து எடுத்து வைத்துக் கொண்டு குடும்பம் என்ற அரண்மனையை அப்பா அம்மா கட்டிக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

இரவு எவ்வளவு நேரமானாலும் நாங்கள் படித்து முடிக்கும் வரை அவர்கள் கண் விழித்துக் கொண்டிருப்பார்கள்.

நாம் உறங்கிய பின்பும் போர்வை விலகியுள்ளதா எனப் பார்த்து இல்லாவிட்டால் வடிவாக போர்த்து விட்டுத்தான் அப்பா நித்திரைக்குப் போவார்.

விடிய அலாரம் வைத்து எழுப்பி விட்டு எங்களுடன் தானும் முழித்திருப்பார்.

தான் கச்சேரிக்குப் போக முன்பு எங்கள் மூவரையும் ஒரே சைக்கிளில் வைத்துக் கொண்டு கூட்டிச் செல்வார்.

அப்பா சைக்கிள் உழக்கும் பொழுது நெஞ்சாங்குழிக்குள் காற்றுப் போகும் சத்தம் காதுகளைக் குடையும். பரிதாபமாக இருக்கும். என் இதயம் அப்பா பாவம் அப்பா பாவம் என மனதுக்குள் உலக்கையாய் குத்தும். இந்த உலக்கை சத்தத்தை நினைக்கும் பொழுது எம் தலைகள் தானாக புத்தகத்தினுள் குனியும்.

எம் முதுகுகள் வளையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக முதுகு பிடித்து விடுவார். தனித்தனியானக மேசை கதிரை அறை என வசதிகள் செய்து தருவார்.

ஊரை விட்டு வந்து யாழில் நாம் நன்கு வேரூன்றி விட்டிருந் தோம். எம் பள்ளிப் பருவம் பச்சைப் பசேலென விரிந்தது.

குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு அளவில்லாமல் இருந்தது. கிளியக்கா, சின்னம்மா ஊரில் இருந்து வந்தால் எம்மை படத்துக்கு கூட்டிச் செல்வார்கள். மற்றும்படி தியேட்டர் பக்கம் போக எமக்கு அனுமதியில்லை. காரணம் படிப்பில் இருந்து கவனம் வேறு பக்கம் போய் விடும் என்பதாலேயே. சோதனைக் காலத்தில் வீட்டில் வானொலிப் பெட்டியையே அப்பா போடமாட்டார்.

யாழ் நூலகம், ரியூசன் கொட்டில்கள் என நாமும் அறிவுத் தேடல்களில் ஆனந்தம் ஆனோம். எம் கண்கள் மேய்ந்தவற்றை எம் மூளைகள் இரைமீட்டி பதப்படுத்தின. எம் பேனாக்களும் உயிர்ப்புடனும் வீரியத்துடனும் உழைத்தன. மூளைகள் இரைமீட்டியவற்றையும் பதப்படுத்தியவற்றையும்பேனாக்கள் குனிந்து குனிந்து பரீட்சைத் தாள்களில் இறக்கி வைத்தன. குனிந்த எம் பேனைகள் நிமிர்ந்த பொழுது அம்மா அப்பா உறவினர்கள் அனைவரும் நிமிர்ந்து நின்றனர்.

பூ அன்ரி மீண்டும் வவுனியாவில் இருந்து வந்தா. மீண்டும்

அழகான வெள்ளைத் தங்கச்சி பாப்பா கிடைத்தாள். பாப்பாக்கு சசி எனப் பெயர் வைத்தனர். ஒரு மாதம் முடியும் வரை எம்முடனேயே இருந்தனர்.

இருபத்தியொரு சரக்குகள் சேர்த்திடுச்சு... மண் பானையில் சீலைத்துண்டு கட்டி.... அதில் சரக்கு அரைத்து.... அதனை தேனில் குழைத்து அம்மா பூ அன்ரிக்கு சாப்பிடக் கொடுப்பா.

ஊரில் இருந்து வேப்பம்பட்டை, இலந்தைப்பட்டை, நொச்சியிலை, பாவட்டை இலைகள் எல்லாம் கொண்டு வரப்பட்டு அதனை பெரிய அண்டாவில் போட்டு அவித்து அதில்குளியல் நடைபெறும்.

சரக்கு கறிக்கு சரக்கு அரைக்க அப்பாவும் உதவி செய்து கொடுப்பார்.

இதற்கிடையில் சின்னம்மாக்கும் கல்யாணப் பேச்சு நடந்தது.

"எனக்கு உத்தியோக மாப்பிள்ளை வேண்டாம். படிச்ச சைவ மாப்பிள்ளையே போதும்" என சின்னம்மா சொல்லி விட்டா.

மாப்பிள்ளை தேடல் தொடங்கியது.

குறிப்புகளும் கை மாறியது.

சைவக்கார மாப்பிள்ளை கிடைப்பது பெரிய குதிரைக் கொம் பாக இருந்தது.

அபிராமி அந்தாதி படிச்சு படிச்சு ஐயா தவித்துக் கொண்டிருந்தார்.

"நாங்க இரண்டு பேரும் மடத்துக்குப் போறம். கல்யாணம் வேண்டாம்"சின்னம்மாவும் கிளியக்காவும் சிறக்கடித்தும் பறக்காத கோழிகள் போலகொக்கரித்துக் கொண்டிருந்தார்கள்.

கோழிகள் கூவின... விடியல்கள் விடிந்து நாட்கள் பல நாட்கள் பிரவசமாகின... காலங்கள் கண் சிமிட்டி சிமிட்டி வளர்ந்து கொண்டு போயின...

சோழகக் காற்று ஊரில் மிதமாக வீசத்தொடங்கியது.

தாயின் தடவலாக... தந்தையின் பரிவாக...ஊரில் உள்ள மரங்கள் எல்லாத்துக்கும் சோளகக் காற்று பவுடர் பூசியது - மண் புழுதி கொண்டு.

என்னைப்பிடி உன்னைப்பிடி என மரங்களும் காற்றுவாக்கில் ஊஞ்சலாடத் தொடங்கியது.

"ஊ...ர்"... "ஊ...ர்" என்று வீசியது அந்தச் சோளகக் காத்து!

அந்தக் காத்துவாக்கில்

ஐயாவின் கையில் ஒரு குறிப்பும் வந்து விழுந்தது.

கணக்கர் மகன்...

படிச்ச பையன்...

சுத்த சைவம்...

குணக் குன்று...

பத்தரை மாற்றுத் தங்கம்...

உருத்திரபுரத்தில் படித்த வாலிபர் திட்டத்தில் வீடு கட்டி விவசாயம் பார்க்கின்றார்...

பிறகென்ன? கரும்பு தின்ன கைக்கூலியா??

குறிப்புகள் பார்த்து...

சம்பந்தம் கலந்து...

கல்யாணம் ஆகி...

சின்னம்மா சித்தப்பாவுடன் கிளிநொச்சிக்கு போய்விட்டா.

எங்களின் நான்முகியில் ஒரு முகி வவுனியாவில்!

மறுமுகி கிளிநொச்சியில்!! நாம் யாழ்ப்பாணத்தில்!!!

கிளியக்கா வும் ஐயாவும் ஊரில் தனித்து விடப்பட்டனர்.

கிளியக்காவுக்கும் கல்யாணங்கள் பேசப்பட்டன.

மீண்டும் அதே நிபந்தனைகள்.

"சைவக்காற மாப்பிள்ளை"

போச்சுடா! போச்சு!! எங்கே போய்த் தேடுறது!!!

"பனையில படவாள் பாக்கினம்"

"முட்டையில மயிர் பிடுங்கினம்"

"அந்த மனுசன் அளவுக்கு மீறி பொம்பிளைப் பிள்ளைக்கு செல்லம் குடுக்கிறார். இது எங்கை போய் முடியப் போகுதோ?"

"தாய் இல்லாத பிள்ளை. இனித் தகப்பன் இல்லாத காலத்தில் தனிச்சுப் போகப் போகுது"

இப்படியும் அப்பிடியும் சுற்றியும் சுற்றாமலும் முன்னும் பின்னும் கதைத்தபடி இருந்தனர்.

""என்ரை உயிர் இருக்கும் வரை அவளுக்கு எந்தக் குறையும் வர விடமாட்டேன்" என ஐயா சொல்லி சொல்லி 75 வயதிலும் உழைச்சுக் கொண்டு இருந்தார்.

வவுனியா போவதும்... கிளிநொச்சி செல்வதும்... யாழ் வருவதும்.. அப்படியே ஊர் போவதுமாக ஓடி ஓடி ஓயாது உழைத்துக் கொண்டிருந்தார்.

ஐயா மட்டுமில்லை.

சூரியனும் ஓடிக்கொண்டு இருந்தான்.

பூமாதேவியும் சுற்றிக் கொண்டு இருந்தா.

பூமிக்கு வானம் கொடுக்கும் சீதனமாக மழை கொட்டியபடி இருந்தது.

அது முடிய வசந்தகாலம் வந்தது.

உதிர்ந்த இலைகளைப் பற்றிக் கவலைப்படாது புதிய துளிர்கள் மூச்சுப்பிடித்து எழும்பின.

முட்டையுள் உள்ள குஞ்சுக்கு யார் சொல்லிக் கொடுத்தது

வெளியே வர! எல்லாம் இயற்கை தந்த தைரியம் தானே!!

காடு நனையுது

மரம் வளருது

வளர்ந்த மரம் பூக்குது

பூத்தமரம் காய்க்குது

காய்ந்த மரம் பழுக்குது

பழத்தின் விதை நிலத்தில் விழுகுது

மீண்டும் அது முளைக்குது.

எங்கள் வீட்டுக்கு மீண்டும் வசந்தம் வருகுது

பூ அன்ரி மீண்டும் வாறா பிரசவத்துக்கு!

புயலும் காற்றும் வெய்யிலும் மழையும் வானமும் பூமியும் மலையும் மடுவும் நதிகளும் அருவிகளும் தத்தம் வேலைகளை செய்தபடிதானே உள்ளன - இயற்கை சும்மாவா இருக்குது.

நீர் தேங்கி நின்றால் அது குட்டை அதுவே பிரவாக மெடுத்து ஓடினால் அது நதி நதியாக எம் வாழ்வு ஓடிக்கொண்டிருக்கிறது நமக்குத்தான் இது புரிவதில்லை

கங்கா யமுனா காவேரி போல... துர்க்கா - இலட்சுமி சரஸ்வதி போல பூ அன்ரிக்கு மூன்றாவதும் ஒரு தேவதை குண்டு சொக்கை யுடன் அழகான ஒரு பாப்பா ஆம் - அதுதான் எம் அகில் குட்டி.

மீண்டும் சரக்கு அரைப்பு, பட்டைக் குவியல், பத்தியச் சாப்பாடு என வீடு வசந்த ஊஞ்சலில் ஆடத்தொடங்கியது.

பாப்பாவின் கிறேப் வாட்டரை நாங்கள் குடிப்பதும் ஓடிக் கொலோனை நாங்கள் பூசுவதுமாக எங்கள் பங்குக்கு நாங்கள் பணிபுரிந்தபடி இருந்தோம்.

மூன்று மாதங்களுக்குப் பின்பு சித்தப்பா வந்து பூ அன்ரியையும் மூன்று பாப்பாக்களையும் வவுனியாக்கு கூட்டிப் போய் விட்டார்.

000

## ஐயா என்ற ஆலமரம் சாய்ந்தது!

காலம் ஓடிக் கொண்டு இருந்தது. ஐயா அபிராமி அந்தாதியுடன் பராசக்தியின் கால்களைப் பிடித்தபடி... முதுமையும், நோயும் ஐயா உடலை விலை பேசியபடி யமனோ எடடா கயித்த பிடிடா எருமையை காலம் போகுது காலாகாலத்தில் கணக்கை முடிக்க வேணும் என ஒற்றைக் காலில் நின்றபடி...

மெல்ல மெல்ல ஐயாவின் நடமாட்டம் குறைந்தது சலப்பை பித்தப்பை சிறுகுடல் - பெருங்குடல் என ஒவ்வொரு அங்கமும் தமக்குள்ள அடிபட்டு அடிபட்டு வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டன.

ஐயா பெரிய ஆஸ்பத்திரியில் தஞ்சடைந்தார்.

மாமாமார் இரவு பகலாக மாறி மாறிப் பார்தனர். சோதி மாமா ஐயாவைப் பிரியாமல் கன்றுக் குட்டி போல் நின்றார்.

ஆம்பிள வாட்டில் பொம்பிளை விடமாட்டினமாம் இல்லாட்டி நானும் கூட நின்டிருப்பேன் அப்படி ஒரு தவிப்பு எனக்கு அப்போ இருந்தது.

பள்ளிக்கூடம் முடிய ஆஸ்பத்திரிக்கு போய்விட்டுத்தான் வீட்ட வருவேன்.

ஐயாவை சுத்தி எப்போதும் சொந்த பந்தங்கள் நிற்பார்கள் ஒருநாள் ஐயா என்னைக் கூப்பிடுகிறார்.

““கலா... இஞ்ச வா குஞ்சு”

“என்ன ஐயா”

“நான் கடனோட செத்திடுவன் போல இருக்கு”

“ஏன் ஐயா... இருக்கிற காணிகளை விற்று கடனை விலத்தலாம் தானே”

“காணியை விற்க மனமில்லை”

“ஏன் ஐயா... ஊர் முழுக்க காணி... ஒண்டை வித்தாலே போதுமே. நான் வளர்ந்து பெரியவளாகி உழைச்சு காணியை விலத்துறன்”

“நீ எப்ப பெரிய ஆளாகி... நான் எப்ப இதெல்லாம் பார்த்து... இந்த மூலையிலை... யமன் நிக்கிறான் என்னைக் கூட்டிப் போக...

பெரியவள் இங்கை வா!

கிளிதான் தனிச்சுப் போனாள்...

அவள் விருப்பப்படி அவள் வாழட்டும்...

அவள் யாரிட்டையும் கை ஏந்தாமல் விட்டு விடுதலையாகி...

ராசாத்தி போலை ராங்கியோடை இருக்க வேணும்.

உள்ள காணி பூமியள் அவளுக்கு சோறு போடும்

அவள் சாகுமவரை சீமாட்டியாக இருக்கலாம்

வவுனியாக் காணியிலை எல்லாமே அவளுக்கு இருக்குது

உப்பு மட்டும் தான் அவள் கடையில் வாங்க வேணும்

மிச்சம் எல்லாத்தையும் வளவில் வைத்திருக்கிறன்”

“ஐயா மாடு சாகேக்கை

கண்டுக்கு புல்லுப் போட்டிட்டா சாகுது”

அம்மா கண்கலங்க சொல்லுறா.

“நீ என்ன உங்கம்மா சொல்லுற மாதியே சொல்லுறாய்

அவள் சீமாட்டி போய்ச் சேர்ந்திட்டாள்"

"உழைப்பு உழைப்பு எண்டு ஊர் முழுக்க காணி வேண்டியது தான் மிச்சம் உருப்படியாய் ஏதும் நடக்கவில்லை மனுசன் பாவம்"

வருத்தம் பார்க்க வாறவை ஹோர்லிக்ஸ் தோடம் பழத்துடன் இலசவமாய் இரண்டு வார்த்தையும் வைத்து விட்டுப் போவார்கள்.

போற போக்கில் அவை என் காதிலும் விழுந்தன.

எனக்கு கோபம் கோபமாக வருகுது.

நான் வளர்ந்து பெரிய ஆளாகி... பெரிய மடம் கட்டி... கிளியக்காவை அதுக்கு முதலாளியாக்கி... ஐயா மாதிரி வயசானவை எல்லாரையும் வைத்துப் பார்க்க வேணும்.

அப்பாவிடம் சொன்னேன்.

அதுக்கு நீ நிறையப் படிக்கவேணும்

ஐயா கட்டிலில் கிடந்தபடி என்னைக் கண்டிட்டார்.

இஞ்சை கிட்ட வா "நிமிர்ந்த நன்நடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்" பாரதி சொன்னது. அதையே ஐயாவும் சொல்லுகிறார்.

ஓம் ஐயா அப்பிடி நீ ஒரு பெரிய தைரியமான பொம்பிளையாக வா. பிறகு பார்ப்பம். இப்ப வீட்டை போ. இருட்டி விட்டது.

வீட்ட வந்ததும் எனக்கு ஐயாட குரல் கேட்டபடியே...

ஞானச் செருக்கு... ஞானச் செருக்கு...

நிமிர்ந்த நன்நடை.... நேர் கொண்ட பார்வை...

நிலத்தில் யாருக்கும் அஞ்சாத துணிவு...

ஐயா எனக்கு குரு. பெண்ணிய சிந்தனையை விதைத்த

மகா உன்னதமான விவசாயி நான் பெரிய ஆளாக வாறத்துக்கு ஐயா கோடு போட்டு விட்டார் நான் றோட்டு போடவேணும். அந்த ஐயாட இந்த ராசகுமாரி - கலாநிதிதன் கற்பனைக் குதிரையில் இருந்து கீழே இறங்கி தொழுவத்தில் அதனைக் கட்டினாள். பின்பு தூங்கப் போனாள்.

*சாமம் 3 மணி*

*நித்தன் உலுக்கி எழுப்பினான்*

*“என்னடா”*

*“ஐயா போயிற்றாராம்”*

*இப்ப இரவு*

*ஆனாலும் எல்லோரும் ஊருக்கு போக வேணும்.*

*எனக்கு கை நடுங்கிச்சு*

*கால் நடுங்கிச்சு*

*சொல் நடுங்கிச்சு*

*மனசு மட்டும் சொன்னது*

*படி... படி...*

*ஐயாட ஆசையை நீ நிறைவேற்று!*

*பிறகென்ன?*

*செத்தவீடு...*

*காடாத்து...*

*அந்தியேட்டி...*

*ஆட்டத் துவசம் என காலம் ஐயாவை எங்களிடம் இருந்து மெல்ல மெல்ல இழுத்துக் கொண்டு போனது.*

*தாய் இல்லாமல்*

*தகப்பன் இல்லாது*

குடும்பம் இல்லாது

வாரிசு இல்லாது

தனிக் குத்து விளக்காக

தனிச்சு அழுது அழுது

ஓய்ஞ்சு போறா கிளியக்கா.

தாடி ஐயாவும் அம்மம்மாவும் வந்து கிளியக்காவை தங்களுடன் கூட்டிச் சென்றுவிட்டார்கள்.

மீண்டும் சிறகொடிந்த பறவையாக கிளியக்கா...

போன ஐயா எங்கே போனார்?

சொர்க்கத்துக்கா...

நரகத்திற்கா...

மறுபிறப்பு எடுத்தாரா??

ஆருக்குத் தெரியும் இதெல்லாம்???

செத்துப் போனவர்கள் யாராவது வந்து நமக்கு சொன்னார்களா? இல்லையே??

என்னதான் எங்கட வீட்டில பிரச்சனை எண்டாப் போல சூரியன் உதிக்காமல் போய்விடுவானா? இல்லைதான் தேய்ஞ்சு போன சந்திரன் வளராமல் விட்டு விடுவானா?? பூமிதான் தன்னைத் தான் சுத்தாமல் விட்டு விடுவாளா???

விதைத்த நெல்லு முளைக்காமல் போனதா?... இல்லை

காய்ச்ச மரம் பழுக்காமல் போனதா??

பழுத்த பழம் மண்ணில் விழாமலா போனது? - இல்லை

விழுந்த பழம் மண்ணுக்கை புதைஞ்சு தண்ணி குடித்து வேர்விட்டு வளராமல் போச்சா?

இல்லை... இல்லையே...

இயற்கை அது தன்பாட்டுக்கு தான் உண்டு தன்பாடு உண்டு தன் வேலையுண்டு என இயங்கியபடிதானே இருக்குது.

நாம மட்டும் தான் சோகம் வந்தா உடைஞ்சு போய் உருப்பாடாமல் போறம்.

கல்லுக்குள் தேரைக்கும் கருப்பைக்குள் பிள்ளைக்கும் ஆண்டவன் படி அளந்தபடிதானே இருக்கின்றான்.

000

# மீண்டும் வசந்தம்!

பூ அன்ரி வயித்தில் நாலாவது குழந்தை உதயமாகுது.

ஐயாவாக இருக்குமா?

கறுப்பா? சிவப்பா?

ஆணா? பெண்ணா?

ஆணாக வேண்டும் என்பதே அனைவரின் பிரார்த்தனையும்.

டிசம்பர் மாதம்!

சொர்க்கவாசல்... ஏகாதேசி...திருப்பாவை... திருவெம் பாவை... பிள்ளையார் கதை என கோயில்கள் களைகட்டத் தொடங்கியிருந்தன.

வீட்டுக்கு வீடு வாசல்களில் சாணிப்பிள்ளையார்தினம் தினம் பிறந்த படி இருந்தார். அந்தப் பீடைப் பிள்ளையாருக்குகோலம் போட்டு செம்பரத்தம் பூ வைத்து அறுகம் புல்லு குத்தி... அலங்காரமாய் அன்பாக அவரைக் கொண்டாடியபடி இருந்தார்கள் யாழ் மக்கள்.

பூ அன்ரி வவுனியாவால் வந்து ஒரு கிழமையாச்சு.

இரவு சொர்க்கவாசல் ஏகாதசி. அபிசேக ஆராதனைகள் அமளியாக நடக்குது வண்ணை பெருமாள் கோவிலில்.

அம்மா அவசர அவசரமாக கோயிலைச் சுத்தி ஒரு கும்பிடு போட்டிட்டு “கோவிந்தா... கோவிந்தா” என்றபடி வருகிறா.

சந்தனம் குங்குமம் பூ அன்ரிக்கு பூசிவிடுகிறா.

இரவு நேரம் கார் இருள்... இடைக்கிடை வருடப்பிறப்புக்கான வாணவெடிச் சத்தங்கள்.

பூ அன்ரியைக் கூட்டிக் கொண்டு அம்மா ஆஸ்பத்திரிக்கு போய் விட்டா.

விடிய சாமம்... சரியாக 12 மணிக்கு வருசப் பிறப்பன்று சீசர் ஒப்பிரேசன் செய்து பூமிக்கு வாறார் எங்கள் தம்பிப் பாப்பா.

அனைவருக்கும் சந்தோசம் தாங்கவில்லை ஐயாவே வந்திட்டார் என்று.

ஆனால்.... மகிழ்ச்சி மேலே வந்து பின் நீர்க்குமிழி உடைவது போல உடைந்து விடுகிறது.

பூ அன்ரி ஐ.சி.க்கு மாற்றப்படுகின்றா.

எங்களுடன் சின்னம்மா கிளியக்கா நின்று பூ அன்ரியைப் பாராமரித்தனர்.

நான் அம்மாட கையில ஒரு நீலப் பஞ்சுக் கம்பளியில் சுத்தப்பட்ட பாப்பாவைப் பார்க்கின்றேன்.

தொட்டுப் பார்க்கின்றேன்.

கண் முழிக்குது.

பிறகு மூடுகிறது.

அழுகிறது... தன் விரலைத் தானே சூப்புது.

தன் தாயின் கர்ப்பப்பை கொடுத்த சூட்டிற்குப் பிறகு இந்தப் பெரியம்மாவின் கம்பளிச் சூடு நல்லாய் இருக்குது என்று எண்ணியபடியே சின்னப் பாப்பா கை விரலைச் சூப்புது.

பூ அன்ரி ஐ.சி.க்கு போனதால் தாய்ப்பால் மாப்பாலுக்கு மாறுகிறது.

ஒரு அம்மாக்கு பதிலாக அவனுக்கு பலஅம்மாக்கள்.

பத்தியம் பார்க்க... குளிக்க வாக்க.. பால் பருக்க...

காலில் போட்டு நித்திரை ஆக்க என அம்மாக்கள் அதிகம் அவனுக்கு.

எனக்கு பதவி உயர்வு கிடைக்கிறது.

தனியே தம்பியைப் பார்ப்பது...

தூங்க வைப்பது...

பால் பருக்குவது...

எனக்கு பல புதிய பதவிகள்.

அத்துடன் சில ஆதாயங்கள் எனக்கு.

பிள்ளைக்குப் பால் கரைக்க முதல் அவன் பால் பவுடர் என் வாய்க்குள்ளும் கொஞ்சம் போய்விடும்.

காலில் போட்டு நித்திரையாக்கிய படியே பள்ளிப் புத்தகத்தைப் படித்தேன்.

தம்பி பிறந்து கிட்டத் தட்ட ஒரு வருடமாய் பூ அன்ரி வருத்தமாக இருந்தா.

நான் தான் தம்பிக்கு செவிலித்தாய். பின்பு பூ அன்ரிக்கு உடம்பு தேற

மீண்டும் சித்தப்பாவுடன் எல்லோரும் வவுனியாவுக்கு கிளம்பி விட்டனர்.

மாரி காலத்தில் மட்டும் பிடிச்சு விளையாடும் பட்டுப் பூச்சியாக...

அவ்வப்போது வந்து சூக்காட்டும் மாரிகாலச் சூரியனாக... இந்தப் பிரசவ காலங்கள் போய் விட்டன.

பூ அன்ரியின் நாலு குஞ்சுகளும் எம்மை விட்டு வன்னிக்கு போய் விட்டனர்

காந்த ஈர்ப்பில் பூமி சுத்துது சுத்துற பூமியில் நாங்கள் சுத்திறம்

பாசம் கொண்ட காந்த சக்தியால் நாங்களும் சுற்றிக் கொண்டிருந்தோம் இது இல்லை என்றால் என்னதான் ஒட்டும்? என்னதான் நடக்கும்??

எப்படா பள்ளி விடுதலை வரும் எனக் காவல் கிடப்போம்.

அப்பா அம்மாவுடன் வவுனியாக்கு போய்விடுவோம்.

நான் காலில் போட்டு வளர்த்த குஞ்சுகள் வளர்ந்து போய் நின்றார்கள்.

காலில் போட்டு ஆட்ட ஏலாது.

ஆனால் காலைப் பிடிச்சுக் கொண்டு ஒண்டும் என் கையைப் பிடிச்சுக் கொண்டு இன்னொன்றும் நிற்குங்கள் என் வலது பக்கத்தில் ஒன்று இடது பக்கத்தில் ஒன்று எல்லாமே என்னைச் சுற்றியபடி.

என்னைச் சுற்றி மதில் கட்டியபடி...

தலகணிகளை துணைக்கு இழுத்து கட்டிப் பிடிச்சுக் கொண்டு என்ர அக்கா... என்ர அக்கா எனச் சொல்லிக் கொண்டு... படுக்குங்கள்

அந்த வன்னிச் செம்மண்...

நிலா வெளிச்சம்...

நிலக்கடலை வாசம்...

காக்கா கடை....

கார் மாமி வீடு...

வேப்பம் குளத்து தாமரைகள்...

உப்பு போட்ட மாங்காய்...

சின்னமாமி, பெரியமாமி, லலிமாமி, முத்துமாமி என

சித்தப்பாவின் சகோதரிகளின் பாசமான கதைகள்...

கொஞ்சல்கள்... செல்லங்கள்...

பூ அன்ரி சுடும் பலகாரங்கள்...

வளவு முழுக்க பூத்திருக்கும் பூக்களைப் பிடிங்கி மாலை கட்டுவது...

சித்தப்பாவின் பெரிய சப்பாத்தை மாட்டிக் கொண்டு பத்து ஏக்கரிலும் ஓடித் திரியும் சுகம்...

எல்லாச் சுகமும் எல்லாக் கணமும் கையில் பிடிபடாத காற்றுப் போல விடுமுறை முடிய எல்லாம் முடிந்திடும்.

மீண்டும் வவுனியா - யாழ்ப்பாணம்! புடலங்காய்க்கு கல்லுக் கட்டி விடுகிற மாதிரி மீண்டும் கைகளில் புத்தகங்கள். புலன்கள் அனைத்தையும் கட்டி இழுத்து வைத்திருந்தன.

ஒவ்வொரு ஸ்டேசனாக சனங்களை இறக்கிய புகையிரதம் எம் ஊரை வந்தடைந்து... இனிப் பயணிக்காது என்ற அறிவிப்புக் கேட்டு நானும் என் கனவுலகத்தில் இருந்து விடுபட்டு கீழே இறங்குகின்றேன்.

நாளொன்றுக்கு ஆறாயிரம் நினைவுகள் வந்து போகும் என்கிறது அண்மைக்கால விஞ்ஞானம்

ஆம்!

எண்ணங்கள் வலியவை - அவை

நம் மனதை நாட்டாமை செய்பவை

அதிகாரம் கொண்டவை.

மாம்பழச் சண்டையில் முருகன் மயிலேறி உலகைச் சுற்றிவர தந்தையையும் தாயையும் மூன்றுமுறை பிள்ளையார் சுற்றிவந்தது போல...

நானும் என் எண்ணங்களும்என் மனமும் அடிக்கடி வான வெளியில் பஞ்சாய்ப் பறக்கின்றோம்.

அரை மணித்தியாலத்துள் என் கடந்தகாலத்தை சுற்றிவர எப்படி முடிந்தது என்னால்!

000

# மீண்டும் பன்னீர்க் குடமும் பச்சைப் பாப்பாவும்

*மயக்கம்!*

*குளோரோபோம் குடுத்து மயக்கம் வரும் பொழுது...*

*புத்தகம் படிச்சு களைச்சு நித்திரை மயக்கம் வரும் பொழுது...*

*விடிய விடிய நாடகம் பார்த்து விடியப்புற நித்திரை மயக்கம் வரும் பொழுது...*

*இந்த மயக்கங்கள் இனிமையானதுதான்.*

*அதிலும் அம்மா மடி உறக்கம் சொர்க்கம் அந்தச் சொர்க்கத்திலும் சொர்க்கம் அம்மாவின் கற்பப்பையுள் உறங்கும் பொழுது! இடைக்கிடை அம்மா புரண்டு படுகிறா!*

*ஒரு கரையில் இருந்து மறுகரைக்கு படகோட்டிப் போவது போல இருக்கிறது ஊஞ்சலின் கயிற்றைக் கெட்டியாகப் பிடிக்கின்றேன்.*

*சிவத்தக் கயிறு அறுத்து விடுமோ என்ற பயம் எனக்கு என்றும் இருந்ததில்லை. டிங்... டிங்... டிங்... மணிக்கூடு அலாரம் அடிக்கிறது கொழும்பில் கோழி இல்லை அதுதான் இப்ப மணிக்கூடு கொக்கரிக்கிறது "நீ எழும்பாதையப்பா... படுத்திரு நான் கடையிலை சாப்பிட்டுட்டு வேலைக்குப் போறன்...*

*வரும் போது வாறன்டை எடுத்து வாறன் நாளைக்கு ஊருக்குப் போவம்"*

*அப்பா வேலைக்குப் போறார் அம்மா மீண்டும் நித்திரைக்குப்*

*போகின்றா நானும் குழப்படி செய்யாமல் கையைச் சூப்பியபடி நித்திரைக்குப் போறன்.*

*மாலு... மாலு... மாலு... யாரோ கத்திக் கொண்டு போறான் அம்மா எழுந்து போகின்றா நாங்கள் மீன் சாப்பிடுவதில்லை என மீன்காரனிடம் அம்மா சிங்களத்தில் சொல்லுறா அது என்ன மீன்?*

*அது எப்பிடி இருக்கும்?*

*ஏன் அதைச் சாப்பிடக் கூடாது?*

*அப்போ வேறு ஆட்கள் சாப்பிடுவினமா?*

*வளர்ந்து பெரியவளாகியவுடன் அம்மாவிடம் இதைப்பற்றி கேட்க வேணும்*

*பிறகு அம்மா குளிக்கின்றா*

*கும்பிடுகிறா*

*சமைக்கிறா*

*சாப்பிடுகிறா*

*புத்தகம் படிக்கிறா*

*“அம்மா! அப்பா வர கோல்பேசுக்கு போவாமா? கடல் காத்து நல்லாய் இருக்கும்” நான் சொல்வது அம்மாக்கு கேட்கிறது போலும் வயிற்றைத் தடவுகிறா என் தலையைத் தடவி விடுவது போல இருக்கிறது.*

*ஆனாலும் எனக்குப் பொறுமையில்லை அம்மாவின் வயிற்றைக் குத்திக் கொண்டே இருக்கின்றேன்*

*மீண்டும் வாசலில் டிங்... டிங்... டிங்... வாசலில் கடிதக்காரன் அம்மா கடிதத்தைப் படிக்கின்றா எனக்குப் புரிந்த மாதிரியும் இருக்கிறது புரியாத மாதிரியும் இருக்கிறது பெரியம்மா எழுதியிருந்தா ஊரில் இருந்து.*

*“அன்பான தம்பி சேதுவுக்கும் மைத்துனிக்கும்அன்புடன்*

எழுதிக் கொள்வது இங்கு மழைக்காலம் தொடங்கி விட்டது லலிதாவை வேம்படியில் சேர்த்திருக்கின்றோம் மற்றப் பிள்ளைகளும் நன்றாகப் படிக்கின்றார்கள் பிரசவகாலம் நெருங்கின்றதல்லவா? முடிந்தவரை கூடவிருந்து நான் பார்ப்பேன் குஞ்சியம்மாக்கு எப்போ குட்டிப் பாப்பா வரும் என மகேசனும் கிருபாவும் கேட்டபடி இருக்கின்றார்கள்.

நீங்களும் ஊர்வர இருப்பதாக சுந்தரம்மாமி சொன்னா ஆவலுடன் உங்களை எதிர்பார்க்கின்றோம் பெரியம்மாவின் பாசம் என்பது எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாதது கங்கை போல ஓடிக்கொண்டிருக்கும் ஒரு ஜீவநதி அது. அம்மா கடிதத்தை மடித்து வைத்து விட்டு குசினிக்குள் போறா போல இருக்குது.

வேலையால் வந்த அப்பா “பிள்ளை வயிற்றோடை ஏன் வேலை செய்து கொண்டு திரிகிறாய்?” செல்லமாக கோபித்துக் கொள்கின்றார்.

“ரம்புட்டான் மங்குஸ்தான் எல்லாம் வேண்டிக் கொண்டு வந்தனான் - ஊருக்குக் கொண்டு போக”

“பொன்னம்மாக்கா கடிதம் போட்டிருக்கிறா” அம்மா நீட்டிய கடிதத்தை அப்பா மகிழ்வுடன் வாங்கிக் கொள்கின்றார்.

“அண்ணி எனக்கு சின்னத்தாயி! அம்மா இல்லாத குறை தெரியாமல் அண்ணிதானே என்னை வளர்த்தவா - இப்போ என் பிள்ளையையும வளர்க்க ஆசைப்படுறா நல்லதொரு சீவன் அது”

“கோல்பேசுக்கு போயிட்டு வரேக்கை இன்னும் கொஞ்சம் சொக்கிலேற்றும் பழங்களும் வாங்குவம் ஊருக்குப் போனால் கனபேர் வருவினம் எங்களைப் பார்க்க”

அதிகாலையில் மீண்டும் யாழ்தேவி

மீண்டும் சுக்குப் புக்கு... சுக்குப் புக்கு...

மீண்டும் ஏணைகட்டி ஆட்டுறமாதிரி...

மீண்டும் மெயில் லோஞ்சு...

மீண்டும் கோட்டை பொன்னம்பலண்ணையின் வண்டில்...

இரட்டை மாடுகளின் கழுத்து மணியோசை ஜில் ஜில்லென காதில் ஒலிக்கிறது! அப்பாடா!

ஊர் வீடு வந்தாச்சு!!

மீண்டும் அம்மாக்கு இராஜகுமாரிக்கான கவனிப்புகள் எனக்குப் பெருமையாக இருக்கிறதுஎன்னால்தானே அவாக்கு இந்தப் கவனிப்புகள்.

"ஏழு மாசம் இனி இன்னும் கவனமாக இருக்கவேணும் இப்ப தான் பிள்ளை நிறை கூடுகிற நேரம்.குணத்துக்கு வேண்டின னான் - உனக்கும் கொண்டு வந்தனான்" தம்பி மாமா தன்னுடன் எடுத்து வந்த பாதாம் பருப்பு கச்சான் எல்லாவற்றையும் அம்மா முன்னே நீட்டுகின்றார்.

குணம் பசுப்பால் குடிக்கிறது நல்லது. வீட்டுப் பசுப்பால் போதாட்டி வெள்ளைப் பசுவைக் கொண்டு போ நல்லாய் பால் வரும்"

அம்மம்மா மருமகளை எப்போதும் மகளாகவே பார்ப்பவர்.

"மச்சான் போக முதல் இந்த அலுமாரியை அரக்கி வைக்க ஒரு கை கொடுத்து விட்டுப் போங்கோ" இது அப்பா.

"இது என்ன சாக்கு சாக்காய்..?"

"நானும் சிவஞானமும் கழகத் தமிழ் புத்தகங்களுக்கு காசு கட்டி இருக்கிறம். அதுதான் மாதம் மாதம் இந்தியாவிலை இருந்து புத்தகங்கள் வந்து கொண்டிருக்கிறது"

"ம்... நல்ல விசயம் தான்"

"அதுதான் கறையான் பிடிக்காமல் எல்லாப் புத்தகத்தையும் அடுக்கி வைக்க வேணும். நம்மட பிள்ளைகளுக்கு இது பெரிய சொத்து" பின் வளவில் இருந்து புகை வருகிறது.

"என்ன புகைக்குது" அம்மா கேட்கின்றா.

"மகளுக்கும் மருமகனுக்கும் பிடிக்கும் எண்டு ஐயா பூரான் சுடுகிறார்" அம்மம்மாவின் பதில் இது.

"கமலா... கிளி... எங்கை போயிட்டியள்? கொடுவாக்கத்தியைக் கொண்டு வா" ஐயா கூப்பிடுகிறார்.

சின்னம்மா கொடுவா கத்தியையும் கொடுத்து பூரான் வெட்டு வதற்காக மரக் குத்தியையும் ஐயாக்கு பக்கத்தே உருட்டி விடுகிறா.

ஐயா கொடுவாக்கத்தியை ஓங்குகின்றார்.

"ஐயா கத்தியை ஓங்காதையுங்கோ.... வெட்டாதையுங்கோ... கத்தி... அருவாள்.. துவக்கு... ரத்தம்... பூரானாலை ரத்தம் ஓடுது... இல்லை... இல்லை... அது ஒரு சின்னப்பிள்ளை யின்டை தலை போல கிடக்குது... தூரத்தில் ஆமிக்காரன்கள் வாறான்கள் போலை கிடக்கு. எல்லோரும் ஓடினம்.... கத்தியள்... சுத்தியல்களாலை ஓடுகிற ஆட்கள் மேலே எறிகிறான்கள் போலை இருக்குது.

வயதானவை... நடக்க முடியாதவை... பெண்கள்... ஆண்கள்... சின்னஞ் சிறுசுகள்... ஆடு, கோழி, நாய், பூனை எல்லாம் ஓடுதுகள்.

எல்லா இடமுடம் இரத்தம்.

எனக்குப் பயமாயிருக்கிறது.

நான் சிவத்தக் கயிற்றை இறுக்கப் பிடிக்கின்றேன். அப்பா அம்மா அந்த இடத்தை விட்டு ஓடிப் போகப் பார்க்கினம். தூரத்தில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்குது. கிட்டவாக வருகுது. எனக்கு பயம் பிடிக்கிறது.

ஐயோ ஓலமிடுகிறேன்.

சத்தம் வந்த பக்கத்தில் கையை நீட்டுகிறேன்.

அட... மணிக்கூடு அலாரம் அடிக்கிறது.

கனவா?... அட கனவா??

ஏன் இந்தக் கனவுகள் அடிக்கடி வருகின்றன.

நெஞ்சாங்கூட்டுக்குள் உயிர் துடிக்கிறது.

கண்ணை மூடிக்கொண்டு தூங்க முயற்சிக்கின்றேன்.

நேற்று செஞ்சிலுவைச் சங்கத்தில் சந்தித்த ஆச்சியும் அப்புவும் கண்ணுக்குள் இருந்து கொண்டு பிள்ளை, பிள்ளை என்று கூப்பிடுகிறார்கள்-கொதிக்க கொதிக்க ஊற்றப்பட்ட சுடுநீரில் சிவந்து போகிறது தேநீர். யன்னலால் எட்டிப் பார்க்கின்றேன். தேநீர் சிவப்பாக அந்திவானம். அதற்கு வெண்மேகப் பவுடர் பூசும் முகில் கூட்டம். பனிப்போர்வை போர்த்த புல்தரை சோம்பல் முறிக்காத பசுமரங்கள் - அதில் அரைக்குறைத் தூக்கத்தில் குருவிக் கூட்டங்கள். மெல்ல மெல்ல எட்டிப் பார்க்கும் இளம் சூரியன்.

உடம்புக்கும் மனதுக்கும் இதம் தரும் அதிகாலை ஆவி பறக்கும் தேநீர் குடிக்க குடிக்க போதை ஏற்றும் அற்புதம். அப்பா நினைவு... அப்பா தேத்தா...

சின்ன வயதில் அப்பா தேநீர் குடித்தால் அதில் நானும் வேண்டிக் குடிப்பதுண்டு.

தன் திருமணத்திற்கு முதல சிங்கப்பூரில் சிலகாலம் வாழ்ந்த அப்பா சிலோனுக்கு திரும்பி வந்த பொழுது சீனி போடாமல் தேநீர் குடிக்கும் கலாச்சாரத்தையும் சீனக்காரரிடம் இருந்து காவி வந்திருந்தார். சீனி போட்டால் தேநீரின் சுவை போய் விடும் என்று சொல்லி தேநீரின் சுவையை சுவைக்கக் கற்றுத் தந்திருந்தார்.

எப்பிடி அவர் சிங்கப்பூர் போனார்?

ஏன் போனார் என்று கதைகதையாகச் சொல்லுவார்.

மலேசிய நாட்டு நண்பர்கள்... சீன நண்பர்கள்... ஆசிரியத் தொழில் அத்தனையும் விட்டு விட்டு அப்பப்பாவுடன் கடைக்காலத்தில் இருப்பதற்க்காக திரும்பி வந்ததாகச் சொன்னார்.

சுத்தமாக இருப்பது, கிரியேட்டிவ்வாய் இருப்பது பற்றி

சீனக்காரக்களின் கதைகளை பாடம் போல உபதேசிப்பார்.

வீட்டிற்கு வெளியே எறியும் தடியைக் கூட தரமான பொருட்களாய் மாற்றுவதில் அவர்கள் கெட்டிக்காரர்கள் என்று கூறுவார். அப்பாவின் செயல்களிலும் அதனைக் கண்டு அதன்படியே நானும் வளர்ந்திருந்தேன். அதனால்தான் எப்போதும் எறியப் போகும் எந்தப் பொருளைக் கண்டாலும் அதனை எடுத்து அதனை மறு உருவம் ஆக்குவதில் எனக்கு அலாதிப் பிரியம்.

இன்று சனிக்கிழமை. டென்மார்க் வந்த பொழுது கொண்டு வந்த திருப்பதி பெருமாள், தாயார், மற்றும் விக்கிரகங்களுக்கு இன்று விசேடநாள். விக்கிரகங்களுக்கு அபிசேகம் பண்ணி பட்டு உடுத்தி அழகு பார்ப்பது என் வழமை.

அப்பா அம்மாவை விட்டு விட்டு வந்த பின்பு அந்த வெற்றிடத்தை பெருமாளும் தாயாரும் நிரப்பத் தொடங் கினார்கள்.

நீ எங்கட பிள்ளையில்லை. சாமியிட பிள்ளை. உன்னை எப்பவோ சாமிக்கு வித்தாச்சு. சாமிதான் துணை. எங்களால் ஆவது ஏதுமில்லை என அம்மா அடிக்கடி சொல்லுவா.

இப்போ அந்தச் சாமியோடை பிள்ளை என்ன செய்யும்? சாமி யிட்ட தானே முறையிடும். அப்பா அம்மாவை பின்னடியில் நான் பார்க்க மாட்டேன் என என் அடிமனம் சொல்லிக் கொண்டேயிருக்கும். குற்ற உணர்வு ரத்தத்தின் ஒவ்வோர் கலங்களிலும் உறைந்து உறைந்து என்னைக் கொல்லத் தொடங்கியது.

அந்த நேரம் சாமியோட ஒரு ஒப்பந்தம் போட்டேன். நான் இப்ப உங்களைக் கழுவித் துடைச்சுப் பார்க்கிறன். நீங்கள் தான் என்ர அப்பா அம்மாவை கவனமாகப் பார்க்க வேண்டும் என்று. அன்று முதல் இன்று வரை அது எழுதப்படாத சட்டமாக அமுலாகி வருகிறது. இத்துடன் 32 வருடங்கள் முடிந்து விட்டன.

இப்போ நேரம் காலை 10 மணி. முன் வீட்டில் ஒரே சத்தம். யன்னலால் எட்டிப் பார்க்கின்றேன். பின் பக்கம் திறந்த ஒரு லொறி நிறைய மாணவ மாணவிகள். வாகனம் வர்ண வர்ண நிறக்காகிதங்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கின்றது. வாகனம் அடிக்கடி எழுப்பும் பீப்... பீப்... சத்தத்துடன் மாணவச் செல்வங்கள் எழுப்பும் கூக்குரல் சத்தம் வானைத் தொடுகின்றது. கூடவே அனைவரும் சேர்ந்து பாடுகின்றார்கள்.

ஆம்! இன்று 12ம் தர உயர் தரக்கல்வியை முடித்த அவர்களுக்கு அவரவர்களுக்கான துறைக்கான வெவ்வேறு நிறத் தொப்பிகள். கடந்த மூன்று ஆண்டுகளாக புத்தகத்தினுள் தலையைக் குனிந்து படித்தவர்கள் இன்று தலை நிமிர்த்தி அதனைக் கொண்டாடுகிறார்கள்.

ஒவ்வோர் மாணவ மாணவிகளின் வீடுகளுக்கும் சென்று பத்து பதினைந்து நிமிடம் அவ்வெற்றியைக் கொண்டாடுவார்கள். பெற்றார்களும் பிள்ளைகளும் சேர்ந்து மகிழும் தினமது.

மனசெல்லாம் மத்தாப்பு பூக்க பல்கலைக்கழகத்துக்குள் போக முதல் அனைவரும் சேர்ந்து மகிழ்ச்சியைக் கொண்டாடும் தினமது.

அவர்களின் மகிழ்ச்சியில் ஊரே பங்கு கொள்ளும்.

ஊரே அவர்களுக்கு கை அசைக்கும்.

சக வாகனங்களும் தாங்களும் பீப் பீப் ஒலி எழுப்பி அவர்களின் மகிழ்ச்சியில் பங்கு கொள்வார்கள்.

அந்த வாகனம் சென்று மறைய முதல் இன்னோர் வாகனம் மறுபக்கத்தால் வருகிறது.

மாணவர்களின் கூ...கூ.... சத்தமும் அந்த வாகனங்களில் இருந்து எழும் இசையும் காற்றோடு கலந்து என்னையும் தாலாட்டிச் செல்கிறது.

எங்கள் ஊர் லோஞ்சி போல அது தாலாட்டி தாலாட்டி என்னை என் பள்ளிப் பருவத்துக்குக் கூட்டிச் செல்லுகிறது.

000

## பள்ளிப் பரீட்சை மாணவர்கட்கு மட்டுமே! பெறுபேறு என்பது முழுக்குடும்பத்துக்குமே!!

*காற்றிலே பறப்பது... காற்றிலே பறப்பது என்று சொல்வார்களே அப்படி என்ற ஒன்றை அனுபவித்தது எனது உயர்தர மறுமொழி வந்த அன்றுதான்.*

*சோதனை நடந்த வேளையில் எங்கள் வீட்டில் எல்லோருக்கும் தவசு காலம் தான்.*

*வீட்டில் றேடியோ பாடாது.. தேவையற்ற பேச்சுகள் வீட்டினுள் இராது... வீட்டிற்கு எந்த விருந்தினர்களும் வரவழைக்கப்பட மாட்டார்கள். ஆடுகள்... மாடுகள்... கூட அமைதியாக என்னைக் கடந்து போவது போல இருக்கும்.*

*சோதனையில் சித்தி எய்தாவிட்டால் அடுத்தது என்ன என்ற ஏக்கமும் நடுக்கமும் தான்... அது எல்லோருக்கும் தான். யாழ்ப்பாணத்தில் அதிகமாக பொலிடோல் விற்பனையாவது பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரும் காலத்தில் தான். யமன் கூட எருமையை விற்று விட்டு பொலிடோல் போத்தல்களில் ஏறி வலம் வரும் காலமது.*

*எங்கள் வீட்டிலும் எல்லோருக்கும் உற்சாகம்... எதிர்பார்ப்பு... பரபரப்பு... பயம் என எல்லாம் கலந்த குழையல் சாத நிலை தான்.*

*1980 உயர்தரப் பெறுபேறு வருவதற்கு முதன்நாளே அப்பாக்கு வயிற்றால அடிக்கத் தொடங்கி விட்டது.*

*அம்மா எப்போவும் போல நீ சாமியிடபிள்ளை... சாமியே*

பார்த்துக் கொள்ளட்டும் என அமைதியாக பெருமாளுடன் பேசிக் கொண்டிருந்தா.

யாருக்கும் காத்திராத சூரியன் அன்றும் அதிகாலையே வந்து என்னை எழுப்பி விட்டான்.

எழும்ப மனமின்றி நடக்க இயக்கமின்றி எப்படியோ எழுந்து எப்படியே வெளிக்கிட்டு நானும் பள்ளிக்கூடம் புறப்பட ஆயத்தமானேன்.

வேலைக்குப் போன அப்பா திரும்பி வருகின்றார்.

"என்னப்பா ஆச்சு"

"செருப்பு போடாமல் போயிட்டன்"

எனக்கு பரீட்சை மறுமொழி வாற ரென்சன் என்னை விட அப்பாவை ரென்சன் படுத்தியிருக்கு.

சிவன் கோயிலில் கும்பிட இறங்கி வழமைபோல செருப்பைக் கழற்றும் இடத்தில் கழற்றப் போகும் தான் செருப்பு போடாமல் போனது ஞாபகத்திற்கு வந்திருக்குது.

"நல்ல மகளும் நல்ல அப்பாவும்" என அம்மா சிரிக்கின்றா.

அப்பா தன் டென்சனை எனக்குத் தொற்ற வைத்து விட்டுச் செருப்பைப் போட்டுக் கொண்டு போய்விட்டார்.

எனக்கு கை கால்கள் எல்லாம் மத்தளம் அடிக்கத் தொடங்கி விட்டன.

ஆனாலும் ஒரு மாதிரி பள்ளிக்கூட வாசலுக்கு வந்து விட்டேன்.

மாணவிகள் எல்லோரும் அறிவிப்புப் பலகையைச் சுற்றி நிற்கின்றார்கள்.

ஆளை ஆள் இடித்துக் கொண்டு தங்கள் தங்கள் சுட்டிலக்கத்தைத் தேடுகின்றார்கள்.

சிலர் கலங்கிய கண்களுடன் விலத்திப் போகின்றார்கள்.

சிலர் மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு

நிற்கின்றார்கள்.

கலாநிதி சேதுகாவலர் ABCC "வாழ்த்துக்கள்" என திருமதி. பொன்னம்பலம் என்னை கட்டியணைக்கின்றார்.

காற்றில் பறக்கின்ற மாதிரி இருக்கின்றது.

வீட்டை போக முதல் அப்பாவிடம் போக மனம் சொல்லுது.

இப்போ போல் அப்போது கைத்தொலைபேசி இல்லை.

கச்சேரிக்கு பஸ் எடுக்கிறன்.

பஸ் நிற்க முதலே ஓடிப்போய் அப்பாவிடம் சொல்லி விட்டேன்.

ஈன்ற பொழுது பெரிதுவக்கும் தன் மகளை சான்றோள் எனக் கேட்ட தாயை விட அப்பா என்னைக் கொண்டாடினார்.

அவருக்கு தலை கால் புரியாத பெருமை.

சக ஊழியர்களுடன் தன் மகிழ்ச்சியைப் பங்கு போட்டார்.

"வீட்டை போ... அம்மாவும் பார்த்துக் கொண்டு நிற்பா... நான் கொஞ்சம் கெதியாய் வாறன்" என என்னை அனுப்பி வைத்தார்.

வீட்டை வரத் தாமதமானதால் அம்மா அழுதபடி நின்றிருந்தார் - சோதனை மறுமொழி என் கால்களை வாரிவிட்டிருக்குமோ என்ற கவலை அவாவிற்கு.

தோல்வி என்னை எங்கோ காணாமல் போகப் பண்ணி விட்டதோ என்ற பயம் அவாவுக்கு.

என்னைக் கண்டதும் நிமிர்ந்து பார்க்கின்றா.

என் வாயில் இருந்து என்ன வரப்போகுது என்ற எதிர்பார்ப்பு அது.

சொன்ன பொழுது எந்தப் பிரதிபலிப்பையும் காட்டவில்லை.

முகம் கொடுத்துப் பேசவில்லை.

கட்டிப் பிடிக்கின்றேன்.

ஒரு பதிலும் இல்லை.

"இப்ப என்ன 4 Aயா எடுத்திருக்கிறாய். இல்லையே... என்ன சிலுசிலுப்பூ.... என்ன புழுகம்?

"இல்லையம்மா... யாழ்ப்பாணத்தில் எனக்குத்தான் அதிக புள்ளிகள்"

"அதை வைத்து என்ன பண்ணுவது? நீ படிச்சது போதாது... இன்னும் அதிகமாக நீ படிக்க வேணும்"

தாமரை இலைத் தண்ணியாக...

ஒட்டியும்... ஒட்டாமலும்...

பாசத்தைக் காட்டியும் ...காட்டாமலும்...

ஒரு துறவிபோல இருக்கின்றா அம்மா!

எப்போதும் அவா இவ்வாறுதான்!!

புளுகிப் புளுகிப் பிள்ளைகளை குட்டிச் சுவராக்க மாட்டேன் என்பது அம்மாவின் மௌனமொழி

இரவும் பகலும் ஒளித்துப் பிடித்து விளையாடும் விளை யாட்டில் நாட்கள் நகர்ந்தன.

பல்கலைக்கழக அனுமதி அழைப்பு வந்தது.

அனலை மண்ணில் "அ" எழுதத் தொடங்கிய வாழ்வு யாழ். மண்ணின் பல்கலைக்கழக வாசலில் நின்ற முதன்நாள் அப்பாவின் கனவுகள் நியமாகிய நாள் அது.

பல்கலைக்கழகம் எனக்கு கல்வியை மட்டும் வழங்கவில்லை. பல நண்பர்களையும் நண்பிகளையும வழங்கியது. மேலாக என் அப்பா அம்மாக்கு பெற்றெடுக்காத பல பிள்ளைகளைக் கொடுத்தது. கிழக்கு மாகாணப் பிள்ளைகள் பலருக்கு வட மாகாணத்தில் கலாவின் அப்பாவும் அம்மாவும் அவர்களின் அப்பா அம்மா ஆனார்கள்.

நாம் அதிகாலை 4.30 எழும்புவதும் அம்மா சமையல்

செய்வதும் அப்பா அம்மாக்கு சமையலுக்கு உதவி செய்வதும் அந்த நேரம் நாம் படிப்பதும் பின் எல்லோருக்கும் சாப்பாடு கட்டி... புறப்படுவதும்.. வழமையான நிகழ்வுகளாய் நடை பெற்றுக் கொண்டிருந்தன.

இப்பவும் அதே பொருளாதாரத் திட்டம்தான்.

அப்பாதான் அப்போதும் நிதியமைச்சர்.

அப்பாவின் சம்பளம் அம்மாவின் காணிகளின் குத்தகைக்காசு இரட்டை மாட்டு வண்டியாக வாழ்க்கையை அமைதியாக இழுத்துக் கொண்டுப் போய்க் கொண்டிருந்தது.

சனி ஞாயிறு நாட்களில் எங்கள் வீடு கலகலப்பாக இருக்கும் எங்கள் தோழர் தோழிகள் எங்கள் வீட்டுக்கு வருவதும் அம்மா அவர்களுக்கு சமைப்பதும் வீட்டில் சந்தோசம் பூத்துக் குலுங்கும் அது ஒரு கனாக்காலம் மீண்டும் அறுவடை செய்யமுடியாத காலமது படிக்க படிக்க கொஞ்சம் தலைக்கனம் வரும் அப்பா அம்மா சொல்வதை மறுதலிக்கத் தோன்றும் சைவசித்தாங்களும் கம்யூனிசசிந்தனைகளும் மோதிக் கொள்ளும் காந்தியும் சுபாஸ்சந்திரபோசும் நேர்பட மோதிக்கொள்வார்கள் எனக்கு நானே வில்லியாகவும் எனக்கு நானே தோழியாகவும் எனக்கு நானே ஆசிரியையாகவும் எனக்கு நானே மாணவியாகவும் எனக்கு நானே முடிசூட்டி அரசியாகவும் வலம் வந்து கொண்டிருந்தேன்.

ஆனால் நாட்டில் அமைதி என்பதை நாம் தொலைத்து விட்டிருந்த காலம் அது.

ஜீப்புகளில் ஆமி ...

முகமூடி போட்ட மனுசனைக் கொண்டு இராணுவம் நகர்வலம் வந்து கொண்டிருந்த நேரமது.

வீடு வீடாக ஏறி இறங்கினார்கள்.

இப்போது நினைத்தாலும் வயிற்றை வறுகிறது.

உடம்பு மத்தளம் அடிக்கும் யார் எவரை நோக்கி எப்போ

முகமூடி தலையாட்டுவான் எனத் தெரியாது ஆம் என்றால் நரகம்!

இல்லை என்றால் சொர்க்கம்!! எவர் எப்போது கடத்தப்படுவார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இருக்கவில்லை சரனின் நண்பன் ஒருவனை பூசா சிறைக்கு கொண்டு போனார்கள்

நாலாம் மாடியில் விசாரணை நடந்தது.

நாலாம் மாடி என்பது நரகத்தின் தலைநகரம் எனலாம்.

அவன் விடுதலையாக வேண்டும் என சரன் கந்தசஷ்டி கவசம் படித்துக் கொண்டிருந்தான்.

அவனும் விடுதலையானான். விடுதலை கிடைத்தபோது பட்ட அடிகள் அவனை இயக்கதவுகளை தட்ட வைத்தது ஆனால் சேர்ந்த மறுநாள் திரும்பி வந்து விட்டான்.

ஏன் என்று கேட்டோம்? சிங்கள ரத்தம் - தமிழ் ரத்தம் சிங்களச் சதை - தமிழ்ச் சதை என உயிர்கள் துடிப்பதை தன்னால் பார்க்க முடியவில்லை என்றான்.

சிறுவயது முதல் எமக்கு சொல்லப்பட்ட பாடங்களே எங்கள் வாழ்க்கையிலும் பல மாறுதல்களைத் தீர்மானிக்கிறது.

பூச்சிய மிதிச்சா பாவம்... மீனைக் கொண்டால் பாவம்... கோழியை வெட்டினால் பாவம்... என பாவ புண்ணிய கணக்கெடுப்புகள் காட்டி காட்டி வளர்த்ததால் இரத்தத்தை பார்க்கவோ... அதை நியாயப்படுத்தவோ எங்களால் முடியவில்லை. அதனாலோ என்னவே எங்கள் வீட்டில் போராளிகள் தோன்ற வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

விடுதலை வேட்கை என்பது நிறைவே இருந்தது. ஆனால் போராட்டம் தான் தீர்வு என்பதில் நம்பிக்கை இல்லாமல் இருந்தது.

“வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்... இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற வரிகளை வாய் முணுமுணுக்கும். கூட்டணியின் கூட்டங்களில் முன் வரிசையில்

அமர்ந்திருப்போம். ஆனாலும் ரத்த பயம் என்பது என்னை அரசியலிலும் இருந்தும் போராட்டத்தில் இருந்தும் பிரித்து வைத்தது.

மேலாக எங்கள் ஊரில் அந்தக் காலத்தில் பொலிஸோ கிடையாது. காரணம் வெட்டுக் குத்து என்பதனையே அறியாத ஊர் அது. அடிபாடு, சண்டை, இரத்தம்... எல்லாமே எங்கள் குடும்பத்திற்கும் எங்கள் ஊருக்கும் புரியாத புதிராய் இருந்தன.

காலைச் செய்தித்தாள்களும் வானொலிச் செய்திகளும் எங்களுக்குள் அதிர்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

இந்த நிலையில் தான் நித்தனை வெளியே அனுப்புவது என்பது முடிவு செய்யப்பட்டது. போராட்டத்திற்கு போக துணி வில்லை... ஆமியிடம் பிடிபட்டால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை... திரும்பி வந்தாலும் வாழ்வுக்கு உத்தவாதம் இல்லை என்ற நிலையிலேயே அந்த முடிவு எடுக்கப்பட்டது.

பிள்ளை உயிரோடை இருந்தால் போதும் என நித்தனை வெளியில் அனுப்பினாலும் அவனின் பிரிவு என்பது எங்கள் குடும்பத்தில் இருந்த அனைவரையும் ஆட்டி வைத்தது. உயிரைப் பிய்த்து எடுத்தது.

முதன் முதலாக எம் குருவிக்கூட்டில் இருந்து ஒரு குருவி தூரப்பறந்து சென்றது.

ஒரு கிழமையாக வீட்டில் யாரும் அதிகமாக ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளவில்லை.

எனக்கு காரணம் இல்லாது கண்களில் இருந்து கண்ணீர் ஓடிக்கொண்டேயிருந்தது.

யாரோ எமது கை காலைப் பிடிங்கி விட்டது போல இருந்தது.

குடும்பம் என்ற அந்தக் கூட்டின் ஒரு பக்கத்தில் ஓர் ஓட்டை வந்து விழுந்து விட்டது போன்றதொரு உணர்வு.எ

ஜேர்மன் போய்ச் சேர்ந்த நித்தன் இறைச்சிக் கடையொன்றில் வேலை உண்டு என்று கடிதம் எழுத, "உடனே திரும்பி வா"

என்று அப்பா உடனே கடிதம் போட்டார்.

அவன் வரவில்லை. வந்து ஆமிக்காரனின் கத்திக்கு இரையாகவா?

அளவுக்கு மிஞ்சிய பிள்ளைப் பாசம் அப்பாவை ஆட்டிப் படைக்க அவர் குழந்தைப் பிள்ளைத் தனமாக இப்படி நடந்து கொண்டது பல நிகழ்வுகள் எங்கள் குடும்பத்தில் அரங்கேறியுள்ளது.

பாசம் என்ற ஒன்று வந்து விட்டால் அப்பாக்கு எதுவும் கண்களுக்கு தெரியாது. அதிலும் பிள்ளைப் பாசம் என்றால் சொல்லவே வேண்டாம். தசரதன் மாதிரி நான் பிள்ளைப் பாசத்தில் செத்துப் போவன் என்று அப்பா அடிக்கடி சொல்வது இப்பவும் என் காதைக் குடைந்தபடியே இருக்கின்றது.

புளுகிப் புளுகிப் பிள்ளைகளை குட்டிச் சுவராக்கமாட்டேன் என்பது அம்மாவின் மௌனமொழி.

இரவும் பகலும் ஒளித்து விளையாடும் விளையாட்டில் நாட்கள் நகர்ந்தன.

நாட்கள் வாரங்களாய் வாரங்கள் மாதங்களாய் மாதங்கள் வருடங்களாக உருண்டு ஓடுகின்றன.

*000*

வீட்டின் கதவு மணிச் சத்தம் என்னை என் கடந்தகால நினைவு வண்டியில் இருந்து இறக்கி விடுகிறது. கதவைத் திறக்கின்றேன். முன் வீட்டு முஸ்லீம் அம்மா சிரித்த முகத்துடன் இனிப்புகளும் பலகாரங்களும் நிறைந்த தட்டை என்னிடம் நீட்டுகின்றா.

“உங்கள் மகன் படிப்பில் சித்தி எய்தியதிற்கு என் பாராட்டுகள்” எனக் கூறி அவற்றைப் பெற்றுக் கொள்கின்றேன்.

மணி பகல் 11 ஆச்சு. நடக்கப் போன ஜீவா திரும்பி வர முதல் சமைத்து முடிக்க வேண்டும்.

உலை வைக்க முதல் உழுந்து ஊறப் போட வேண்டும்.

பின்னேரத்தில் “கடிக்க ஏதாவது இருக்கா?” என ஜீவா சிறுபண்டம் தேடுவார்.

இன்று சனிக்கிழமை என்பதால் அவருக்கு ஏதாவது சிற்றுண்டி வேண்டும்.

வடை என்றவுடன் பாட்டி சுட்ட வடை... காக்கா தூக்கிச் சென்ற வடை... உழுத்துப் போன வடை... ஊசிவடை என விதம் விதமான வடைக்கதைகள் ஞாபகத்திற்கு வரும்.

என்னிடம் உள்ள வடைக்கதை மிகப் பெரியது.

“டக்”கென்று சொல்லி விட முடியாது.

அது அனலைதீவில் தொடங்கி டென்மார்க்கில் முடிந்த ஒரு கதை.

000

# ஆச்சி வடை சுவைத்த கதை

***1964***

*"லோஞ்சி வாற நேரமாச்சு. சமையல் முடிஞ்சிடுமா" அப்பா துரிதப்படுத்துகிறார்.*

*"ஓம்.. சோறு கறி பாயாசம் எல்லாம் முடிஞ்சுது. வடை மட்டும் சுடவில்லை. கடைசியாகச் சுட்டால் தான் மொறு மொறு என்று இருக்கும்" அம்மா சொல்லுகின்றா.*

*"வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை போட்டு மோரைத் தயார் பண்ணுங்க... வெயிலுக்கு நல்லது... பிள்ளைகளுக்கு நான் தேசிக்காய் தண்ணி கரைச்சு வைக்கின்றேன்" பூ அன்ரி தன் பங்கிற்கு தன் அவசரத்தை காட்டுகின்றா.*

*கா... கா... கா...*

*இடைவிடாது காகம் கத்துகிறது.*

*வீட்டை விருந்தாளிகள் வரப் போகின்றார்கள்.*

*அப்பா கோட்டைக்குப் போக சைக்கிளை எடுத்துக் கொள்ளுகின்றார்.*

*சைக்கிளின் முன்னால் நானும் தொற்றிக் கொள்கின்றேன்.*

*"உச்சி வெய்யில் பிள்ளைக்கு தலை சுட்டுப் போடும். குஞ்சுக்குத் தொப்பியைப் போட்டுக் கொண்டு போங்கோ" அம்மா சொல்ல பூ அன்ரி என் தொப்பியைக் கொண்டு வந்து எனக்கு அணிவிக்கின்றா.*

சைக்கிள் துறைமுகம் நோக்கிப் போகிறது.

தோட்டக் காணிகள்... பனங்கூடல்கள்... கிழுவை வேலிகள்.... அத்தனையும் தாண்டி சோளகக்காற்றின் தழுவலுடன் துறைமுகத்துக்கு வந்து சேர்கின்றோம்.

லோஞ்சியைக் காணவில்லை.

"லோஞ்சி எப்போது வரும் அப்பா?"

"அங்கை பார். ஆமை மாதிரி ஊர்ந்து ஊர்ந்து வருகுது"

"அப்பா லோஞ்சி வர முதல் மண்வீடு கட்டி விளையாடு வோமா? சிப்பியும், சோகியும் பொறுக்க வேண்டும்"

"ஊம்... இந்தா வா... இதிலை அதிகம் சோகி இருக்குது"

"யாரப்பா இண்டைக்கு வருகினம்"

"விசுவலிங்கமாமா, பேபிமாமி, விஜயா அக்கா, சந்திராண்ணை, ஜீவா எல்லோரும் வருகினம்"

"ஏன் வருகினம்?"

"நம்மளப் பார்க்கத்தான். கலாக்குஞ்சைப் பார்க்கத்தான். கலாக்குஞ்சைத் தூக்கி விளையாடி கணநாளாய்ப் போச்சுதாம். அதுக்குத்தான் வருகினமாம்"

"அப்பா... இப்ப லோஞ்சு ஆமை போலை இல்லையே... பெரிய கப்பல் போல இருக்கு..."

"ஓம்... ஏனென்டால் அது கிட்டவாக வந்திட்டுது... வா... கரையை அணைக்கிற இடத்துக்கு போவம்"

முதலே சொல்லி வைத்த பொன்னம்பல அண்ணையின் இரட்டை மாட்டு வண்டியும் வந்து கொண்டிருக்கிறது.

"தள்ளி நில்லுங்கோ... லோஞ்சி கரைகட்டுது" லோஞ்சிக்கார அண்ணை சொல்லுகின்றார்.

கரைகட்டிய லோஞ்சியில் இருந்து எல்லோரும் இறங்கி வருகிறார்கள்.

லோஞ்சியின் மேல்தட்டில் விஜயா அக்காவும் சந்திராண்ணை யும் ஜீவாவும் நிற்கின்றார்கள்.

“என்ன எங்கட குஞ்சு ரொம்ப மெலிஞ்சு போச்சு?” என்றபடி மாமி என்னைத் தூக்குகின்றா.

“என்ர வளர்ப்பியை என்னிடம் தாங்கோ” என மாமியிடம் இருந்து சந்திரா அண்ணை என்னை வாங்குகின்றார்.

““எல்லோரும் வண்டில்லை வாங்கோ. நான் பின்னாலை சைக்கிளில் வருகிறேன்”

அப்பா பின் தொடர எல்லோரினதும் வண்டிப் பயணம் தொடர்கிறது.

வண்டியில் நான் விஜயா அக்காவின் மடியில் உட்கார்ந்து இருக்கின்றேன்.

இடைக்கிடை அப்பா பின்னால் வருகிறாரா என்று பார்த்துக் கொள்கின்றேன்.

““ஏய்...ஓய்...” என மாட்டை விரட்டியபடி வண்டிலை ஓட்டிச் சென்று கொண்டிருக்கின்றார் வண்டிக்கார மாமா.

““மாடு பாவம் மாமா”

“அடிக்காட்டி மாடு ஓடாது குஞ்சு”

எனக்கு மாட்டைப் பார்க்க பாவமாய் இருக்கு.

எப்போ வீட்டை போய்ச் சேருவோம் என்றிருக்கிறது. மாட்டுக்கு நிம்மதி கிடைக்குமல்லவா?

ஜீவா தனக்கு மன்னார் கொன்வென்றில் கிடைத்த அன்னை மரியாவின் படத்தை எனக்கு எடுத்துக் காட்டுகின்றார்.

எனக்கு தரச் சொல்லிக் கேட்கின்றேன்.

“மாட்டேன்” என மறுக்கிறார்.

எனக்கு கோபமாய் வருகிறது.

மாட்டுக்கார மாமாவுடனும் ஜீவாவுடனும் கண்ணைக் கட்டிக் கோபம் போடவேண்டும் போலிருந்தது.

ஆனால் வீடு வந்து விட்டது.

அப்பாடா... இனி மாட்டுக்கு அடிவிழாது.

வீட்டில் இருந்து எல்லோரும் வெளியில் வந்து வந்தவர்களை வரவேற்கிறார்கள்.

“வந்த களை மாற எல்லோரும் முகம் கழுவிக் கொண்டு வாங்கோ. சாப்பிடுவோம்” அம்மா அழைத்துக் கொண்டு போகின்றா.

எல்லோரும் சப்பாணி கட்டி வாழையிலைக்கு முன்னிருந்து சாப்பிடுகிறார்கள்.

எனக்கும் ஜீவாக்கும் கூட சின்ன இரண்டு தலைவாழை யிலைகள்.

சாப்பாடு முடிய கிண்ணங்களில் பாயாசம்.

அம்மா ஆட்டுக் கல்லில் இருந்து இறக்கிய உழுத்தம்மாக் கையுடன் வருகின்றார்.

“பொறுங்கோ வடை சுடப்போறன். சுடச்சுட சாப்பிட்டால் தான் மொறுமொறுப்பாய் இருக்கும்... ஆச்சி இந்தாங்கோ உப்புப் பார்த்துச் சொல்லுங்கோ”

“ஓமடி பிள்ளை எல்லாம் சரியாக இருக்கு”

“ஏன் நீங்க யாரும் உப்பு பார்க்க மாட்டியளா? ஆச்சிதானா பார்க்கிறது?” மாமி அம்மாவிடம் கேட்கின்றா.

“எல்லோரும் பார்க்கலாம் தான். ஆனால் வீட்டுக்கு மூத்தவா அவாதான். அதுதான் அவாக்கு நாம் கொடுக்கும் மரியாதை. நாங்கள் வளர்ந்தாலும் எங்கள் வீட்டுக்கு அவாதான் மகாராணி”

“எனக்கு அதிசயமாய் இருக்கு.... வேறை இடங்களிலை கிழடுகள் ஏன் முன்னாலை வருகுது என்று சொல்லுவினம். ஆனால் நீங்கள் இங்கு?” மாமி ஆச்சரியப்பட்டா.

அம்மா மௌனமாகச் சிரித்துக் கொண்டா.

“கலா அந்தச் சைக்கிள் எங்கே? நான் ஓடலாமா?” ஜீவா கேட்கின்றார்.

ஜீவா என்னிடம் சைக்கிளை வாங்கி வளவெல்லாம் ஓடுகின்றார்.

மன்னாரில் பக்கத்து வீட்டில் இருந்த பொழுது இந்தச் சைக்கிள் வேண்டும் என்று ஜீவா சண்டை பிடித்து... அடம்பிடித்து... பின் சமாதானமாகி... நாங்கள் பிறண்ட்ஸ் ஆகி .... பின் எங்கள் குடும்பங்களும்... பிறண்ட்ஸ் ஆகி...

அப்போது நான் அதிகம் கதைப்பேனாம்.

மாமி இறால் நோண்டிக் கொண்டு நின்றால் “இறால் சாப்பிடக் கூடாது . இறால சாப்பிடுறது பாவம். இறாலைப் பூனைக்குப் போடுங்கோ” என்று பிடிவாதம் பிடிப்பேனாம்.

மாமியும் “பூனைக்கு ஒரு இறால்... மாமிக்கு ஒரு இறால்” என என்னை ஏமாற்றி ஏமாற்றி இறாலை நோண்டி முடிப்பாவாம்.

ஜீவா தடியெடுக்கும் பொழுதெல்லாம் “கோல் எடுத்த பிள்ளை குருட்டுப் பிள்ளை” என்று சொல்வேனாம்.

மாமிதான் பின்நாளில் இதையெல்லாம் எனக்கு சொல்லி மகிழ்ந்திருக்கின்றா. நான் வளர்ந்திட்டன் என்ற நினைப்பில். அப்போதும் நான் சின்னப் பிள்ளைதான்.

“என்ன பிள்ளை கலாவைத் தூக்கியபடியே திரிகிறியள்” ஆச்சி கேட்கிறா.

“இது என்ரை இரண்டாவது பொம்பிளைப் பிள்ளை ஆச்சி” மாமி சொல்லுகின்றா.

“நாளைக்கு நயினாதீவுக்குப் போட்டுப் போங்கோ... கட்டாயம் ஒரு பொம்பிளைப் பிள்ளை பிறக்கும்”

அடுத்தநாள் எல்லோரும் நயினாதீவுக்குப் போனோம்.

கோயில் முடிய அவரவர்கள் அவரவர்கள் வீட்டிற்குப் போயிட்டோம்.

அதுக்குப் பிறகு அடுத்த மாதமே மாமியின் வயிற்றில் திலகம் கருவாகி... சிசுவாகி... வந்தாள். எல்லோரும் ஆச்சியின் பொன்வாய் எனப் புகழ்ந்தார்கள். அந்த நயினை அம்மன் தான் வயிற்றில் வந்திருக்கு என்று மாமி எல்லோருக்கும் சொல்லி மகிழ்ந்தா.

பிறகு என்ன?

அடுத்து வந்த சித்திரைப் புதுவருசத்தில் திலகம் பிறந்து வளர்ந்து...நாங்களும் ஊரோடு... கொழும்போடு... யாழ்ப் பாணத் தோடு... இடம் மாறி இடம் மாறி சென்று கொண்டிருந்தோம்.

கால ஓட்டத்தில் தொடர்புகள் கொஞ்சம் தவறி விட்டது

பின்பு சந்திராண்ணா ஊர்காவல்துறை வங்கியில் வேலைக்கு வந்த பொழுது மீண்டும் எல்லோரும் சந்தித்துக் கொண்டோம்.

அன்றே அவர் எங்களை சங்கானை வீட்டிற்கு கூட்டி வந்து விட்டார்.

பின்பென்ன உறவுகள் தொடர்ந்தன.

கிழமைக்கு கிழமைகள் அனைவரும் சந்திப்பதும்... சந்திரா அண்ணா “இவள் என் வளர்ப்பி” என்று என்று எல்லோருக்கும் அறிமுகப்படுத்திக் கொண்டும்... மீண்டும் காலம் தன் கால்களில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு ஓடிய படியும்....

சின்னச் சைக்கிளுக்கு சண்டை போட்டுக் கொண்ட ஜீவா இப்போ பெரிய சைக்கிளில் திரிந்து கொண்டிருந்தார்.

பிறகென்ன?

மண்ணில் வீடு கட்டி விளையாட விரும்பிய பிள்ளைகள் இரண்டும் உண்மையில் வீடு கட்டி விளையாட விரும்ப... நட்பு காதலாகி... ஜீவா வெளிநாடு போக... என்னை வெளிநாடு போக விட மனமில்லாது...அப்பா கல்யாணத்திற்கு மறுப்புச் சொல்ல பின்பு மகேசண்ணாவும் சந்திராண்ணாவும் எங்கள்

திருமணத்தை பொன்னாலைக் கிருஸ்ணன் கோயிலில் மிகச் சிறப்பாக நடாத்தி வைத்தார்கள்.

மறுவீடு போக அப்பா அம்மா சமாதானமாகி... பிறகு நானும் வெளிநாடு வந்து... இப்ப நினைத்தாலும் எல்லாமே கனவு போல இருக்குது.

நாங்கள் வெளிநாடு வந்தபின்பு சந்திரா அண்ணாவும் தேவராணி அக்காவும் தான் அம்மா அப்பாக்கு ஜீவாவும் கலாவும்.

எங்களுடன் பரிமாற வேண்டிய பாசத்தையும் அன்பையும் அவர்களுடன் பரிமாறிக் கொண்டார்கள்.

நாட்டில் யாழ். இடம்பெயர்வுகள் நடந்து கொண்டிருந்த பொழுது அனைவரும் ஆளுக்கு ஆள் உதவியாக இருந்தார்கள்.

அவ்வாறே ஜீவாவின் மச்சாள் சுமதியை அம்மா "கலா கலா" என்று கூப்பிட்டு சாப்பாடு தீத்துவாவாம். அப்படியே ஜெயன் திலகத்திற்கும்.

ஜீவாவின் உறவுகள் அனைத்தையும் தன் உறவாகக் கொண்டாடுகின்றார் என்ற செய்தி வரும் பொழுதெல்லாம் என் கண்கள் தானாக கலங்கும்.

88ல் மிதிலா மீரா இரட்டைப் பிள்ளைகளாக வந்தாலும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா இல்லாத பிள்ளைகளாகவே முதல் ஐந்து வருடமும் வளர்ந்தார்கள்.

பின் ஐந்தாவது பிறந்தநாளுக்கு அம்மம்மாவைத் தவிர அனைவரும் வந்தார்கள்.

தடுத்துப் பார்த்தும் அப்பா திரும்பி விட்டார்.

ஆனால் மாமா மாமி இறுதிவரை எங்களுடனேயே இருக்க ஒத்துக் கொண்டார்கள்.

மாமா மாமி பக்கத்தில் இருந்தது தான் மிதிலா மீராக்கும் எனக்கும் மிகப்பெரிய பலம்.

மாமா இறப்பதற்கு ஒரு கிழமைக்கு முதல் கலா, “உங்கட அப்பா அம்மாவோடை கதைக்க வேணும் போல இருக்கு” என்று சொல்ல தொலைபேசி எடுத்துக் கொடுத்தேன். மகிழ்ச்சியுடன் கதைத்து விட்டு அடுத்த கிழமையே எனது கையைப் பிடித்த படியும் ஜீவாவின் மடியிலும் அவர் நிம்மிதியாக கண்களை மூடினார்.

2010ல் எனக்கு 50 வயதான பொழுது அதனை பெரிதாக கொண்டாட விருப்பமில்லை.

பதிலாக ஹரே ராமா ஹரே கிருஸ்ணா அடியவர்களை வீட்டிற்கு அழைத்து பூஜையும் பஜனையும் செய்ய விரும்பினேன்.

வேலையால் வந்து அவசர அவசரமான வடை சுட வேண்டி இருந்தது.

வடை சுட முதல் மாமியிடம் உப்புப் பார்க்க கொடுத்தேன்.

ஆச்சியின் வடைகதை நினைப்பு இருப்பதால் எப்பவும் மாமியிடம் வடைக்கு உப்பு பார்க்க குடுப்பது என் வழக்கம்.

மாமி அம்மா ஆச்சியிடம் உப்பு பார்க்க கொடுத்ததை நினைத்து அன்று முழுக்க மகிழ்வாக அதைப்பற்றி சொல்லிக் கொண்டு இருந்தா. அன்று வந்த எல்லோருக்கும் என் சின்ன வயதுக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தா.

அடுத்தடுத்த கிழமைகளின் மாமாபோலவே அப்பா அம்மாவுடன் கதைக்க ஆசைப்பட்டா.

தொலைபேசி எடுத்துக் கொடுத்தேன்.

அந்தக் கிழமை முழுக்க தன் சொந்த பந்தங்களுடன் பேசிக் கொண்டேயிருந்தார்.

அவரின் உடம்பில் சீனிச்சத்து திடீரெனக் கூடுவதும் குறைவதுமாய் இருந்தது.

உடலின் உள் உறுப்புகள் ஒன்றுடன் ஒன்று ஒத்துழைக்க மறுத்துக் கொண்டிருந்தது.

ஆனாலும் நினைவிலும் அறிவிலும் எந்தக் குறைவும் இல்லை.

பேசிக் கொண்டே இருந்தார்.

நாங்கள் ஒரு விழாவுக்கு புறப்படத் தயாராகிக் கொண்டிருந் தோம்.

கை அசைத்து விடை பெறமுதல் அவர் எங்களிடம் விடை பெற்றுக் கொண்டார்.

ஒரு சகாப்தம் முடிந்த நாள் அது.

வீடும் மனமும் வெறிச்சோடிப் போனது.

டென்மார்க்கில் பத்தொன்பது வருட பந்தம் ஒரு வினாடியில்.

எல்லாமுமாய் இருந்து பின் எதுவும் இல்லாமல் போய்விட்ட உணர்வு.

இறுதிச் சடங்கிற்கும் நானே அவாக்கு சேலை உடுத்து விட்டேன்.

உப்பு பார்த்த நினைவுகள் வந்து கண்ணீர் வழியாக வாயில் உப்புக் கரித்தது.

அவருடன் வாழ்ந்த வாழ்வும் உறவும் கடவுள் எனக்கு கொடுத்த வரம்.

அவ்வாறே என் பிள்ளைகளும் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று தினம் தினம் கடவுளை வேண்டுவேன்.

000

# டென்மார்க்கில் அகதி வாழ்வும் கறுத்தப் பையும்

*இன்று ஞாயிற்றுக் கிழமை.*

*வீடு வாசல் கூட்டிப் பெருக்கி தூசி தட்ட வேண்டும்.*

*கனநாட்களாக புத்தக அறையை ஒதுக்கவில்லை.*

*தேவையற்றவற்றை எறிவதற்காக பெரியதொரு கறுப்புப் பையை அறைக்குள் எடுத்து வருகின்றேன்.*

*அந்தக் கறுத்தப் பை எங்கள் வாழ்வுடன் இணைந்த ஒன்று.*

*"என்ன பிள்ளை என்னை மறந்திட்டியோ" திரும்பிப் பார்க்கின்றேன் கறுத்தப்பை தான்.*

*"எப்படியம்மா உன்னை நான் மறப்பேன்..."*

*ஒரு கைப்பையுடன் வந்த எங்களுக்கு அகதி முகாம்களில் வாழ்ந்த காலம் முழுக்க எங்களுடன் பயணப்பட்டதுடன் எங்கள் இன்ப துன்ப நிகழ்வுகளையும் இணைத்துக் காவிச் சென்றது நீங்கள் தானே!....எம் கறுத்தப் பைகளே"*

*இடப்பெயர்பு... பின்பு புலம் பெயர்வு... இலங்கையர் என்ற சட்டையை கழற்றி விட்டு அகதி என்ற சட்டையை அணிந்து கொண்டு முகம் இழந்தவர்களாக... முகவரி இழந்தவர்களாக...*

***1986!***

*டென்மார்க்கில் அகதி அந்தஸ்துக்காக செஞ்சுலுவை முகாம்களில் காத்திருந்த பொழுது...*

முகாமுக்கு முகாம் இடம் பெயர்ந்த பொழுது எம்முடன் பயணப்பட்டவை அந்தக் கறுத்தப் பைகளே!

அவைகளுடன் கொண்ட நட்பை எப்படி மறக்க முடியும்.... ஒன்று இரண்டாகி... இரண்டு மூன்றாகி... இடம்பெயர்கள் தொடர தொடர அவையும் குட்டி போடத் தொடங்கி யிருந்தன.

அதனுள் கட்டி எடுத்துச் சென்றவை பொருட்கள் மட்டுமில்லை!

எங்கள் சந்தோசங்களையும் துக்கங்களையும் தான்!!

இடம் பெயர்வு... இடம் பெயர்வு...

புலம் பெயர்வு... புலம் பெயர்வு...

அகதி.. அகதி...

நாடிழந்து... ஊர் இழந்து... சொந்த பந்தம் இழந்து...

அப்பா அம்மா சகோதரங்கள் என்ற தொப்புள் கொடிகளை இழந்து..

கடன் பட்டு... காசு புரட்டி.... ஏஜன்ரின் எடுபிடிக்கு அடிபட்டு...

"அகதி" என்றும் "எதிலி" என்றும் முன்னாலும் பின்னாலும் பெயர்களைச் சூட்டிக் கொண்டு

அறியாத நாட்டில் தஞ்சம் கேட்டு...

உணர்வுகளையும் மான ரோசங்கயையும் இந்தக் கறுத்தப் பைகளினுள் கட்டிக் கொண்டு திரிந்த நாட்களின் நிகழ்வுகள் சுற்றி சுற்றி என்னை வலம் வருகின்றன.

நெஞ்சு "பக்"கு "பக்"கென்று அடிக்க

பிறேம் அண்ணா - அனற்

ராஜன் அண்ணா - சந்திரன்

ஜீவா - நான்

இன்னும் தமிழ் என முகத்தில் எழுதியிருந்த ஏழெட்டுப் பேர் இந்தியாவில் இருந்து விமானம் ஏறி...

விமானம் இறங்க முதலே பாஸ்போட்டைக் கிழித்து...

சொந்த முகத்தை கழற்றி எறிந்து விட்டு அகதி முகத்தைப் போட்டுக் கொண்டு வாழத் தொடங்கிய காலம் அது!

கை அடையாளம் கறுத்த மையினால்...

முக அடையாளம் வர்ணப் புகைப்படத்தினால்...

பெயர் அடையாளம் பத்து எண்களினால்...

நீல நிற அட்டையில் பதிந்து பொலிசார் எம்மை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தார்கள் - பட்டியில் கட்டி விட்ட மாடுகளுக்கு குறி வைத்து வெளியில் விடுவது போல.

காத்திருப்பு...

காத்திருப்பு...

செஞ்சிலுவைச் சங்கத்தில் அகதி அந்தஸ்து கிடைக்கும் வரையில் காத்திருப்பு...

வயிறார மூன்று வேளையும் உண்டாலும் காலாற மாலை வேளைகளில் நடந்து திரிந்தாலும் பொழுது போக்கிற்கு கைப்பந்தும் கால் பந்தும் விளையாடினாலும் மனம் இருந்து அடித்துக் கொண்டேயிருக்கும் - அகதி அந்தஸ்துக் கிடைக்குமா என!

காலைத் தபால்காரனின் வரவை கண்கள் பார்த்திருக்கும் கறுத்தப் பலகையில் எங்கள் பெயர் எண்களை கண்கள் தேடிக்கொண்டு இருக்கும் அகதி அந்தஸ்து முடிவை எதிர் நோக்கிக் கொண்டு இருக்கும் பொழுது அடுத்த முகாமுக்கு போங்கள் என அறிவிப்பு வரும் எங்கள் சாமான் சக்கட்டுகள் கறுத்தப் பைகளில் அடங்கும் முதன்நாள் பார்த்து ரசித்த செவ்வந்திப் பூக்களை நாளை பார்க்க முடியாது என மனம்

ஏங்கும் நேற்று கைகாட்டிப் புன்னகை புரிந்த வயோதிபத் தம்பதிகளை இனிமேல் சந்திக்க முடியாது என மனம் வேதனைப்படும் - பயணம் மட்டும் தொடரும் கறுத்தப் பைகளுடன்.

என்னதான் வாழ்வு முகாரி இராகத்தை இசைத்துக் கொண்டிருந்தாலும்...இடைக்கிடை கல்யாணி இராகத்தைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களும் நிகழ்வதும் உண்டு! கோகிலா அக்காவிற்கு தலைப்பிள்ளை ஆண்பிள்ளை பிறந்தது... சின்னத்துரையண்ணையின் மூத்த மகள் வயதுக்கு வந்தது... வசந்தனும் வசந்தியும் காதலித்து திருமணம் செய்தது...

இப்படி இப்படி சின்ன சின்ன நிகழ்வுகள் அன்றைய தினங்களில் மனத்திற்கு மகிழ்ச்சியை தந்து விட்டுப் போகும்.

அதனையும் தாண்டி வயிறு குலுங்க வைக்கும் நிகழ்வுகளும் நிகழ்வதுண்டு.

வயதான ஒரு ஆச்சியும் எங்களுடன் வசித்திருந்தா! டென்மார்க்கின் இலவசங்கள் எல்லாம் அவருக்கு வாழ்வில் இருந்த கனவுகள். எல்லாவற்றையும் தனக்கு தனக்கே என எடுத்து எடுத்து கறுத்தப் பைகளில் கட்டிக் கொள்வாள். இடமாறும் நாட்களில் அவரின் பொருட்களே பஸ்சின் அளவை அதிகளவில் நிரப்பி இருக்கும். இதனால் குழந்தை குட்டி உள்ள குடும்பங்களுக்கு இந்த ஆச்சி மீது கொஞ்சம் வெறுப்பு கொஞ்சம் கோபம்.

ஒரு நாள் பஸ் வந்த சமயம் எல்லோரும் பொதிகளை ஏற்றிக் கொண்டு நின்றோம்

ஆச்சியும் தனது கறுத்தப் பைகளை ஏற்றிக் கொண்டார். சாப்பிட்ட எச்சங்களைப் போடும் குப்பைகள் நிறைந்த பையொன்றை இளைஞர்கள் வேண்டுமென்றே ஆச்சியின் கண்களுக்கு கிட்டவாக வைத்து விட்டு “இது யாரின் பை” என பெரிதாக குரல் கொடுத்தார்கள். “அது என்னது தான்” என ஆச்சி தன்னுடன் ஏற்றிக் கொண்டார்.

மிகுதி வெண்திரையில் என்பது போல கறுத்தப் பையை பிரிக்கும் பொழுது என்ன நடந்திருக்கும் என்று நினைத்து நாம் வயிறு நோக சிரித்துக் கொண்டோம்.

"அறுவாங்கள்... எனக்கு உவங்கடை அம்மா வயது. என்ன செய்திருக்கிறான்கள்?... சிங்களவனிட்டை சிங்களம் படிச்சிருந் தால் ஏன் இந்தப் பிரச்சனை? இங்கை வந்து டெனிஷ்படிச்சு டெனிஷ் வாழ்க்கை வாழ வந்ததாலைதானே இவ்வளவு பிரச் சனை. அங்கை இருந்து மூட்டை தூக்கி வாழ்ந்திருக்கலாம்?" என புலம்பிக் கொண்டிருந்தார்.

ஆனால் அந்தப் புலம்பலில் இருந்த உண்மையை இந்த முப்பது வருட வாழ்க்கைக்குப் பின்னால் உணரக் கூடியதாய் உள்ளது.

எம் அடையாளங்கள் கரையும் பொழுது அவை பல தளும்புகளை தந்து விட்டே போகும்.

இந்த வேதனைகளுக்கூடாக பாலைவன ஊற்றுப் போல அமைந்தது இலங்கையில் இருந்து வரும் அப்பா அம்மாவின் கடிதங்கள்தான்.

2 மாதம், 3 மாதம் என பயணப்பட்டு ஆமிக்காம்புகள்...

யாழ்ப்பாண தபால் கந்தோர்....

கொழும்பு தபால் கந்தோர் என காத்திருந்து காத்திருந்து கடைசியில் நொந்து நூலாகி கசங்கி வந்து சேரும்.

சிலவேளைகளில் மரணச் செய்திகள் எம்மை வந்தடையும் பொழுது அங்கு அந்தியேட்டி முடிந்திருக்கும். ஆனாலும் எங்கள் கண்ணீர் துடைக்கும் கைக்குட்டைகள் அந்தக் கடிதங்களே...

பாலைவனத்துப் பசும் சோலைகள் போல! இந்த 30 வருடமும் வந்த அத்தனை கடிதங்களையும் பிளாஸ்றிக் பெட்டியொன்றில் சேர்த்தே வைத்திருக்கின்றேன்.

கடிதம் சேகரித்து வைக்கும் பழக்கம் என்பது எங்கள் குடும்பத்தில் வழிவழி வந்ததொரு பழக்கம் எம் குடும்ப

கலாச்சாரத்துடன் இணைந்த தொன்று. அப்பா அம்மா தங்கள் கல்யாணத்திற்கு முன்னான பின்னான எல்லாக் கடிதங்களையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள்.

அப்பப்பாவின் கடிதங்கள் அப்பா அம்மாக்கு எழுதிய கடிதங்கள் பின் அம்மம்மா எழுதிய கடிதம் பெரிய ஐயா அப்பாக்கு எழுதியவை என 150 வருடங்களுக்கு முன்னான கடிதங்கள் இப்போதும் என் கைவசம் இருக்கின்றது.

குடும்பத்தில் நடந்த அத்தனை நிகழ்வுகளும் படம் போல் அவற்றில் பதிவாகி இருக்கின்றன ஒவ்வொரு கடிதமும் ஓராயிரம் செய்திகளை சொல்லவல்லன. கண்ணீரை உளியாக்கி காகிதத்தை கல்லாக்கி பதியப்பட்ட கல்வெட்டுகள் அவை!

தோண்ட தோண்ட வற்றாத ஊற்றாய் பாச அருவிகள் பெருக்கெடுத்தோடும். அப்பா அம்மாவை விட்டு புறப்பட்டது தொடக்கம் ஒரு வித உறைநிலையிலேயே நானிருந்தேன்

என்ன செய்கின்றேன்?

எங்கோ போகின்றேன்??

என்ன நடக்குது???

அப்பா அம்மா தம்பி என்னை நினைத்து தவித்துக் கொண்டு இருப்பார்களா என நான் தவித்துக் கொண்டிருக்க அதே தவிப்புடன் அவர்கள் என்னை நினைத்து தவித்துக் கொண்டிருக்க எல்லாமே ஒரு உறை நிலை மயக்கம் தான்.

இந்த உறைநிலை மயக்கம் என்னைத் தினம் தினம் சாகடித்துக் கொண்டிருந்தது.

எண்ணங்கள் அருச்சுனன் அம்பாக இதயத்தைக் குத்தின. கண்களில் கார்மேகம் கூடி அடைமழை கொட்டியது உடம்பு நடுக்கம் கண்டது உடம்பிலை இரும்புச் சத்து குறைவு அதுதான் நடுக்கம் என “அயன்” குளிகை தந்தார்கள் அப்போதும் நடுக்கம் தீரவில்லை கண்களும் ஓயவில்லை

ஒன்றா... இரண்டா...

எத்தனை நிகழ்வுகள்... எத்தனை பிரிவுகள்...

சொந்த தேசத்தில் உயிரைத் தாரை வார்த்து விட்டு புலம் பெயர்தேசத்துக்கு உடலை மட்டும் எடுத்து வந்து தஞ்சம் கேட்டு வாழும் நிலை யாருக்கும் வரக்கூடாது.இந்தியன் ஆமி வந்ததால் இந்தியாவுக்கு போன சித்தப்பா குடும்பம் கடலுடனேயே போனது. தம்பி மாமா குடும்பமும் கடல் வழியே தப்பி இந்தியா போய் அங்கிருந்து கனடாவில் தஞ்சம் அடைந்தது. சோதிமாமாவும் கனடா போய் பின் பிள்ளைகளும் அங்கேபோய் தஞ்சம் உதயனும் ராசாத்தியும் சுவிஸில் தஞ்சம் கேட்டது சின்னமாமா பிரான்சில் தஞ்சம் போக சூரியும் இயக்கத்திற்கு போகபின் மாமி பிள்ளைகளும் மாமாவுடன் இணைந்து விட்டார்கள் பெரிய ஐயா குடும்பம் தஞ்சம் என்ற பெயரில் இல்லாவிட்டாலும் குடிபெயர்வு என்ற பெயரில் கனடாவிலும் இங்கிலாந்திலும். ஆம்! சின்னத் தீவின் ஆலமரத்தின் விழுதுகள் ஐந்து கண்டங்களிலும் வேருன்றி கிளைகள் விடத் தொடங்கி விட்டன.

ஆனாலும் புதியன புகுதலும் பழையன கழிதலும் தவிர்க்க முடியாதனவையாக அமைந்தன மிதிலா மீரா பிறந்தது...

பெரிய கிளியக்காவை நோய் காவு கொண்டது...

கனடாவில் தம்பிமாமாவை வயோதிகம் அணைத்து ஆண்டவனிடம் கொண்டு சென்றது...

சிவராத்திரியில் பெரிஐயா சிவலோகம் சென்றது...

இயற்கையின் சுழற்சியில் நடக்க வேண்டியவை நடந்து கொண்டே இருந்தன.

000

# ஊரில் நிலைமைகள் மோசமாகிக் கொண்டிருந்தன.

*யாழ் கொழும்பு ஏ9 பாதை தடைப்பட்டது பொருட்களுக்கு பெரிய தட்டுப்பாடு மண்ணெண்ணை கூட வேண்ட முடியாத நிலை ஊரில் பஞ்சம் தலை விரித்தாடியது தினம் தினம் ஊரடங்குச் சட்டங்கள் தினம் தினம் அவலச் சாவுகள் காலையில் வீட்டை விட்டுப் போவார்கள் மாலையில் வீடு திரும்புவதற்கான எந்த உத்தரவாதமும் இருக்கவில்லை சரன் உயர்தரம் சித்தியடைந்து மருத்துவபீடத்துக்கு போக ஆரம்பிக்க யாழ்ப்பாண இடம் பெயர்வும் வந்தது! கலைந்த கூட்டின் தேனீக்களாக யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் ஆனையிறவைத் தாண்டி இடம் பெயந்த அவலம். மக்கள் சாரைசாரையாக வீதிகளில். வீதிகள் வீடாயின. சரனும் அம்மாவும் மக்கள் வெள்ளத்துடன் வெள்ளமாக... நடந்து நடந்து வவுனியாக்கு வந்து சேர்ந்தார்கள். வழியில் குடிக்கத் தண்ணியில்லாது மழை பெய்த பொழுது குடையில் ஒழுகும் குடைத் தண்ணியைக் குடித்தது என்றும் சாப்பாடு இல்லாது தேங்காய் வழுக்கைகளையும் மாங்காய்களையும் வழிவழியாகத் தின்றது என கதைகதையாக கண்ணீருடன் சொன்னார்கள். இங்கு மேசை நிறைய உணவைப் படைத்து விட்டு விருந்தினர்களுடன் உட்கார்ந்திருக்கும் பொழுது மனம் வலிக்கும். அப்பாவும் ஊரும் ஒரு வீட்டுக் கைதிகள் போல...*

*ஆம்! இந்தியன் ஆமிக்கும் இலங்கை ஆமிக்கும் இயக்கத்திற்கும் இடையில் ஊர் மாட்டுப்பட்டு நின்றது அப்பா யாழ்ப்பாணம் வர முடியாது போய் விட்டது.*

எனவே ஒவ்வொருவரும் ஒவ்வோர் கூட்டினுள் தான். ஊர் சாப்பாடு கிடையாது சருகாகிப் போனது ஆமியும் நேவியும் ஊருக்குப் போகும் பேதெல்லாம் மொழிபெயர்ப்புக்கு அப்பாவை அழைப்பார்கள் அந்த அழைப்பை அப்பா கட்டாயம் ஏற்கத்தான் வேண்டும் ஏற்கா விட்டால் அப்பாக்கு மரணம் ஏற்று நடந்தால் இயக்கத்திடம் இருந்து மரண மிரட்டல் ஏறச் சொன்னால் எருதுக்கும் இறங்கச் சொன்னால் முடவனுக்கும் கோபம் என்ற நிலை.

நேவியுடன் காரைநகர் போய் அங்கு ஊர் மக்களுக்கு தேவை யான உணவுப் பொருட்டகளை அப்பா எடுத்து வரவேண்டியிருந்தது. உயிரைக் கையில் பிடித்துக் கொணடு அப்பா இந்தப் பணியைச் செய்து கொண்டிருந்தார் - இது இல்லையேல் ஊர் பட்டினிச் சாவை எதிர் கொண்டிருக்கும்.

தினம் தினம் நான் இங்கு துடித்தேன் அறிந்திருந்த பல செய்திகள் அந்தப் பயத்தை எனக்குள் ஏற்படுத்தியிருந்தன.

இரவு முழுக்க கரிய இருள் படர்ந்திருந்தாலும் காலைச்சூரியன் நல்ல செய்தியுடன் வருவது போல சரன் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய செய்தி வந்து சேர்ந்தது.

சரன் மருத்துவ பீடத்துக்கு தெரிவாகியிருந்த காலத்திலும்...

சாப்பாடுத் தட்டுப்பாடு!

மின்சாரத் தட்டுப்பாடு!!

மண்ணெண்ணைத் தட்டுப்பாடு!!!

அவன் வீதி விளக்கின் வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்த காலம்.

வீட்டை எப்போது வருவான் என அம்மா துடித்தபடி இருப்பாவாம் சரனின் நண்பன் ஒருவனை ஆமி வீதியில் சுட்டுப் போட்டுப் போயிருந்தது.

திருப்பிக் கேள்வி கேட்க முடியாத நிலையில் துப்பாக்கிகளே கேள்விகள் கேட்க குண்டுகள் பதில் சொல்லிக் கொண்டிருந்த

காலம் அது.

தாய்நாட்டு நிலவரங்கள் தெரியாமலும்...

வந்த நாட்டு மொழியும் நன்கு புரியாமலும்...

தினம் தினம் கடிதங்களையும் தொலைபேசி அழைப்புகளையும் எதிர்பார்த்து எதிர்பார்த்துக் கொண்டிருந்த காலம் அது இந்நிலையில் தான் பெரியம்மாவின் டென்மார்க் விஜயம் எனக்கு பாலைவனச் சோலையானது.

சொந்த பந்தமின்றி... ஒரு பிறதேசத்தில் வாழ்ந்து பார்த்தால் தான் தெரியும்,சொந்த பந்தங்களின் அருமை என்னவென்று! அதே போல் அவையின்றி வாழ்வது எவ்வளவு வலியும் வேதனையும் என்னவென்று!!

பெரியம்மாவின் வருகை எனக்குள் இழந்து போன அத்தனை சக்தியையும் ஒன்று சேரத் திரட்டி எனக்குள் கொண்டு வந்தது ஆன்மீகத்தினதும் அதன் பலத்தினதும் பிறப்பிடம் பெரியம்மா. என்னிடம் முதலில் வந்த சொந்தம் பெரியம்மா. அவா நின்று விட்டுப் போன அந்தக் கிழமை முழுக்க அம்மாவின் மடியில் படுத்திருந்த சுகம் நிறைவு - தினம் தினம் எனக்கு தீபாவளி தான்.

அவா மீண்டும் கனடா போய் “கலா நல்லாய் இருக்கின்றாள்” என அப்பாக்கு கடிதம் போடுகின்றா அப்பாவின் மனது இறக்கை கட்டிப் பறக்கிறது தன்ரை பிள்ளை நல்லா இருக்கிறது என அறிவதைவிட பெற்றவர்களுக்கு வேறு என்ன வேண்டும்? அதுவும் பெரியம்மாவின் வாயில் இருந்து வருவது அப்பாக்கு தெய்வவாக்குப் போல.

000

பெரியம்மா இங்கு வந்து போன பின்புதான் அப்பா அம்மாக்கும் இங்கு வந்து மிதிலா மீராவைப் பார்க்கும் ஆசை வந்தது.

பாஸ்போட் எடுக்கப் போன போது காரில் அடிபட்டு அம்மா உயிருக்குப் போராடி ஐ.சி.யில் இருக்க வேண்டிய விதியை

என்னவென்று சொல்வது. எனது அகதிப் பாஸ்போட்டில் இலங்கைக்கு போக முடியாத நிலை. மீண்டும்... வலி... வேதனை... அம்மா மீண்டு வந்தது மனத்தின் வலியைக் குறைத்தாலும் டென்மார்க் பயணம் தடைப்பட்ட ஒன்றாய்ப் போய்விட்டது.

தீவுப்பகுதி நேவியின் கட்டுப்பாட்டிலும்... யாழ்ப்பாணப்பகுதி இயக்கத்தின் கட்டுப்பாட்டிலும் இருந்தது. போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்தது. ஊர்மக்களுக்கு நேவி நயினைதீவில் இருந்து சாப்பாடு சாமான்கள் விநியோகித்தது. கிராமசபை சார்பாக அப்பாவே அவங்களிடம் போய் வேண்டி வருவார். எனக்கது ரொம்பப் பயம். இயக்கத்தின் கண்களில் அப்பா தியாகியா? துரோகியா?? ஆம் என்றால் மரணம். இல்லை என்றால் ஊர் பட்டினிச் சாவு.

தினம் தினம் ஆண்டவனிடம் என் பிரார்த்தனை அப்பாவிற்காகவே இருந்தது.

தீவுப்பகுதி மேலும் மேலும் நேவியின் கட்டுப்பாட்டிற்குள் வந்து கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் இயக்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்து கொண்டிருந்தது.

இதனால் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தது.

சாப்பாடுகளை எடுத்து வரும் பொழுது ஊர் வாழ்த்தும். இயக்கம் எச்சரிக்கும்.

துவக்குகளும் துவக்குகளும் முத்தமிடத் துடித்துக் கொண்டிருந்த குருசேத்திரத்தின் நடுவில் அப்பா.

கொஞ்சநாள் இதிலிருந்து விடுவிக்க மிதிலா மீராவின் 5வது பிறந்தநாளைச் சாட்டி கெஞ்சி மன்றாடி ஒருவழியாக டென்மார்க் வரவைத்தேன்.

தொலைந்த என் சொர்க்கம் திரும்பி வந்தது போலிருந்து.

000

# அப்பாவும் டென்மார்க்கும்... கனடாவும்...

அப்பா வந்த பொழுது இங்கு மாமா மாமியும் இருந்தார்கள்.

மிதிலா மீராவுடன் விளையாடுவதிலும் அவர்களின் மழலையைக் கேட்பதிலும் அவர்களிடம் அவர்டெனிஷ்மொழி கற்றலைப் பார்ப்பதிலும் மனம் மிகச் சந்தோசப்படும்.

மீண்டும் என் "அரங்கத்து அம்மா"வான அப்பா சீலை கட்டாதா தாயுமானவராக வீட்டு வேலைகள் செய்யத் தொடங்கினார்.

பாத்திரம் கழுவுவது, வீடு கூட்டுவது, எல்லோரின் உடுப்புகளையும் மெசினில் தோய்க்கப் போட்டு அயன் பண்ணி வைப்பது என்று எல்லாவற்றையும் தன் தலையில் போட்டுக் கொண்டு செய்து கொண்டிருப்பார். சொன்னாலும் கேட்க மாட்டார். அவரது அயன் பெட்டியுள் அடங்காத உடுப்புகள் என்று எதுவுமேயில்லை. அலுமாரியில் இருந்த என் பட்டுச் சேலைகள், ஜீவாவின் பட்டு வேட்டிகள், மிதிலா மீராவின் அனைத்து உடுப்புகளையும் அயன் பண்ணி அடுக்கி வைத்திருப்பார். அத்தனை நேர்த்தியாக வைத்திருப்பார். வேண்டாம் என்றால் உன் வீட்டை சாப்பிட்டு விட்டு சும்மா தூங்கிக் கொண்டு இருக்க முடியாது. முன்பு உனது பள்ளிக்கூட உடுப்புகள் அயன் பண்ணினேன். இப்ப உன்ரை பிள்ளைகளின் உடுப்புகள் என்பார்.

மிதிலா மீராவை பள்ளிக் கூடத்தால் கூட்டி வருவது... அவர்களுக்கு தேநீர் ஊற்றிக் கொடுப்பது... அவர்களுக்கு படம் கீறிக் காட்டுவது...கோதுமை மாவில் பசை கிண்டி படங்கள் ஒட்டக் காட்டிக் கொடுப்பது...யோகாசனம் செய்து காட்டு

வது... என எங்களுடன் இருந்தாலும் அம்மா...சரன்...நித்து தன்னுடன் இல்லையே என அவர்களின் பெயர்களை அலற்றியபடியே இருப்பார்.

அவர்களை விட தான் பாதியில் விட்டு விட்டு வந்த புளியந்தீவு கோயில் திருப்பணி வேலைகள் பற்றிய நினைப்பு அவரை வாட்டி எடுத்துக் கொண்டிருந்தது.

முத்திரைக்கு காசு வேண்டுவதைக் கூட என்னைக் கஸ்டப் படுத்தப்படுத்துவது போல இருக்கிறது என அம்மாக்கு கடிதம் எழுதுவார்.

பக்கத்தே இருக்கும் பிள்ளைகளை விட எட்ட இருக்கும் பிள்ளை களுக்காக மனம் துடிப்பது ஏனோ எல்லாப் பெற்றார்களுக்கும் பொருந்தும்.

மீண்டும் எங்கள் தசரதருக்கு புத்திர சோகம் தொற்றி விட்டது. சரன் ஒழுங்காக பல்கலைக்கழகம் போறானோ.... ஒழுங்காக சாப்பாடுகிறானோ... அவனுக்கு என் பென்சனை மூன்றுமாதம் எடுத்துக் கொடுக்கவில்லை... என்னை நிம்மதியாக ஊருக்குப் போகவிடு என என்னைப் பிராண்டியபடியே இருந்தார்.

அப்பாவை இங்கேயே தங்க வைத்தால் பின்னால் அம்மாவை யும் சரனையும் இங்கு கூப்பிடலாம் என எத்தனையோ தடவை ஜீவா சொல்லிப் பார்த்தார். வாதாடிப் பார்த்தார். அம்மாவை யும் சரனையும் இங்கு கொண்டு வந்தாலும் எப்படி புளியந் தீவானைக் கொண்டு வருவது?

கடைசியில் புளியந்தீவான் தான் வென்றார்.

புளியந்தீவானின் கும்பாபிசேகம் முடிய... சரனும் படித்து முடிக்க... நானும் அம்மாவும் உன்னிடம் வருகின்றோம் என எனக்கு ஆறுதல் சொன்னார்.

நான் என்ன சொல்ல முடியும்?

மீண்டும் பிரிவுத் துயரம்.

உயிர் போச்சு... உயிர் போச்சு என்று சொல்வார்களே... அதை

நேரடியாக அனுபவிப்பது இந்தப் புலம் பெயர் வாழ்வில்தான். அப்பாவை மீண்டும் விமானம் ஏற்றி அனுப்பும் போது நானும் அப்பாவும் பட்டபாடும் துயரும் சொல்லிமாளாது. அதற்கான வார்த்தைகளை சரஸ்வதி எனக்குத் தரவில்லை. எந்த மொழியாலும் விபரிக்க முடியாத துயரம் அது.

இத்தனையிலும் மகிழ்வான தருணம் என்றால் மிதிலா மீராவின் ஐந்தாவது பிறந்தநாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடியது தான். நித்தன் கூட கனடாவில் இருந்து வந்திருந்தான். மாமா மாமி அப்பா நித்தன் பக்கத்தில் நின்று கொண்டாடிய பொழுது மிதிலா மீரா கொடுத்து வைத்தவர்கள் என்று மனத்துள் நினைத்துக் கொண்டேன். எத்தனை பிள்ளைகளுக்கு இப்படி வெளிநாட்டில் பேரன் பேத்தியுடன் கொண்டாடும் கொடுப்பனைவு இருந்தது. அவர்கள் வயதுக்கு வரும் பொழுது அவர்களின் சாமத்திய வீட்டை அம்மாவையும் வைத்துச் செய்வது என மனதில் உறுதி எடுத்துக் கொண்டேன்.

மீண்டும் அம்மாவும் சரனும் அப்பாவுடன் ஒன்றாக இருக்க முடிந்ததே என அவரின் பிரிவை என் கவலைகளை மாற்றச் சாதகமாக மாற்றிக் கொண்டேன். கண்ணீரைத் துடைக்கும் கைக்குட்டையாக அவர்கள் மூவரின் சந்தோசங்களை மாற்றிக் கொண்டேன்.

அப்பா ஊர் போன பின்பு நித்தன் அவரையும் அம்மாவையும் சரனையும் கனடாக்கு அழைக்க முயற்சித்துக் கொண்டு இருந்தான்.

ஊர் நிலைமை இன்னும் மோசமாகிக் கொண்டிருந்தது.

பல்கலைக்கழகம் மூடப்பட்டது காலவரையறையின்றி.

சரனின் வாழ்வு மீண்டும் கேள்விக்குறியானது.

“இந்தியா வந்து படி” என ஜீவாவும் நானும் எவ்வளவோ தடவை கேட்டுப் பார்த்தோம்.

அவன் அப்பா பிள்ளை.

“யாரையும் கஷ்டப்படுத்தப்படுத்த மாட்டேன்” என மறுத்து விட்டான்.

எமக்கான சுயசிந்தனையும்... சுய மரியாதையையும்... மேலாக யாரையும் கஷ்டப்படுத்தக் கூடாது என்ற மனப்பான்மையை யும் சோற்றில் உப்புடன் அதிகமாகப் போட்டு எங்கள் குடும்பத்தில் வளர்த்து விட்டார்கள்.

நித்தன் அப்பா அம்மாவை கனடா கூப்பிடும் முயற்சி கை கூடியது.

கட்ட வேண்டிய காசு எல்லாம் கட்டியாயிற்று.

அப்பா அம்மாக்கு கனடா விசாவை அனுமதிக்கும் சம்பிருதாய நேர்முகக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டனர்.

அனைத்தும் ஓ.கே. என்ற நிலை.

அவர்களுக்கான விமான ரிக்கற்றும் வாங்கப்பட்டிருந்தது.

அப்பா அம்மாவை சரனே எம்பசிக்கு கூட்டிச் சென்றான்.

அங்கு வைத்து வெள்ளைக்காரருக்கு அப்பா தன் புத்திர பாசத்தைக் காட்டத் தொடங்கிவிட்டார்.

“எவ்வாறு இளைய மகனை விட்டு விட்டு தாய் தந்தையர் வேறு நாடுகளுக்கு போகமுடியும். முடிந்தால் மூவருக்கும் விசா தாருங்கள். அல்லது அத்தனையும் இரத்துப் பண்ணுங்கள்”

கனடிய எம்பசி வாசலில் மனுநீதிச் சோழனின் மாடு போல மணியடிச்சிருக்கிறார்.

விளைவு?

விசா அனுமதி ரத்துச் செய்யப்பட்டது.

கனடா நிஜம் என்பது கனவாகிப் போச்சுது.

எல்லாம் முடிஞ்சு போச்சுது.

“அப்பாக்கு இங்கிலிஸ் பேச முடிந்ததால் வந்த வினை. பெத்த

பிள்ளையாகப் போய் விட்டேன். அல்லது எனக்கு வந்த கோபத்துக்கு என்ன செய்திருப்பேனோ. மௌனமாக வந்து விட்டேன்" என சரன் மகன் நொந்து கொண்டான்.

எனக்கு என்னவோ அப்பா அம்மா என்றுமே தம் கடமையைச் சரிவரச் செய்திருந்தார்கள் என்றுதான் மனத்தில் பட்டது.

"நீ அப்பாவின் பிள்ளை அப்படித்தான் நியாஜப்படுத்துவாய்" என்று ஜீவா சொன்னார்.

பிள்ளைப் பாசம், சரனைக் கரை சேர்க்க வேணும் என்ற கடமை உணர்வு, அவனைப் பிரிய முடியாத மனசு, பத்து மாதம் அம்மா சுமந்து பெற்றாலும் காலம் பூராக நெஞ்சில் சுமந்து சுமந்து வளர்த்தது அப்பா தான்.

எப்படி அவர் முடிவை தப்பு என்று சொல்லலாம்?

காசைப் பற்றியும்... சொகுசு வாழ்வைப் பற்றியும் கனவு இல்லாத ஒரு வெள்ளாந்தி மனிதனின் முடிவை எவ்வாறு தப்பு என்று சொல்வது??

அவரின் முடிவிலும் விசாவைத் தூக்கி எறிந்ததிலும் எனக்கு எந்த வித வியப்பும் இல்லை.

நித்தனின் பணமும் மனமும் கருகியதுதான் மிச்சம்.

மீண்டும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல, " சரி... அம்மா சரனோட இருக்கட்டும்.... நீங்க நித்தனிடம் போங்கோ... பின்னால் நடக்கிறதைப் பார்ப்போம்" என நான் மாறி அம்மா மாறி காதில் ஊதிக் கொண்டு இருந்ததால் கல் கொஞ்சம்கொஞ்சம் கரையத் தொடங்கியது.

நித்தனும் தொடர்ந்து டெலிபோன் அடித்துக் கொண்டிருக்க அப்பா ஒருவாறு சம்மதித்து கனடா போய் இறங்கினார்.

நித்தனும் அப்பாவும் கனடாவில்! அம்மாவும் சரனும் யாழ்ப்பாணத்தில்! நான் டென்மார்க்கில்!!! யுத்தம் வந்து எங்களை உலகின் முக்கோணத்தில் மூன்று மூலைகளிலும் நிறுத்தி வைத்தது.

யுத்தத்தின் நினைவுகள் மேல் எழுந்து வரும் போதெல்லாம் மனம் ஏழாத்துப்பிரிவின் அலையாக எழுந்து தாளும்.

இந்தத் துக்கங்களைத் தாங்கி வந்த கடிதங்கள் எல்லாவற்றையும் சேர்த்து வைத்ததே இந்த கறுப்புப்பைகளிள் தான்.

“குப்பையைப் போடு பிள்ளை... தூசுகளைத் தட்டி அது களையும் இதனுள் போடு” என கறுத்தப் பை என்னை நச்சரித்துக் கொண்டிருக்கிறது.

மணி 11 ஆகி விட்டது.

ஜீவா கடைக்கு சாமான்கள் வாங்கப் போய் விட்டார்.

டெலிபோன் மணி கிணுகிணுக்கின்றது.

மறுமுனையில் மிதிலா.

“அம்மா... யுவன் உங்களோடை கதைக்கப் போறாராம்”

என் பேரனின் மழலை கேட்காது எனது அன்றைய பொழுது விடிவதில்லை. விடிந்தும் விடியாமலும் இருக்கும் நாட்களில் அவனது குரல் எப்பவும் பூபாளமாக இருக்கும்.

தாத்தா... அம்மம்மா... புத்துப்புத்தா... தத்துப்புத்தா... அப்பா... அம்மா... என்ட அம்மா... என தன் மழலை மொழியில் மாயங்கள் செய்வான்.

எப்போதும் என் பேரனின் லீலைகளை நான் அனுபவிக்கும் பொழுது இவ்வாறு மிதிலா மீராவின் மழலைகளை அப்பா அம்மா அனுபவிக்கவில்லையே என மனம் வேதனைப்படும்.

அவர்களின் சந்தோசங்களை கண்ணி வெடிகளும் கந்தகப் புகையும் கண்டங்களும் பிரித்து விட்டதே என மனம் உறுத்தும்.

இப்போது உள்ளது போல அப்போது கைத் தொலைபேசி கள்... கணனிவசதிகள்... ஸ்கைப்... வைப்பர் வசதிகள் இல்லையே என மனம் வேதனைப்படும். இருந்திருந்தால்

அவர்களுக்கு இரட்டை யுவனின் மகிழ்ச்சி கிடைத்திருக்கும். ராதை, கிருஸ்ணன், பாரதியார்போல யுவனுக்கு வேடங்கள் போட்டு நாம் இங்கு மகிழ்ந்ததை அவர்களும் பார்த்திருப்பார் கள்.

கனவுகளிலும் எண்ணங்களிலும் என் பிள்ளைப் பெத்து பார்த்து... சாணைத்துணி கழுவி... சரக்கரைத்து தந்து.... எண்ணை வைத்து... பட்டைத் தண்ணி வார்த்து... பேத்திகளை தடுக்குப் பாயில் கிடத்தி.... கை கால் - மூக்கு பிடித்து... அவர் களின் மழலையை ரசித்து சிரித்து... எதுவுமே அவர்களுக்கு குடுத்து வைக்கவில்லை.

அந்தக் கனவுகளை மீண்டும் மிதக்கவிட்டு எல்லாம் உனக்கே அர்ப்பணம் கோவிந்தா என அவன் நாமம்பாடியபடி அம்மா அலைந்திருக்கின்றா.

எங்கேயோ ஒரு வீட்டில் இரட்டைப் பிள்ளைகள் இருக்கிறார் கள் என்று கேள்விப்பட்டு... இப்படித்தான் என் இரட்டைப் பேரப்பிள்ளைகளும் இருப்பார்கள் என்ற நினைப்பில் அங்கு போய் அவர்களுடன் நின்று படம் எடுத்து அனுப்பியிருந்தா. வயிற்றை வறுகியது.

இப்படித்தான் என் பேத்திகளும் கதைப்பார்கள்... விளையாடு வார்கள்.... என்ற கற்பனையில் எத்தனை நாட்கள் அம்மா இருந்திருப்பா?

அந்தக் கனவு எப்பவாவது நனவாகும் என்ற நினைப்பில் தானே கண்களில் கொட்டிய கண்ணீரை மற்றவர்களுக்கு மறைத்து மறைத்து வாழ்ந்திருப்பா.

டென்மார்க் வந்து மொழிபடித்து... தொழில் கல்வி பயின்று... பத்து வருடத்தின் பின்பே தலை நிமிரக் கூடியதாய் இருந்தது.

டென்மார்க்கில் அகதிகளுக்கு கொடுக்கப்படும் கடவுச்சீட்டு ஆரம்பத்தில் எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இலங்கைக்கு மட்டும் போக முடியாது. யாழ்ப்பாணத்தில் இருந்தவர் களுக்கோ கொழும்புக்கு வர முடியாத நிலை. பின் எங்கே எந்தப்

பிற நாட்டில் சந்திப்பது?

பத்து வருடம் காத்திருந்த தவம் பெற்றவளைப் பார்க்க வழிவிட்டது.

வெளிக்காற்றைச் சுவாசிக்க வழி விட்டது.

ஆம்!

இந்திய - இலங்கை அரசியல் காரணமாக அகதிப் பாஸ் போட்டிற்கு இந்தியா விசா மறுத்திருந்த காலம் அது.

சிங்கப்பூரில் வைத்து பிள்ளைகளை அம்மாக்கும் சரனுக்கும் காட்டலாம் என மனம் சொன்னது.

முயற்சி திருவினையாக்கியது.

அம்மா, சரன், விஜயக்கா மூவரும் சிங்கப்பூர் வந்தனர்.

பேர்லின் சுவர் தகர்ந்த மாதிரி ஒரு சந்தோசம்.

10 வருடங்களின் பின் பெத்த பிள்ளையையும் அது பெற்ற பிள்ளைகளையும் தான் பெறாத பிள்ளையான ஜீவாவையும் சந்தித்து அம்மா மகிழ்ந்திருந்த நாட்கள் அந்த இரண்டு கிழமையும்.

பேரப்பிள்ளைகளைப் பார்த்து அம்மா குளிர்ந்து போனா.

விமான நிலையத்தில் இருந்து விடுதிக்கு வரும்வரை அவரின் கண்களால் அடைமழை கொட்டிக் கொண்டேயிருந்தது.

சிங்கப்பூரின் எந்த மூலை முடுக்குகளையும் விடாமல் ஜீவா அனைவருக்கும் காட்டினார்.

சிங்கப்பூர் வந்தும் தீட்சை வைப்பதிலும் எமது விடுதிக்கு முன்னேயிருந்த காளி கோயிலுக்குப் போவதிலும் அம்மாவின் காலை விடியும்.

அந்த ஆன்ம பலம் தான் அம்மாவை இத்தனை ஆண்டுகளாய் ஆலமரமாய் அனைத்தையும் தாங்கி வாழ வைத்திருந்தது.

அதன் விழுதுகள் எனக்குள்ளேயும் இருக்கு என்று ஜீவா அடிக்கடி சொல்வார்.

அந்தப் பலம் தான் தனியே நான் மிதிலா மீராவை வளர்த்ததும்.

இரண்டு கிழமை முடிய மீண்டும் துக்கம்... பிரிவு... தழும்புகள்.

கிடைத்த மகிழ்ச்சியையும் சந்தோசங்களையும் கொண்டு தழும்புகளுக்கு களிம்பு தடவிக் கொண்டோம்.

ஆண்டுக்கொருமுறை கச்சதீவில் சந்தித்து திரும்பும் தமிழக - மலையக மக்கள் போலவே நாமும் சிங்கப்பூரில் சந்தித்து பிரிந்து கொண்டோம்.

கனடாவில் நின்றிருந்த அப்பா மீண்டும் ஒரு வயதுக் குழந்தையாக பிடிவாதம் பிடித்து அம்மா சரனிடம் திரும்பி வந்து விட்டார்.

பென்சன்... பென்சன்... பென்சன்...

புளியந்தீவான்... புளியந்தீவான்... புளியந்தீவான்...

அம்மாசரன்.... அம்மா-சரன்.... அம்மா-சரன்...

இந்த மூன்று மூல மந்திரங்களைத் திரும்பத் திரும்ப நித்தனிடமும் மற்றைய கனடா உறவினர்களிடம் சொல்லி சொல்லி வாதாடி மீண்டும் இலங்கைக்கு வந்து சேர்ந்தார்.

சரனின் படிப்பு முடிய அம்மாவும் சரனும் கனடா போகலாம் என்றிருந்த நினைப்புக்கு அப்பாவே முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

முதலில் அம்மா இல்லாது அப்பா தனியே போனதை நியாயப்படுத்திய என்னால் இப்போ திரும்பி வந்ததை என்னால் நியாயப்படுத்த முடியவில்லை.

சரனுக்கு மீண்டும் பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது. காலச்சக்கரம் ஓரளவு சுமுகமாக சுற்றத் தொடங்கியது.

புளியந்தீவான் கும்பாபிசேகமும் நினைத்த மாதிரி செவ்வனே

நடந்து முடிந்தது.

தான் நினைத்தபடியே புளியந்தீவு கும்பாபிசேக வேலைகளை செய்து முடித்ததாக அப்பாக்கு ஒரு பெருமை... மகிழ்ச்சி... நிறைவு.

எம் குலதெய்வத்தின் கோயிலை நிமிர்த்தியதில் அப்பா என்ற ஆன்மாக்கு பெரிய பங்கை அந்த தில்லைக்கூத்தன் கொடுத்திருந் தான்.

அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி... அவன் பணி செய்து... 75 வயதிலும் 25 வயது பொடியன் போல அப்பா ஓடி ஆடி உற்சாகமாக இயங்கிய நாட்கள் அவை.

விடிய 4 மணிக்கு எழும்பி குளித்து அப்பாவும் அம்மாவும் திருவெம்பா பூசைக்கு புளியந்தீவுக்குப் போய்... திருப்பள்ளி எழுச்சி பாடி... திருவிழாக்கள் செய்து... புட்டுக்கு மண் சுமந்து... திருவாதிரை நடனம் கண்டு... ஊரோடும் உறவோடும் மண்ணோடும் மனத்தோடும் தம் பென்சன் காசுடனே மனம் நிறைந்த வாழ்வு வாழ்ந்தார்கள்.

எம்மைப் பிரிந்திருக்கும் கவலைகளை மட்டும் கண்ணீர் கலந்த கலவையாக காகிதத்தில் சிவத்தக் கோடு போட்டு அனுப்புவார் அப்பா.

நாட்கள் நகர்ந்தன. தபால் பெட்டிகளும்... தபால்காரர்களும் எம் உயிர்பிடிக்க பாலம் கட்டியபடியே இருந்தனர். சூரிய சந்திரர்கள் உறுண்டனர்.

பகல் இரவைத் துரத்துவதும்... இரவை பகல் துரத்துவதாயும் பூமி தன்னனைத் தானும் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றிக் கொண்டும் இருந்தது.

நாட்கள் மாதங்களாகியிருந்தன.

மாதங்கள் வருடங்களாகியிருந்தன.

சரன் படிப்பு முடிய நிருத்தாசரன் டாக்டர் நிருத்தாசரன் ஆனான்.

அப்பா வாழ்வின் இன்ப உச்சிக்குப் போன நாள் அது. டாக்டர் நிருத்தாசரன்... டாக்டர் நிருத்தாசரன் என காகிதங்களில் மீண்டும் மீண்டும் எழுதி அழகு பார்த்தார்.

அம்மா வழமைபோல எந்தச் சலனமும் இல்லாது அமைதி யாகவே இருந்தா. தானுண்டு தன் விரதமுண்டு என தன் மனதில் சுமைகளையும் மகிழ்ச்சிகளையும் கோயில் கர்ப்பக்கிரகங்களில் இறக்கி வைத்துக் கொண்டும் கோயில் வீதிகளை வலம் வந்து கொண்டும் இருந்தா.

சுகம், துக்கம், பிரிவு, வேதனை, போர், சமாதானம், மீண்டும் போர்... மீண்டும் சமாதானம்... துப்பாக்கி சூடுகள்... அவசர கால சட்டங்கள்... ஆமி நடமாட்டங்கள்... அரசியல் சதுரங் களில் பல காய்கள் ஒரேவேளையில் நகலுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

இலங்கைக்கு மேலாக இந்திய மேகங்களும் சீன மேகங்களும் ஐரோப்பிய அமெரிக்க மேகங்களும் நகரத் தொடங்கியன.

இது ஆரோக்கியமான நிலை இல்லை என கருடன்கள் ஆருடம் சொன்னன.

கடைக்குப் போன ஜீவா வரமுதல் சமைச்சு முடிச்சு விட வேணும். அப்பிடியே சாப்பிட்டு ஒரு குட்டித் தூக்கம் போட வேணும் என மனசு சொல்லுது.

“எல்லாக் கஞ்சல்களையும் நினைவுகளையும் எனக்குள் போட்டு கொண்டு போய் கொட்டடி பிள்ளை” என மீண்டும் மீண்டும் கறுத்தப் பை சொல்லிக் கொண்டு இருந்தது.

எதைக் கொட்டுவது? எதைக் கொட்டாது வைத்திருப்பது? இப்ப கொண்டுபோய் வெளியில் கொட்டினால் வீடு சுத்த மாகும் - ஆனால் மனது சுத்தமாகுமா? எந்தக் குப்பையை கொட்டுவது? எந்தத் துக்கத்தை மறப்பது? எந்த இழப்பை ஈடுகட்டுவது?

கொஞ்ச நேரத்தில் இந்தக் குப்பைகள் குப்பைக் கிடங்குக்குள்

போய் விடும். சில குப்பைகளை உக்க வைத்துப் பசளையாக்கு வார்கள். சில குப்பைகளை எரித்து மீண்டும் வீடுகளுக்கு வெப்பமாக்குவார்கள். எல்லாமே இயற்கையின் சுழற்சியில் மீண்டும் மீண்டும் எங்கள் பிறப்புகளும் இறப்புகளும் போல...

எங்கள் வாழ்வும்.. எங்கள் வளங்களும்...

எங்கள் நினைவுகளும்...

அழிந்து அழிந்து போகின்றதா?

நாமும் எம் சந்ததியும் கூட நிறமற்றவர்களாக...

சாயம் போன சட்டையாக...

புலம் பெயர்ந்த நாட்டில் முகமற்ற மனிதர்களாக...

காலில் சக்கரத்தை கட்டிக் கொண்டு கை மணிக்கூட்டைப் பார்த்து பார்த்து ஓடி ஓடி என்ன சுகத்தைக் கண்டு கொண்டிருக்கின்றோம்?

விடை தெரியாத கேள்விகள் தான் இவை? விடை தெரியாததால் கேள்விகள் எழுப்பப்படாமல் இருக்க முடியாதல்லவா? எனக்கு பதில் தெரியாத கேள்விகளுக்கு நாளை என் பேரன் யுவன் பதில் காணக்கூடும். யாரறிவார்!

நேற்றைய நினைப்பு... நாளை பற்றிய கனவு... எதுவும் இன்றி இன்றைய பொழுதை மட்டும் நினைத்து... நல்லாச் சாப்பிட்டு... நல்லாய் ஒரு பகல் தூக்கம் போட்டு எழ வேண்டும் என மனம் சொல்லுகிறது.

இனி எந்த யோசனையும் வேண்டாம்! கறுத்தப் பை போய் குப்பைக் கிடங்கினுள் விழுகின்றது.

000

# திருவெம்பாவும் பன்னீர்க் குளமும்

என்னாலை இந்தக் குளத்துக்கை முன்போல் விட்டு வீதியாக படுக்க முடியவில்லை. வளர்ந்து கொண்டு இருக்கின்றேன் போலும். புரண்டு புரண்டு படுக்கின்றேன்... விரல் சூப்பிப் பார்க்கின்றேன்.... சிவப்புக் கொடியைப் பிடித்து ஆடிப்பார்க்கின்றேன்.... நித்திரை வரப் பஞ்சிப் படுகின்றது.

வெளியே சத்தம் கேட்கிறது. நாய்கள் ஊளையிடுகின்றன.

"ஐயா.. எழும்புங்கோ...விடிவெள்ளி காரிச்சுட்டுது... எழும்புங்கோ.... திருவெம்பா பூஜைக்கு நேரமாகுது... அம்மம்மா அவசரப்படுத்துகின்றா"

"கிளி! கிடாரத்திலை சுடுதண்ணி கொதிக்குது. ஐயாக்கு கலந்து குடு. குளிச்சிட்டு வரட்டும்"

"அக்காவ எழுப்பவா அம்மா"

"இல்லை... பெரியவள் படுக்கட்டும்... அவள் கோயிலுக்கு வரவேண்டாம். எட்டுமாதம் ஆகுதல்லோ... கவனமாயிருக்க வேணும்"

கொஞ்ச நேரம் வீடு அமைதியாக இருக்கிறது.

தூரத்தில் ஏதோ ஒரு கோயில் மணி இந்த அதிகாலையில் அடிக்கும் சத்தம் கேட்கிறது.

"போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே", ஆச்சி திருப்பள்ளி எழுச்சி படிகின்றா.

"தூக்கிய பாதத்துக்கு ஒரு வேண்டுதல் வைச்சிருக்கிறன். அடுத்த வருசம் நிறைவேற்ற வேணுமப்பா"- அம்மம்மா சொல்கிறா.

"என்னண்டு சொல்லன்"இது ஐயா.

"பிள்ளைக்கு சுகப்பிரசவம் ஆகவேணும் எண்டு நினைச்சு நாகவாகனம்செய்து தாறதாக வேண்டுதல் வைச்சிருக்கிறன்"

"அதுக்கென்ன செய்தாப் போச்சு. அடுத்த வருடம் திருவாதிரை நாளுக்கு நாகவாகனத்தில் அவன் கூத்தாடட்டும்.... சரி நேரமாகுது. இண்டைக்குப் புட்டுத் திருவிழா. செம்மனச் செல்விக்கு நடிக்க உன்னைத் தேடப் போகினம்... கெதியாய் வா"

எனக்கு ஒரே விடுப்பாய் இருக்கு. என்டை அம்மான்டை வயித்தைக் கிழிச்சுக் கொண்டு நானும் புளியந்தீவுக்குப் போகப்படதோ?

ஏன் என் குளம் ஆடுது.

அம்மா திரும்பிப் படுக்கிறா போலும்.

நான் நல்லாய் வளர்ந்திட்டதாலை இந்தக் குளம் இனி எனக்கு போதாது. நீந்தி விளையாட இடம் போதாமல் இருக்குது. கை காலால் உதைத்து நீந்த இயலாமல் இருக்குது. எந்தப் பக்கம் திரும்பி நீந்தினாலும் குளத்தின் சுவரோடு போய் மோதுறன். அம்மா வயிறு நோகுது... வயிறு நோகுது எனக் குறைப்படுறா. ஆச்சி அம்மாவின் வயிற்றைத் தடவும் போது அது என் தலையிலும் படுகிறதை உணர்கிறன். ஆனாலும் அம்மாவின் வயிற்றை அடிக்கடி உதைக்கிறன். நான் என்ன செய்யுறது? எப்ப வெளிய போகலாம் எண்டது தான் இப்ப என் ஒரே யோசனை.

ஆச்சியின் பாட்டுச் சத்தமும் மணிச்சத்தமும் கேக்குது.

சாம்பிராணி புகை வாசம் மூக்கை முட்டுது.... படுக்கவா... எழும்பவா?... பாடவா?... ஆடவா?

கிளியக்கா சுடுகோப்பி கொண்டு வாறா... கோப்பி மணம் கமகமக்குது... உற்சாகமாக இருக்குது.

ஒழுங்கையில் சேமக்கலம்... சங்கு... சல்லரி...மணி.... திருவெம்பாவைப் பாட்டு... பிள்ளைகளின் குரல் ரீங்காரமாக் கேட்குது.

ஒத்த குரலில் ஒலிக்கும் "ஓரம்பாவாய்" என்னும் ஒலியும்.... தொடரும் சங்கொலியும் நல்லாய்த் தான் இருக்குது.

இவர்களுடன் எப்போ நானும் போய்ச் சேர்ந்து பஜனை பாடிக்கொண்டு போவது?

ஐயாவும் அம்மம்மாவும் கூட்டத்துடன் சேர்ந்து போகின்றார்கள்.

நானும் வாறன்... நானும் வாறன்.. என்று சொல்லிக் கொண்டு பின்னால் ஓடுகிறன்.

அவை போய்க் கொண்டே இருக்கினம்.

நான் பின்னால் ஓடி ஓடி ஒரு கல்லில் தட்டுப்பட்டு விழுந்து விட்டேன்.

தலையில் அடிபட்டு விழுந்து விட்டேன். இரத்தம் வருகிறது.

ஐயோ என்ரை பிள்ளை... என்ரை பிள்ளை... அம்மா பெரிய சத்தமாக அழுகின்றா.

என்னைத் தூக்கிக் கொண்டு ஓடுகின்றா.

அப்பா... அப்பா... என நானும் சத்தம் போட்டு அழுகிறன்.

கண் முழித்து விட்டேன்.

மீண்டும் கனவு.

உடம்பெல்லாம் நடுங்குது.

என் கனவு அம்மாவும் என் கனவுக் குழந்தையும்...

நான் யன்னல்சீலையைத் திறந்து வெளியே பார்க்கின்றன்.

அதிகாலைச் சூரியனின் உறக்கம் இன்னும் கலையவில்லை.

அந்திவானம் அசதியில் இருக்கிறது.

"என்ன சத்தம்?... ஏன் இப்ப எழும்புறாய்?..." ஜீவா அரைத்தூக்கத்தில் ஏதோ சொல்லுகின்றார்.

"கனவப்பா"

"நீயும் உன் கனவும்" சொன்னபடியே மறுபக்கம் திரும்பி படுக்கின்றார்.

நான் முகம் கழுவி ரீ குடிக்க ஆயத்தமாகிறன்.

ஏன் இந்தக் கனவு என்னைத் துரத்துகிறது?

நித்திரை கொள்ள விடாமல் என் மனத்தையும் மூளையையும் பேயாட்டம் போட்டு ஆட்டும் இந்தக் கனவுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேணும்.

காசிக்குப் போயும் கங்கையில் மூழ்கியும் கரையேறாத ஆன்மாவாக என் ஆன்மா... என் ஆவி...

என்னைத் சதா துரத்தியபடி இந்தக் கனவுகள்... ஏன்? இது ஏன்??

இன்றைய காலையின் பூசை முடிச்சு... யோகாசனம் முடிச்சு... நான் வரவும் என் தொலைபேசி கிணுங்கவும் நேரம் சரியாய் இருந்தது.

"உனக்கு நேரமிருந்தால் இன்று பகல் 9 மணிக்கு எனது அலுவலகம் வா", என் நண்பியும் மனோதத்துவ வைத்தியரு மான என் நண்பி அழைத்திருந்தாள்.

என் கனவுகள் பற்றிக் கதைக்க வேண்டும் என்று முன் கூட்டியே அவளிடம் கேட்டு இருந்தேன்.

என்னை விட பத்து வயது மூத்த டெனிஷ்பெண்மணி. அனி என்பது அவளின் பெயர். நாங்கள் முன்பு வாழ்ந்த கிராமத்தில் வாழ்கின்றாள். நானும் அவளும் றோட்டின் கரையில் நின்று மணிக்கணக்காக பேசிக்கொண்டே நிற்போம். நான் டெனிசில் எழுதிய "இப்படிக்கு அம்மா" புத்தகத்திற்கு எழுத்துப் பிழை பார்த்து உதவியவா.

அனிக்கு முறுக்கு என்றால் கொள்ளைப் பிரியம். எனவே அவசர

அவசரமாக கடலைமாவில் முறுக்கு செய்து எடுத்துக் கொண்டு கிளம்புகின்றேன். போகும் வழியில் பூக்கடையில் நல்ல பூமரம் ஒண்டும் அவளுக்கு வேண்டிக் கொண்டு போக வேண்டும்.

வெளியே வானம் இருண்டு கிடக்கிறது.

இரவு பெய்த மழையில் குளித்த குதூகலத்துடன் தலை சிலுப்பி மரங்கள் சிலிர்த்து நின்கின்றன.

புழுதிகளையும்... தூசிகளையும் அடக்கி விட்ட மமதையில் மேகங்கள்... தெளிவாக இருக்கின்றன.

வெள்ளம் கரைந்தோடி கழுவப்பட்ட தெருக்கள் எல்லாம் நிர்மலமான அழகில் பூரித்து நிற்கின்றன.

அழகிய அந்த தெருக்களில் சிற்றெறும்புக் கூட்டமாக பள்ளி மாணவர்கள்... முதுகில் புத்தகச் சுமையுடன்...

நில்லுங்கடா... நானும் கூட வாறன் எண்டு சூரியனும் எட்டி எட்டிப் பார்த்து பின்னால் ஓடி வந்து கொண்டு நிற்கிறான்.

ஆனாலும் கார்மேகங்கள் இடைக்கிடை மழை முத்தம் கொடுத்தபடி இருக்கின்றன.

சிறுமழை பட மனம் "சில்"லென்று இருக்கிறது.

மணி 10 ஆகிறது.

வெள்ளை வெளேரென உயர்ந்து நிற்கும் அந்த மாடிக் கட்டடத்தின் வாசலில் ஏறி அனியின் அலுவலகம் உள்ள 2ம் மாடிக்கு வருகின்றேன்.

நான் வாங்கி வந்த ஊதா நிற ஓர்க்கிட் செடியைப் பார்த்து பூரித்து அதனை தன்னுடன் அணைத்தபடி.. என்னையும் அணைத்து கட்டித் தழுவி... ஆனந்தப் பரிமாற்றம் செய்து கொள்கிறாள் அனி.

பளிச்சென்று வெள்ளையாயும் சுத்தமாயும் இருந்த அந்த அறையின் யன்னலில் ஏற்கனவே ஓர் வெள்ளைநிற ஓர்க்கிட் மரம் அழகாக காத்திருக்கிறது. கிட்ட வா... கிட்ட வா என அது

இந்த ஊதா நிற ஓர்க்கிட்டை அழைப்பது போல இருக்கிறது. அனி அதனைக் கொண்டு போய் அருகே வைக்கின்றாள். வெள்ளையும் ஊதாவும் ஆன இரண்டு செடிகளும் பக்கத்து பக்கத்தே அழகாக இருக்கிறன. நானும் அனியும் போல.

சோபா மேசையில் தனக்கும் எனக்குமாய் தேனீரை தயாராக வைத்திருக்கின்றாள்.

"சொல்லு கலா... மனம் விட்டுக் கதைத்து எத்தனை நாளாகிவிட்டது" என்று சொன்னபடி நான் கொண்டு வந்த முறுக்கை எடுத்துச் சுவைக்கின்றாள்.

அதன் சுவை நன்றாக இருக்கிறது என கண்களால் எனக்கு சமிக்கை காட்டுகிறாள்.

""எப்படிப் போகிறது வாழ்க்கை கலா?"

""எல்லாம் நல்லாய்த்தான் போகிறது. ஆனால் கனவுகள் தான் எப்போதும் போல வில்லத்தனம் செய்கின்றன?

"ஆ... நீயும் உன் கனவுகளும்... நீ ஒரு கனவுக் கன்னியல்லவா" பெரிதாக சிரிக்கின்றாள்.

"அனி.. உனக்கும் ஜீவாக்கும் இது சிரிப்பு... எனக்கு மண்டையைக் குடையுது... உடம்பெல்லாம் நடுங்குது... மனம் எல்லாம் கனக்குது..."

"ஓகே சீரியஸாக கதைப்பம்.... என்ன கனவு உனக்கு வருகுது?"

"நான் என்ர அம்மாவின் வயிற்றுக்குள்ளை சிறிய சிசுவாக இருப்பது போலவும்... அந்தச் சிறு சிசுவைச் சுற்றி நடக்கும் விடயங்கள் எல்லாம் எனக்கு கேட்பது போலவும்....சிலது புரிவது போலவும் சிலது புரியாதது போலவும்... ஊரில் நடப்பதுவும் வயிற்றுக்குள் உள்ள சிசுவிற்கும் ஏதோ தொடர்பு இருப்பது போலவும் இருக்கிறது"

"கலா... கனவு எண்டது ஒரு பொல்லாத பெரிய வியாதி இல்லை என்று உனக்குத் தெரியும் தானே?... கனவு என்பது நமது ஆன்மாவின் அழகிய மொழி. நாம் பிறக்கும் பொழுது

எத்தனையோ விதமான எண்ணக்கருக்கள்.... பரம்பரை இயல்புகள்... உணர்வுகள் எம்முடனே கூடவே பிறக்கின்றன.

வளர்ந்து வரும் நமது கலாச்சாரச்சூழல்... வளர்ப்புமுறை... அடக்கப்பட்ட ஆசைகள்... கோபங்கள்... பயங்கள்... காட்டப்படாத அன்பு... புறக்கணிக்கப்பட்ட பாசம் போன்ற அறுவடை செய்யப்படாத பல அனுபவங்கள் நம் ஆழ்மனதில் பதியப்பட்டு விடுகின்றன. இவற்றை எல்லாம் எமது உடம்பானது நினைவு வைத்து அதை ஆழ்மனதுக்கு அனுப்பு கின்றது. இவ்வாறு பதியப்பட்ட பாதுகாக்கப்பட்ட இந்த உணர்வு நிலைகள் இரவில் நித்திரையாக நாம் இளைப் பாறியதும் அவை விழித்துக் கொள்கின்றன.

வார்த்தையில் சொல்ல முடியாத விளக்கங்களை எல்லாம் இந்தக் கனவு மொழி நமக்கு உணர்த்துகிறது.

நம் ஆழ்மனது நடைமுறை வாழ்வுக்கும்... மறைக்கப்பட்ட மறுக்கப்பட்ட நமது உணர்வுகளுக்குமான ஒரு சமநிலையை கனவுமூலம் உருவாக்குகின்றது.

மீண்டும் மீண்டும் வரும் கனவுகள் ஏதோ ஒரு செய்தியை நமக்கு உணர்த்துகின்றன.

இதெல்லாம் உனக்குத் தெரியாதது இல்லைக் கலா... தேனீரைக் குடி. ஆறப்போகின்றது."

""அனி... கனவு காண்பதும் அது உண்மையாவதும் பலமுறை என் வாழ்வில் நிகழ்ந்துள்ளது.

படிக்கும் காலத்தில் ஒரு முறை பைபிள் கதையொன்றை கனவு கண்டேன். அடுத்த நாளே மானிப்பாய் அந்தோனியார் கோயில் பாதர் அதே கதையைச் சொல்லக் கேட்டேன்.

பெருமாள் கோயிலில் சந்தனக்காப்புடன் எப்படி பெருமாளைக் கனவு காண்பேனோ அதே சாத்துப்படியுடன் அடுத்த நாள் பெருமாளைக் கோவிலில் கண்டிருக்கிறன்.

பல்கலைக் கழகத்தில் படித்த பொழுது பேராசியர் கைலாசபதி யின் உடலெல்லாம் புள்ளி புள்ளியாக இரத்தம் வடியக் கனவு

கண்டேன். மறுநாள் அவர்இரத்தப் புற்றுநோயால் இறந்த செய்தியைக் கேட்டுத் துடித்துப் போனேன்.

என் அம்மாவின் மச்சாள் மணியக்கா தன் கனவில் காணாமல் போன பொருட்களை கண்டு விட்டு அதே இடத்தில் தேடி எடுப்பா என அம்மா அடிக்கடி சொல்லுவதைக் கேட்டிருக் கின்றேன்.

என் பெரியய்யாவின் வெட்டுப்பட்ட ஒரு கை ஒரு பெட்டியில் பூட்டி வந்து கொண்டிருப்பதாக கனாக்கண்டேன் . அடுத்த கிழமை நெடுங்காலமாக தொலைந்து போன பெரியய்யாவின் மகன் மகேசண்ணா உயிருடன் வந்தார்.

அனி இந்தக் கனவுகள் ஒண்டும் எனக்கு பெரிய விடயமில்லை. ஆனால் இந்த வலியைத்தான் தாங்க முடியவில்லை"

"என்ன வலி கலா! விளக்கமாக சொல்".

"அதுதான் அப்பா, அம்மாவைப் பிரிந்து வந்து வாழுற வலி இந்த 30 வருடமாய் எனக்கு இருக்கு."

"ஆம் கலா... உன் ஆழ்மனதில் மறைத்து வைக்கப்பட்ட அந்த விடயங்கள் தான் நீ இப்போது நிம்மதியாய் உள்ள பொழுது வருகுது"

"அதனால் தான் அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு இலங்கையில் போரில் இருந்த பொழுது வராத கனவுகள் எல்லாம் இங்கு வந்து அமைதியாக இருக்கும் பொழுது வருகிறதா?"

"சரியாய் புரிந்து கொண்டிருக்கிறாய் கலா. எந்தப் பிரச்சனையையும் பிரச்சனை என்று பார்க்காமல் அதில் இருந்து எவ்வாறு வெளியில் வருவது என்று பார். எல்லாம் நல்லாய் நடக்கும். கலா... அம்மாவின் கற்பத்தில் நீ இருப்பதாய் காணும் கனவும் அந்தத் தொப்புள் கொடியும் கூட உனக்கு பெரிய ஒரு தத்துவத்தை உணர்த்தப் போகுது. இப்போ உனக்கு வரும் கனவு உனக்கு கவலையைத் தந்தாலும் அதனுள்ளும் ஒரு சுகம் இருப்பதை நீ அறிவாய் அல்லவா?

"நிச்சயமாக அனி! அந்தச் சுகத்தை விழுங்கியபடி அவர்களை பிரிந்து வாடும் துன்பம்தான் முன்னே வந்து நிற்கிறது"

"மீண்டும் மீண்டும் வரும் துன்பங்களுக்கு நீ இசைவாக்கமடைய நிச்சயமாய் ஒரு நாள் இந்தக் கனவுகள் எல்லாம் மறைந்து போகும். நீ இன்னும் மகிழ்ச்சியாய் இருப்பாய்"

சுவர் மணிக்கூட்டின் நிமிடக் கம்பி இரண்டு சுற்று சுற்றி வந்திருந்தது.

அதற்கிடையில் இரண்டு மணித்தியாலம் ஓடி விட்டது.

அனிக்காக யாரோ வெளியில் காத்திருந்தார்கள்.

அனி என்னைக் கட்டித் தழுவி வழி அனுப்பி வைத்தாள்.

வெளியே வரும் பொழுது அனியின் ரொயிலற்றுக்கு இயற்கை உபாதையைக் கழிக்கச் சென்றேன்.

அங்கு சின்ன ஒரு அலுமாரியில் அழகாக பல புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

கழிவறையைக் கூட கல்விக் கூடமாக மாற்றி வைத்திருக்கும் இந்த நாட்டின் நடைமுறையை நினைக்கப் பெருமிதமாக இருந்தது.

அப்பா சின்ன வயதில் சொன்ன ஒரு கதை ஞாபகத்திற்கு வந்தது.

கொஸ்டலில் பல தோழர்கள் தன்னைப் படிக்க விடாது பெரிதாகச் சத்தம் போடுவார்களாம். அவர்களிடம் இருந்து ஒதுங்கி அமைதியாக படிக்க தான் ரொயிலற்றில் போய் இருந்து படிப்பாராம். இப்படியான ஒரு சுத்தமான ரொயிலற் அங்கு இருந்திருந்தால் படித்த பின்பு அங்கேயே அவர் நித்திரை கொண்டிருப்பார் என மனத்துள் சிரித்தபடி வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினேன்.

கார்மேகங்கள் இப்பொழுதும் சிறிதாக சொட்டுச் சொட்டாக பன்னீர் தெளித்தபடி நகர்கின்றன.

என் பேரனின் முத்த மழை போல இந்தச் சிறுமழையும் என்னை மகிழ்விக்கிறது.

000

# அடுக்குமாடியில் இருந்து அனலையின் தொப்புள்கொடி உறவுகளுக்காக ஏங்கும் ஒரு ஜீவன்

அனியிடம் போய் வந்ததில் மனசு கொஞ்சம் லேசாக இருக்கிறது.

மத்தியானம் நல்லாய் சாப்பிட்டுத் தூங்க வேணும் போல் உள்ளது.

அவசர அவசரமாக வீட்ட வந்து சமைக்கத் தொடங்கி விட்டேன்.

பிறிச்சைத் திறந்தால் முந்தநாள் பாக்கிஸ்தான் கடையில் வாங்கிய புடலங்காய் என்னைப் பிடி பிடி என்று வளைஞ்சு நெளிஞ்சு தலையை நீட்டுகிறது.

இந்தப் புடலங்காயை கையில் எடுத்ததும் மனசு ஊருக்கு தாவுகிறது.

சின்னப் பிள்ளையாய் இருக்கும் போது பந்தலில் தொங்கிக் கொண்டு இருந்த புடலங்காய்களுடன் விளையாடியது ஞாபகத்திற்கு வருகிறது.

புடலங்காய் செடியில் காய் வரத் தொடங்க ஐயா கல்லுக் கட்டுவார். ஏன் என்று கேட்டால் விளக்கமாய் காரணங்களைச் சொல்லித் தருவார். கல்லுக் கட்டாட்டி அது நேராக வளராது என்பார்.

அவர் சொல்வது சரியா எனச் சோதித்துப் பார்ப்பதற்காக சில புடலங்காய்களின் கல்லுகளை கழட்டி வீசியிருக்கிறேன். பாவம்

அந்தப் புடலங்காய்கள். பின் சுருண்டு வந்தன. அவற்றை சந்தைக்கு எடுத்துச் செல்ல முடியாது.

ஒருநாள் ஐயா சிரித்தபடி சொன்னார், "பிள்ளையளே... இந்தப் புடலங்காய் போலத்தான் நம்மட வாழ்வும். சின்னனிலேயே கஷ்டம், துன்பம், பொறுப்பு என்பவற்றை உணராமல்... அனுபவியாது வளர்கிற பிள்ளையள் கல்லுக்கட்டாத புடலங்காய்கள் போல உருப்படாமல் போவார்கள்".

ஆம்! கஷ்டங்கள் என்பது எங்கள் வாழ்வைப் புடம் போடத்தான் என்பதை நானும் ஜீவாவும் இந்தனை வருட வாழ்க்கையில் அனுபவித்து இருக்கின்றோம்.

புடம் போட்ட தங்கம் தான் மிளிரும்!

சுட்டால்தான் சங்கு வெண்மை தரும்!!

பருப்பும் புடலங்காயும் சேர்த்து சமைத்து நெய்விட்டு இறக்கினால் வயிறு முட்ட முட்ட ஒரு பிடி பிடிக்கலாம் என்ற நினைப்பு.

இப்பவும் நல்ல சாப்பாடு செய்தால் அப்பா, அம்மா, தம்பி மாரின் நினைவுகள் வந்து குடையத் தொடங்கும். நல்ல ருசியாக சமைத்து அதனை அவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து சாப்பிட முடியவில்லை என்ற ஏக்கம் நெஞ்சைப் பிழியும்.

வீட்டுக்கு விருந்தினர்கள் வந்து என் சாப்பாட்டை ருசித்து சாப்பிடும் பொழுதும்... அதனைப் பாராட்டும் பொழுதும்... மீண்டும் அப்பா, அம்மா, தம்பிமாரின் நினைவுகள் வந்து நெஞ்சைக் குடையும். மீண்டும் மனது வேதாளமாக முருங்கை மரத்தில் ஏறும்.

புது வீடு வேண்டிய பொழுது...

வீட்டைச் சுற்றி பூ மரங்கள் நட்ட பொழுது...

வீட்டுத் தோட்டத்தின் நடுவே தாமரைக்குளம் வைத்து அதனுள் தங்கமீன்களை நீந்த விட்டு நடுவில் தண்ணீரை பூமாரியாகச் சொரியும் பம்பைப் பூட்டி அழகு பார்த்த போது...

பின் வளவில் உருளைக்கிழங்கும் தக்காளியும் மதாழித்து வளர்ந்த பொழுது...

வளவு முழுக்க பனி கொட்டி வெள்ளை வெளீரென மரங்கள் சிரித்த பொழுது அப்பா அம்மா சகோதரங்கள் என் கூட இல்லையே என மனம் அழும்.

பனியை உருட்டி பிள்ளைகள் பனிமனிதன் செய்து விளையாடிய பொழுது...

இப்படி எத்தனை எத்தனையோ தடவைகள்... ஏங்குகின்ற மனமும் துடிக்கிற இதயமும் சூறாவளியில் அகப்பட்ட சருகுகளாகக் காற்றில் அலைந்து அலைந்து அழிந்து போய்க் கொண்டு இருந்தன.

பசுமையான பழைய எண்ணங்களும் கற்பனைகளும் பனிபடர்ந்து போயிருக்கும் இந்த நாட்டில் உயிர் பிழைக்க முடியாது தள்ளாடின.

கொஞ்சம் பொறு... கொஞ்சம் பொறு... என போன உயிரை இழுத்துப் பிடித்தவை இலங்கையில் இருந்து வந்த கடிதங்களும் அவர்களுக்கு நாம் அனுப்பும் மீரா மிதிலாவின் வர்ணப் புகைப்பட படங்களும் தான்.

சரனும் படிப்பு முடிந்து யாழ். ஆஸ்பத்திரியில் வேலையில் சேர்ந்தான்.

அப்பா அம்மா தம் பிறவிப் பலனை அடைந்ததாக உணர்ந்த நாள் அது.

அப்பாவின் கடிதங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. யாழ் - அனலை வவுனியா மற்றும் எங்கள் உறவுகளைப் பற்றிய நேர்முக வர்ணனைகள் போல அந்தக் கடிதங்கள் இருக்கும்.

இப்போ அவருக்கு மீண்டும் மிதிலா மீராவின் எண்ணங்கள் மேல் எழுந்திருக்க வேண்டும்.

"சின்னக் கலாக்கள் இருவரையும் பார்க்காது என் உயிர் பிரியாது" என்ற அப்பாவின் திருவாசகம் பெருவாசகமாக மாற

வேண்டும் என்று நான் பிரார்த்தனை பண்ணியபடியே இருந்தேன்.

மிதிலா மீரா வயதுக்கு வரும் பொழுது அப்பா அம்மாவின் முன்னிலையில் தான் பூப்புனித நீராட்டு விழாவை நடாத்த வேண்டும் என மகாலட்சுமியிடம் வேண்டிக் கொண்டு இருந்தேன்.

கடவுள்கள் எப்போதும் எங்கள் வேண்டுகோள்களை உடனே ஏற்றுவிடுவதில்லைப் போலும்.

அப்பாவின் கனவில் இருந்த எனக்கு கனவில் சரனின் தொலைபேசி வந்தது போல் இருந்தது.

ஆனால் அது உண்மையில் ஒரு அதிகாலைப் பொழுதில் சரனிடம் இருந்து வந்தது.

அப்பாக்கு பக்கவாதம் வந்து அப்பா ஆஸ்பத்திரியில் என்ற செய்தி என் நெஞ்சாங்கூட்டை எட்டி உதைத்தது.

புயலும்...காற்றும்...வெய்யிலும்...மழையும்..வானமும்..பூமியு ம்...மலையும்..மடுவும்...நதிகளும்...பாலைவனங்களும்...தென் றலும்...சூறாவளியும்...எல்லாமே எனக்காகத் தானா? எனக்கு மட்டும் தானா??

கால் நடை தளர... கை வேலை குறைய... கண்களில் நீர் நிறைய என் மனம் தினம் தினம் தபால் பெட்டியைச் சுற்றி சுற்றி வந்தது.

அப்பாவின் முத்து முத்தான கை எழுத்தைக் காணாது... அவர் குரலைக் கேளாது... நாட்கள் நகர்ந்தன.

ஊருக்குப் போக மனம் துடித்தது. போக விடாது போர் தடுத்தது.

அம்மாவினதும் சரனினதும் அரவணைப்பும் கவனிப்பும் வைத்திய வசதியும் அப்பாவை மெல்ல மெல்ல எழுப்பி வருகிறது என்ற சின்ன சின்னச் செய்திகள் பாலைவன நீரூற்றாக என் நெஞ்சைக் குளிரப் பண்ணியது.

அனலைதீவு ஐயானார்.. புளியந்தீவு நாகதம்பிரான் தொடக்கம் யாழ்ப்பாணம் பெருமாள் - திருப்பதி வெங்கடேசன் - ஏன் கொச்சிக்கடை அந்தோனியார் வரை அனைவருடன் அப்பா வின் சுகம் வேண்டி வாதிட்டுக் கொண்டு இருந்தேன்.

தானாக முயன்று முயன்று சின்னப் பிள்ளைகளின் எழுத்துப் போல எழுதி கிறுக்கு கிறுக்கலாக முதல் கடிதம் அப்பாவிடம் இருந்து வந்தது.

போன உயிர் திரும்பி வந்த நாள் அது.

விதைத்த முளை முளைப்பதும்

முளைத்த மரம் வளர்வதும்

வளர்ந்த மரம் பூப்பதும்

பூத்த மரம் காய்ப்பதும்

காய்த்த கனி பழுப்பதும்

பழுத்த கனி விழுவதும்

விழுந்த கனி முளைப்பதுமான இயற்கை இயங்கியபடியே இருந்தது.

இப்படியே சரனுக்கும் கல்யாணப் பேச்சுகள் வரத் தொடங்கின. அண்ணா முதலில் செய்யட்டும் என நாட்களைக் கடத்திக் கொண்டு வந்தான். ஆனால் அண்ணா அசைவதாய் இல்லை.

அப்பா அம்மா வயோதிபத்துடனும் வியாதிகளுடனும் மாறி மாறி ஒப்பந்தங்கள் செய்தபடி... சமரசங்கள் செய்தபடி... மனமும் உடலும் களைத்துப் போய் இருந்தார்கள்.

இயற்கையில் நம்மைச் சுற்றி நடக்கும் ஒவ்வோர் நிகழ்வு களுக்கும்... ஒவ்வோர் சம்பவங்களுக்கும்... ஏதோ ஒரு காரண காரியங்கள் இருக்க வேண்டும். அவை அனைத்தும் தெய்வீக மானவையே. அனைத்தும் அவனால் தீர்மானிக்கப்பட்டு... அவன் நினைக்கும் திகதிகளில்... அவனாலேயே நிகழ்த்தி வைக்கப்படுவன. “எல்லாவற்றையும் தீர்மானிக்க நாங்கள் யார்?”

என அம்மா அடிக்கடி சொல்வா. அது போலவே சரனின் கல்யாணமும் அமைந்தது.

சாம்பசிவ மாமாவின் மகள் வாணிக்கு சரனைப் பேசி 2000ம் ஆண்டு யூன் 10 கல்யாணத்துக்கு நாள் குறித்தார்கள்.

காலமும் உலகமும் உருண்டு கொண்டிருந்தன.

அந்த நாளும் வந்தது.

அப்பாவின் சின்னக் கலாக்கள் இருவரும் பெரிய கலா வாகினார்கள்.

2000 ஆண்டு பற்றி உலகமே பல எதிர்பார்ப்புகளை கொண்டிருந்தது.

2000த்தில் உலகம் அழிந்து விடும் என்று யாரோ கிளறி விட்ட வதந்திகளை புரட்டி வீதியின் கரையில் போட்டு விட்டு 2000 ஆண்டு அழகாகப் பிறந்தது.

எந்தக் கணணியும் செயலிழக்கவில்லை.

இலங்கையில் சரனின் திருமணத்தையும் மிதிலா மீராவின் சாமத்தியச் சடங்கையும் ஓரிரு நாட்கள் இடைவெளியில் செய்வதாக முடிவு செய்தோம்.

என்னையும் என்னைப் பெற்றவர்களையும் பிரிச்சு வைச்சு வேடிக்கை பார்த்த காலம் என் கருணை மனுவை ஏற்று என் சிறை வாழ்க்கைக்கு ஒரு விலக்கு அழித்தது போல உணர்ந்த நாள் அது.

பரோலில் விடுதலை செய்யப்பட்ட ஆயுள்கைதியாக நான் அக மகிழ்ந்த நாள் அது.

ஆனாலும் மனதுள் ஒரு பயம்.

அந்த நாளில் இலங்கை போக முடியுமா? போர் நிறுத்தம் வருமா? சமாதானம் வருமா? அப்பா அம்மாக்கு மிதிலா மீராவின் சடங்கைக் காணும் பாக்கியம் கிடைக்குமா? என்ற ஏக்கம் நெஞ்சாங்கூட்டுக்குள் முட்டி முட்டி மூச்சு எடுக்க

முடியாது என்னை வதைத்தது.

அப்போதுதான் ஜீவா சொன்னார், "கண்ணனை நீ நம்புறாய்... தினம் தினம் கும்பிடுறாய்... கிருஸ்ண ஜெயந்திக்கு வீடு முழுக்கு சின்னக் கால்கள் வரைகிறாய். நீ கடவுளை நம்பினால் எல்லாக் கவலைகளையும் விடு. நீ பிடித்து வைத்துக் கொண்டு இருக்கும் வரை கவலைகளும் உன்னை விட்டு விலகப் போவதில்லை. பாஞ்சாலி தன் சேலையைப் பிடித்துக் கொண்டிருந்தவரை கிருஷ்ணர் அவளுக்கு கருணை காட்டவில்லை. தான் பிடித்துக் கொண்டிருந்த சேலையின் கையை விட்டு "சரணம் மாதவா" எனக் கை கூப்பிய பிறகே அந்தக் கிருஸ்ணனே வந்தான். மகா பாரதக்கதையை நான் சொல்லி உனக்குத் தெரிய வேண்டிய தில்லை. முற்று முழுதாக அவனை நம்பு. நல்லது நடக்கும்"

எவ்வளவு பெரிய வார்த்தைகள். இதை ஜீவா சொன்னாரா? அல்லது கடவுளாக ஜீவாவூடு எனக்குச் சொன்னதா அது?

கையிருந்த கவலைகள் என்னும் சேலையைக் கை விட்டு விட்டேன்.

பாறை இடுக்கில் போட்ட எச்சிலில் மறைந்திருக்கும் விதையைக் கூட எம் பெருமான் பெரிய மலையைக் கூட பிளக்கும் பெரிய விருட்சங்களாக வளர்க்கும் பொழுது இந்தச் சின்னக் கலா போட்ட பூக்களுக்கு நிச்சயம் ஒரு பலன் இருக்கத்தானே வேண்டும் என்று உறுதியாக இருந்தேன்.

டென்மார்க்கில் இருந்து இந்தியாக்குப் போய்... சின்னனில் மிதிலா மீராக்கு வைத்த நேர்த்திக்காக திருப்பதியின் அடிமலையில் இருந்து உச்சிவரை அனைவரும் நடந்தே போய் ஏழுமலையானைத் தரிசனம் செய்து...அவரின் அனுமதி பெற்று இலங்கைக்குப் போய்... விஜயா அக்கா வீட்டில் பெரிய பந்தல் போட்டு மிதிலா மீராவின் சாமத்திய வீட்டையும்.... பெரியதொரு திருமண மண்டபத்தில் சரன் வாணியின் திருமணத்தையும் சிறப்பாக நடாத்தி முடித்தோம்.

எங்கள் உறவினர்கள் அனைவரும் கூடியிருந்து மகிழ்ந்த நாள் அது அனலை தீவில் நிலா வெளிச்சத்தில் இருந்து கதைப்பது

போல விஜயா அக்காவின் வீட்டு முற்றத்தில் இருந்து பேசிக் கொண்டு இருந்தோம்.

எனக்கு பல்கலைக்கழகத்தில் பட்டம் கிடைத்த பொழுது அப்பா அம்மாக்கு கொடுத்த சந்தோசத்தை மீண்டும் ஒரு முறை அவர்களுக்கு கொடுத்ததாக மகிழ்ந்த நாள் அது.

பின்பென்ன?

மீண்டும் வேதாளம் முருங்கைமரம் ஏறிய கதைதான்.

பட்டியில் இருந்து அவிழ்த்து விடப்பட்ட மாடுகள் மீண்டும் பட்டிக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம்.

கூடுகளை விட்டு வெவ்வேறு தேசங்களுக்குப் பறந்து போன அகதிப் பறவைகளான நாம் மீண்டும் சொந்தங்களைப் பிரிந்து தஞ்சம் பெற்ற நாடுகளுக்கே தத்துப் பிள்ளை வாழ்வுக்கு திரும்ப வேண்டிய கட்டாயம்.

மீண்டும் கடற்கன்னி நாட்டுக்குத் திரும்பினோம். சிவத்த சேலையில் வெள்ளைக் குறிபோட்ட கொடிகள் விமான நிலையத்தில் பறந்து கொண்டிருக்க விமானத்தின் பின் சில்லுகள் கொப்பனேகன் விமான நிலையத்தை தொட்டது.

ஊருக்குப் போய் வந்த தைரியம் இன்னும் பத்து வருடங்களுக்கு உயிர் வாழ்வதற்குரிய தைரியத்தை தந்திருப்பது போல உணர்ந்திருந்தோம்.

மீண்டும் பழையபடி.. தபால் பெட்டிகள்... வண்ண வண்ண புகைப்படங்கள்.. எங்கள் உறவுகளுக்கு பாலம் கட்டியபடி இருந்தன.

இந்தப் பாலம் இராமர் அணைபோல் ஐந்து நாளில் கட்டப்பட்டு முடிவதில்லை.

போடப்படும் கடிதங்கள் 1 மாதம் - 2 மாதம் - 3 மாதம் என ஒவ்வோர் தபால் நிலையங்களிலும் அகதிகளாக்கப்பட்டு பின் சீல் குத்தப்பட்டு... சிறகு ஒடிக்கப்பட்டு.. மீண்டும் அவை பறக்க விடப்பட்டு அவை எம்மை வந்தடையும்.

அப்பா அம்மா ஊரில்... சரன் வாணி திருகோணமலையில்... நித்தன் கனடாவில்... நான் டென்மார்க்கில்... எங்கள் குடும்பம் துண்டு துண்டாக உலகத்தின் மூலைகளில் எறியப்பட்டு விட்டது. அந்த நிஜம் ஓர் நாள் நிழலாக கரைந்து போகக் கூடாதா என மனம் ஏங்கும்.

எல்லோரும் ஐயானார் தேர் முடிய வீதியில் இருந்து கடலை கொறித்துக் கொண்டிருக்க மாட்டோமா என மனம் ஏங்கும்.

அவ்வாறுதான் அப்பா அம்மாவின் நிலையும்.

நண்டின் கால்களை உடைத்து விட்டு உயிருடன் விட்டு வைத்திருக்கும் நிலை.

ஒரு வகையில் அவர்களின் வாழ்வும் ஊன வாழ்வுதான்.

ஆனாலும் புளியந்தீவு நாகதம்பிரான் திருப்பணியும் ஊரின் சமூக வேலைகளும் என அவர்களும் தங்கள் கால்களில் சக்கரங்களைக் கட்டிக் கொண்டு ஓடியபடி இருந்தனர்.

மிதிலா மீரா கலா ஜீவா என அப்பா தினம் தினம் பிசத்தும் சத்தம் வங்கக் கடலைத் தாண்டி காற்றோடு கலந்து... தேசாந்திரம் போகும் மேகங்களுடன் டென்மார்க் வந்து சேரும்.

நானும் நித்திரையின்றிய இரவுகளுடனும் என் கனவுகளுடனும் என் புலம்பல்களுடன் மிதிலா மீராக்கு நல்ல அன்பான அம்மாவாகவும் ஜீவாக்கு நல்ல மனைவியாகவும் இருந்து வந்தேன்.

எப்படியும் அப்பா அம்மாவை டென்மார்க் கொண்டு வர ஆவலாய் இருந்தேன். ஆனாலும் அவர்களின் மௌனம் சரனைச் சுற்றியும் போர்க்காலச் சூழ்நிலையைச் சுற்றியும் இருந்தது.

அம்மாக்கு கண் ஒப்பிரேசன் இந்தியாவில் செய்யலாம் என எனக்கூறி இந்தியாக்கு கூப்பிட்டு ஒரு மாதம் சந்திரா அண்ணாவுடன் தங்க வைத்திருந்தோம். நாமும் இந்தியா போய் அவர்கள் இருவரையும் எல்லாக் கோயில்களுக்கும் கூட்டிச் சென்றோம். நித்தனும் கனடாவில் இருந்து வந்து எங்களுடன்

சேர்ந்து கொண்டான். கூடவே இந்தியாவில் இருந்த குகதாசன் சித்தப்பாவை எல்லோரும் சந்தித்த பெரிய மகிழ்வான தருணமாய் அமைந்தது.

இந்தப் பயணத்தின் உச்சக் கட்டமாக திருப்பதி தரிசனம் அப்பா அம்மாக்கு காட்ட வேண்டும் என்ற என் கனவு நிறைவேறியது. ஆண்டவன் எனக்குத் தந்த பிறவிப் பெருவரம் அது என நினைத்துக் கொண்டேன்.

பின்பென்ன? கச்சதீவில் சந்திக்கும் இந்தியா - இலங்கைத் தேயிலைத் தோட்டத் தொழிளார்கள் கதைதான்.

கூடியிருந்தோம்... மகிழ்ந்திருந்தோம்... பிரிந்தோம்.

தாயகம் சுற்றிய என் நினைவுகளுடனும் கத்தியுடனும் போராடிய புடலங்காய் என்னைப் பார்த்து சிரிக்கிறது.

கொதித்துக் கொண்டிருந்த உலை என்னைப் பார்த்துச் சொல்லியது.

"என்னத்தை நினைத்து என்னத்தைச் செய்யப் போகிறியோ தெரியாது. ஒழுங்காச் சமைத்துப் சாப்பிட்டு உன் குட்டித் தூக்கத்தைப் போடு. ஜீவாவும் வேலையால் வந்திடுவார்"

"கனவுகளின் மொழி" பற்றிய ஒரு மனோதத்துவ புத்தகம் ஒன்றை அனி எனக்கு தந்திருந்தாள். கட்டாயமாக 2 நாளில் வாசிச்சு முடிக்க வேண்டும் என்ற பிடிவாத்தில் இருந்தேன். இப்போ குட்டித் தூக்கம் போட முதல் அதனை வாசிக்க வேண்டும்.

"உன்னை நீ பார்க்கும் கண்ணாடிதான் உன் கனவுகள்... பெரும்பாலும் நம் மன விருப்பு வெறுப்புகள்... துன்பங்கள் - துயரங்கள் கனவில் வந்து நம்மை வழிநடத்துகின்றன"

000

# கனவுகளும் கர்ப்பப்பையினுள் கனவுகளும்

*நான் மயங்குகின்றேன்... எதுவும் புரியவில்லை... நான் யார் என்றும் தெரியவில்லை... எங்கோ பறப்பது போலத் தெரிகின்றது...*

*இதுதான் புஷ்பக விமானமா?*

*அதில் நான் இருக்கின்றேன். அது பறக்கின்றது.*

*நமது ஆன்மாவானது நாம் உறங்கும் பொழுது இந்த உடம்பென்னும் கூட்டிலிருந்து வெளிப்பட்டு வேற்றுக் கிரகங் களுக்கு செல்கிறது என நான் அந்தப் புத்தகத்தில் படித் திருக்கின்றேன்.*

*அப்போ இது சரியா?*

*நான் வேறோர் கிரகத்துக்குப் போகின்றேன்...*

*போய்க் கொண்டு இருக்கின்றேன்.*

*இடையில் விமானம் வழியில் நிற்கிறது*

*அது வானில் தொங்குகின்றது*

*விமானப் பணிப்பெண்கள்*

*எங்களுடன் கதைக்கின்றார்கள்.*

*"நீ எப்படி இங்கு வந்தாய் கலா?*

*உன் உடம்பெல்லாம் அழுக்கழுக்காய் இருக்குது?*

ஐயோ அம்மா!

நான் அம்மான்ட வயித்துக்கை அல்லவா இருக்க வேண்டும்!

நான் கத்துகின்றேன்.

"கொஞ்சம் பொறு கலா.

நான் உன்னை உன் அம்மாவின் வயிறுக்குள் அனுப்புகின்றேன்"

விமானப் பணிப்பெண் ஒரு துணியை எடுத்து என்னை அதில் சுற்றி ஒரு கயிற்றால் கட்டி பூமிக்கு இறக்கின்றாள். கூடவே எனக்கு சிறகுகள் பூட்டி விடுகின்றாள்.

நான் ஒன்றும் புரியமால் விழிக்கின்றேன்.

என்னால் பறக்க முடியுமா?

"உன்னால் முடியும் கலா!

நீபற... நீ பற...

உன் பரம்பரை

உனக்கு அந்தப் பலத்தை தந்திருக்கு.

பற... பற...

சிறகுகளை விரித்துப் பற"

என்ன அதிசயம்!

ஆ... ஆ...

நான் பறக்கின்றேன்.

நான் படுத்திருந்த அந்த அம்மாட வயித்துக்க சத்தம் போடாமல் போய் இருக்கப் போகின்றேன்.

அதுக்கு முதல் வீட்டிலை என்ன நடக்குது என்று நோட்டம் விட்டுப் பார்க்க ஆசையாய் இருக்குது.

ஒரு சிறிய சூட்கேஸ் நிறைய பூ அன்ரி சின்ன சின்ன சட்டைகள் தைத்து வைத்திருக்கின்றா. சிலது நீல நிறத்தில். சிலது றோஸ்

நிறத்தில்.

“இனி றோஸ் நிறத்தில் மட்டும் தையுங்கள்” என காதருகே போய் சொல்லுகின்றேன்.

அவாவிற்கு கேட்கவில்லை பாவம்.

அம்மம்மா.. சின்னம்மா... கிளியக்கா... சமையல் செய்கின்றார்கள்.

வேலையாட்கள் 20 பேருக்கு சமைக்க வேண்டும். நிறம் நிறமாக நிறையக் கறிகள் இருக்கிறது.

இவை எப்படி இருக்கும்?

இனிக்குமா...

புளிக்குமா...

உறைக்குமா...

கிட்டப் போய்ப் பார்க்க கண்ணெல்லாம் எரியுது.

உடம்பெல்லாம் ரத்தம்படிஞ்சிருக்கு. அதில் தூசு பட்டிருக்குது. பறந்து திரிந்ததால் உடம்பு அசதியாய் இருக்கு.

மெல்ல அம்மாட வயித்துக்க போறன்.

இப்ப அந்தக் குளம் சின்னதாய்ப் போச்சுது.

இல்லையில்லை...

நான் வளர்ந்திட்டன்.

இரு கோடுகள் போல

சின்னது பெரிதாக பெரிது சின்னதாகிறது.

இது உலக நியதி போலும்.

“நெஞ்சுக்கை முட்டுதம்மா. அடிக்கடி சிறுநீர் கழிக்கப் போகவேணும் போல இருக்குது”அம்மா அம்மம்மாட்டை சொல்லுகின்றா.

"நாள் கிட்டக் கிட்ட அப்படித்தான் இருக்கும். நீ போய் படுத்துக் கொள் பிள்ளை. நான் சரக்கு அரைச்சு லேகியம் செய்யப் போறன். உனக்கது நல்லது"

என்னை வரவேற்பதில் எல்லாரும் தடல்புடலாக இருக்கினம் என்று புரிகிறது.

நினைக்கப் பெருமையாக இருக்குது.

"செய்யுற லேகியத்தில் 2 பெரிய சாடியிலை போடு. குணத்துக்கும் பெறுமாதம் நெருங்குது. இப்ப செய்து வைச்சால்தான் நல்லது" ஆச்சி உரக்கச் சொல்லியபடி "டக்கு" "டக்கு" என வெத்திலை இடிக்கின்றா.

"வண்டில் சத்தம் கேட்குது. என்ன ஏது எண்டு பார் பிள்ளை" ஆச்சி தொடர்ந்து வெத்திலை இடிக்கின்றா.

"அது சின்ன அண்ணையும் அத்தாரும் இந்தியாவிலை இருந்து புத்தகங்கள் இறக்குமதி செய்தவை. அதுதான் வண்டியில வருகுது"

கோட்டைப் பொன்னம்பல அண்ணை வீட்டுக்க வாறார்.

"பொன்னம்பலத்துக்கு மோர் கொண்டு வா கமலா... வெளியிலை வெய்யில் கொழுத்துது"

"செம்புக்கை நிறைய பச்சைத் தண்ணி கொண்டு வா பிள்ளை" சொல்லியபடி சின்னமாமா வாறார்.

"அது சரி உனக்கு எங்க நேரம் இதெல்லாம் படிக்கிறதுக்கு" அம்மம்மா சின்னமாமாவிடம் கேட்கின்றா.

"அம்மா.. இது நான் படிக்கவில்லை. வீடு வீடாக கொண்டு போய் குடுத்து ஒரு நடமாடும் வாசிகசாலை நடத்தப் போறன்"

"பாத்தியா... நான் படிப்பிச்சபடியாலை அவனுக்கு புத்தகத்தின்ரை அருமை தெரியுது"

ஐயா புழுகுகின்றார். பெருமையாகச் சிரிக்கின்றார்.

“அ”படிச்ச பிள்ளை அப்பனுக்கு பண்டிதன் தான்.

அம்மம்மா ஆமோதிக்கின்றா.

“சரி… நேரமாகுது… பின்னேர லோஞ்சுக்கு ஆட்களை கொண்டு போய் விடவேணும்”.

புத்தகக் கட்டுகளை இறக்கி வைத்துப் போட்டு பொன்னம்பலண்ணை புறப்படுகின்றார்.

மீண்டும் மாடுகளின் கழுத்தில் இருந்த மணிகள் ஒலிக்கத் தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சத்தம் குறைந்து கொண்டு போகின்றது.

“கிறுக்கு… கிறுக்கு” என ஏதோ சத்தம் கேட்கிறது.

“ஏன் இப்ப வளவு கூட்டப் போறாய். உனக்கு உன்ரை பிள்ளையில அக்கறையில்லையா? பேசாமல் ஒய்வெடுத்தால் என்ன இப்ப?”

அப்பா உரத்துக் கத்துகின்றார்.

“வேலை செய்தால்தான் சுகப்பிரசவம் ஆகும்”

“நீ என்னதான் சொன்னாலும் என்ர பிள்ளையை ஆறுதலாக இருக்க விடு” அப்பாபுறுபுறுக்கின்றார்.

“ஒருக்கா என்ர பிள்ளை என்பியள்…

பிறகு உன்ர பிள்ளை என்பியள்…

இந்தப் பிள்ளை என்ரையும் இல்லை -

உங்கடையும் இல்லை”

“என்ன விசர்கதை கதைக்கிறாய்”

“இது சாமியிட பிள்ளை. நம்மட பிள்ளையில்லை. அப்பிடியே மனசைப் பக்குவப்படுத்தப் பழகுங்கோ… என்ர பிள்ளை என்ர பிள்ளை எண்டு சொன்னா அது என்ரையும் உங்கடையும் விருப்பத்துக்கு வாழ வேணும் எண்டு எதிர்பார்ப்பம். அதுவும் எங்களுக்காக வாழ வேணும் எண்டு நினைக்கும். அது தன்ரை

சுயத்தை துலைச்சுப் போடும்”

“அதுவும் சரிதான். ஆனாலும் வாத்திபரம்பரையிலையும் மு.வ.க. பரம்பரையிலும் வாற பிள்ளை....”

“இந்தப் பிள்ளை இந்தப் பூமிக்கு வாறதுக்கு நாம ஒரு கருவி. கடவுள் இந்தப் பிள்ளையை நல்லபடியாகச் வளர்க்கச் சொல்லி ஒப்படைத்திருக்கிறார். அதுக்கு எண்டு ஒரு புனிதமான ஆன்மா இருக்குது. அதைக் கடவுள் பார்த்துக் கொள்வார். அந்த உயிரை நாம உரிமை கொண்டாட வேணாம். நாமயார் முதலாளி வேலைக்குப் போய் அந்த உயிரில் உரிமை கொண்டாட...”

“உனக்கு விசர் முத்தி விட்டது” அப்பா எழும்பிப் போறார்.

அம்மா தன் வயித்தை தடவுகிறா. அதுக்கு விபூதி எடுத்துப் பூசுகின்றா.

“என்ர செல்லமே... நான் சொன்னது உனக்குப் புரியுதா?... உன்னில விருப்பம் இல்லாமல் இதை நான் கதைக்கேல்லை.

நீ சுதந்திரமாக வாழ வேணும்....

நல்ல பிள்ளையாக வளர வேணும்...

நல்லாய்ப் படிக்க வேணும்...

நீ பிறந்த பிறகு உன்னை அப்புசாமிக்கு வித்துப் போடுவன். அப்புறம் அவர்தான் எல்லாத்துக்கும் உனக்குப் பொறுப்பு. அப்பா அம்மா இல்லாத காலத்திலும் அப்புசாமிதான் உனக்கு அப்பா அம்மா. அவர்தான் எனக்கும் சரி... அப்பாக்கும் சரி... அப்பா அம்மா புரியுதா செல்லமே... அச்சாப் பிள்ளையாய் இருப்பியா?”

“ம்... ம்... புரியுதம்மா” நான் கையால அம்மாட வயித்தில தட்டுறன்.

அது ஆரு அப்புசாமி?

எப்பிடி இருப்பார்?

எனக்கு அவரைத் தெரியாதே?

எனக்கு புரிந்தமாதிரியும் இருக்குது.

புரியாத மாதிரியும் இருக்குது:

இது என்ன உலகம்?

நான் வயித்துக்கை வாழ முடியாதா?

ஏன் வெளியே போக வேணும்?

இது பொல்லாத உலகமா?

ஐயோ! ஐயோ!!

பயமாய் இருக்குது. எல்லோரும் மனிதராய் வாழாமல்

ஏன் மிருகமாய் மாறி அடிபடுகிறார்கள். மு.வ.க. பரம்பரைக்கு அடிபாடும் தெரியாது சூதுவாதும் தெரியாது. பாவம்... வாத்திபரம்பரைக்கும் எதுவும் தெரியாது. இன்று அம்மாட்டை இருந்து உலகத்தைப் பற்றி நல்லாய் தெரிஞ்சிட்டன் இப்ப களைப்பாய் இருக்குது கண்மூடித் தூங்கவேணும் போல இருக்குது.

அயர்ந்து போகிறன்.

000

டிங்.. டிங்... டிங்...

அலாரம் அடிக்கின்றது.

அட நேரம் அதிகாலை 4 மணியாச்சா.

"எதுக்கு இந்த நேரம் அலாரம் வைக்கிற..." நித்திரைத் தூக்கத்தில் ஜீவா புலம்பியபடி திரும்பிப் படுக்கின்றார்.

நான் சத்தம் போடாமல் வெளியே வந்து முகம் கழுவப் போறன்.

மீண்டும்... மீண்டும்... ஏன் இந்தக் குழந்தைக் கனவு? நான் என்ன சின்ன பாப்பாவா? எதுக்கு இப்படி கனவு வந்து வந்து என் மனசைப் பிசைந்தபடி, ஏன் என் எண்ணங்கள் தலை விரித்தாடுகின்றன.

என்னதான் எண்ணங்கள் என்னை ஆட்டிப்படைத்தாலும் மணிக்கூடு ஓடுவதை நாம் நிற்பாட்டுவதில்லையே.

சம்மர் என்று ஒரு வினாடி அது முந்தி ஓடுவதுமில்லை.

வின்ரர் என்று ஒரு வினாடி அது பிந்திச் செல்வதும் இல்லை.

நாங்கள் தான் எல்லாத்துக்கும் அவரசப்பட்டு அவசரப்பட்டு ஓடியபடி...

கையில் கைத்தொலைபேசியையும் மடியில் மடிக்கணினியை யும் வைத்துக் கொண்டு ஓடிக் கொண்டு இருக்கிறம்.

மனது ஒரு பக்கமும்...

உடம்பு ஒரு பக்கமும்...

மூளை ஒரு பக்கமும்...

இழுபறிப்பட்டுக் கொண்டு இருக்க...

நானாகப்பட்ட இந்த நான்....

இந்தக் கலா இன்றைய நாளின் நாணைப் பூட்டிக் கொண்டு ஓட ஆயத்தமாகின்றேன்.

000

வீட்டில் பிறிச் காலியாக இருக்கின்றது.

சாமான்கள் தீர்ந்து போய் இருந்தன.

தபால் பெட்டியில் நீ முந்தி நான் முந்தி எனப் போட்டி போட்டு முண்டியத்துக் கொண்டிருந்த இலவச விளம்பரப் பத்திரிகைகளை எடுக்கின்றேன்.

மாதத் தொடக்கம் என்றால் இவை அதிகமாகவே தபால் பெட்டியுள் வந்திருக்கும்.

முதலாம் தேதியில் தான் அனைவரின் பொக்கற்களும் மொத்தமாக இருக்கும் என்று வியாபாரிகளுக்குத் தெரியும்.

அதனால் என் கடைக்கு வா... உன் கடைக்கு வா என கூவும்

இலவச விளம்பரப் பத்திரிகைகள் தபால் பெட்டியை நிறைத்திருக்கும்.

அதுவும் பண்டிகைக் காலங்கள் என்றால் சொல்லவா வேண்டும்.

“எங்களிடம் கடனைப் பெறுங்கள். மூன்று மாதத்தின் பின்னால் செலுத்துங்கள்” என்று அப்பாவி மக்களின் உழைப்பையும் இரத்தத்தையும் உயிரையும் மலை அட்டைகளாய் உறிஞ்சக் காத்திருக்கும் வங்கிகள்.

ஆனால் நான் யார்?

கணபதிப்பிள்ளையரினதும் வேலுப்பிள்ளையரினதும் பேத்தியல்லா!

எந்த எந்தக் கடையில் எந்த எந்த பொருள் மலிவு என்று எழுதி எடுத்துக் கொண்டு கடை கடையாக புறப்பட்டேன்.

ஊ... ஊ... உஸ்...உஸ்... என ஊழிக்காத்து உக்கிரமாக வீசுகிறது.

தள்ளாடும் மரங்களின் இலைகள் தாமாகச் சுற்றுகின்றன.

காற்று தூக்கி வீசும் இலைகளும் சருகுகளும் நம் இறுதிப் போரில் அங்கும் இங்கும் ஓடித்திரிந்த தமிழர் போல் ஒதுங்க இடமின்றி அலைந்து கொண்டிருந்தன.

சில சருகு இலைகள் எழுந்து பறக்கின்றன. என் முகத்தையும் தட்டிக் கொண்டு போகின்றன.

காதுக்குள் புகுந்த குளிர்காற்று என் செவிப்பறைகளை சல்லடை போடுகின்றது.

இலையுதிர் காலம் தொடங்கி விட்டால் மரங்களுக்கு மட்டுமில்லை மனிதர்களுக்கும் திண்டாட்டம் தான்.

நம்மை விட இந்த மரங்கள் மாவீரர்கள் தான்.

வாழ்க்கைப் போராட்டம் என்று கூறி இடம் பெயர்வதில்லை.

என்னதான் பருவகால மாற்றப் போராட்டங்கள் என்றாலும் வேர் விட்ட பூமியை விட்டு இடம் பெயர்வதில்லையே. போராடி தோற்றால் சாயும். போராடி வென்றாலும் தன் காலம் வரும்வரை காத்திருந்து மண்ணோடு மண்ணாய்ப் போகும்.

சின்னக் கிழங்குச் செடிகள் ஆயின் நிலத்தின் கீழ் உறங்கு நிலைக்கு போகும். மீண்டும் புது வீரியத்துடனும் அதிக மொட்டுகளுடனும் தளிர்த்து வரும். மீண்டும் பூக்கும். தன் இனத்தைப் பெருக்கும். மீண்டும் மண்ணின் கீழே போய்விடும். இவைகளிடம் கற்றுக் கொள்ள நிறையவே விடயங்கள் உண்டு.

நாம் தான் போராடாமல் நாடோடிகள் போல அச்சுவேலி கதியாலைப் பிடுங்கி வந்து அமெரிக்காவில் நடப்பார்க்கின்றம். சுன்னாகத்து ரோஜாவை சுவிஸ் ரோஜாவுடன் பதிவைக்கப் பார்க்கின்றம்.

காத்து சுழன்றடிக்க கரும்வானம் குளிர்ந்தடிக்க போதுமடா சாமி என அவசரமாக கடைக்குள் வந்து விட்டேன்.

மழையில் நனைந்த என் கண்ணாடி என்னைத் துடை துடை என போட்டுக் குடைந்தது. இல்லாவிட்டால் என்னுடன் ஒத்துழைக்க மாட்டுதாம். எல்லோருக்கும் சமரசம் அல்லது சண்டித்தன குணங்கள் எப்படித்தான் வந்தனவோ.

பையுள் இருந்த கண்ணாடி துடைக்கும் துண்டால் துடைத்துக் கொண்டிருக்கும் பொழுது ஹலோ என்று ஒரு குரல் கேட்டது.

என்னுடன் முன்பு வேலை செய்த நண்பி. பியற்கிற் என்று பெயர்.

எப்பிடிச் சுகம் என்று கட்டித் தழுவுகின்றாள்.

“பேரன் எப்படி இருக்கின்றான்”

“சுப்பராய் இருக்கின்றான்” என போனில் உள்ள அவனின் படத்தைக் காட்டுகின்றேன்.

“உன் பேத்தி எப்படி இருக்கின்றாள்”

"நல்லாய் இருக்கின்றாள். என் மகள் என் வீட்டுக்கு அருகில் குடிவந்துள்ளாள்" எனக் கூறி பேத்தியின் படங்களை போனில் இருந்து எடுத்துக் காட்டுகின்றாள்.

"நீ குடுத்து வைத்தனி பியக்கிற்"

"ஏன் கலா"

"உன் பேத்தி உன் வீட்டுக்கு அருகே இருக்கின்றாள். நீ அடிக்கடி அவளைப் பார்க்க முடியும்"

"இல்லைக் கலா. நான் அவர்களை தொந்தரவு செய்வதில்லை. மகள் தானாக ஏதாவது உதவி வேண்டும் என்று கேட்டால் மட்டுமே போய்ப் பார்ப்பேன். மகள் பாசத்தாலும் பேத்திப் பாசத்தாலும் நான் போய் அதுகளை தொந்தரவு செய்ய விரும்புறதில்லை. என் அன்பை அவர்கள் மீது திணிக்கப் புறப்பட்டு அவர்களின் வாழ்வை நான் கெடுக்கப்படாது."

"அதுவும் சரி தான்"

மனத்தராசின் இருபக்கத்திலும் கிழக்கும் மேற்கும் தங்களைத் தாங்களே நிறுத்துப் பார்க்கத் தொடங்குகின்றன.

"நேரம் வரும் பொழுது வீட்டுப் பக்கம் வா" என்றவாறு அவள் என்னிடம் விடை பெறுகின்றாள்.

என்ன உலகமடா இது என நான் வியந்து போகின்றேன்.

பேரப்பிள்ளையைக் கூடப் போய்ப் பார்ப்பதற்கு... மகளிடம் நேரம் குறித்து... அந்த நேரத்துக்குப் போய்...அந்த நேரம் முடிய வீட்டுக்குத் திரும்பி....

இது சரியா?... பிழையா??...

கட்டிக் குடுத்தாலும் கட்டையில் போகும் வரையிலும் என்ர பிள்ளை என்ர பிள்ளை என சொந்தத் கொண்டாடி.... யாருக்கு பிள்ளையில் உரிமை கூட என்று சம்பந்த பகுதிகளுடன் போட்டி போட்டு... நம் விருப்புகளை பூத்திருக்கும் மொட்டு களின் மேல் திணித்து... மெல்லவும் முடியாது... விழுங்கவும்

முடியாது... தவிக்கும் எம் தமிழர்கள் எங்கே?.... எட்டி நின்று தம் பிள்ளைகளை தாங்களாகவே வாழ வழிவிடும் வெள்ளைக்காரர்கள் எங்கே??

எனக்கு என்னவோ பியக்கிற்றைப் பார்க்கிற போது என் அம்மாவைப் பார்க்கிறமாதிரி இருக்குது.

“நீ என்ரை பிள்ளையும் இல்லை... அப்பான்ரை பிள்ளையும் இல்லை.... நீ சாமியிட பிள்ளை என தன் பாசவலையில் சிக்க வைக்காது தனித்துவமாக எம்மை வளர்த்த அம்மாவை நினைத்து வியந்து போகின்றேன்.

நான் அம்மா போல் இல்லை. அப்பா மாதிரி ரொம்ப பாசக்காரி. சரன் அப்பாவாகப் போகும் செய்தியறிந்து பூரித்துப் போயிருக் கின்றேன்.

வாணியின் வயிற்றில் ஆரூரன் வளரும் போதே அவனுடன் கதைக்கிறது போல நினைப்பேன்.

நினைப்பவற்றை கடிதமாகவே எழுதுவேன்.

அவன் பிறந்த பொழுது அவ்வளவு ஆனந்தப்பட்டேன்.

நல்ல வேளை அவன் பிறந்த பொழுது நான் இலங்கையில் இல்லை. அல்லது என் பாசவலையில் அவனைச் சிக்க வைத்திருப்பேன்.

அதுபோலவே அரிகரன் பிறந்த பொழுதும் அப்படி ஆனந்தப்பட்டன்.

கடை தெருவில் என்ன விளையாட்டுச் சாமான்களைக் கண்டாலும் என் மருமக்களையே மனம் நினைக்கும்.

அம்மா நினைப்பது போல என் பிள்ளைகளைச் சரி... சரனின் பிள்ளைகளைச் சரி... என் பேரனைச் சரி சாமியின் பிள்ளைகள் என நான் நினைப்பதில்லை. என்ர மருமக்கள் எண்ட நினைப்புத் தான் என்னை பறக்க வைத்துக் கொண்டு இருக்கும். என்ர பேரனுக்கு என்னிடம் எது எது இருக்கிறதோ அதை அதையெல்லாம் கொடுக்க வேண்டும் என நினைப்பேன்.

அப்படியே ஜீவாவிடம் எது எதுவெல்லாம் இருக்குதோ அதுகளையெல்லாம் கொடுக்க வேண்டும் என நினைப்பேன்.

இப்படியெல்லாம் கற்பனையில் வாழ்ந்த எனக்கு என் மருமக்கள்களைச் சந்திக்க இறைவன் வழிகாட்டினான்.

அப்பா அம்மா ஊரிலை தனிய இருந்த பொழுது அவர்களுக்கு வருத்தம் வந்து விட்டது.

சரன் கூட்டி வந்து திருகோணமலையில் வைத்து வைத்தியம் செய்து கொண்டிருந்தான்.

நான் மிதிலா மீராவையும் கூட்டிக் கொண்டு போனேன்.

அம்மா அப்பாக்கு எங்களைக் கண்டதும் அரைவாசி வருத்தம் போய்விட்டது.

மிதிலா மீராக்கு ஆரூரனுடனும் அரிகரனுடன் விளையாடக் கொடுத்த வைத்ததுக்கு திருகோணமலையானுக்கும் காளிதேவிக்கும் நன்றி சொல்லிக் கொண்டேன்.

ஆரூரனின் மழலை மொழி இப்போதும் என் காதில் கேட்கிறது.

““இச்... இச்.... இச்...” என்று சொல்லிக் கொண்டு தவழ்ந்து திரிந்த அரிக்குட்டியை மிதிலா மீரா தூக்கித் திரிந்தமை.... நாம் மீண்டும் டென்மார்க் வரும் தினத்தன்று ஆரூரன் எம்முடனே தூங்கியது... சித்தப்பா சின்னம்மா அவர்களை அன்புடன் பார்த்துக் கொண்டது... அவர்கள் மீது இவர்கள் குதிரைச் சவாரி செய்தது.... இப்ப நினைத்தாலும் இந்த நினைவுகள் மனத்தை நிறைத்துக் கொண்டு இருக்கிறன. ரக்கை கட்டிக் கொண்டு பட்டாம் பூச்சியாக மனம் பறக்கிறது.

இப்போது கூட மிதிலா ““வாடா அரிக்குட்டி” என தன் பிள்ளையைக் கூப்பிடுவதும்.... அடிக்கடி அவன் அரிக்குட்டி போல இருக்கின்றான் என பெருமைப்படுவதும்... நான் அதனைப் பார்த்து ஆனத்தக் கண்ணீர் விடுவதும் ஒரு சாதாரண நிகழ்வாக நிகழ்ந்து கொண்டு இருக்கிறது.

பியக்கிற் போல தள்ளி இருந்து பாசம் காட்ட என்னால்

முடியவில்லை.

*ஏன்?... ஏன்??...*

*என் பிள்ளைகளும் என் பிள்ளைகள் இல்லை... தம்பி பிள்ளைகளும் என் பிள்ளைகள் இல்லை... எல்லாம் சாமியிட பிள்ளைகள். இந்தத் தத்துவங்கள் எல்லாம் புரிகிறமாதிரியும் இருக்கிறது.... புரியாதது போலவும் இருக்கிறது.... அறிவு சொல்வதை எப்போதும் மனம் ஏற்றுக் கொள்வதில்லையே.*

*அந்த நேரம் அப்பா அம்மாக்கு வருத்தம் வந்து அங்கு போயிருக்காவிட்டால் இந்தமாதிரியான உணர்வுப் பரிமாற்றங் களும் உறவுப் பரிமாற்றங்களும் நடந்திருக்காமல் போயிருக்கலாம்.*

*அம்மாவுக்கு ஓரளவு சுகம் வர மீண்டும் அப்பா அம்மா ஊர் போக வெளிக்கிட்டு விட்டனர்.*

*மீண்டும் எம் குடும்பம் திக்குத் திக்காய் பிரியத் தொடங்கியது.*

*000*

# அப்பா என்ற அழகனின் அத்திவாரம் ஆடியது

அப்பா அம்மா தனியே என்பதால் மீண்டும் மீண்டும் பிரிவுத் துயரமும்... கூடவே நாம் அருகில் இல்லை என்ற குற்ற உணர்வுகளும் என்னையும் நித்தனையும் சரனையும் துவம்சம் பண்ணியபடி இருந்தன.

ரெலிபோனில் அழுது... அடம் பிடித்து... கடிதம் கடிதமாக எழுதி ஒரு மாதிரி என்னிடம் வர அப்பா அம்மா சம்மதித்தனர்.

காலாவதியாகி காணாமல் போன பாஸ்போட்டுக்குப் பதிலாக மீண்டும் ஒரு புதுப் பாஸ்போட் எடுத்து விசா எடுத்து மெல்ல மெல்மாக தேர் அசைவது போல அசைய வெளிக்கிட்டனர்.

பகலில் நிலவு வருமா? சூரியன் இரவில் வருமா?

என்னால் நம்ப முடியவில்லை.

சந்தோசத்தின் கால்கள் என் உடம்பின் ஒவ்வோர் கலத்திலும் நின்று நடனமாடியது. குருதிக்கலன்கள் அதிக ஒட்சிசனைக் காவிக் கொண்டு திரியத் தொடங்கியது.

புதுக்கட்டில்கள்... புதுப்படுக்கை விரிப்புகள்... மெத்தைகள்... தலையணைகள்... என ஒவ்வொரு சாமான்களாக டென்மார்க்கில் வாங்கி சேகரிக்கத் தொடங்கினோம். அவர்களின் வருகைக்கான செங்கம்பளவரவேற்பை செய்ய தினம் தினம் ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினோம்.

ஒன்றிரண்டு மாதங்களாக எப்போதும் மோகன ராகம் இசைத்துக் கொண்டிருந்த எம் வீட்டு ரெலிபோன் ஓர்

அதிகாலைப் பொழுதில் முகாரியை சிணுங்கியபடி வாசித்தது.

மறு முனையில் சரன்.

“அப்பா வழுக்கி விழுந்து இடுப்பு எலும்பு உடைந்து ஆஸ்பத்திரியில் வைத்திருக்கிறன்” என்றான்.

என் சந்தோசங்களும் வழுக்கி விழுந்து சுக்கு நூறாக உடைத்து போனதாக உணர்ந்தேன்.

மீண்டும் சரனுக்குப் போராட்டம்.

வீடும்.. ஆஸ்பத்திரியும் என மாறி மாறி அலைந்து கொண்டிருந்தான்.

அம்மா அழுதபடி இருந்தா.

அப்பாக்கு ஒப்பிரேசன் நடந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக அப்பா குணமானார். ஆனாலும் 80 வயதிலும் தான் பழையபடி சைக்கிள் ஓட முடியவில்லை என்ற கவலை அவருக்கு.

இங்கு அவர்கள் வர முடியவில்லை என்ற கவலை எனக்கு.

நினைத்த நேரம் நினைத்தபடி ஓடித்திரிந்த அப்பாவால் படுக்கையில் இருந்து பொல்லுப் பிடிச்சு நடந்து வாழ பெரிதாகப் பிடிக்கவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக சாப்பாடுகளைக் குறைத்தார்.

இதற்கு மேல் என்னால் இங்கு இருக்க முடியவில்லை.

நான் மிதிலா மீராவுடன் மீண்டும் இலங்கைக்குப் பறந்தேன்.

நித்தனும் கனடாவில் இருந்து வந்தான்.

எவ்வளவோ காலத்தின் பின்னால் எல்லோரும் ஒன்றானோம்.

மிதிலா, மீரா ஆரூரன், அரிகரனுடன் குதூகலமாக இருந்தனர்.

சின்னம்மா, சித்தப்பா, பூ அன்ரி, பூ சித்தப்பா, கிளியக்கா என அனைவரும் மீண்டும் ஒன்றாகச் சந்திக்க முடிந்தது.

ஆனால் அப்பா சாப்பிடத் தொடங்கவில்லை.

அவரின் உடலும் மனமும் எல்லாமும் போதும் எனச் சொல்லி விட்டது போலும்.

ஒருநாள் அப்பாவின் கட்டிலில் இருந்து சாப்பிட்டேன்.

செல்லமாக ஒரு வாய் சாப்பிட ““ஆ” காட்டுங்கோ என்று சொன்னேன்.

என்ன அதிசயம்!

மட மடவென்று எழுந்து உட்கார்ந்து என்னிடம் வேண்டிச் சாப்பிட்டார்.

காய்ந்து கருகிப் போன உணவுக்குழாய் திறந்து கொண்டது.

உமிழ்நீர் சுரப்பிகள் வேலை செய்தன.

சாப்பிட்டது சமிபாடாகியது.

இயற்கை இன்னும் கொஞ்சம் இரு என அப்பாவைச் சொன்னது போலும்.

பிள்ளையள் வந்த புழுகத்தில் அவர் எழும்பி விட்டார் என அம்மா சந்தோசப்பட்டார்.

மூன்று கிழமை லீவு மூன்று நாட்கள் போல ஓடி விட மீண்டும் கச்சதீவுக்குப் போன கதைதான். டென்மார்க்கிற்கு பறந்து வர வேண்டியதாயிற்று.

மீண்டும் அதே அழுகை... அதே கண்ணீர்... அதே பிரிவு... கடல் தாண்டி... கண்டங்கள் தாண்டி... நாடுகள் தாண்டி... நானும் நித்தனும் பிரிந்து வந்து விட்டோம்.

“அப்புசாமியின் பிள்ளைகள் அழக்கூடாது” என்று சொல்லி வழியனுப்பி வைத்தா அம்மா.

எப்படி அம்மா உங்களால் இத்தனை வயதிலும் உறுதியாக இருக்க முடிந்திருந்தது?

வாசலடிவரை வந்து வான் வீட்டை விட்டுக் கிளம்ப மிகச்

சாதாரணமாய் பெரிய கேற்றை பூட்டி விட்டு உள்ளே போனதை ஆச்சரியமாய் நினைத்துப் பார்ப்பேன்.

பாசமில்லாத அம்மா இல்லை. ஆனால் தன் பாசத்தைக் காட்டி எங்களை கரைத்து விட்டு விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் என்பது தான் உண்மை.

பழையபடி டெலிபோன் அழைப்புகள் தொப்புள் கொடியானது.

தபால் பெட்டிகள் தாலாட்டுப் பாடின.

கொதிக்கிற அரிசி வேகும் வரைதானே நெருப்புக்கு வேலை. அதன் பின் அது விலகி விடுகிறது.

இப்படியேதான் அப்பாவின் உடம்பும் மெல்ல மெல்ல தன் நடமாட்டத்தைக் குறைத்துக் கொண்டு வரத் தொடக்கியது.

பட்டாம்பூச்சியாக ஓடித்திருந்தவருக்கு நாலு சுவருக்குள் நடமாட அவரின் மனசு இடம் தரவில்லை. உடம்பும் மனசும் போராட போராட மூளையும் தன் இயலாமையை ஒப்புக் கொண்டது. அப்பாவின் மூளை தன் ஒவ்வொரு செல்களையும் மெது மெதுவாக கழட்டி விட்டபடி இருந்தது.

இப்படி யாரும் அறியாமல் உள்ளுக்குள் அவர் தன் ஆளுமையை இழந்தபடி இருந்தார்.

மற்றவர்கள் சொல்வதை அவர் மூளை ஏற்றுக் கொள்ளாத போதும் பிழையான புரிதலுடன் அவர் அளித்த பதில்கள் மற்றவர்களுக்குப் புரியாத போதும் அவர் மிகவும் கோபப் பட்டார். அவரது இயற்கை அதுவல்ல அவர் நோயின் பிடியில் சிக்கியிருந்தார்.

அதிக நேரம் தூங்கத் தொடங்கினார்.

ஏதோ வயதாகி விட்டது. அதனால் தான் இப்படி இருக்கிறார் என நினைத்திருந்தோம்.

2012ல் எனது “இப்படிக்கு அன்புள்ள அம்மா” புத்தக வெளியீடு

கொழும்பில் நடந்தது.

அப்பா அம்மா இதன் முதல் பிரதியை பெற்றுக் கொள்வதாக ஏற்பாடாகியிருந்தது.

அப்பாவை தள்ளுவண்டிலில் தள்ளியபடி சரனும் அம்மாவும் கூட்டத்திற்கு வந்திருந்தார்களாம். நான் டென்மார்க்கில் மிதிலா மீராவுடன். அங்கு போக முடியவில்லை. ஜீவாதான் விழாவை கொழும்பில் நடாத்திக் கொண்டிருந்தார்.

இந்த புத்தகத்தை வெளியீடு செய்வதன் மூலம் அப்பா, அம்மாவின் வயிற்றில் பால் வார்த்திருக்கிறன் என்று அன்று முழுக்க நினைத்தபடி இருந்தேன்.

ஆனால் அப்பாக்கு விழாவில் அதிக நேரம் காத்திருக்க முடியவில்லை.

சரன் விழா முடிய முதலேஅவரை வீட்டுக்கு கூட்டிப் போய் விட்டான் என அறிந்த பொழுது நான் ஆடிப் போய்விட்டேன்.

ஆம்! அப்பா தன் நினைவுகளை மெதுமெதுவாக இழந்து கொண்டிருந்தார் என்பது தான் உண்மை.

கறையான் புற்றெடுத்த மாதிரி அவர் மூளையை அறளை நோய் ஆக்கிரமித்தது. கூடவே இருமலும் சளியும் நீ முந்தி நான் முந்தி என அவர் நெஞ்சாங்கூட்டை விலை பேசின.

டென்மார்க்கில் இருந்து நான் டெலிபோன் எடுத்தால் சந்தோசமாக கதைப்பார். ஆனால் கதைக்க இருமல் விடாது.

நீ எப்ப வருவாய்? நீ எப்ப வருவாய்? என்பதுதான் அவர் வாயில் இருந்து அடிக்கடி வரும் கேள்வியாக இருந்தது.

தன்னைத் தான் இழந்து கொண்டிருப்பதை அவரே உணரத் தொடங்கி இருப்பார் என நினைக்கின்றேன்.

கூடுதலாக படுத்த படுக்கையாகவே இருக்கிறார் என அம்மா சொல்லுவா.

கோபப்படுவதும் உணர்ச்சி வசப்படுவதும் கூடுதலாக

இருந்தது.

நாம் கதைப்பது மற்றவருக்கு புரியாத பொழுது அதுக்கு அவர்கள் தரும் பதில்களும் எங்களுக்குப் புரியாதது பெரிய புதினமில்லையே! இந்த இயலாமை அதிக கோபத்தை வரப் பண்ணும்.

“இது அறளை பெயர்ந்த முதியவர்கள் எல்லோருக்கும் பொதுவான ஒரு பிரச்சனையாக இருக்கும் என நான் எங்கோ படித்தது எனக்கு நினைவில் வந்தது.

அப்பாக்கு அறளை வராமலிக்க சரன் அடிக்கடி பி12 மருந்தை ஊசி மூலம் கொடுத்திருந்தான். அம்மா அவரை குழந்தை போலப் பார்த்தா. குளிக்க வார்ப்பது... சாப்பாடு தீத்துவது என அம்மா அதிகாலை முதல் அந்திசாய்ந்து இரவு நித்திரைக்குப் போகும் வரை அப்பாவை உள்ளங் கையில் வைத்து தாங்கினார். என்ன இருந்தாலும் தன் பென்சன் வரும் வரை வங்கிப் புத்தகத்தை பொக்கற்றில் வைத்தபடி வரவு செலவு பார்த்துக் கொண்டிருப்பார்.

இந்த நிலையில் சரன் கனடா போக வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

என்னாலும் டென்மார்க்குக்கு அப்பா அம்மாவை கூப்பிட முடியாத நிலை. நானும் இங்கு குடும்பத்தையும் வேலையையும் விட்டு விட்டு ஊரில் போய் இருக்க முடியாத நிலை.

என் மனம் நதிமூலம் ரிஷிமூலத்தை தேடியது. ஏன் டென்மார்க் வந்தோம்? ஏன் அப்பா அம்மாவை என்னாலை பார்க்க முடியவில்லை என ஒரே குழப்பமாக இருந்தது. என் குற்ற உணர்வு என்னைக் குத்தி குடலை எடுத்தபடி இருந்தது.

முதுமையில் பெற்றாரை வைத்துப் பார்க்க முடியாத ஒவ்வொரு மனிதனும் அரை மனிதனே.

நம் வாழ்க்கை பூரணமடைய வேண்டுமானால் நம்மை தன் கர்ப்பத்திலும் நெஞ்சிலும் சுமந்து வளர்த்ததுகளை நாம் நம் உள்ளங்கையில் வைத்துப் பார்க்க வேண்டும்.

இந்தக் கடன்களை தீர்ப்பதற்கு எத்தனை ஜென்மங்கள் மீண்டும் மீண்டும் பிறக்கப் போகிறமோ தெரியாது.

““கிணத்துக் கட்டிலில் பிள்ளையை விட்டுட்டு வந்தவள் மாதிரி அவசரப்படுகிறாய்”..... ““மடியிலை நெருப்பைக் கட்டிக் கொண்டு துடிக்கிற மாதிரி துடிக்கிறாய்” என்ற எங்கள் ஊர்ப்பேச்சு வழக்கின் ஆழ அகலங்கள் அப்பா அம்மாவை தனித்து இருக்கவிட்டுவிட்டு இருக்கும் பொழுதுதான் புரியும்.

இந்தச் சிக்கல்களைத் தீர்த்து வைக்க அப்பா அம்மாவை பூ அன்ரியும் பூ சித்தப்பாவும் தாங்கள் வைத்துப் பார்ப்பதாக ஒத்துக் கொண்டார்கள்.

எமக்காக அவர்களை ஆண்டவன் தன் தூதர்களாய் அனுப்பி வைத்திருப்பது போலத் தெரிந்தது.

“ஏழேழு பிறவிக்கும் நானும் நித்தனும் சரனும் உங்களுக்கு அடிமை” என என் மனம் சுந்தரமூர்த்தி நாயனாராக அடிமைச் சாசனம் எழுதி பூ அன்ரி வீட்டு வாசலில் வைத்தேன்.

அந்த உயிலில் என் உயிர் சீல் வைத்தது.

பிறகென்ன அப்பா அம்மா வவுனியா வந்தார்கள்.

ஐயா அம்மம்மா மடியில் அவர்களின் நாலு பெண் பிள்ளை களும் இருப்பது போல ஒரு உணர்வு.

கொழும்பில் மாடி வீட்டில் முடங்கிக் கிடந்த அப்பா காற்றுப் பிடிக்க மெல்ல மெல்ல நடந்தார்.

அப்பா, அம்மா, பூ அன்ரி, பூ சித்தப்பா, சின்னப்பா, சின்னம்மா, கிளியக்கா என்று இந்த ஏழு கிளிகளும் ஒரு கூட்டுக் கிளிகளாக மீண்டும் பறந்து திரிந்தன.

நெல்லு விதைத்தால் பயிர் வளருது. அரிசி வருகுது. உமி விதைத்தால் எது வளரும்?

அப்படித்தான் நம்மட உடம்பும் வயோதிபம் வர அது வெறும் நாத்து வராத உமியாக மாறுது. எப்படி எங்கு விதைத்தாலும்

எங்கும் முளைப்பதுவும் இல்லை. வளர்வதும் இல்லை. உமியைக் கழற்றிய அரிசி போல முடிந்து போன வாழ்க்கைதான் வயோதிப வாழ்க்கை.

வல்லூறாக யமன் பறந்து திரிய.... தாயில்லாத பறவைக் குஞ்சுகளாக இவர்கள் வாழ்க்கை ஓடத் தொடங்கியது.

மழையில் நனையும் மண்ணாங்கட்டியாக... வயோதிபம் - வியாதி... வெறுமை... தனிமை... என சுகமாவதும் மீண்டும் வருத்தமாவதுமாக அவர்களின் வாழ்க்கை சுற்றத் தொடங்கியது.

*000*

அணையப் போகும் தீபம் பிரகாசமாக எரிவது போல... அந்திமாலைச் சூரியன் அழகுக் கோலம் போடுவது போல அப்பாவின் அந்திமக்கால வவுனியா வாழ்வும் சந்தோசமும் கனகாலம் நீடிக்கவில்லை.

அப்பாவின் உடம்பு தொடர்ந்து சாப்பாட்டை ஏற்க மறுத்தது... நினைவுகள் குறையத் தொடங்கியது... அப்பா தண்ணிச் சாப்பாடுதான் சாப்பிடுவார் எனத் தகவல் வர இன்னும் மூன்றுமாதத்தில் வரும் லீவில் போய்ப் பார்க்கலாம் என போட்டு வைத்திருந்த ரிக்கற்றின் காலம் வரை பொறுத்திருக்க முடியவில்லை.

அந்த வேளையில் அப்பாக்கு நினைவு இன்னும் குறைந்து போகலாம்... என்னைத் தெரியாமல் போகலாம்... என்னோடு கதைக்காமல் போகலாம்.... கற்பனை பண்ண முடியவில்லை.

உடனே போவதற்கு தீர்மானித்து விட்டேன்.

மருந்துக் கடைகளில் சின்னப்புட்டிகளில் விற்கும் சத்தான தண்ணிச் சாப்பாடு வாங்கி வரவா எனக் கேட்டேன்.

“வேண்டாம்” என்று சொன்ன பூ அன்ரி “எதற்கும் இரண்டு புட்டியை கொண்டு வா” என்றார்.

என்னால் கதைக்க முடியாது கண்கள் குளமாகி பெத்த

பிள்ளைகள் கிட்ட இல்லையே என விம்மினேன்.

“ஏன் அப்படிச் சொல்லுறாய்... அப்பா அம்மாவின் மூத்த பிள்ளைகள் நாங்கதானே. நாங்கள் வடிவாய்ப் பார்க் கின்றோம்... நீ வெளிக்கிட்டு வா” என பூ அன்ரி சொன்னா.

ஜீவா மனம் கேளாது எட்டுப் புட்டிகளில் ஊட்டச் சத்து சாப்பாட்டை வாங்கித் தந்து என்னை பயணம் அனுப்பி வைத்தார்.

ரொக்கட் வேகத்தில் சென்று கொண்டிருந்த என் மனத்துடன் கட்டார் விமானத்தின் வேகம் குறைவாகவே பட்டது.

மேகங்கள் துணையாக... காற்றைத் துணையாகவும் எதிராகவும் கொண்டு விமானம் கட்டுநாயக்காவில் போய் இறங்கியது.

பின் கொழும்பு... பின் வவுனியா.

பாலன் அண்ணையின் வாகனம் றோட்டில் ஊர்வது போலவே இருந்தது.

மனம் மட்டும் றோட்டில் செல்லும் வாகனங்கள் எல்லா வற்றையும் வெள்ளைக் குதிரையாக தாண்டிச் சென்றது.

வீட்டிற்கு வந்து அந்தப் புட்டி ஆகாரத்தை கொடுத்தவுடன் ஆச்சரியம் காத்திருந்தது.

அன்றிரவு நான் கண்டது கனவா?... நினைவா?...

அப்பா கட்டிலில் எழுந்திருந்து கதைக்கின்றார்.

என்னைக் கண்டு சிரிக்கின்றார்.

அடுத்த நாள் ஒரு உருவம்... காலை அப்பாவை குளிக்க வார்த்து... கிறீம் தடவி... பவுடர் பூசி... அம்மாக்கு ஒத்தாசையாக அவரின் உடுப்புகளை தோய்த்து...

யாரது?

பாரதி பாடிய கண்ணனா?

பாரதியின் சேவகனா?

எங்கிருந்து வந்ததான்? இடைச்சாதி நான் என்றான்? இங்கிவனை

இவனை நாம் பெற என்ன தவம் செய்தோம் நாம்?

நண்பனாய்.. மந்திரியாய்... நல்லாசானாய்...பண்பிலே தெய்வமாய்... பார்வையிலே சேவகனாய்... எங்கிருந்து வந்தான்? பாரதி சொன்ன கண்ணா? சேவகனா?

நாம் தினம் தினம் அபிசேகம் பண்ணும் அந்த திருப்பதி வெங்கடாச்சலபதியா? அதே கறுத்த உருவம்... திடமான தேகம்....சிரிப்பு... பரிவு....

பெயர் ரவி!

"அப்பனே உனக்கு நன்றி... நன்றி...

நான் செய்ய வேண்டியவற்றை நீ செய்கிறாய்"

"தான் திரும்பி வரும்வரை அப்பா அம்மாவைக் கவனமாக பார்க்கச்சொல்லி அவையின்ரை கையைப் பிடிச்சு சரன் ஐயா என்னட்டை தந்திட்டுப் போயிருக்கிறார். நீங்கள் யோசிக்க வேண்டாம்" என்றான்.

பூ அன்ரி.. சித்தப்பா... சின்னம்மா... கிளியக்கா... ராணி அன்ரி... கோகுலன்... பாமா... கௌரிதாசன் குடும்பம்... குமார் குடும்பம் என அப்பாவைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி... நல்ல ஆத்மாக்கள் அனைத்தும் அவருக்கு சாமரை வீசியபடியே நின்றிருந்தன.

அவர் காலுக்கு மேல் கால் போட்டு ராஜா போலப் படுத்திருந்தார்.

ரவிக்கு அடிக்கடி "தாங்யூ" போட்டபடியே இருந்தார்.

அப்பாக்கு என்னை நன்கு தெரிந்தது.

அடிக்கடி ஜீவா-மிதிலா-மீரா என்று கூப்பிட்டபடியே....

"நித்தனும் சரனும் வரவில்லை... இனித்தான் வருவினம்" என்கிறார்.

இடைக்கிடை "நான் வேலுப்பிள்ளை வாத்தியாரின் மகன்"

என்பார்.

“அக்கா... அண்ணா... குகதாசன் எங்கே ” என்பார்.

தன் உடுப்பைத் தானே தோய்த்து... தானே அயன் பண்ணி... மடிப்புக் குலையாமல் போட்டுச் செல்லும் அவர் இன்று மற்றவர்கள் கையில். என்ன செய்வது?

அவரைச் சுற்றி ஒரு கூட்டமே அவருக்கு பணி விடை செய்யக் காத்திருந்தார்கள்.

“உனக்கு இனி என்ன குறை. மகள் வந்திட்டாள் தானே” என்று அம்மாவிடம் சொல்லிச் சிரிக்கின்றார்.

ஆனால் சாப்பாடில்லை... நடையில்லை... படுத்த படுக்கை தான்... நான் கொண்டு வந்த புட்டி மருந்து மட்டும் அவருக்கு பிடித்திருந்தது.

நான் கொண்டு வந்த ஊட்டச் சத்து பானத்தை ஒரு முறை குடிக்க கொடுத்தேன்.

சந்தோசமாகக் குடித்தார்.

இந்த சத்துச் சாப்பாட்டு கதை அறிந்து சிவஞானமாமாவும் விசுவலிங்கமாமாவும் பெட்டி பெட்டியாக கொடுத்து விட்டார்கள். எவர் பிரான்சிலும் இருந்தும் கனடாவிலும் இருந்து போனாலும் இந்தப் புட்டிகளும் அவர்களுடன் பயணப்பட்டன.

அடிக்கடி ஊர் போகும் நினைவுகளை தடுத்து நிறுத்தியது என் பையில் சிணுங்கிய என் போன்.

“எங்கே நிற்கின்றாய்”என ஜீவா விசாரிக்கின்றார்.

“பியற்கிற்றுடன் கதைத்ததில் நேரமாய்ப் போச்சு... திரும்பி வந்து கொண்டிருக்கிறன்” என சொல்லிக் கொண்டு நடையைக் கட்டுறன்.

000

# மூளாய் ஆஸ்பத்திரிக்கு போக ஆயத்தம்

வரவர இந்தக் குளத்துக்கை இருக்க முட்டாக இருக்குது.

"கோழி முட்டையிக்க இருக்கிற குஞ்சு நினைக்குமாம் அதுதான் உலகம் எண்டு... பயத்துக்க இருக்கிற வண்டு நினைக்குமாம் இதுதான் உலகம் எண்டு... இப்பிடித்தான் உன்ரை பிள்ளையும் இதுதான் உலகம் எண்டு நினைக்கப் போகுது"என்னென்னமோ நிறையக் கதைக்கின்றா அம்மம்மா.

"நான் தான் உலகம் எண்டு சொல்லி என்ர பிள்ளையை நான் வளக்கமாட்டன் அம்மா. காலால இரையைக் கிளறி விடுகிற கோழியாக மட்டும் தான் நான் இருப்பன். அந்த இரையை தானே கொத்தி எடுக்கும் குஞ்சாகத்தான் என் பிள்ளையை வளர்ப்பன். என்ர பிள்ளை எப்பவும் தன்ர காலிலை சுயமாக நிக்க வேணும்" வயிற்றை இரு கைகளாலும் பொத்தி உயர்த்தியபடி அம்மா சொல்லுறா.

"இந்தாங்கோ மாமி இதில நிறைய தோடம்பழங்கள் இருக்குது. கரைச்சு குடிக்க குடுங்கோ" என்ர பிள்ளைக்குத் தண்ணி விடாய்க்கப் போகுது.

அப்பா ஒரு கூடை நிறைய தோடம்பழங்களை அம்மம்மாவிடம் கொடுக்கிறார்.

"இப்பதான் மோர் குடிச்சனான்" அம்மா சொல்லுறா.

"தொப்புள் கொடியில நிறைய சீரான இரத்தோட்டம் இருக்க வேணும். பிள்ளையின்ரை மூளைக்கு தேவையான ஒட்சிசன்

காற்று ஒழுங்காக கிடைக்க வேணும். அதனால நீ நிறைய தண்ணி குடிக்க வேணும். கூடவே நிறைய பாலும் குடி. நீ பால் குடிச்சாத்தான் பிள்ளைக்குப் பிறகு பால் சுரக்கும்"

அப்பா பிரசங்கம் செய்வது போலச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

"மருமகன் டொக்டருக்கு படிச்ச மாதிரி கதைக்கிறியள்" அம்மம்மா சிரிக்கின்றா.

"எல்லாம் ஒரு ஆர்வம் தான். குழந்தை பிறக்கிறது பற்றி நான் நிறைய வாசிக்கிறனான். என்ர பிள்ளைய இப்பவே கவனமாகப் பார்க்க வேணும். அவள் 10 மாதம் வயித்தில சுமந்தாள் எண்டால் நான் சாகும்வரை என்ர பிள்ளைய மனத்தில சுமப்பன்.

எனக்கு அம்மாட்ட இருந்து அப்பாட்ட தாவிப் போகணும் போல ஒரு யோசனை வந்தது.

அப்படியே காலை நீட்டி அம்மாட்ட வயித்துக்கு ஒரு உதை உதைத்தேன்.

"ஐயோ வயிறு வலிக்குது. பிள்ளை உதைக்குது. துடிக்குது" அம்மா அணுங்கினா.

இந்தப் பாதை சரிவராது எண்ட புத்தி வந்துவிட நானும் அடக்க ஒடுக்கமாக "கம்" என்று இருந்து விட்டேன்.

"சூட்கேசுக்க எல்லாச் சாமான்களையும் இப்பவே அடுக் குங்கோ. நாளைக்கு விடிய மூளாய் ஆஸ்பத்திரிக்கு போக வேணும்"

"இந்தா இதையும் சேர்த்து பையுக்கை வை" ஐயா 5 பனங்கட்டிக் குட்டான்களை அம்மம்மாட்ட குடுக்கிறார்.

"ஏன் மூளாய்க்கு போகிறியள். பெரியாஸ்பத்திரி சரி யில்லையோ" பக்கத்து வீட்டு பத்தினி மாமி வாறார்.

"இல்லையடி பிள்ளை. அங்கதான் டொக்டர். சம்பந்தர் இருக்கிறார். ஒப்பிரேஷன் எண்டாலும் எதுக்கும் முதலே

கவனமாய் இருக்க வேணும் எண்டு மருமகன் நினைக்கிறார்"

"வாட்டில இருக்கிற நோயாளியின் சொந்தக்காரர் தங்கிறதுக்கு மூளாய் ஆசுபத்திரியிலை தங்குமடம் போல வீடுகள் இருக்கு தாம். அதுதான் நாங்க மாறி மாறி நிற்க சுகமாய் இருக்கும்" அம்மம்மா கதைச்சு கதைச்சு சாமான்கள் அடுக்குகிறா.

"பிள்ளை பிறந்து வந்த உடனை சொல்லுங்கோ. உங்கட பேரப்பிள்ளைக்கு நான் தான் கோரோசனை பருக்கிறது... குளிக்க வார்க்கிறது... எல்லாமே... சரியா"

"ஓமடி... கட்டாயம் வா. நீ இல்லாமலா நான் பிள்ளைப் பெத்துப் பாக்கிறது"

"இருட்டிக் கொண்டு வருகுது. நான் வாறன்" பத்தினி மாமி புறப்பட்டு விட்டா.

"செக்கல் நேரம் கவனமாப் போடி பிள்ளை" ஆச்சி சொல்லுறா.

என்னது அது?

செக்கலா..

இருட்டா...

சூரியன் மறைஞ்சாச்சா?

கடற்கரைப் பக்கமாய் அது மறைஞ்சு போகுதாம். நான் போய்ப் பார்க்கப் போறன்.

எட்டிப் பிடிக்கலாமா இந்தச் சூரியனை...

ஐயோ... ஐயோ... நான் கடலுக்கை விழுந்து விட்டேன்.

சூரியன் ஓடி விட்டது.... ஐயோ... ஐயோ... நீச்சல் அடிக்கின்றேன்.

ஆனால் கரை தெரியவில்லை.

000

அடக் கடவுளே... மீண்டும்... மீண்டும்... இந்தக் கனவு...

ஏன்?... எதுக்கு?... அனி சொன்னது போல இதில என்ன நடக்குது எண்டு பார்ப்பம்.. தண்ணி... கடல்... என்றால் மனிதரின் உணர்வுகளைக் குறிக்கும் என அனி சொன்னது நினைவுக்கு வந்தது.

சூரியனைப் பிடிக்கப் போறது?

ஒருவேளை நான் பெரியதாக என்னவோ சாதிக்கப் போறன் போல இருக்குது... சரி என்ன ஆனாலும் தைரியமாக இருக்க வேணும் என நினைத்துக் கொண்டேன்.

“நீ நீந்திக் கடக்க முடியாத கடல் உன் பாசக்கடல்.... அது பரந்தாமன் பள்ளி கொள்ளும் பால்கடலை விடப் பெரியது. போடி போ... நீயும் உன் கனவும்” என் மனம் அடித்துக் கொள்கிறது.

விடிய 5 மணி அலாரம் அடிக்க என் கனவும் கலைய... ஜீவாவும் எழும்ப... மறுநாள் புலரத் தொடங்கியது.

இன்று வெள்ளிக்கிழமை. சனிக்கிழமை இங்கு ஒரு கல்யாண வீடு. பிள்ளைகளையும் எம்மையும் அழைத்திருந்தனர். அவர்கள் இருவரும் குடும்பமாய் இன்று பின்னேரம் வந்து நின்று எங்களுடனேயே வெளிக்கிட்டு வருவார்கள்.

மருமகன்மாருக்கு என் சமையல் என்றால் நல்ல விருப்பம்.

“அம்மா எங்கட எல்லா அல்பங்களையும் ஒரு பெட்டியில போட்டு வையுங்கோ. எல்லாத்தையும் கம்பியூட்டரில் பதிந்து வைக்கப் போறன்” என மீரா சொல்லிக் கொண்டு இருந்தவள்.

பிள்ளையள் வருவதற்கிடையில் சகல வேலைகளையும் முடித்து விடும் அவசரத்தில் நான் காலுக்குச் சில்லைப் பூட்டிக் கொண்டேன்.

மனமும் உடம்பும் உற்சாகமாக விசிலடித்து வேலை செய்யத் தொடங்கின.

நாம் டென்மார்க் வந்த காலத்தில் இருந்து இன்று வரை சேர்த்த அத்தனை அல்பங்களையும் ஒரு பெட்டியுள் போட்டேன்.

ஒரு பெரிய அல்பம் மட்டும் அதனுள் அடங்க மாட்டன் என அடம் பிடிக்குது.

சரி வெளியே வா என அதனைக் கையில் எடுத்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தேன்.

அந்தப் பெரிய அல்பம் என்னைப் பார்த்து சிரித்தது.

தூக்கி என் மடியில் வைத்து அன்பாகவும் ஆதரவாயும் ஒவ்வொரு பக்கமாகத் தடவினேன்.

ஒவ்வொரு பக்கங்களும் ஆயிரம் ஆயிரம் காவியக் கதைகளை சொல்லியபடி இருந்தன.

இது எம் சுற்றுலாப் பயண அல்பம்.

எங்கட பிள்ளையள் கல்யாணம் கட்டிப் போக முதல் அவர்களைக் கூட்டிக் கொண்டு பெரிய ஒரு சுற்றுலாப் பயணம் செய்து அவைக்கு நல்ல அனுபங்களைக் கொடுக்க வேணும் என ஜீவா அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தவர்.

கட்டிக் கொடுத்த பிறகு எப்பிடி வசதிகள் வருமோ தெரியாது என்பதால் 2012ம் ஆண்டு டெல்லியில் தொடங்கி தமிழ்நாடு... கேரளா வழியாக இலங்கைக்குப் போய் வவுனியா சங்கானை அனலைதீவு வரை போறதுக்கான ஆயத்தங்களைச் செய்தோம்.

2012ல் அக்டோபரில் பயணம் முடிவாகியது.

இதற்கிடையில் மிதிலாவுக்கு கல்யாணப் பேச்சு வந்து அதுவும் முற்றாகி விட்டது.

தொடர்ந்து வந்த நல்ல முகூர்த்தத்தில் கல்யாணம் நிச்சயதார்த்தம் நடந்தேறியது.

ஏற்கனவே திட்டமிட்ட பயணத்தை தொடர்வதாயும் அச் சமயம் இந்தியாவில் திருமணத்திற்கான சாமான் சக்கட்டுகளை வாங்கிவருதாயும் திட்டமிட்டிருந்தோம்.

அல்பத்தின் முன் பக்கத்தில் டெல்லி விமான நிலையம்... அங்கு பேராசியர் திரு. பாலசுப்பிரமணிய ஐயா எம்மை வரவேற்க

முகம் மலர்ந்து நிற்கின்றார்.

இதற்கு முதல் வருடம் ஐயா டென்மார்க் வந்து எம்முடனே தங்கி பல இடங்களைச் சுற்றிப் பார்த்தவர். 3 கிழமை எங்களுடன் தங்கியிருந்தவர். மிதிலா மீராக்கு தன்னை “நானா” (இந்தியில் அம்மப்பா) எனச் சொல்லி அழைக்கப் பண்ணி அவர்களுடன் மிக அன்பாக இருந்தவர். அதே நேரம் அவர் மிதிலா மீராக்கு குருவாக சமஸ்கிருத மந்திரங்களை சரியாக உச்சரிக்க கற்றுக் கொடுத்தார்.

அவர் வந்திருந்த நாட்கள் டென்மார்க்கிற்கு அப்பா-அம்மா வந்திராத குறைகள் இல்லாமல் போனது போல உணர்ந்தேன்.

பாலைவனத்து மழையாக ஐயாவின் மூன்று கிழமை டென்மார்க் வருகை விரைவில் முடிந்து விட்டது.

மீண்டும் அதே பாசமும் பண்பும் டெல்கி விமான நிலையத்தில் எமக்காக காத்திருந்தது.

ஐயாவின் மகன் வெங்கடேஷ் வீட்டில் தங்கினோம்.

ஐயாவின் பேத்தி உத்திராக்கு மிதிலா மீராவின் வயது. எங்களுடன் நன்றாக ஒட்டிக் கொண்டார்.

என் உடம்பு டெல்கியில் நிலை கொண்டிருந்தாலும் மனம் சதா அப்பா அம்மாவை தேடியபடியே இருந்தது.

நான் சின்னப் பிள்ளையாக இருந்த பொழுது நேரு சிறையில் இருந்து தன் மகளுக்கு எழுதிய கடிதங்கள் பற்றி அப்பா சொல்லித் தந்திருந்தார்.

அந்த டெல்கி.... காந்தியின் சத்திய சோதனையை படித்த பொழுது என் கண்முன்னே நின்ற டெல்கி.... மகாபாரதக் கதைகளை அம்மா சொல்லி தந்த பொழுது என் மனத்திரையில் பதிந்த குருசேத்திரம்... டெல்கிக்கு அண்மையான கண்ணன் பிறந்த கோகுலம்.... ஆக்ரா நகரில் ஜமுனா நதிக்கரையோரம் அமைந்திருந்த தாஜ்மகால் என அத்தனையும் பார்த்து மகிழ்ந்த பொழுது அப்பா அம்மா நித்தன் சரன் இவற்றைப் பார்க்க

வில்லையே என்ற கவலை இடைக்கிடை எழுத்து வந்து கண்களை ஈரமாக்கி விட்டுப் போகும்.

டெல்லியில் எங்கு போனாலும் எமக்கு முன்னால் அல்லது பின்னால் அவர்கள் வருவது போல பிரமை இருந்து கொண்டே இருந்தது.

எனது "இப்படிக்கு அன்புள்ள அம்மா" ஜீவாவின் "சங்கானைச் சண்டியன்" நூல்களை ஹிந்தியில் பாலசுப்பிரமணிய ஐயாவே மொழிபெயர்ப்புச் செய்து டெல்கி நேரு பல்கலைக்கழகத்தில் வெளியிடவும் ஒழுங்கு செய்திருந்தார்.

நேரு பல்கலைக் கழகத்தின் வாசலில் கால்கள் பட்ட பொழுது "என்ன தவம் செய்தேன்" என்ற வார்த்தைகளே நினைவுக்கு வந்தது.

மனசுக்குள் மத்தாப்பு.

அதற்கு அடுத்த நாள் டெல்கி தமிழ்ச் சங்கத்தில் எம் நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு அறிமுகம் நிகழ்ந்தது. மிகப் பெரிய பேராசிரியர்கள்... இலக்கியவாதிகள் வந்திருந்தனர்.

நூலை வெளியிட்டு வைத்த இளைப்பாறிய இந்தியத் தூதுவர் ஒருவர் - பழுத்த ஞானி - திரு. கிருஷ்ணகுமார் வித்யார்த்தி அவர்கள் "எனக்கு ஏற்கனவே 5 பெண் பிள்ளைகள். 5 மருமகன்கள். இன்று எனக்கு 6வது பெண் பிள்ளையும் 6 வது மருமகனும் கிடைத்துள்ளார்" என்ற பொழுது எங்கள் இருவரின் கண்களும் கலங்கின.

அவர் என்னை மகளாகவும்... ஜீவாவை மருமகனாகவும் தத்தெடுக்க இந்த இலக்கியமும் எம் படைப்புகளும் தானே பாலம் போட்டன. நன்றி இறைவா!

உண்மையான இலக்கிய நேசிப்பு எங்களுக்கு பல உண்மையான உறவுகளைத் தந்து கொண்டிருந்தது என்ற உண்மையை இதில் நான் பதிவு செய்தே ஆக வேண்டும்.

இந்தச் சபையின் பாராட்டுக்களைக் கேட்க அப்பா அம்மா

பக்கத்தில் இல்லை என்ற வேதனை இருந்தாலும் இந்தப் படங்களும் ஒளி-ஒலி நாடாக்கள் அவர்களுக்கு அந்த சந்தோசத்தைக் கொடுக்கட்டும் என என்னையே நான் சமாதானம் செய்து கொண்டேன்.

அடுத்தநாள் செங்கோட்டை... தாஜ்மகால்.... கிருஸ்ணன் பிறந்த அந்தச் சிறைக்கூடம்... மதுராபுரி... காந்தி சமாதி.. நேரு சமாதி... இந்திரா காந்தி இல்லம்... அவர் இறந்த பொழுது அவர் அணிந்திருந்த இரத்தம் தோய்ந்த ஆடை... அவரின் துணியினால் ஆன கைப்பை... செருப்பு... என அனைத்தையும் பார்த்தோம்.

அல்பத்தின் பக்கங்கள் என்னை சென்னைக்கு இழுத்துச் செல்கின்றன.

சுமார் 800 பேர் கலந்து கொள்ள இருந்த மிதிலா விஜியின் திருமணத்திற்கு கல்யாணச் சாமான்கள் வாங்குவதற்கு எமக்கு நான்கு நாட்கள் மட்டுமே இருந்தன.

தியாகராஜா வீதிகளில் உள்ள பெரிய அங்காடிகளில் எமது பொழுது புலர்ந்து அந்தி சாயும் வரை விரைவாக நடை போட்டுக் கொண்டும், ஓடிக்கொண்டும் இருந்தது.

நேரத்தை மிச்சம் பிடிப்பதற்கு 200 மீற்றர் தூரத்தைக் கூட கடப்பதற்கு ஆட்டோக்காரனுடன் மீற்றர் போடுறியா... இல்லையா என அவனுடன் சண்டை போட்டுக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தோம்.

அங்கிருந்து அக்டோபர் 2ம் திகதியில் வரும் காந்தி ஜெயந்தி தினத்தில் எமது ஆசான் திரு. சின்னப்பபாரதி அறக்கட்டளை விழாவில் கலந்து கொள்ளச் சென்றோம்.

என்னை அன்புடன் ““மகளே” என்றும்... ஜீவாவை “மருமகனே” என்றும் அழைத்து எம்முடன் மிகவும் பாசமாய் இருப்பவர்.

அவர் வீட்டிலேயே தங்கி அவரினதும் அவர் பாரியாரினதும் ஆசிகளை மிதிலா மீராக்கு பெற்றுக் கொண்டு விழா நடந்த மாலையே கேரளாக்குப் பயணம் ஆனோம்.

விழாவில் ஜீவநதி ஆசிரியர் தம்பி. பரணீதரனையும் அவர் மனைவி. எழுத்தாளர் விஸ்ணுவர்த்தினியையும் துணை ஆசிரியர் வெற்றிவேல் துஷ்யந்தனையும் சந்தித்தது எமக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. அந்த ஆண்டின் சிறந்த சிற்றிதழ் விருதை ஜீவநதி பெற்றிருந்தது.

கேரளாவில் திரு. பாலகிருஸ்ணன் ஐயாவின் தம்பி திரு. பத்மநாதன் எம் இருவரின் நூல்களை மலையாளத்தில் மொழி பெயர்த்து கல்லடியில் உள்ள சங்கராச்சியார் பல்கலைக் கழத்தில் வெளியீடு செய்ய ஒழுங்கு செய்திருந்தார். அத்துடன் வவுனியாவில் இருந்து புலம் பெயர்ந்து இலண்டனில் வாழும் திரு. உதயனின் நூல்களையும் மலையாளத்தில் மொழி பெயர்ப்பு செய்து அவற்றையும் வெளியிட ஒழுங்கு செய்திருந் தார். அந்த விழாவில் கலாநிதி. தமிழ்மணி. அகளங்கன், கலாநிதி குணசேகரன் ஆகியோரும் அவர்களும் மொழிபெயர்ப்பாளர் உபாலி லீலாரத்னா, எழுத்தாளர் அந்தனி ஜீவா ஆசிரியர் அவர்களும் பிரான்சில் இருந்து இளங்கோவனும் வந்து கலந்து கொண்டார்கள்.

அவர்கள் வீட்டின் விருந்தோம்பலும் அவரின் ஊரில் தங்கியிருந்ததும் மிக நல்லதோர் அனுபவம்.

கல்லடியில் வேதபாராயணம் செய்யும் பாடசாலையைப் பார்த்த பொழுது "மறுபிறப்பில் ஐயராகப் பிறந்து வேத மந்திரங்கள் ஓதக் கற்றுக் கொள்ள வேண்டும்" என மீரா சொன்னது இப்போதும் எனக்கு ஞாபகம் இருக்குது.

என் ஜீவ அணு அவளில் ஓடு து என் று மிக்க மகிழ்ந்தேன்.

அந்தளவு அந்த இடத்தில் தெய்வீகம் பரவியிருந்தது.

அந்த தெய்வீக காற்றைச் சுவாசித்த மறுநாள் சங்கராச்சியார் பல்கலைக் கழகத்தில் எம் கால்கள் பதிந்தது.

முன் பின் தெரியாத ஊர்...

முன் பின் தெரியாத மக்கள்...

ஆனால் ஊரின் பல இடங்களில் எங்கள் படங்களுடன் பேனர்கள்....

மீண்டும், "இறைவா இது உன் திருவிளையாடலா?",என மனம் அவனையே நினைத்தது.

அங்கு எனது புத்தகத்தை வெளியிட்டுப் பேசிய ஒரு இலக்கிய நண்பர் ஒருவர், இந்த தாய்க்கு நான் மகனாக இருக்க ஆசைப் படுகின்றேன் என கூறிய பொழுது என்னையும் அறியாமல் என் கைகள் அப்பாவையும் அம்மாவையும் நினைத்து கை எடுத்துக் கும்பிட்டேன்.

ஒரே நாட்டின் வட திசையில்

என்னை மகளாக தத்தெடுக்க விரும்பும் ஒருவர்!

அதே நாட்டின் தென் திசையில் தன்னை மகனாக என்னிடம் தத்துக் கொடுக்க விண்ணப்பிக்கும் ஒருவர்!!

இலக்கியம் எங்கள் உறவுகளின் பரப்பளவுகளை அதிகமாக்கிக் கொண்டேயிருந்தது!!!

தொடர்ந்து வந்த தினங்களில் குருவாயூரப்பன் தரிசனம்... தென்னந்தோப்புகளில் கோயிலுக்கான யானைகள். சுமார் 50 யானைகள். குருவாயூரானை சுமக்கும் யானைகள். ஆனைக்கோட்டை என்பது அந்த இடத்தின் பெயர்.

அடுத்த நாள் படகு வீட்டுப் பயணம்.

அனலைலோஞ்சியே ஒரு பெரிய வீடுபோல பெரிதாக உருவெடுத்தது போல பெரிய படகு வீடு.

நதிக்கரை... நல்ல காற்று... நாணற் புற்கள்.. .தாமரைப் பூக்கள்... அல்லி மொட்டுகள்...செம் ஆம்பல்களின் சிலிர்ப்புகள்... ஒற்றைக் காலில் மீனுக்குத் தவிக்கும் வெண் கொக்குகள்... நதியோரத்தில் அம்மணமாக குளிக்கும் சின்னஞ் சிறுசுகள்... தென்னந் தோப்புகளை வருடி நம்மிடம் வரும் இளம் தென்றல்... இவையெல்லாம் இதுதான் சொர்க்கம் எனச் சொன்னது.

மீண்டும் மீண்டும் அனலையின் காற்று தழுவுவது போன்ற ஒரு உணர்வு.

அது அன்னை மடி என்றால் இது தந்தை மடி போலிருந்தது.

எங்கள் மூதாதையினரின் நாடு இதுதான் என்பதற்கான பல பல சாட்சிகள் வழியெங்கும்.

வியக்க வைக்கும் இயற்கையின் ஒற்றுமைத் தன்மை... கேரளா...அனலைதீவு.. மனமும் நினைவும் மாறி மாறி ஊஞ்சலாடின.

நாம் இந்த இயற்கைகளை இவ்வாறு வியந்து கொண்டிருக்க...

கேரளத் தென்றல் காற்றில் சொல்லாத செய்தி....

வெறிச்சு நின்ற அந்த நீல வானம் சொல்லாத செய்தி...

அங்கிருந்த பறவைகள் பாடாத செய்தி....

குருவாயூரப்பன் உணர்த்தாத உணர்வு....

என் கனவுலகம் காணாத காட்சி...

கைத்தொலைபேசியில் கனத்த செய்தி கனத்துக் கிடைத்தது.

ஆம்!

சின்ன சித்தப்பா சின்னம்மாவையும் எங்களையும் இவ்வுலகையும் விட்டு விட்டு வெகுதூரம் போய்விட்டாராம்.

எல்லாக் கிரியைகளும் முடிந்த பின்புதான் எமக்கு செய்தி கிடைத்தது.

கலங்கிய கண்களுடனும் கனத்த இதயத்துடனும் இந்தியாவில் இருந்து இலங்கை வந்தோம்.

கட்டுநாயக்கா... கொழும்பு... வவுனியா.... வேப்பங்குளம்... சித்திவிநாயர் வீதி என எங்கள் வான் ஓடி வந்து சித்தப்பா இல்லாத அந்த வீட்டு வாசலில் நின்றது.

வீட்டின் நடுவில் இருந்த குத்துவிளக்கு ஒளி மட்டும்

சொல்லியது அதனுள் சித்தப்பா அணையாமல் இருக்கின்றார் என்று.

அவரின் தலைமாட்டில் இருந்த குத்து விளக்கு இன்னமும் அணையாது எனக்காக காத்திருக்காம் என எல்லோரும் சொல்லி அழுதார்கள்.

இந்த இடத்தில் இருந்து அவர் எனக்கு அப்பாவாய்... அம்மா வாய்.. நண்பனாய் எத்தனையோ அறிவுரைகள் சொல்லித் தந்திருக்கிறார்.

சித்தப்பா இல்லாத வீடும் வளவும் உறவுகளும் என்னைப் பாடாய்ப் படுத்தின.

சித்தப்பாவின் தங்கை தமைக்கை மற்றும் உறவுகளும் வந்திருந்து அவரது அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்தனர். பிள்ளையாக நானும் சேர்ந்து நின்று அந்தரட்டிக் கிரியைகளைச் செய்தேன்.

இத்தனை துன்பங்களுக்கும் இடையில் வவுனியாவில் அம்மாவின் இருபுறமும் அவாவைக் கட்டிக் கொண்டு மிதிலா மீரா படுத்திருந்த பொழுது நான் பிறந்த பலனை அடைந்ததாக உணர்ந்தேன்.

அடுத்தடுத்த நாள் சங்கானை மானிப்பாய் - யாழ்ப்பாணம் - அனலைதீவு என்ற நான்கு இடத்திலும் நான் படித்த பாட சாலைகள்... ஜீவா படித்த பாடசாலைகள் எல்லாவற்றையும் மிதிலா மீராக்கு காட்டி ஆனந்தப்பட்டேன்.

அந்தப் பாடசாலைக் கிணறுகளில் ஊறும் ஊற்றுத்தான் இன்றும் என்னுள்ளும் ஜீவாவினுள்ளும் ஊற்றெடுக்கிறது.

அவ்வாறே ஜீவாவின் வீடும் எனது வீடும் எஞ்சியிருந்த அத்தி வாரத்தைக் காட்டி இதில் தான் நாங்கள் படித்திருந்தோம்... இங்கேதான் படுத்திருத்தோம் என சொல்லவது கண்ணீர் கலந்த கௌரமாய் இருந்தாலும் கவனிக்காமல் போன காணிகளை எங்கள் அந்திமக் காலத்தில் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தோம்.

எங்கள் வீட்டில் இருந்த பூவரசு பூக்களைத் தள்ளி தன் மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டு நின்றது.

பாத்தி போடப்படாத பனம் பழங்கள் நிலத்தில் முளை விட்டிந்தன.

அனலை தீவுக்கு என்று எப்போதும் ஒரு அழகு உண்டு.

ஆம்!

யாழ். மாவட்டதின் தென் மேற்கு பகுதியில் உள்ள சப்ப தீவுகளில் இது ஒன்று.

இந்தச் சின்னத் தீவிக்கு இயற்கை அளவுக்கு அதிகமாகவே தன் செல்வத்தை அள்ளிக் கொடுந்திருந்தது. அது தான் எங்கள் ஊரை மிதிலா மீராவிற்கு பிடிக்க காரணமாய் இருந்திருக்கலாம்.

ஜீவாவின் அச்சில் வந்த முதல் கதையே “மெயில் லோஞ்சு” என்பது தான்.

ஊர்காவற்துறையில் இருந்து காலையில் புறப்படும் அந்த படகில் பயணப்பட்டு... மாலையில் தபால்களை எடுத்து வரும் அதே லோஞ்சில் பயணப்படும் வரை... எங்கள் ஊரையும், எங்கள் ஊர்வெள்ளாந்தி மனிதர்களைக் காட்சிப்படுத்தினார். அவரது எழுத்துலகப் பயணத்தில் எங்கள் ஊர் அகரமாய் அமைந்ததில் எப்போதும் எனக்குப் பெருமை.

ஒரு சின்னத் தீவுக்குள் ஏழு வட்டாரங்கள். அதனுள் பத்திர காளியம்மன் கோயில், கௌரியம்மாள் கோயில், சிதைந்து போன போத்துக்கேயரின் கோட்டை மாதா, வீரபத்திரர் கோயில், வடலிக்குளம் ஞானவைரவர் ஆலயம், இராஜ ராஜேஸ்வரி அம்பாள் கோயில், ஐயனார் கோயில், பெரியபுலம் சங்கரநாத மகா கணபதிப்பிள்ளையார் கோயில், ஊடு முருகன் கோவில், பூதேவி ஸ்ரீதேவி சமேத மகாவிஷ்ணு (வல்லியப்பர்) கோயில், வேளாங்கன்னி மாதா கோயில், தெற்கு சங்கரநாதர் முருகமூர்த்தி கோயில், எழுமங்கை நாச்சிமார் அம்பாள் கோயில், கொம்மாசல்லி வைரவர் கோயில், ஒல்லாந்தர் காலத்திற்கு முற்பட்ட புளியந்தீவு நாகேஸ்வரன் கோயில் என

இத்தனை கோயில்கள். இவற்றை விட அண்மையில் கட்டப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம்.

எங்கள் தீவைச் சுற்றியும் தீவின் நடுவிலும் இருந்து இந்த ஆலயங்கள் எங்களைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கின்றன.

இன்று இந்தக் கோயில்களின் பெருவிழாக்களுக்கு அனலையின் புலம் பெயர் தமிழர்கள் வந்து போகின்றார்கள்.

மக்கள் தொகை குறைந்து விட்டாலும் அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அனலைதீவு வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் என்ற மூன்றும் இன்றும் புதிய நாற்றுகளை நட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆம்!

நாற்றுகள் தான் எங்கள் ஊரின் பலம்.

ஒன்று: பக்தி - ஆன்மீகம். இவற்றை எங்கள் கோயில்களில் காணலாம். அங்கு அவை அதிகமாகவே விதைக்கப்படுகிறன.

இரண்டாவது: எம் பள்ளிகள். இங்கு விதைக்கப்படும் வீரிய மான நாற்றுகள் இன்று உலகமெங்கும் பெரிய விருட்சங்களாக வளர்ந்து வானைத் தொட்டு நிற்கிறன.

மூன்றாவது: மிளகாயும் புகையிலையும் நெல்லும் மற்ற மற்ற நாற்றுகளும். ஒவ்வோர் போகத்திற்கும் ஒவ்வோர் குமரைக் கரை சேர்க்கலாம் என்பது இந்த மண் மக்களுக்கு கொடுத்திருக்கும் நம்பிக்கை.

பொலிஸ் இல்லை... ஆமி இல்லை... நேவி இல்லை.... ஊர் நாட்டாமை இல்லை.

வாடைக்காற்றும் சோளகக்காற்றும் வழி முழுக்க தென்னைகளும் பனைகளும் மீன் பிடிக்காலத்தில் வரும் பிற இடத்து சம்மாட்டிமாரும்... எங்கள் ஊரில் எப்போதும் தேர்த்திருவிழாதான்.

இதுகளை அம்மாவும் பூ அன்ரி கிளியக்கா எல்லோரும் சொல்ல சொல்ல மிதிலா மீராக்கு எங்கள் ஊரில் இருந்த மதிப்பு கூடியது.

இந்த நெடும் பயணத்தில் மிதிலா மீராக்கு பிடித்தது அனலைப் பயணம் மட்டும் தான்.

தங்களுக்கு அங்கு காணி இருக்கிறது என்றது அவைக்கு பெரிய புளுகம்.

நாம் அங்கு நின்ற பொழுது அம்மாக்குக் கடும் காய்ச்சல் - உதறல் - நடுக்கம் என மிகக் கஸ்டப்பட்டு கொண்டு இருந்தா. என்ன மருந்து கொடுத்தும் சுகம் வரவில்லை. "கட்டிப் பிடி வைத்தியம் செய்கின்றோம்" என மிதிலாவும் மீராவும் அவாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு படுத்தார்கள். அடுத்தநாள் காய்ச்சல் விட்டிருந்தது.

பெத்தபிள்ளை நான் கூட யோசிக்காத வைத்தியத்தை நான் பெத்த பிள்ளைகள் யோசிச்சு செய்வதை இப்போ நினைத்தாலும் உச்சி குளிரும்.

அறுத்துவிட்ட பிறகும் ஒட்டிக் கொள்ளும் கொடிதான் இந்த தொப்புள் கொடி உறவு என வியந்து போனேன்.

மரபணுக்கள் எல்லாம் எங்கள் பரம்பரையில் பத்திரமாக கடத்தப்படுகிறது என்ற திருப்தி எனக்கு நிம்மதியை தந்தது.

மிதிலா மீராவை பிள்ளைகளாகப் பெற்றதை நினைத்துப் பெருமைப்பட்ட இன்னொரு தருணம் அது.

அப்பா அதிகம் பேசாவிட்டாலும் சுற்றுலாப் படங்களை... குறிப்பாக அனலை தீவுப்படங்களைப் பார்த்து ஆனந்தப் பட்டார்.

மற்றப் படங்களை இனம் கண்டதாக தெரியவில்லை.

ஆனால் அவரது சிரிப்பு மட்டும் பூரண சந்திரன் போல் இருந்தது.

பூரணம்... பரிபூரணம்... மகிழ்ச்சி.... திருப்தி... நிறைவு...

ஆறுதல்... இப்படி எத்தனையோ விதமான விளக்கங்களை அவர் முகத்திரையில் பார்க்க முடிந்தது.

வழமையான இந்தப் பயண மகிழ்ச்சி எப்போதும் பிரிவு நாளின் கண்கலங்குதல்களில் தான் முடிவடையும்.

இப்போதும் அப்படித் தான்.

அங்கு நின்ற பொழுது மணிக்கூட்டுக் கம்பி சுத்தும் ஒவ்வொரு நிமிடமும் நாம் மீளப்பெற முடியாதவைகளாக அமையும்.

நம் மரணப்படுக்கையிலும் மறக்க முடியாதவை அவை.

புறப்படுவதற்கு நேரம் ஆகியபடி இருந்தது. எழுப்பிப் பயணம் சொல்ல முடியுமா? சொன்னாலும் புரியுமா என்ற பதட்ட நிலை.

“அப்பா கதைப்பார் எழும்புங்கோ... அவருக்கு எல்லாம் தெரியும்” என ரவி சொன்னான்.

“அப்பா நாங்கள் போயிட்டு வாறம்” என அப்பாவின் நெஞ்சில் படுத்தேன்.

கண்ணை மெதுவாகத் திறந்தார்.

அதே சிரிப்பு... ஆனந்தமான சிரிப்பு...

சித்தர்கள் சிரிப்பது போல தெய்வீகமாக இருந்தது.

விட்டு விடுதலையான அந்தச் சிரிப்பில் ஆயிரம் ஆயிரம் காவியங்கள் அர்த்தம் சொல்லிப் போயின.

மிதிலா, மீரா, ஜீவா எல்லோரின் கைகளையும் இறுக்கிப் பிடித்துக் கொஞ்சினார்.

“எனக்கொரு குறையுமில்லை...

அரோகரா... ஓம் நமோ நாராயண...

ஓம் நமச்சிவாய...

அரோகரா” என்று சொல்லி மீண்டும் சிரித்தார்.

மத்தாப்பாக சிதறிய புன்னகை முத்துகளை எல்லாம் அள்ளி நெஞ்சாங்கூட்டில் பூட்டியபடி நாம் புறப்பட்டோம்.

“உங்களின் காலக்கெடு முடியுது” என கொழும்பு வான்காரன் கோர்ண் அடித்தபடி இருந்தான்.

காலக்கெடு என்ற வார்த்தை எனக்கு அபசகுனமாகப்பட்டது.

“நீ ஒண்டுக்கும் அழப்படாது”எனக் கூறி அம்மா விபூதி பூசிஅனுப்பினா.

எல்லோரினதும் கண்ணீர் மழையிலும், முத்த மழையிலும், நனைந்தபடி மீண்டும் நாம் அகதிகளாகவும், அநாதைகளாகவும் டென்மார்க் நோக்கிப் புறப்பட்டோம்.

அம்மப்பாவை அம்மம்மா பார்க்கிற மாதிரி யாரும் பார்க்க மாட்டார்கள் என மீரா வழி நெடுக சொல்லிக் கொண்டு வந்தாள்.

அம்மா, அப்பாவை நினைக்க பெருமையாக இருந்தது. பூ அன்ரியும் சித்தப்பாவும் ““உங்களை நாங்கள் பார்க்க மாட்டோம்” என்று சொல்லியிருந்தால் ஏதோ ஒரு வயோதிக மடத்தில் தான் அவர்களின் வாழ்க்கை கழிந்திருக்க வேண்டும்.

தம் வாழ்நாளில் காசு பணம் சேர்க்காவிட்டாலும் நல்ல உறவுகளை அப்பா அம்மா சேர்த்து வைத்திருந்தனர் என்பது தான் எமக்கு பெருமை. அவர்கள் பொல்லாதவர்களாய் இருந் திருந்தால் அவர்கள் தீண்டத்தகாதவர்களாய் எல்லோராலும் ஒதுக்கப்பட்டிருப்பார்கள்.

பெரியய்யாவின் பிள்ளைகள் எல்லோரும் தாம் இலங்கைக்கு போகும் பொழுதெல்லாம் அப்பா அம்மாவிடம் போய்க் கொண்டு இருந்தார்கள்.

நான் சரி... ஜீவா சரி... இங்குள்ள வாழ்க்கை முறையில் பிள்ளைகளுக்கு பாரமிமல்லாமல் ஒரு முதியோர் இல்லத்தில் எமது இறுதிக் காலத்தில் வாழப் பிரியப்படுகின்றோம். அது ஒரு வரமாகக் கூட அமையலாம். ஆனால் அப்பா அம்மாவை நாம்

முதியோர் இல்லம் அனுப்ப எப்படி மனம் வரும்.

இந்தக் கடன்களை எப்பிறவியில் பூ அன்ரிக்கும், சித்தப்பாக்கும், சின்னம்மாக்கும், கிளியக்காவுக்கும் அடைப்போம்.

அல்பத்தில் மூழ்கிப் போயிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

கடந்தகால இரைகளை நிகழ்காலத்தில் மீட்பது போன்ற ஆனந்தத்தை எந்தச் சுகமான அனுபவங்களும் தந்து விடப்போவதில்லை.

நேரம் மாலை 3 மணியாகி இருந்தது.

மாலை 6 மணிக்கு பிள்ளைகள் வந்து விடுவார்கள்.

அதற்கிடையில் சமையலை முடிக்க வேண்டும்.

கிட்டத்தட்ட 250 கிலே மீற்றர் தூரத்தில் இருந்து களைத்துப் போய் வருவார்கள்.

வவுனியாவில் இருந்து கொண்டு வந்து நான் நட்டு வளர்க்கும் பொன்னாங்காணியும் வல்லாரையும் நன்கு செழித்து வளர்ந்திருந்தன.

பிள்ளைகள் வரும் பொழுது சமைக்கலாம் என விட்டிருந்தேன்.

மாடித்தோட்டத்தில் அவற்றைப் பறித்து வரவும் தொலைபேசி சிணுங்கவும் சரியாக இருந்தது.

மறுமுனையில் மிதிலா.

"யுவன் அம்மம்மாக்கு கதை சொல்லப் போறானாம்"

"என்ன கதையடா? யுவன் கதை சொல்லுங்கோ.... காக்கா கதையா?"

"கா... கா... கா... என்ர அம்மா"

குற்றாலம் என் தலையில் கொட்டுகிறது.

படகுப் பயணத்தில் என்னைத் தொட்டுச் சென்ற மெல்லிய

*இளம் காற்று இப்போது என் காதோரம் வீசுகிறது.*

*“யுவன் குட்டி யாரிட்ட செல்லம்” மிதிலா கேட்கின்றாள்.*

*“அம்மம்மா... அம்மம்மா.... அம்மம்மா....”*

*தன் ஒரு வயது மழலையில் என்னுடன் கவியரங்கம் நடத்திக் கொண்டிருந்தான்.*

*“அம்மம்மா சமைக்க வேணும்.... விளையாட நேரமில்லை... பாய்பாய் சொல்லுங்கோ”*

*“பாய்பாய்.... அம்மம்மா... பாய்பாய்....”*

*யசோதைக்கு வாய்க்குள் உலகைக் காட்டிய அந்த மாயவன் போலத்தான் இவனும்.*

*தன் மழலையில் எனக்கு உலகத்தைக் காட்டிக் கொண்டு இருந்தான்.*

*“யுவனைப் பார்த்தால் உங்கட அப்பான்டை சாயல் இருக்கு” என நாலைந்து பேர் சொல்லிப் போட்டினம்.*

*இதைவிட எனக்கு வேறு என்ன வேணும்?*

*என் நினைவுகள் மீண்டும் அந்த 2013 ஏப்பிரல் மாதத்தை கலைத்துக் கொண்டு பின்னால் ஓடியது.*

*000*

*விஜி, மிதிலா கல்யாணத்துக்கு நாள் வைத்து எல்லா ஆயத்தமும் முடிந்து வெளிநாட்டில் இருந்து எல்லோரும் வந்து விட்டார்கள்.*

*இலங்கையில் இருந்து விஜயா அக்கா, விஜியின் சொந்தக்காரர் ஒரு நாற்பது பேர், ஜீவாவினதும் எனதும் மற்ற மற்ற உறவினர்கள் சுமார் 50 பேரில் சிலர் வந்து விட்டார்கள். சிலர் வந்து கொண்டிருந்தார்கள். நித்தன் முதன் நாள் வருவதாய் இருந்தது.*

*வீடு நிறைய கல்யாண வீட்டுச் சாமான்கள்.*

800 பேருக்குச் சொல்லி பெரியதொரு கல்யாண மண்டபத்தில் மிகப் பிரமாண்டமாக செய்ய ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தது.

இங்குள்ள பெரிய பூச்சந்தையில் பூ வேண்டி நானே பூ மாலை கட்டுவதாக இருந்தது.

விடியப்புறம் 3 மணி.

ரெலிபோன் அலறுகிறது.

மறுமுனையில் கனடாவில் இருந்து நித்தன்.

"என்னடா?"

"அப்பா போயிற்றார்"

"விளையாடாதே" என குழறுகிறேன்.

எல்லோரும் எழுந்து விட்டார்கள்.

ஜீவா ஒரு நிமிடம் நிதானித்து விட்டு நித்தனை இங்கு வராமல் அங்கு போய் காரியங்களை நடாத்தச் சொல்லுகிறார்.

நாங்கள் பெரிதும் மதிக்கிற ஒரு குருக்களைத் தொடர்பு கொண்டு திருமணம் செய்யலாமா செய்ய வேண்டாமா என்று கேட்கின்றார்.

"அங்கு காரியங்கள் நடந்து முடிந்தால் பெண்பிள்ளைக்கு துடக்கு இல்லை. மேலும் இப்போது இந்தப் பிள்ளையின் நல்ல காரியத்தை நிறுத்தினால் அதுதான் பெரிய சா வீடு போல இருக்கும். அதுபடியால் தைரியமாக இருந்து எல்லாத்தையும் நடத்துங்கள்" என்றார்.

அடுத்து சம்மந்தி வீட்டாரை அதிகாலையில் எழுப்பி விபரங் களைச் சொன்னோம்.

அவர்களும் எங்கள் முடிவுக்கு ஒத்துழைப்பு தந்தார்கள்.

என் பிள்ளையின் திருமணம் என் அப்பாவால் தடைப்பட்டது என்ற அவப்பெயர் வரக்கூடாது என்பதில் உறுதியாக

இருந்தேன்.

ஆனால் கண்களால் ஓடிக்கொண்டிருந்தது.

நான் நானாக இல்லை.

அந்த வேளையில் நான் பட்ட வேதனைகளை இப்போதும் எப்போதும் எழுதும் நிலையில் நான் இல்லை.

ஆனால் அந்த நேரத்தில் அப்பா எப்படி என்னிடம் வந்தார் என்பது தான் உலக மகா அதிசயம்.

அழவும்... அழாமலும்... நடக்கவும்... நடக்க முடியாதும்... தூங்கியும்... தூங்கமுடியாமலும் நான் கண் மயங்கியிருக்க... அப்பா என்னை எழுப்பி, "வா கல்யாண வீட்டு வேலைகள் பாக்கி கிடக்கு நேரமாகுது... முடிக்க வேணும்... விடு... நான் டக்கு டக்கு என்று எல்லாம் செய்யுறன்" எனக் கூறி வீடு வாசல் எல்லாம் ஒதுக்கி கூட்டுகிறார்.

கண்டது கனவா?

என் உடம்பு முழுவதும் மின்சாரம் பாய்ந்தது போல ஒரு சிலிர்ப்பு.

கால்களில் யானை பலம்.

"நான் என் பிள்ளைக்கு நல்ல அம்மாவாக இருக்க வேணும். அதுதான் என்ட அப்பா என்னட்டை வந்திருக்கிறார்... பாஸ்போட்... விசா... இல்லாமல் என்னட்டை வந்திருக்கிறார்.

கனவு பொய் அல்ல... சிங்கர் மெசினைக் கண்டு பிடித்த சிங்கர் என்பவரே மிசின் ஊசிக்கு எங்க ஓட்டை போடுவது என்பதைக் கனவில் தான் கண்டார். அதன் பின்புதான் அவரின் மிசின் கண்டுபிடிப்பு பூர்த்தியானது. எனவே கனவு பொய் அல்ல. அப்பா வந்ததும் பொய் அல்ல.

யாருக்கும் எதுவும் காட்டிக் கொள்ளாது... லங்காசிறியிலும் எதுவும் தெரியப்படாமலும்.... வெளியே சிரித்துக் கொண்டு உள்ளே அழுது கொண்டும் எல்லாம் நடந்தது.

நித்தன் போய் இறுதிக்கடன் முடித்து திருமணத்துக்கு முதன் நாள் காடாத்தும் முடித்து விட்டான்.

என்னுள் தானாய் நின்ற ஒரு ஆலமரம் சாம்பாலாய் கடலில் கலந்திருந்த செய்தி வந்த பொழுது கண்களை ஒரு தடவை இறுக்கி மூடிக்கொண்டேன்.

கண்களால் ஓடிக் கொண்டேயிருந்தது.

கல்யாண வேலைகளை பார்க்கத் தொடங்கினேன்.

கல்யாண மாலை கட்ட அவரே பூ எடுத்துத் தந்து கொண்டிருக் கிறார் என நினைத்துக் கொண்டு ஐந்து மாலைகளை ஒரு இரவில் கட்டி முடித்தேன்.

அவர் சூட்சகமாக என் கூட இருந்து மிதிலாவின் கல்யாணத்தை நடாத்தி வைத்ததாலோ என்னவோ இன்று யுவன் குட்டி அப்பா போலவே இருக்கிறான் என ஆட்கள் சொல்ல எனக்கு வேறு என்ன வேணும்.

பரித்ராணாய சாதூனாம்

விநாசாய சதுஷ்க்ருதாம்

தர்ம சம்ஸ்தாபனார்த்தாய

சம்பவாமி யுகே யுகே

தர்மத்திற்காக நான் யுகம் யுகாமாய் பிறப்பேன் என அந்த கிருஷ்ண பரமாத்மா கீதையில் சொன்னதை என் வாய் முணுமுணுக்கிறது.

அப்பளம் பொரிச்ச எண்ணை மணம் போக யன்னலைத் திறக்கின்றேன்.

இலையுதிர்கால காற்று குப்பென முகத்தில் பாய்கிறது.

இந்தக் காற்று மாதிரி நம் வாழ்க்கையும் வேகமாக வீசியபடி விதிவிட்ட பாதையில் ஓடியபடி இருக்கின்றது.

000

2014 சித்திரையில் அப்பாவின் ஆட்டத்திவசம் செய்ய நான் வவுனியா போயிருந்தேன்.

அப்பா காற்றாகி...

அக்காற்று என்னுள் கலந்தாகி....

நான் அப்பாவாகி....

அப்பா நானாகி...

வருடம் ஒன்றாக

நான் பெரியவளாகி...

அடிக்கடி அழும் சின்னக் கலா

அழுகை மறந்த பெரிய கலாவாகி...

நல்ல அம்மாவாகி...

வாழ்க்கையும் வடுக்களுக்கும் என்னைப் புடம் போட்டு மாற்றியிருந்தது.

அப்பாவை ஒவ்வொரு நிமிடக் கணக்கிலும் கண்ணுக்குள் வைத்துப் பார்த்த அம்மா அவர் இறந்த பின்பு ஆடிப் போகாமல், தைரியமாக நின்று தன் கடமைகள் அனைத்தையும் ஒரு வீரமங்கை போல செய்திருந்தா.

ஆனால் அப்பா இல்லாத வாழ்வு அவாவை கொஞ்சம் கொஞ்சமாக நடைப்பிணமாக்கியது.

ஏற்கனவே விரதம் உபவாசம் என்று சாப்பாடு குறைவு . இப்போ அது இன்னமும் குறைந்தது.

நிறையும் குறைந்தது.

ஆனாலும் பொருந்தி வந்த மீராவின் திருமணத்திற்கு தன் கையால் மோர் மிளகாயும் ஊறுகாயும் வடகமும் பாவற்காய் வத்தலும் போட்டுத் தந்து விட்டிருந்தா.

கூடவே தன் தாலிக் கொடியை பிள்ளைக்கு நகை செய்து

போடும் படி தந்து விட்டா.

என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அம்மாவின் நினைவுகள் வந்தால் கண்களால் கொட்டத் தொடங்கி விடும்.

மீரா டனேசன் கல்யாணத்துக்கு வாருங்கள் என்று எத்தனையோ தடவைகள் கேட்டிருப்பன்.

மறுத்து விட்டா.

இப்போது ரவி அங்கு இல்லை.

தன் மனைவி பிள்ளைகளுடன் யாழ்ப்பாணத்தில்.

வீட்டில் வேலைப்பளு அதிகரித்து இருந்தது.

எத்தனையோ பேரை வேலைக்கு வைத்தும் யாரும் நிலையாக இல்லை.

நான் தினமும் தொலைபேசி எடுத்து கதைத்தபடியே இருந்தேன்.

000

2015 மாரிக் குளிர் அம்மாவைத் தும்பாக துவைத்துப் போட்டது.

நெஞ்சுவலி... ஆஸ்மா... இருமல் என மாறி மாறி அவவினுள் வியாதிகள் குடிபுகுவதும் வெளியேறுவதுமாக இருந்தது.

சந்தியா வந்தனம் பண்ணி தீட்சை வைக்காது ஒரு நாள் கூட அம்மா சாப்பிட்டது கிடையாது.

இப்போ எழும்பி நிற்கவே பெலன் அற்று நிறை குறைந்து இருந்தா.

நித்திரையின்மைதான் பெரும் வியாதியாக இருந்தது.

எனக்கு இங்கு வேலைக்கு போக முடியவில்லை.

சாப்பிட இயலவில்லை.

தூங்க இயலவில்லை.

உடனே புறப்படுவது என முடிவெடுத்து வேலை செய்யும் பாடசாலையில் லீவு கேட்டேன்.

பெரிய மனது பண்ணி லீவு தந்தார்கள்.

கூடவே என்னை அன்பாக அரவணைத்து பூக்கொத்தும் சொக்கிலேற்றும் தந்து வெளியே காத்திருந்த ஜீவாவின் கார் வரை வந்து வழியனுப்பி வைத்தார்கள்.

நானும் அவசர அவசரமாக மீண்டும் தொப்புள்கொடியை நோக்கிப் பயணப்பட்டேன்.

சரனும் கனடாவால் வந்தான்.

25 கிலோவுடன் ஒருவர் வாழ்வது உலக அதிசயம் எனச் சொன்னான்.

எல்லா விதமான பரிசோதனைகளும் செய்யப்பட்டன.

படங்கள் பிடிக்கப்பட்டன.

எந்த வியாதியும் பிடிபடவில்லை.

நாம் போன உற்சாகம் அம்மா முகத்தில் தெரிந்தது.

எப்போதும் கோகுலனின் ஆட்டோதான் வேண்டும் என்று அம்மா அடம் பிடிப்பா. ஏன் என்றால் கோகுலன் சரன் போல் என்று அம்மாக்கு ஒரு நினைப்பு. அப்படி அவனில் ஒரு பிடிப்பு.

அன்றும் கோகுலனில் ஆட்டோவில் நானும் சரனும் அம்மாவும் ஆஸ்பத்திரிக்கு போகும் பொழுது ஆட்டோவில் நெருக்கமாய் இருக்க அம்மாவை நான் என் மடியில் வைத்திருந்தேன்.

ஆட்டோ கொஞ்ச தூரம் போயிராது. அம்மா தாவி சரனின் மடியில் இருந்து விட்டா.

ராணி அன்ரிக்கும் வருத்தமாம்... அங்கேயும் ஆட்டோவை விடு என அங்கேயும் போய் வந்தா.

ராணி... ராணி என சில்லாலை ராணி அன்ரியைத் தன் நாலாவது

பெண் சகோதரம் என்று கூறுவா.

உற்சாகமாக நடமாடத் தொடங்கினா.

தனியே நடக்கப் பயந்து ஒரு கையில் பொல்லையும் மறுகையில் கிளியக்காவையும் பிடித்தபடி நடந்தா.

அவாவின் கட்டிலுக்கு சீற் விரிப்பதாகட்டும்...

உடுப்புகள் தோய்ப்பதாகட்டும்....

சமைப்பதாகட்டும்....

சாப்பாடு கொடுப்பதாகட்டும்...

எல்லாமே பூ அன்ரியும் கிளியக்காவும் சின்னம்மாவும் தான். அவர்களுக்குத் தான் அந்த அனுமதி.

நான் ஏதும் செய்ய வெளிக்கிட்டால் ""தள்ளு உனக்கு எதுவும் தெரியாது. எல்லாம் பிழையாய் செய்கிறாய்..." அம்மாவும் விடமாட்டா. அவாவின் தங்கைகள் மூவரும் விடமாட்டார்கள்.

நாலு பேரும் கை கோத்து நின்று என்னைத் தள்ளி வைப்பது போல ஒரு பிரமை எனக்கு.

"நான் பிறத்தியாய் போனது போல இருக்கு" என ஒரு நாள் நான் விம்மி வெடித்து அழுதேன்.

"இல்லையடி... நீ இப்பவும் சின்னப் பிள்ளை... உன்னைக் கஷ்டப்பட விடக்கூடாது என்ட நினைப்பும்... எங்கட அக்காக்கு நாங்க செய்வது மட்டும் தான் திருப்தி என்ற நினைப்பும் தான்... இப்படி... இப்படி... எல்லா நினைப்பும் தான் உன்னை பிறத்தியாக்கிப் போட்டுது" என கிளியக்கா விளங்கப்படுத்தினா.

அதுவும் சரிதான்!

"அக்காக்கு சட்டை தைக்க நல்ல சீத்தைத்துணி வேண்டி வா" என பூஅன்ரி சொன்னா.

"நான் கடைக்குப் போய் குங்குமக் கலரில் ஒரு துணி வாங்கி

வந்தன். ஏன் லைற் கலரில் வாங்கவில்லை என குறைப்படுகிறா. அது அவாக்கு பிடிக்கவில்லைப் போலும். உங்கட அக்காக்கு என்ன பிடிக்கும் பிடிக்காது என எனக்குத் தெரியவில்லைத் தாயே" சொல்லி விட்டுச் சிரித்தேன்.

பூ அன்ரி சொன்னமாதிரி""ஏன் வேற கலர் இல்லையா" என அம்மா கேட்டா.

எல்லாம் சரிதான்!

எனக்கும் அம்மாக்கும் உள்ள தொடர்பும் உறவும் 57 வருடங்கள் தான். அதிலும் நான் அம்மாவோட இருந்தது 25 வருடங்கள் தான்.

ஆனால் அவர்கள் சகோதரங்கள் அப்படியா?

இல்லையே!

இவர்கள் உறவும் தொடர்பும் 78 - 80 ஆண்டுகள் பழமையானதல்லவா?

இது ஒரு வாழைக்கும் ஆலமரத்திற்கும் உள்ள வாழ்நாள் வித்தியாசம்.

தூரத்து தண்ணி நாங்கள் ஆபத்திற்கு உதவ மாட்டோம்.

சின்னமாமா மகள் தேவி, பெரியமாமா மகள் நித்திலம், சோதிமாமாவின் பிள்ளைகள் ராசாத்தி, உதயன் எல்லோரும் குடும்பமாக அம்மாவைப் போய்ப் பார்த்து வந்தனர். அவர்களுக்கு விபூதி பூசி ஆசி வழங்கி அனுப்பியதில் அம்மாவுக்கு திருப்தி.

புலம் பெயர்ந்து போன பிள்ளைகள் நாங்கள்.... குலம் மறந்து... நிலம் பிரிந்து... பலம் இழந்து... முகம் மறந்து... முகம் இழந்து... உயிர் மட்டும் ஊசலாட உடம்பை வளர்த்துக் கொண்டு .... என்னடா பிழைப்பு இதுவென என் மனம் புலம்பியபடி இருந்தது.

நாம் வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த சொக்கிலேற்று

களை தன் அன்புக்கும் அரவணைப்புக்கும் உரியவர்களுக்கு தானே பிரித்துக் கொடுக்க வெளிக்கிடும் போது அவா தன் நோயை தானே மறந்து விடுவா.

முக்கியமாக அவவை சுற்றி வாழ்ந்த கிருபா, கௌரிஸ்வரன், குமார், கோகுலன், காக்கா குடும்பம் போன்றவர்களை சொந்த மக்களாகவே அவா நினைத்திருந்தா.

சரனுடன் கூடப்படித்த எந்த டாக்டர்களைக் கண்டாலும் சரி... அவர்களிடம் வைத்திய உதவிகள் பெற்றாலும் சரி... பத்து சரன்களைக் கண்டது போலப் பூரித்துப் போவா.

ராணி அக்கா குடும்பம், பிரேமா, லதா குடும்பம், பாமா பாமா பிள்ளைகள் எல்லோரையும் தன் பிள்ளைகளாகவே நினைத்து புத்திமதி சொல்லி விபூதி பூசி ஆசீர்வதித்து... கட்டிப் பிடித்து... அப்படி ஒரு பாசப்பரிமாறல்களையும் அன்புத் தானங்களையும் செய்து முடிப்பா.

என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வாகப்பட்ட இன்னோர் நிகழ்வு என்றால் ஜீவாவின் மாமி பராக்கா அம்மாவைப் பார்க்க வந்ததுதான். அம்மா சரி... பராக்கா சரி... பயணம் செய்யக் கூடிய நிலையில் இல்லை. ஆனாலும் அந்தப் பழுத்த இரு ஞானப்பழங்களும்... தள்ளாத வயதில் சந்தித்தமை... தள்ளாத வயதிலும் பராக்காவை ஜெயன், திலகம், சுமதி கூட்டி வந்தமை....

அம்மாவாக சிரித்தபடி சொல்லுகிறா, ""என் செத்த வீட்டுக்கு வந்த ஆட்களை நான் எழும்பியா பார்க்கப் போறன். இப்ப வந்தது தான் நிசம் - சந்தோசம்" எனக் கூறி முடிக்க முதல்

எல்லோரின் கண்களிலும் கண்ணீர்.

போதுமடா சாமி... இந்த உறவுகளை பார்த்ததே என மனம் மகிழ்கிறது.

நானும் சரனும் வந்து நின்ற உற்சாகத்தில் உடம்பு ஓரளவு தென்பாகி விட்டது. எமக்கும் விடுதலை முடிந்து புறப்படும் வேளை வந்தது. மீண்டும் 2 மாதத்தில் ஜீவாவுடன் வருவேன் என

அம்மாவிற்கு வாக்குறுதி கொடுத்து வந்தேன்.

நானும் சரனும் புறப்பட்டு வந்து ஒரு மாதத்தினுள் நித்தன் கனடாவிலிருந்து அங்கு போய் நின்றான்.

அமாவாசையாக இருந்த அம்மாவின் முகம் பூரணை நிலவாக பிரகாசிக்கத் தொடங்கியது.

நித்தன் கனடா போன பின்பு மீண்டும் நானும் ஜீவாவும் அங்கு போய் இறங்கினோம். ஜீவா தன் தொழில் சம்மந்தமாக இந்தியாக்கும் சிங்கப்பூருக்கும் இந்த முறை சென்ற பொழுது வழமை போல நான் கூடவே போகவில்லை. திருப்பதியானிடம் போவதை விட இந்த மகாலட்சுமியுடன் நிற்பதே எனக்கு மேலாக இருந்ததால் அம்மாவுடனேயே நின்றேன்.

ஜீவாக்கு இந்தியாவில் சிறந்த நாவலுக்கான விருது கிடைத்த பொழுது தனக்கு ஒரு ஆம்பிளைப் பிள்ளை பிறந்தது போல சந்தோசமாக இருக்கிறது என மிக மிக ஆனந்தப்பட்டா.

என்னதான் அம்மாவுக்கு பக்கத்தில் நான் நின்றாலும் என்னால் அவாவுக்கு பெரிய பிரியோசனம் இல்லாதது போலவே எல்லாம் நிகழ்த்தினா.

“ஆஸ்பத்திரிக்கு போவம் வாங்கோ அம்மா”

“இல்லை ஜீவா வரட்டும். அவரையும் கூட்டிக் கொண்டு போவம்” என என்னில் நம்பிக்கை இல்லாதது போலவும் ஜீவா வந்தால் தனக்கு பலம் போலவும் அவா நினைத்திருந்தா போலும்.

“அம்மாக்கு சரியான யோசனைகள்... அதனால்தான் நித்திரையில்லை... நித்திரைக் குளிசை குடுத்தா கொஞ்ச உடம்பு இளைப்பாறும்” என சரனின் நண்பர் மருந்து தந்து அனுப்பினார்.

அதை வீட்டை கொண்டு வர அம்மாவின் பாச மலர்கள் அதனைக் கொடுக்க பயந்தார்கள் - அந்த மருந்து அம்மாவைப் பலவீனப் படுத்தி விடுமோ என்று.

நாம் பெத்து வளர்த்த நம்மட கைக்குழந்தையை வேறு எவராவது குளிக்க வார்த்து தங்கத் தொட்டிலில் இட்டாலும் எமக்கு வராத திருப்தி போலத் தான் அவர்களின் பயமும் அச்சமும்.

அவர்களுக்கு மருந்து கொடுக்க விரும்பமில்லை. எனக்கு அவர்களை எதிர்த்து மருந்து கொடுக்க விரும்பவில்லை. அம்மா வும் இதுதான் சாட்டு என மருந்து எடுக்க கள்ளப்படுத்தினா.

கடைசியாக ஆமியின் மிரட்டல் போல ஜீவாவின் தொலைபேசி வந்ததும் எல்லாரும் மௌனம்.

அம்மா மருந்தை மகிழ்ச்சியுடன் எடுத்தார். நன்கு தூங்கினார்.

1. உன்ரை பிள்ளைகளுக்கு நீ நல்ல அம்மாவாக இரு.

2. ஜீவாவை வடிவாகக் கவனி

3. உன்னை நீ வடிவாகப் பார்

இந்த மூன்றையும் நீ செய்தால் அது எனக்குப் போதும். நான் உனக்கு அம்மாவாக 84 வயது வரை இருந்திருக் கிறன். நீ உன்ரை பிள்ளைகளுக்கு என்ன செய்யப் போறாய்... போ... போ... கெதியாய் பிள்ளைகளிட்டை போ... என தன் பாசத்தை எல்லாவற்றையும் கட்டி வைத்து விட்டு... எனக்கு என் கடமையை உணர்த்தி விட்டு தன் பாச மலர்களுடன் தன்ர ஐயாவின் காணியில் ஆனந்தமாக ஆட்சி செய்து கொண்டிருந்தார்.

நாட்கள் ஓட அதே அகதி...

அதே புலம் பெயர் நாயகியாக நான்...

அதே அனாதையான நான்...

டென்மார்க் திரும்பினேன்.

மிதிலாக்கு யுவன் வயிற்றில் உதிர்த்திருந்தான்.

ஆண் பிள்ளை என தொலைபேசியில் அம்மாக்கு சொன்ன பொழுது "அரோகரா" எனச் சொல்லி ஆனந்தப்பட்டா.

"உன்ரை பிள்ளைகளுக்கு நீ நல்ல அம்மாவாக இரு.....ஜீவாவை வடிவாகக் கவனி...உன்னை நீ வடிவாகப் பார்" என்ற அம்மாவின் குரல் மீண்டும் மீண்டும் என் காதில் ஒலித்தபடியே இருக்கிறது.

மிதிலா மீராவின் குடும்பம் வந்து இறங்கப் போகின்றார்கள் என்ற நினைப்பு வர கையும் காலும் துரிதமாகின்றன.

கம்பியூட்டரில் ராம பஜனைப் போட்டு விட்டு அதனைக் கேட்ட படி சமைக்கத் தொடங்குகின்றேன்.

000

# தன்னை மறந்து கொண்டிருக்கும் என் டெனிஷ் நண்பி

இன்று திங்கட் கிழமை. இன்று எனக்கு லீவு நாள்.

ஜீவா வேலைக்குப் போய் விட்டார்.

மூட்டு வாதம் காரணமாக என் வேலை நேரத்தினைக் குறைக்க வேண்டி வந்ததால் இப்படி ஒரு வசதி பிரத்தியேகமாக ஓர் ஓய்வு நாள்.

வீடு வெறுமையாக இருக்குது.

பேரனின் மழலை கேட்கவில்லை. மக்கள் மருமக்களின் சிரிப்பொலியை கேட்கவில்லை. இரண்டு நாட்கள் அவர்கள் எங்களுடனேயே தங்கி நின்று போனது 2 வருசம் நின்று போன நிறைவு.

திங்கள் லீவு நாள் என்றாலும் அதை ஏதும் பிரியோசனமாகப் பாவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் ஒரு வேலை எடுத்திருந்தேன்.

முதுமையில் தனிமையில் கஷ்ரப்படும் முதியவர்களுக்கு ஒரு பேச்சுத் துணையாக இருப்பது தான் அந்த வேலை.

சம்பளம் இல்லாத... ஆனால் மனதுக்கு ஆனந்தம் தரும் வேலை.

திங்கள் கிழமை பகல் பத்து மணி தொடக்கம் பன்னிரண்டு மணிவரை "சினா" என்ற பெயருடைய ஒரு பெண்மணி வீட்டுக்குப் போய் வருவேன்.

சினாவுக்கு ஒரு வருடமாக "மாறாட்டம்" என்ற வயோதிப

வியாதி வந்துள்ளது. அவாவின் நினைவுகள் குன்றிப் போயின. சினா பாவிக்கும் மருந்து ஐந்து வருடங்கள் மட்டுமே வேலை செய்யும். அதாவது இப்போ உள்ள மூளையின் நிலையைத் தொடர்ந்து காப்பாற்றும். ஆனால் அந்த நோய் மாறக்கூடியது அல்ல. மேலும் மேலும் மோசமாகி உயிருடன் செத்துக் கொண்டு இருக்கும் மூளைக்கலங்களுடன் வாழும் அவளுக்கு கொஞ்சநேரம் மன அமைதி கொடுப்பதில் எனக்கு ஒரு திருப்தி.

சினாவின் கணவர் இறந்து விட்டார். ஒரே மகள்... அவள் அமெரிக்காவில் குடியேறி விட்டாள். இங்கு வாழும் ஒரு தங்கையும் இடைக்கிடை வந்து தன் உடன்பிறப்பை பார்த்துச் செல்வாள். மற்றும்படி அரச சுகாதாரத்தாதிகளின் தயவில் உயிர் வாழ்கிறாள். விடியும் ஒவ்வோர் விடியலும் அவளை இந்த உலகத்தில் இருந்து எட்ட எட்ட இழுத்துச் செல்கின்றது என்றது உண்மை. அவள் தனது கல்லறையை நோக்கி மெதுமெதுவாக நடந்து கொண்டிருக்கிறாள் என்பதே உண்மை. அவளுக்கு பிடித்த உணவுகள் செய்து கொடுப்பது... அவளின் கைகளை பிடித்துக் கொண்டு வெளியே கூட்டிச் செல்வது... இயற்கையை இரசிப்பது... பாட்டுக் கேட்பது... ரி.வி. பார்ப்பது என...சின்னச் சின்ன சந்தோசங்களை அவள் அனுபவிக்க நான் உதவி செய்கின்றேன்.

நாம் எல்லோரும் பிறந்தது முதல் சுடுகாட்டை நோக்கித்தான் பயணிக்கின்றோம். இடைக்கிடை இதனை மறந்து நாம்தான் இந்த பூமியின் மன்னர்கள் என் நினைத்து ஆட்டம் போடு கின்றோம்.

அப்பாக்கு மாறாட்டம் வந்த பொழுது அவருக்கு அருகில் இருந்து பார்க்க முடியவில்லை என்ற என் மனக்குறையை நான் இப்போ சினாவைக் கவனிப்பதன் மூலம் நிறைவு செய்தபடி உள்ளேன்.

இப்போ நேரம் மதியம் ஒரு மணி ஆகின்றது.

சினாவிடம் போய் வந்தது களைப்பாக இருக்கிறது. அம்மாவின் நினைவு வந்து வந்து போகிறது. அம்மாவுடன் டெலிபோனில்

*கதைத்தால் நல்லாய்த்தான் கதைக்கின்றா. இன்று கதைப்பது போல் இன்னும் ஒரு மாதத்தில் கதைக்காமல் போகலாம். சீ... சீ... அம்மாக்கு தான் ஏதும் இல்லையே... ஏன் என் மனது இப்படி குறுக்கு மறுக்காக ஓடுகிறது. கயிற்றை அறுத்துக் கொண்டு தாறுமாறாக ஓடும் கன்றுக் குட்டி போல என் எண்ணங்களும் குறுக்கு மறுக்காக ஓடுகிறது. சாப்பிட்டு விட்டு ஒரு குட்டித் தூக்கம் போடலாம் என நினைக்கின்றேன்.*

*சாப்பிட்டு முடிந்து... அரைவாசி வாசித்து முடிந்த நிலையில் இருந்த "கனவுகளின் மொழி" என்ற புத்தகத்தை தொடர்ந்து வாசித்தபடி.... களைத்த கண்களுடன் போராட முடியாது அயர்ந்து போகின்றேன்.*

*000*

*"இந்தா இந்த மல்லித் தண்ணியை பனங்கட்டியோடை குடி.... வெந்தயத்தைப் போடு"*

*"ஐயோ என்னாலை முடியாதம்மா"*

*அம்மா கத்திறா.... அம்மம்மா தவிக்கிறா....*

*எனக்கு மூச்சு முட்டுகிறது.*

*"சத்தம் போட்டுக் கத்தாதே... இது வீடில்லை... மூளாய் ஆஸ்பத்திரி"*

*என்ன நடக்குது இங்கை?*

*நான் வெளிய போற நேரம் வந்தாச்சா?....*

*அம்மாவுக்கு கஷ்டம் குடுக்காமல் நான் வெளியாலை போக வேணும்....*

*"இடுப்பில யாரோ கோடாலியால வெட்டிறமாதிரி இருக்குது. ஐயோ..." அம்மா கத்திறா.*

*அம்மாவை நினைச்சால் கஷ்டமாய் இருக்கிறது..*

*இத்தனை மாதமும் தன் வயித்தையும் என்னையும் தடவி தடவிப் பார்த்துக் கொண்டிருந்த அம்மா கஸ்ட்டப்பட எனக்கு அழுகை*

அழுகையாக வருகிறது.

"டொக்... டொக்" என்று என்னமோ சத்தம்"

"டொக்டர் சம்மந்தர் வாறார்"

"இண்டைக்குப் பிள்ளை பிறக்கும் எண்டு இல்லை. அதாலை நீங்க வார்ட்டிலை இருக்க வேண்டாம். இங்கையே உள்ள தங்கிற விடுதியை வாடகைக்கு எடுத்து இருங்கோ... குத்து வந்தால் உடனேயே பெற வசதியாய் இருக்கும்"

"பிரச்சனை வருமோ டொக்டர்..."

"பிள்ளையிட இதயத்துடிப்பு நல்லாய் இருக்கு... எல்லாம் நல்லாய் நடக்கும்... ஆல் த பெஸ்ட்"

அம்மாவோட அம்மம்மா... அப்பா... ஐயா... எல்லோரும் இருக்கிறார்கள்... பகல் இரவாச்சு... எனக்கு வெளியே போற தைரியம் இல்லை... பயமாய் இருக்கு... எப்படிப் போறது... எது வழி?... வெளியே போய் என்ன செய்யுறது?... ஒரே யோசனையாக இருக்கிறது.

அம்மா படுக்கிறா

நானும் அவாவின் வயிற்றுள் குறுங்கிப் படுத்துக் கொள்கின்றேன்.

ஆனாலும் இடைக்கிடை இந்தச் சுவர் ஆடுது.... என்னை யாரோ பிடிச்சுத் தள்ளுறது போல இருக்குது... நான் விழப்போறது போல இருக்குது...

இல்லையில்லை... இல்லையில்லை... இந்தச் சிவப்புக் கொடியை இறுக்கிப் பிடிப்பம்.... அதுதான் நல்லது... விழாமல் இருக்க உதவியாய் இருக்கும்.

இந்த சிவத்த கொடியைப் பிடிச்சபடியே வெளியே போனால் தான் பாதுகாப்பு.

இதைக் கை விட்டால் எப்படி?...

எனக்கு சாப்பாடு தாறது இந்தக் கொடிதானே??

இதை விட்டுட்டு என்ன செய்யிறது???

கொஞ்ச நேரத்தில அந்த சூறாவழி நின்று விட்டது என்றாலும் என்ர கை அந்தக் கொடியை விடாமல் பிடிச்சிருக்கு.

"என்ர எல்லா எலும்புகளுக்கும் எல்லாச் சதைகளுக்கும் அருவி வெட்டு நடக்கிறது போல குத்து நடக்குது... அம்மாடி..."

"விலா எலும்புப் பக்கமும் மூச்சு முட்டுது... இடுப்பு எலும்புக்கு இடையில் யாரோ கொலைகாரங்கள்குடிவந்தாச்சு... ஐயோ அம்மா கத்திறா"

"அம்மா அழவேணாம்... நான் வாறன்... நான் வாறன்...நான் ஓடுறன்..ஓடுறன்... ஓடுறன்... தொப்புள் கொடியோடை ஓடுறன்..."

"நில் இங்க..."

பொலிஸ் என்னை பிடிக்கிறாங்கள்.

"ஐயா நான் கள்ளனில்லை... ஐயோ நான் பேபி.... நான் பேபி.."

திடுக்கிட்டு விழிக்கின்றேன்... மீண்டும் இந்தக் கனவுதான்.

கனவில பொலிஸ் பிடிக்க வந்தது... நான் அம்மாவின்ரை வயித்துக்கை கஸ்ட்டப்பட்டது எல்லாத்தையும் நினைக்க உடம்பு நடுங்குது.

"கனவில நீ நல்லதை மட்டும் கற்றுக் கொள். அது உன் கையைப் பிடிச்சுக் கொண்டு நல்ல இடத்துக்கு கொண்டு போகும்" என அனி கூறியது நினைவுக்கு வந்தது. பிரசவம் பற்றிக் கனவுகள் காண்பதோ அல்லது சின்னஞ் சிறுசுகளை கனவில் காண்பதோ எப்பவும் நல்லது. அது உனக்குள் ஒரு புதிய சக்தி உருவாகுவதைக் குறிக்கும் எனக் கூறி இருந்தாள்.

மனம் அமைதி இல்லாமல் இருக்குது.

அம்மாக்கு போன் பண்ணுவம் என மனது நினைக்குது.

"கலோ... கலோ... நான் கலா..."

"கலா அக்கா... நான் லட்சுமி"

இப்போ ஒரு மாதமாய் அம்மாக்கு லட்சுமி நியமிக்கப் பட்டிருந்தா..

லட்சுமிக்கு வயது 50 இருக்கும். திருமணம் ஆகவில்லை. சமையல் வேலைகளில் கிளியக்கா பூ அன்ரிக்கு ஒத்தாசையாக இருப்பா.

அப்பா வருத்தமாய் இருந்த பொழுது எப்படி ரவி உதவிக்கு இருந்தானோ.... அப்படியே இப்போ அம்மாக்கு லட்சுமி.

ஆனால் லட்சுமியைக் கஷ்ட்டப்படுத்த அம்மா விரும்புவ தில்லை.

"வீட்டில ஒருத்தரும் இல்லையா? கிளியக்கா எங்கே??" மீண்டும் நான் லட்சுமியிடம் கேட்கின்றேன்.

"கிளி அம்மா கீழே விழுந்து கை முறிஞ்சு போச்சு... பூ அன்ரி ஆஸ்பத்திரிக்கு கூட்டிப் போயிருக்கிறா"

"பெரியம்மா எங்கே?"

"பெரியம்மா சாப்பிடுறா... கொஞ்சம் பொறுங்க... பெரியம்மாட்டை குடுக்கிறன்... பெரியம்மா டெலிபோனிலை கலாக்கா"

"அம்மா... அம்மா... என்ன குரலைக் காணேல்லை... கலோ...கலோ...."

"பெரியம்மா அழுகிறா" மறுமுனையில் லட்சுமி.

"அவாவைக் கதைக்கச் சொல்லுங்கோ லட்சுமி"

அம்மா அழுது முடிந்து என்னுடன் கதைக்கத் தொடங்கிறா.

"கிளியில்லாத நேரம்தான் உன்னோட கதைக்க வேணும் எண்டு இருந்தனான். நீ எனக்கு ஒரு உதவி செய்யவேணும்... செய்வியா?"

எனக்குள் ஒரு திகைப்பு.

அக்கா தங்கைகளுக்கிடையில் ஏதும் பிரச்சனையோ?

"என்னம்மா"

"கிளியை நீ டென்மார்க்கிற்கு கூட்டிப் போய் அங்கை வைச்சுப் பார்ப்பியா?... நான் இல்லாத காலத்தில் அவள் தனிச்சுப் போவாள்.... அவளைப் பார்க்கிற நேரமெல்லாம் அழுகை அழுகையாக வருகிறது" அம்மா மீண்டும் அழுகின்றா.

"அம்மா... கிளியக்காவை இங்கை கூப்பிட்டு வைச்சிருக்க முடியாது. நான் பென்சன் எடுத்த பிறகு வேண்டுமென்றால் அங்கை வந்து எல்லாரையும் வைச்சுப் பார்க்கிறன்"

இதற்கு மேல் என் தொண்டை அடைச்சு... நான் அழுவது அம்மாக்கு தெரிகிறது.

"சரியம்மா நான் நாளைக்கு போன் பண்ணுறன்" டெலிபோனை வைத்து விட்டேன்.

வீட்டில் இருக்க முடியவில்லை.

வெளிக்காற்றுப் பட்டால் நல்லது போல் தோன்றுகிறது.

சகல விதமான குளிர் உடுப்புகளையும் மாட்டிக் கொண்டு வெளியேறுகிறன்.

உஸ்... உஸ்... என்று ஊழிக்காற்று விர்... விர்... என்று விசில் அடிச்சுக் கொண்டு வீசுது.

நீ மட்டும் மூடிக்கட்டிக் கொண்டு வெளிக்கிட்டிட்டியே என்னைப் பார்... என் நிலையைப் பார்... என இலைகளை உதிர்த்து விடும் ஒவ்வொரு மரங்களும் என்னைப் பார்த்து அழுகின்றன.

விழுந்த இலைகளை வாரிச் சுறுட்டிக் கொண்டு நாட்டிய மாடுது காத்து. என்னைப் பிடி... உன்னைப் பிடி... என சருகுகள் காற்றின் வேகத்துக்கு சுழன்று சுழன்று போய் வேலிக்கரைகளில் தஞ்சம் கேட்குதுகள்.

போர் அடிச்சு விரட்ட உலகம் எங்கும் அள்ளி வீசப்பட்ட

ஈழத்தமிழன் போல சருகுகளும் காற்றுக்கு அடிமையாக அது இழுத்த இழுப்பில் சுழலுகின்றன.

"நீ எங்களைப் பிடிச்சு ஆட்டலாம். எம்மை சருகுகளாக கொண்டு போகலாம்... ஆனால் நாம் எம் மண்ணை விட்டு வரமாட்டோம் என எந்தக் காற்றுக்கும் அசையாமல் நிக்குதுகள் இந்த நாட்டு கிழட்டு மரங்கள்... என் அப்பா அம்மா மாதிரி... இந்த வயதிலும் அதுகளுக்கு எத்தனை நெஞ்சுரம்..."

இன்னும் கொஞ்ச தூரம் நடந்தால் இந்தச் சருகுகளுடன் சேர்ந்து பறக்க வேண்டியது தான் என நினைத்து வீடு நோக்கி நடையைக் கட்டுகிறன்.

இந்த மரங்களைப் போல் போராடி.. போராடி....எதிர் நீச்சல் போட்டு... இதில் வெற்றி கண்டு இன்றும் வயோதிபத்தை பார்த்து சவால்விடும் என் உறவுகளை நினைத்துப் பார்க்கின்றேன்.

கடைசியாக நான் வவுனியாவுக்குப் போன போது அம்மா எனக்காக தந்து விட்ட சாமான்களை நினைத்துப் பார்க்கிறன்.

எனக்கு சின்னனில் மருந்து பருக்கிய சின்ன மருந்துக் கிண்ணி...

என் சின்ன வயதுக் கால் சங்கிலி....

நான் சின்னனில் அப்பாக்கு எழுதிய கடிதங்கள்....

மேலாக அம்மா சின்னனாக இருந்த பொழுது அவ வாசிப்பதற் காக ஐயா வேண்டிக் கொடுத்த "கலாநிலையம்" என்ற பழைய இந்தியப் பத்திரிகை... பத்திரமாக கட்டப்பட்டு அத்தனையும் அழகாக பாதுகாத்து ...எனக்காக வைத்திருந்து என்னிடம் தந்து விடுகிறா... சுமார் 75 வயதுப் பழைய பத்திரிகை அது.

எப்படி இவற்றை எல்லாம் எமக்காக வைத்திருக்க முடிந்தது.

நகை... நட்டு... காசு... பணம்... உறுதி... சீட்டுக் காசு... இப்படித்தான் மனிதர்கள் சேர்த்து வைத்து தம் பிள்ளைகளுக்கு கொடுப்பார்கள்.

ஆனால் எம் பழைய நினைவுகளையும்...

பரம்பரை பந்த பாசங்களையும்...

கடிதங்களையும் நூல்களையும் கொண்டு திரிந்த என் அப்பா அம்மா எங்கே? நான் எங்கே?

நான் என்னத்தை என்ர பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லப் போகின்றேனோ தெரியாது.

கறந்த பால் முலைக்கு ஏறாது

வறுத்த பயறு முளைக்காது

சுட்ட மண் ஒட்டாது

பேனா வழி வந்து விழுந்த எழுத்துகள்

மீண்டும் பேனாவுக்குள் போகாது

இப்படித்தான் புலம்பெயர் வாழ்வும்... அவர்கள் மற்றவர்களுக்கு கொடுக்கும் வாக்குறுதிகளும்... சொந்த பந்தத்ங்களை பின்னடியில் அரவணைத்துப் பார்ப்பதும்.. கிளியக்காவை ஊர் வந்து வைத்துப் பார்ப்பதாக நான் சொல்லியதும்....

அம்மாக்கு கொடுத்த வாக்குறுதியை நினைத்துப் பார்க்கின்றேன்.

நிறைய உழைக்க வேண்டும்.

பாங்க் நிறைய காசு போட வேணும்.

நாளை வேலைக்குப் போகவேணும் என்ற நினைப்பு என்னை உறக்கத்துள் அழைத்துப் போகிறது.

ஆஸ்பத்திரியில் எல்லோரும் கட்டுப் போட்ட கை கால்களுடன் திரிகின்றனர்... கால் முறிஞ்சு...கை முறிஞ்சு... மனித உடல்கள் ஓடித்திரிகின்றன.

மீண்டும் மீண்டும் கனவுகள்.

நித்திரை இல்லை.

கிளியக்காவுக்கு கை முறிஞ்சதை கேள்விப்பட்டதில் இருந்து இரவு நித்திரை போய்... கனவு கனவாக... நினைவுகள்.. என்னைத் தூங்கவிடாது விரட்டியபடி இருந்தன.

எழும்பி ஒரு கப் பால் குடித்து விட்டு பேஸ்புக் பக்கத்துள் நுழைகின்றேன்.

சிவா ஊர் போனபோது அம்மாவுடன் எடுத்த படங்கள்... கௌரியின் மகள் அஸ்வினியின் சாமத்திய வீட்டுப் படங்கள்... அதில் அம்மா... பூரண சந்திரனாக, அந்திமாலைச் சூரியனாக இப்படி ஒரு அமைதியுடனும் புன்னகையுடனும்... வற்றாது வழிந்தோடும் பாசத்தோடு உறவுகளை அணைத்தபடி...

சோதி மாமா, மாமி ஊர் போன பொழுது நல்லாய்த்தான் இருந்தவா என ரெலிபோனில் சொல்லுகிறார். வசந்தா அக்காவும் அம்மாவைத் தான் பார்த்து வந்தனளான். அவா நல்லாய்த்தான் இருக்கின்றா எனச் சொல்கின்றார்.

அவா நல்லாய்த்தான் இருக்கின்றா...

நான்தான் மனசைப் போட்டுக் குழப்பிறன் என நினைத்தபடி பேஸ்புக்கை மூடிவிட்டு நேரத்தைப் பார்த்தால் விடிய 5 மணியாகி இருந்தது.

இப்ப இலங்கையில் 9 மணியாக இருக்கும்.

கிளி அக்காவின் சுகத்தைக் கேட்போம் என நினைத்து டெலிபோன் எடுக்கின்றேன்.

மறுமுனையில் பூ அன்ரி.

"கிளி வாட்டிலைதான். பத்துப் போட்டிருக்கு. நாளைக்கு வீட்ட விட்டுவிடுவினம்.... கொம்மாதான் பெரிய குழப்படியாக இருக்கு..."

என்னவாம்?

"தனக்கு ஏதும் நடந்தால் லங்காசிறியிலை மரண அறிவித்தல்

எப்பிடிப் போடுறது எண்டு எழுதிப் பார்க்கிறா"

"போனை அவாட்ட குடுங்கோ.... என்னம்மா இது?"

"இல்லை.. பிறகு யாரையும் விட்டிட்டதெண்டு குறைய வரப்படாது... கலா உன்னை நினைச்சால் கண்ணால தண்ணி தண்ணியாக ஓடுது குஞ்சு"

ஏனம்மா?... உங்களுக்கும் ஒண்டும் இல்லை.. எனக்கும் ஒண்டும் இல்லை...

"எனக்கு ஏதும் நடந்தால் நித்தன் தந்த ஒரு பச்சை சீலை இருக்குது. அதை உடுத்து விடு. அது கோயில்ல அம்மனுக்கு கட்டினது என்று சொல்லித் தந்தவன்"

இந்தாங்கோ ஜீவா வாறார் கதையுங்கோ.

"என்ன பிரச்சனை? நீங்க நல்லாய்த் தானே இருக்கிறியள்"ஜீவா சிரித்தபடியே கேட்கின்றார்.

"ஓமப்பன். எனக்கு ஏதும் நடந்தால் எப்பிடி லங்காசிறியிலை போடிறது எண்டு கதைக்கிறன்"

"அதுக்கு இப்ப என்ன அவசரம்?... அதுகளை எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுவன். நீங்கள் "கம்" எண்டு வீரகேசரிப் பேப்பரை வாசித்ததுக் கொண்டு இருங்கோ. கடைசியாய் வந்த என்ரை கதை வாசிச்சனிங்களோ?"

"ஓமப்பன் வாசிப்போட்டு சிரி சிரியென்று சிரிச்சன்."

சரியம்மா வேலைக்கு நேரமாகிட்டுது. பிறகு கதைக்கிறன்.

ஜீவாவும் போனை வைத்து விட்டு வேலைக்கு வெளிக்கிடத் தொடங்கி விட்டார்.

நானும் அன்றைய பிழைப்புக்காக ஓட ஆயத்தமாகி விட்டேன்.

"எனக்கு மனசு கேட்கவில்லை. பாடசாலையின் இடைவெளி நேரம் மீண்டும் டெலிபோனை எடுத்து சுகம் விசாரிக்கின்றேன்.

கலோ... கலோ... நான் கலாதான் கதைக்கிறன்.

லட்சுமிதான் டெலிபோனை எடுக்கின்றா.

"என்னைக் குளிக்க சுடுதண்ணி வைச்சுத் தரட்டாம். நீ என்னை குளிக்க வைக்கிறாய்... பிறகு கடவுள் என்னைக் குளிக்க வார்ப்பாராம் என அம்மா சொல்லுறா" மறுமுனையில் லட்சுமி சிரிக்கின்றா.

அம்மாட்ட டெலிபோனைக் குடுங்கோ லட்சுமி.

"இப்ப கதைக்க நேரமில்லை. இண்டைக்கு நேர்ஸ் பாக்கியம் வரப்போறா. அது தான் சந்தோசமாய் இருக்கு. நேற்று சுமதி வந்து பார்த்திட்டு போனது. அவளிட பாசத்துக்கு நான் என்ன கைமாறு செய்யப் போறனோ தெரியாது..."

சாப்பிட்டுட்டீங்களா?

"ஓம் சாப்பிட்டாச்சு... நீ இஞ்சை நிற்கேக்கை செய்த ரொட்டியை எப்பிடி செய்தனி எண்டு கிருபாக்கும் சொல்லிக் குடு... எனக்கு இப்ப கதைக்க நேரம் இல்லை. பேந்து எடு"

சரியம்மா.

திருஷ்ராட்டினன் சஞ்சயன் மூலம் பாரதப்போரைப் பார்த்த மாதிரித்தான் நானும் டெலிபோனுக்குள்ளாலை எல்லாத்தை யும் அறிகின்றேன்.

தொடர்ந்து என் வேலையுள் மூழ்கி விடுகின்றேன்.

என்னைச் சுற்றி முதலாம் இரண்டாம் மூன்றாம் வகுப்பு பிள்ளைகள்... படம் கீறித்தாறீங்களா என என்னை மொய்த்த படியும்... இன்று என்ன கைவேலை செய்யலாம் எனக் கேட்ட படியும்....அந்தப் பிஞ்சுகளின் பிஞ்சுக் கைகளுக்கு வேலை கொடுத்தபடி... அவர்களின் படங்களை அவர்களே பார்த்து மகிழ்ந்தபடி... அதனை அவர்களைக் கூட்டிச் செல்ல வரும் தம் பெற்றோருக்கு காட்டி மகிழ்ந்தபடி...

அந்த உலகம் ஒரு தனி உலகம்...

வஞ்சகம் தெரியாத...

சூதுவாது அறியாத...

போட்டி பொறாமை அறியாத...

ஆக்கமும் ஊக்கமும் பூத்துக் குலுங்கும் உலகம் அது.

பாவங்கள் இந்தச் சின்னஞ் சிறுசுகளின் புன்னகைகள். உலகத்தை அவர்கள் அறியும் பொழுது அப்புன்னகைகள் இவர்களை விட்டு போய் விடுகின்றன.

ஆண்டவன் புண்ணியத்தில் இன்றைய நாள் நன்றாக ஓடி விட்டது என்ற மகிழ்ச்சியில் வீடு வந்து.. சமைத்து... சாப்பிட்டு... படம் பார்த்தபடி இருக்க டெலிபோன் சிணுங்கியது.

மறுமுனையில் சரன்.

"அம்மா விழுந்து வவுனியா ஆஸ்பத்திரியிலை வைச்சிருக்கினமாம்"

டெலிபோன் வந்தவுடனேயே ஜீவா இலங்கைக்கு போக எம்மிருவருக்கும் ரிக்கற் பார்த்தார்.

பள்ளியில் நாளைக்கு லீடரைப் பார்த்து லீவு கிடைத்த பின்புதான் ரிக்கற்றுக்கு காசு கட்ட வேணும்.

யன்னலினூடு வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன்.

சந்திரனும் நட்சத்திரங்களும் மௌனமாய் நின்றிருந்தன.

முகில்கள் இரவை வெகுசீக்கிரமாக பகலுக்குள் இழுத்து வந்தது.

ஒண்டுக்கும் யோசியாதை. போய் அம்மாவைப் பார்த்திட்டு வா. எத்தனை நாட்கள் என்றாலும் பறவாயில்லை என பாட சாலையின் தலைவி சொன்னார்.

கம்பியூட்டரில் கட்டார் விமான ரிக்கற்றுகளை ஜீவா இழுத்தெடுத்தார்.

விரைவுப் பாதையில் கார் விமான நிலையத்தை நோக்கி வேக மாக... மற்றப் பாதையில் ஓடிக்கொண்டிருந்த வாகனங்களை

ஜீவாவின் கார் பின் தள்ளிக் கொண்டு போய்க் கொண்டு இருந்தது.

விமான நிலையத்தில் கட்டார் விமானம் காத்திருந்தது. ஜீவா கூட வருவது ஆறுதலாய் இருந்தது.

அவதிப்பட்டு அந்தரப்பட்டு வெளிக்கிட்டு வந்த களைப்பில் விமானத்தினுள் சீற் பட்டியை போட்ட அடுத்த வினாடியே நித்திரை கண்களை மொய்த்தபடி... கண்ணை அழுத்த அழுத்த ஒரு மயக்க நிலையில் நான் இருக்க விமானம் மேலே கிளம்பியது.

*000*

# நானும் என் நஞ்சுக் கொடியும்

"மூளாய் ஆஸ்பத்திரிக்கு வந்து மூன்று நாளாய்ப் போச்சுது".

"ஒரு முன்னேற்றமும் இல்லை"

"பாவம் அவளுக்கு குத்துமட்டும் நிற்குது இல்லை"

ஐயாவும் அம்மம்மாவும் வேதனைப்படுகிறார்கள்.

அம்மா அழுகின்றா.

"டாக்டர் என்ன சொல்லுகின்றார் மருமகன்?"

அம்மம்மா தவிக்கின்றா.

"2 நாள் போன பிறகு ஒப்பிரேசன் செய்வம் எண்டுதான் சொல்லுறார்"

"என்ர தங்கச்சி போன முறை பட்ட வேதனைகளை இந்த முறை படக்கூடாது... என்ன செலவானாலும் வடிவா பிள்ளையை வெளியாலை எடுக்க வேணும்" தம்பிமாமாவின் குரல் அடைக்கிறது.

"குணமும் வாறமாதம் பெறுமாதக்காறி... நீ வீட்ட போ சுந்தரம்.... பெரியவன் அம்மாவை நீ கூட்டிக் கொண்டு போயிட்டு நாளைக்கு வா"

"பொன்னம்மக்காவும் குமாரசாமி வாத்தியாரும் இண்டைக்கு வந்து நிக்கிறதாக சொன்னவை" ஐயா அம்மம்மாக்கு சொல்லிறார்.

ஊரிலை இருந்து ஆக்கள் வந்து வந்து போகிறார்கள். அம்மாக்கு நிறைய ஹோர்லிக்ஸ் கொடுக்கிறார்கள். ம்... ம்... அம்மா குடிக்க நல்லாய் இருக்குது.

பின்னேரம் போல பெரியப்பாவும் பெரியம்மாவும் வருகினம்.

"அண்ணா அண்ணி வந்தாச்சு" அப்பா சந்தோசத்திலை குதிக்கிறார்.

"மகேசனும் எங்களோடை வந்திருக்கிறான். தானும் குஞ்சியம்மாட்டை வரப்போறன் எண்டு ஒன்றைக் காலிலை நிண்டு வந்திருக்கிறான்... இந்தாங்கோ பத்தியக்கறியும் சோறும்... நல்லாய்க் கரையக் காச்சி எடுத்து வந்திருக்கிறன்... விடிய செய்தது...ஒருக்கா சூட வைச்சுத் தாறன்" இது பெரியம்மா.

"என்னடா மகேசா... வா.. வா... என்ன அம்மாக்கு பின்னாலை ஒழிக்கிறாய்... வாடா முன் கடையிலை போய் சோடா குடிப்பம்" அப்பா மகேசண்ணையைக் கூட்டிக் கொண்டு றோட்டுக் கடைக்குப் போகின்றார்.

"நீங்க ஊருக்குப் போய் வாங்கோ மாமி... நான் இனிக் கூட நிக்கிறன் தானே" பெரியம்மா அம்மம்மாவை வழி அனுப்பு கின்றா.

எனக்கு இந்தக் குளத்துக்கை இருக்க முடியேல்லை... முட்டு முட்டாக இருக்குது... பயமாய் இருக்குது.... இந்தக் குளத்தின் சுவர் வேறு சுருங்கி சுருங்கி விரிந்து கொண்டு இருக்கிறது... என்னைப் பிடிச்சு பந்தாடுது... ஆரோ என்னை அடிக்கடி பிடிச்சு தள்ளி விடுகிறமாதிரி இருக்குது...அம்மாக்கு மட்டும் தானா வலி? எனக்கும் தானே? யாருக்காவது புரியுதா?

"மகேசன் இஞ்ச வா அப்பு" அம்மா கூப்பிடுறா.

"என்னடா மூக்கை பொத்திக் கொண்டு நிக்கிறாய்" இது பெரியம்மா.

"அம்மா மருந்து மணம்... டெற்றோல் மணம்... அக்... அக்...

சத்தி வருகுது....”

“ நீ தான்டா அடம் பிடிச்சு வந்தனி... வந்த இடத்தில ஒழுங்கா நில்லு”

“எப்பம்மா குஞ்சியம்மாக்கு பாப்பா பிறக்கும்?”

“கடவுளுக்குத் தான் தெரியும்”

“வா இந்த இடியப்பத்தை சாப்பிடு... பசிக்கப் போகுது”

“சரி... தீத்தி விட்டாத்தான் சாப்பிடுவன்”

“உனக்கு செல்லம் மெத்திப் போச்சு”

“அண்ணி தாங்கோ...நான் தீத்தி விடுகிறன்” அம்மா சொல்லிறா.

“சரி... இந்தா குஞ்சியம்மா தீத்திறாவாம்... குழப்படி செய்யாமல் சாப்பிடு”

ஆஸ்பத்திரி வாசலில் “ஐயோ.. ஐயோ... என்ர ராசாத்தி எங்கள விட்டிட்டு போயிற்றியா....” யாரோ ஒப்பாரி வைத்து அழுகினம்... நிறையப் பேர் அங்கையும் இங்கையும் ஓடுற சத்தம் கேக்குது.

“என்னம்மா நடக்குது.” அண்ணாவுக்கு விடுப்பு.

“அது ஒரு பொம்பிளைக்கு பிள்ளை பிறக்கேக்கை நஞ்சுக்கொடி வராமல் செத்துப் போனா”

“அது என்ன நஞ்சுக் கொடி? அப்பிடி என்றால் என்ன? அது எப்பிடி இருக்கும்” மகேசண்ணா பெரியம்மாவை துளைக்கிறார்.

எனக்கும் கேட்க ஆர்வமாய் இருக்குது.

“அது ஒரு குழாய் போல இருக்கும்.... அம்மாவின் வயித்தில இருந்து சாப்பாட்ட எடுத்து பாப்பாக்கு குடுக்கும்... அதுக்குப் பெயர்தான் தொப்புள் கொடி பாப்பாட்ட வயித்திலை ஒரு பள்ளம் மாதிரி இருக்கும். அதில இந்தக் கொடி

பொருத்தப்பட்டு இருக்கும்”

“அம்மா அது நல்ல குழாய் தானே... பிறகு ஏன் நஞ்சுக் கொடி எண்டு சொல்லினம்” மகேசண்ணா கேட்கும் குறுக்குமறுக்கான கேள்வி சரியாய்தானே இருக்குது.

“அது பாப்பாக்கு நல்லது தான் செய்யும். பிறகு வெளிய வராட்டி அம்மாக்கு நஞ்சாகும். அதாலதான் அதை நஞ்சுக் கொடி எண்டு சொல்லினம்”

பெரியம்மா மகேசன்ண்ணாக்கு சொல்ல சொல்ல எனக்கும் எல்லாம் விளங்குது.

அப்போ... நான் பிடிச்சுக் கொண்டிருக்கிற தொப்புள் கொடியைத்தான் நஞ்சுக் கொடி என்று சொல்லுகின்றமா? அப்ப... அப்ப.... இது வெளியில வராட்டி நஞ்சுக் கொடியாகி அம்மா செத்துப் போவாவா? அதுக்கு நான் விடமாட்டன். நான் வெளியில போகேக்கை இதையும் கொண்டு போக வேணும். இப்ப நான் இதை இறுக்கிப் பிடிக்கிறன்..... இரண்டு மூன்று தடவை வளையமாய் சுத்துறன்... அது என்னைச் சுற்றிக் கொள்கிறது... இனி இது என்னை விட்டு விட்டுப் போகாது....

இந்தச் சுவர் தொடர்ந்து சுருங்கி விரிகிறது.

இப்ப இந்தக் கயிறு என்னை சுற்றியிருக்கா... அதாலை இதுக்கை இருக்கிறது ரொம்பக் கஸ்டமாயிருக்குது.... ஆரோ என்னைத் தள்ளிப் பார்க்கினம்... டே பொறுங்கடா... நான் இந்தக் கயித்தை விட்டிட்டு வெளியே வர மாட்டன்... இந்தச் சிவத்தக் கயிறோடைதான் வருவேன்... கயித்தை இழுத்துப் பிடிக்கிறன்.

வெளியே மாறி மாறி “டக்“ “டக்“ என்று சத்தம் கேட்கிறது.

“ஐயோ... ஐயோ...”

அம்மா குளறுகிறா.

“சுடுதண்ணியில ஒருக்கா குளிச்சிட்டு வாங்க... நான் தண்ணியை கொதிக்க வைச்சு கலந்து வைச்சிருக்கிறன்...”,

பெரியம்மா அம்மாவை அவசரப்படுத்துறா.

"அம்மா எனக்கு நித்திரை வருது... எப்ப பாப்பா வரும்" மகேசன் அண்ணாக்கு பொறுமையில்லை.

"மகேசன் நீ நித்திர வந்தா படு... வாடா நான் உன்னை படுக்க வைக்கிறன்..." அப்பா மகேசன் அண்ணாவை ஆஸ்பத்திரியில் உள்ள தங்கு விடுதிக்குக் கூட்டிப் போறார்.

"முதுகு எலும்பு குத்துது... சிலுவை சுமக்கிறது போல வலிக்குது...பிள்ளை திரும்பிப் படுத்தால் எல்லாம் சரியாகும்....நான் டொக்டரைக் கூட்டிக் கொண்டு வாறன்...." பெரியம்மா டாக்கரைத் தேடி ஓடுகிறா...

"டொக்டர் சம்மந்தர்... மிகவும் அற்புதமான மனிதர்.. கை ராசிக்காரர்.... " கூட நின்ற பெரியய்யா சொல்லுறார்.

நேர்ஸ்மார் புடைசூழ சம்மந்தர் வாறார்.

அம்மாவைச் சோதிச்சுப் பார்க்கின்றார்.

"வயிற்றால் போக ஏதாவது குடுங்கோ... சாப்பிட ஏதும் குடுக்க வேண்டாம். சத்தி வந்தால் கூடாது."

"ஏன் டொக்டர் ஒப்பிரேசனா?" அண்ணாவைப் படுக்க வைச்சிட்டு வந்த அப்பா கேட்கின்றார்.

"இல்லை... மிஸ்டர். சேதுகாவலர்... எல்லாம் சரியாய் இருக்குது... என்றாலும் ஒரு தற்பாதுகாப்புக்குத் தான் வயிறு வெறுமையைமாய் இருக்கட்டும் என்று சொல்லி வைச்சிருக் கிறன். ஒப்பிரேசன் செய்யும் போது வயித்துக்கை ஏதும் இருந்து... பிரக்கடித்தால் அது சுவாசப்பைக்குள்ளை போய் உயிருக்கு ஆபத்தாய் போகும்"

டாக்டர் அங்காலே போய் விட்டார்.

ஒப்பிரேசன் என்ற சொல்லைக் கேட்டு எல்லோரும் அமைதி யாக நிற்கிறார்கள்.

எனக்கு நெஞ்சு "பக்" "பக்" என்கிறது.

பயமாய் இருக்கிறது.

யாராவது என்ரை கையைப் பிடியுங்கோ.

நான் மேலும் மேலும் இறுக்கமாக இந்தச் சிவத்தக் கயிற்றைப் பிடிக்கிறன்.

என்ன நடந்தாலும் மீண்டும் இந்த கொடியைப் பிடிச்சு மேலே வரலாம் என்ற பாதுகாப்பு ஏற்பாடுதான்.

000

"வெயிற்றேறியன் பூட் ரூ போத் ஒவ் அஸ்", விமானப் பணிப்பெண்ணிடம் ஜீவா சொல்லுகின்றார்.

ஜீவாவின் குரல் கேட்டு கண் விழிக்கின்றேன்.

"சாப்பாடு வரப்போகுது... சாப்பிட்டு திரும்ப படுக்கலாம்" ஜீவா சொன்னபடி தனக்கு முன்னால் உள்ள சின்ன ரி.வி. திரையில் படம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஒன்பது ரூபாய் நோட்டு. சத்தியராஜ் நடித்த படம். தங்கர் பச்சான் இயக்கியது.

பிள்ளையளோடை இருக்காமல் அந்திமக்காலத்தில் மனைவி யுடன் தனியே இருந்து கஷ்டப்பட்டு வாழும் ராசப்படை ஆச்சியாக சத்தியராஜ். அவர் ஒரு சந்தர்ப்பத்தில் மனம் மாறி இனியாவது தம் பிள்ளைகளுக்கு அருகே போய் வாழுவோம் எனப் புறப்பட... பாம்பு கடிச்சு இறக்கும் அவர் மனைவி.

ஜீவா படத்துடன் மீண்டும் மூழ்கி விடுகின்றார்.

என்னோடு இராது...நித்தனோடு இராது...சரனோடு இராது... கடைசி காலத்தில் கஷ்டப்பட்ட அப்பா அம்மாவை நினைத்துப் பார்க்கின்றேன்.

யாரையும் கஸ்டப்படுத்தாது... கடமைப்படுத்தப்படாது... கடன்படப்படாது... என பிடிவாதமாய் சொந்தக்காலில் நின்று... நாம் எல்லாம் கையாலாகதவர்களாக வாழ... எம்மை விட்டுத் தூர விலகிப் போகும் அப்பா அம்மா...

அப்பா இறந்து இன்றுடன் மூன்று வருடமாய் போய் விட்டது.

இப்போது அம்மா மரணப் படுக்கையில்.

எழும்புவாவா?...

எழும்பிக் கதைப்பாவா??

என்ன சொல்லுவா???

ஆயிரமாயிரம் கேள்விகள்... அர்ச்சுனன் அம்பாக என் இதயத்தில் குத்த... துகிலுரியும் படலத்தில் "கண்ணா நீயே சரணம்" என பாஞ்சாலி கை கூப்பி சரணடைந்தது போல நானும் சரணடைந்து... சரணடைந்தது மனதுக்கு பாரம் குறையவும்... என் கண்கள் மீண்டும் மூடி மௌனமாயின.

விமானம் முகில்களினூடு மிதந்து கொண்டிருந்தது.

000

"பீப்... பீப்...பீப்"

என்னது விசில் சத்தம் வெளியில?

"டே மகேசன்...ஆஸ்பத்திரிக்கை விளையாடக் கூடாது. வெளிய போய் நின்று உன்ரை பூவரசங் குழலை ஊது... வர வர இவன்ர குளப்படி தாங்க ஏலாமல் இருக்குது" பெரியம்மா பொரிஞ்சு தள்ளுகிறா.

"பீப்... பீப்... பீப்"

அண்ணா தொடர்ந்து பீ..பீ... ஊதுகிறார்.

"வாடா.. முன்கடையிலை சீனிபணிஸ் வாங்கித் தாறன்" எனக் கூறி பெரியய்யா மகேசன் அண்ணாவைக் கூட்டிக் கொண்டு போறார்.

நேரம் 11.00 மணியாகிறது.

"விடிய லோஞ்சியிலை வாறவை இனி வந்திடுவினம்" அப்பா பரபரக்கின்றார்.

நான் பேசாமல் அம்மாவின் உள் மடியில படுத்திருக்கிறன்.

வெளியே போறதை யோசித்துப் பயந்து பயந்து கன நேரமாக நான் நித்திரை கொள்ளவில்லை.

வயிற்றால் அடிச்ச களையிலை அம்மா கண் அயர்ந்திட்டா.

ஊரிலிருந்து கிளியக்கா, சின்னம்மா, பூ அன்ரி எல்லோரும் அம்மாட்டை வந்து நிக்கினம் போல இருக்குது.

ஒரே சத்தமாக இருக்குது.

மாமாமார், சித்தப்பாமார், தாத்தாமார் என எல்லோரும் என்னைப் பார்க்க வந்திருக்கினம்.

எனக்கு என்னவோ வெளியில போகப் பயமாய் இருக்குது.

இந்த நஞ்சுக் கொடியை விட்டுட்டுப் போனா.... பிறகு அது வெளியே வராது... அது வெளியே வராட்டி.. அம்மா செத்துப் போவா... அம்மா செத்துப் போனா.. நானும் அப்பாவும் அனாதைகளாய்ப் போய்விடுவம்.

அம்மாட வயிறுசுருங்கி விரிய.. சுருங்கி விரிய... எனக்கு முட்டு முட்டா இருக்கு... வெளியே போடி.. வெளியே போடி.... எனத் தள்ளுற மாதிரி இருக்குது.

என்ன நடந்தாலும் நான் அசைய மாட்டன்.

டொக்டர் வாட் ரவுண்ட் வரப்போறாராம்... எல்லோரையும் வெளியே போகட்டாம்... எல்லோரும் கலைஞ்சுபோகினம்.

டொக்டர் அம்மாட வயித்தை அமத்தி அமத்தி பார்க்கிறார்.

ஐயோ எனக்கு வலிக்குது.

“நான் வெளியே வர மாட்டன் டாக்டர்”

நான் சொல்லுறது அவருக்கு கேட்குதோ தெரியாது.

ஆனால் அவர் சொல்லுறது எனக்கு நல்லாய்க் கேட்குது.

“பிள்ளை திரும்புது இல்லை. அதிட இதய துடிப்பும் கூடுதலாய்

உள்ளது. கொடி சுத்தி இருக்கலாம்... அவசரமாய் ஒப்பிரேசன் பண்ணுவம்... ஏற்பாடு பண்ணுங்க”

டொக்டர் சொல்லி விட்டு அவசர அவசரமாய் வெளியே போகின்றார்.

“எதுக்கு இப்ப மாமி அழுகிறியள்?” பெரியம்மா அம்மம்மாக்கு ஆறுதல் சொல்லுகின்றார்.

“நல்லது நடக்கத்தான் ஒப்பிரேசன் செய்வினம்... அப்பதான் தாய்க்கும் பிள்ளைக்கும் நல்லது நடக்கும்” அவரே தொடர் கிறார்.

“ஒப்பிரேசன் எண்டால் என்ன அம்மா?” மகேசன் அண்ணை பெரியம்மாவை குடைகிறார்.

“குஞ்சியம்மாவின் வயித்தை வெட்டி பாப்பாவை வெளியில எடுப்பினம்”

“வயிற்றை வெட்டுறதா?...கத்தி என்னிலும் படுமா? என்னையும் வெட்டிப் போடுமா? ஐயோ.. நான் எங்க ஓடுறது?...ஐயோ.. ஐயோ...”

000

“என்ன மீண்டும் கெட்ட கனவா?” ஜீவா தட்டி எழுப்புறார்.

““இன்னும் கொஞ்ச நேரத்தில் டோகாவில் றான்சிற். பிறகு என்ன?... விடியப்புறம் கொழும்புக்கு போய் மத்தியானம் அம்மாவிடம் போயிடலாம்” எனச் சொல்லி விட்டு மீண்டும் தூங்குகின்றார்.

விடியபுறம் 3 மணிக்கு நாங்க போறம்.

சரன் நாளை விடியப்புறம் 5 மணிக்கும் நாளையின்று இரவு நித்தனும் வந்து விடுவார்கள்.

பின்பென்ன மூன்று பேரையும் பார்த்தால் அம்மா எழும்பி விடுவா என்ற நம்பிக்கை எனக்கு பலத்தைத் தருகிறது.

000

# ஐ.சி.யில் அம்மா

அதிகாலை 3 மணிக்கு விமானத்தின் சில்லுகள் கட்டு நாயக்காவின் தரையைத் தொட வெளியே விஜயா அக்கா வானுடன் காத்திருக்கின்றா. வானை ஓட்டி வந்திருந்தவர் சரனின் அடுக்கு மாடியில் அயலவராய்... அம்மா அப்பாவுடன் அன்பாயிருக்கும் பாலா அண்ணா அம்மாக்கு தூரத்து உறவு.

வேகக் கட்டுப்பாடுகளை மீறி வான் வவுனியா நோக்கி விரைகிறது.

பகல் பார்வையாளர் நேரத்தினுள் ஆஸ்பத்திரி வாசலினுள் நுழைந்து விட வேண்டும் என்பது இலக்கு.

எனவே வழியில் எதுவும் சாப்பிடாது தொடர்ந்தது எங்கள் விரைவுப் பயணம்.

ஒரு மணிக்கு மூடப்படவிருந்த ஆஸ்பத்திரி வாசலில் 12.55க்கு வான் போய் நிற்கின்றது.

கிளியக்கா பசுவைப் பிரிந்த கன்று போல் திகைத்துப் போய் நிற்கின்றா.

எம்மை அழைத்துக் கொண்டு விரைவாக ஐ.சி. வார்ட்டுக்குள் அழைத்துப் போகின்றா.

அம்மாவைச் சுற்றி வயர்ப் பின்னல்கள்.

வாயினுள் பெரிய மூச்சுக் குழாய் பொருத்தப்பட்டிருக்கிறது.

அறிவு மயங்கிய நிலையில் அத்தனையையும் பிடிங்கி எறிந்து

விடாமால் ஒரு மருத்துவத் தாதி அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு நிற்கின்றா.

எல்லாருக்கும் அன்னமிட்ட கை ஒரு வைத்தியத் தாதியின் கைகளில்.

அம்மாவின் உயிா ஆண்டவனின் காலடியில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

கல்வாரி மலையடிவாரத்தில் சிலுவையில் அறையப்பட்ட யேசுபிரான் போல அம்மா படுத்திருக்கின்றா.

"நீங்க அவவுடன் கதையுங்கோ... அவாக்கு எல்லாம் விளங்கும்... ஆனால் அவாவால் கதைக்க முடியாது" என டாக்டர் சொன்னார்.

தினம் தினம் பிராணாயாமம் செய்து சுத்தம் செய்யப்பட்ட அம்மாவின் நெஞ்சாங்கூடு இப்போ செயற்கைச் சுவாசத்திடம் கையேந்தி இருக்கும் நிலையை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

ருசி ருசியாக சமைச்சு... சாப்பாடு தீத்தி... எம்மைச் சீராட்டி... தாலாட்டி... வளர்த்த அந்தக் கைகள்... அப்பாவைக் குழந்தை போல் பார்த்த அந்த கைகள் இரண்டும் இன்று வயர்களை பிடுந்து எறிந்து விடாமல், மெல்லிய துணியால் கட்டப்பட்டு இருக்கின்றன.

தேவாரங்களும் பாசுரங்களும் பாடிய வாய்...

பாரதம் இராமாயணம் இன்னும் பலவும் எமக்குச் சொல்லித் தந்து சீராக எம்மை வளர்த்த வாய்...

எம்மை உச்சி மோந்து வாழ்த்திய வாய்...

நாம் சின்ன சின்னக் குழப்படிகள் செய்த போதெல்லாம் எம்மைத் திட்டி வழிகாட்டிய வாய்...

இன்று ஓய்ந்து போய் கிடக்கிறது.

எம் எண்ணங்களை மட்டும் சுமந்து திரிந்த மனது இன்று என்ன

நினைத்துப் படுத்து இருக்கின்றதோ...

அம்மா... அம்மா...

நான் கலா...

கேட்குதா?

அம்மா கண் திறக்கவே இல்லை.

"அம்மா" என மெதுவாக அழைக்கின்றேன்.

கண்களின் கரைகளில் கண்ணீர் வழிகின்றது.

என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

எங்கள் இருவரின் உயிர் துடித்த நேரம் அது.

அவாக்கு கேட்குதோ இல்லையோ தெரியாது.

தெரிந்து என்ன?

"நான் சாமியிட பிள்ளை! நீயும் சாமிட பிள்ளை!! கவலைப் படாதே" என்று தானே சொல்லப் போறா.

"கஷ்டம் வந்தால் சிவபுராணம் படி... ராம நாமம் சொல்லு...."

அம்மா சொன்னது நினைவுக்கு வர அவாவை கட்டியணைத்து சிவபுராணம் சொல்லுகின்றேன்.

"நமச்சிவாய வாழ்க...

நாதன் தாள் வாழ்க...

இமைப் பொழுதும் என் நெஞ்சில்

நீங்காதான் தாள் வாழ்க..."

அம்மாவின் இரு கால்களும் குறுக்காக போக முயற்சிக்கிறது.

"கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க"

வலப்பக்க கால் இடது பக்கம் ஆடுகிறது.

"ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாழ் வாழ்க"

இடப்பக்க கால் வலது பக்கம் ஆடுகிறது.

அம்மாவின் கண்களில் தொடர்ந்து கண்ணீர் தாரை தாரையாக...

அம்மா... அம்மா....

வேயுறு தோழி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி,
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்லஅவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே!

அம்மா பயப்பிட வேணாம்...

அவை நல்ல நல்ல..

எல்லாமே... நல்ல... நல்ல...

தூக்கிய பாதம்...

அவன் அடியவள் உனக்கு எல்லாம் நல்ல....

வெளிநாடுகள் போல வவுனியா ஐ.சி.யில் நெடுநேரம் தங்கவோ அல்லது இரவு அம்மாவுடன் தங்கவோ அனுமதிக்க மாட்டார்கள்.

முதல் நாள் புதன் கிழமை மாலையில் வீடு திரும்பினோம்.

வியாழன் அதே நிலை... முன்னேற்றம் ஏதுமில்லை.

சரனும் நித்தனும் வந்து விட்டார்கள்.

சரனிடம் டாக்டர்கள், அம்மா எழும்பி வந்தாலும் சுகதேகியாக

முடியாது என்கின்றார்கள்.

கடந்த ஞாயிறுதான் அம்மா நடமாடிய கடைசி ஞாயிறு.

நான் தொலைபேசி எடுத்த பொழுது நல்லாய்த் தான் கதைத்தவா.

“வீட்ட பாக்கியம் நேர்ஸ் வாறா. உன்னோடை கதைக்க இப்போ நேரமில்லை” இப்படிச் சொல்லி கதையை முடித்துக் கொள்கின்றா.

எனக்கு தெரியுமா கதை முடியும் நேரமிது என்று.

பாக்கியம் கொண்டு வந்து கொடுத்த மாம்பழம் சாப்பிட்டு இருக்கின்றா.

பாக்கியத்தின் மகனை சாமியறைக்கு கூட்டிச் சென்று விபூதி பூசி “நீ என்ர மகன் சரன் போல் வரவேண்டும்” என ஆசீர்வாதம் செய்திருக்கின்றா.

“கடும் மழை பெய்யுது. தோய்ச்சுப் போட்ட கிருபாவின் சேட்டுகள் மழைக்கு காய்ஞ்சு இராது.... புது சேட்டு என்னட்டை இருக்கு. அதை கிருபாவிடம் கொடுங்கோ” என கிருபாவின் மனைவியிடம் புதுச்சேட்டுகள் கொடுத்து விட்டிருக்கிறா.

நாங்கள் இல்லாத பொழுது கிருபாதான் அம்மாவின் மூத்த மகன்.

அயலில் உள்ளவர்கள் எல்லோரும் அம்மா பெற்ற பிள்ளைகளே.

அன்றுஇரவு அம்மாக்கு கடுமையான சத்தியும் வயிற்றுளைவும் வந்திருக்குது.

சத்தி எடுத்து கீழே விழுந்து விட்டா.

சின்னம்மா தூக்கி தன் மடியில் வைத்திருக்கின்றா.

பூ அன்ரி, கிளியக்கா ஆட்டோவை அழைக்கின்றார்கள்.

இரவு 12.00 மணிக்கு யாரும் வர யோசிக்கின்றார்கள்.

காரணம் மழை அடை மழை.

கடைசியாக அருள் ஆட்டோ கொண்டு வருகின்றார் - அடை மழையில் யமுனை ஆற்றைக் கடந்து கண்ணனை வசுதேவர் கோகுலம் கொண்டு போனது போல...

அயல் வீட்டிலுள்ள கௌரிஸ்வரன் அம்மாவை தன் மடியில் வைத்துக் கொள்ள அனைவரும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகின்றார்கள்.

"என்ர அம்மா சாகேல்லை... இவாதான் என் அம்மா" எனச் சொல்லிக் கொண்டிருந்தவர் கௌரிஸ்வரன். இப்போ அவர் மடியில் அம்மா அங்கு கூடையில் கண்ணன். இங்கு கண்ணன் மடியில் யசோதை.

உடனே ஐ.சி.யில் அனுமதித்தாயிற்று.

இன்று சனி. ஏகாதசி.

அம்மாக்கு துளசி என்றால் ரொம்ப ரொம்ப இஷ்டம். பூவுடன் கூடிய துளசியைப் பிடிங்கிக் கொண்டு போய் தலையில் வைத்து விடுகிறன்.

தொடர்ந்து தேவாரம்... பாசுரம் பாடியபடியே இருந்தேன்.

அம்மாக்கு எல்லாமே கேட்டிருக்கும்.

லண்டனில் இருந்து கௌரி பெரியம்மா எழும்ப வேணும் என்று கோயிலுக்கு போட்டு வாறன் அக்கா எண்டு சொல்லுறாள்.

பெரியம்மா எழும்புவாவா?

எனக்கு எதுவும் புரியவில்லை...

எழும்புவாவா?

எங்களுடன் இருப்பாவா??

இல்லை.. தன்ரை அப்பா அம்மாவிடம் போகப் போறாவா???

நம் அடுப்பில் பொங்கி வரும் பால் மீண்டும் கன்றுக் குட்டிக்கு

போகுமா?

பூமாதேவி தன் இருகரம் நீட்டி சீதையை அழைத்த பொழுது சீதை போகாது நின்றாவா?

இல்லையே!

"எங்க குடும்பத்தில யாருக்கும் அவலச்சாவு மட்டும் வரக் கூடாது" என தான் மார்க்கண்டேயரின் மிருத்திவ்ய மந்திரம் சொல்வது என அம்மா அடிக்கடி சொல்வா.

இதனை இப்போ நான் சொல்லியபடி...

"ஓம் திரியம்பகம் யஜாமஹேசுகந்திம் புஷ்டிவர்த்தனம் உர்வாருக மிக பந்தனாத் ம்ருத்யோ மூஷியமாம் அம்ருதாத்"

அம்மா இதன் பொருளை எனக்குச் சொல்லித் தந்தது ஞாபகத்திற்கு வருகிறது.

"நான் முக்கண்ணுடைய சிவனைத் தியானம் செய்கின்றேன். எனக்கு நல்ல ஜன்ம பந்தங்களையும் ஆரோக்கியத்தையும் தர வேண்டும்.

பழுத்த பக்குவமடைந்த வெள்ளரிப்பழம் போல் என்னைப் பற்றுகளில் இருந்து விடுவித்து மரணபயம் போக்கி இறைவனுடன் ஐக்கியப்படுத்த வேண்டும்."

வீட்ட வர மனமில்லை... ஆனாலும் ஆஸ்பத்திரியில் தங்கி நிற்க அனுமதியில்லை.

வீட்ட வந்து... வராத நித்திரையுடன் போட்டி போட்டு... உழன்று... உழன்று... படுத்து.. அரை மயக்கமாகி... நுளம்புகளுடன் போட்டி போட்டு... போராடி... போராடி...

மறுநாள் பிரதோஷம்... பிரதோஷ மந்திரம் கிளியக்கா படிக்க அம்மாவின் உடம்பு அசைகிறது.

அந்த ஆன்மாவுக்கு வேண்டப்பட்டதெல்லாம் இறைசிந்தனை மட்டுமே!

அப்போ ஏன் எங்களை நினைக்கவில்லை?

நாங்களும் அவாக்கு கடவுள் தானே?

மிதிலா மீராவை எப்போதும் பூதேவி, ஸ்ரீதேவி என்றுதான் சொல்லுவார்.

தன்னைச் சுற்றி இருந்த எல்லோரையும் கடவுள்களாகத் தானே அவர் பார்த்தார்.

"அம்மாட வயித்தைக் கிழிச்சுக் கொண்டு... ரத்தம் சொட்ட சொட்ட வந்த நரசிம்மம் நீ" என கோபம் வந்தால் அப்பா என்னைத் திட்டுவதுண்டு.

உண்மைதான்!

என் பிறப்பே அம்மாக்கு மறுபிறப்புத்தான்.

எல்லாம் எனக்குள் அடக்கம் என விசுபரூபம் காட்டிய அந்த மாயவன் என்னையும் தன்னுள் அணைக்கின்றான்.

நான் அயர்ந்து போகின்றேன்.

000

# மூளாயில் அம்மா ஒப்பிரேஷன் தியேட்டரில்

*“தூக்கிய பாதமே...*

*என்ரை புளியந்தீவானே...*

*என்ரை வைத்தீஸ்வரனே...*

*என்ரை பிள்ளையைக் காப்பாற்று”*

*அம்மம்மா புளியந்தீவானுடன் வாதிடுகிறார்.*

*“சுந்தரம்... உன்ரை அழுகையை நிற்பாட்டு... ஐயா அம்மம்மாவின் அழுகையை நிற்பாட்ட முயற்கின்றார்.*

*“தாயுமானவனாக வந்து பிரவசம் பார்த்தியே... இப்ப பார்க்க மாட்டியா? என்ரை பிள்ளைக்கு பிரசவம் பார்க்க வர மாட்டியா?”*

*அம்மம்மா புலம்புகின்றார்.*

“மாமி... அங்கை பாருங்கோ... அவர்தான் தாயுமானவராய் வரப்போறார். டொக்டர் சம்பந்தர் தான் தாயுமானவராய் வரப் போறார். உங்கட புளியந்தீவான் லேசுப்பட்டவரா?” பெரியம்மா அம்மம்மாவை ஆறுதல் படுத்துறார்.

*“அது உண்மைதான் அண்ணி”*

*அப்பா கொஞ்சம் தைரியமாய் இருக்கிறார் போல இருக்குது.*

*“ஒப்பிரேசனுக்கு நேரமாகுது... வாருங்கோ...” நேஸ்மார் அம்மாவைக் கூப்பிடுகிறார்கள்.*

அம்மம்மா அம்மாக்கு விபூதி பூசி விடுகின்றா.

அம்மா அதனை வேண்டி தன் வயிற்றிலும் பூசிறா....

ம்...ம்... இது அம்மா எனக்குப் பூசுறா.

பயப்பிட வேணாம் அம்மா நான் தைரியமாக சொல்லு கின்றேன்.

மகள் தாய்க்கு சொல்லும் உபதேசம் இது.

ஆனாலும் சொல்லும் போது எனக்கு உடம்பு உதறுது.

இந்த நஞ்சுக் கொடிதான் பெரிய பிரச்சனை. கொஞ்சம் கையை விட்டாலும் வழுக்குது... நான் கொண்டு போகாட்டியும் அம்மாக்கு அது நஞ்சாகிப் போகும்... அம்மா செத்துப் போவா.

வெளியே கனபேர் நடக்கிற சத்தம் கேட்குது.

“குளோரோபோம் குடுக்க வேணும்”

டொக்டர் வந்திட்டார் போலக் கிடக்கு.

“எல்லா ஆயுதங்களும் சுத்தம் செய்யப்பட்டு இருக்கு டாக்டர். நாங்க ரெடி”தாதிகள் சொல்வது கேட்குது.

ஐயோ.. வந்திட்டான்கள்.. எனக்கு உதறுது அம்மா... அம்மா என்னை உங்களில இருந்து பிரிச்சு எடுக்கப் போறான்கள்... மாட்டன்.. மாட்டன்.. நான் வெளியிலை போக மாட்டன்... ரத்தம்.. ரத்தம்... ஐயோ...”

“என்ன கலா கனவா?” பூ அன்ரி வந்து விபூதி இட்டு விடுகின்கிறா.

“பயப்பிடாமல் படு” என என் நெற்றியில் கொஞ்சி விட்டு நுளம்பு வலையை வடிவாக விரிச்சு விட்டிட்டு போகிறா.

000

# வவுனியா ஐ.சி.யில் அம்மா

இன்று சனிக்கிழமை. பிரதோஷம்.

“சிவசூரிய நாராயண” என அம்மா தினமும் கூப்பிட்டு சந்தியா வந்தனம் செய்யும் அந்த சூரிய பகவான் இருண்ட முகத்துடன் மெல்ல மெல்லமாக வந்து கொண்டிருக்கின்றான்.

“நான் இருக்கிறன் பிள்ளை. நீ பயப்பிடாதே” என முன் வளவு வைரவர் மணி அடிக்கின்றார்.

“அல்லாகு அக்பர்” என பாங்கு ஓதும் ஒலியும் கேட்கிறது.

“நானும் உன்னைக் கர்ப்பத்தில் சுமந்தவளுக்கு உறுதுணையாய் இருப்பேன்” என தேவாலய மணியும் ஒலிக்கிறது.

எல்லோரும் இருந்து என்ன பலன்?

எனக்கு அம்மா வேணும்.... குளிச்சு கும்பிட்டு மீண்டும் ஆஸ்பத்திரி போய் சிவபுராணம் பாடி.. ஆழ்வார்கள் பாசுரம் பாடி... அம்மாவைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு இருக் கின்றேன்.

பெரிய டாக்டர் எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையும் அழைத்துக் கதைக்கின்றார்.

”உங்கள் தாயாருக்கு இதுக்கு மேல் வைத்தியம் செய்வது கடினம். ஆனால் நாமாக எந்த வயர்களையும் அகற்ற மாட் டோம்... அவர் இயற்கையுடன் கலக்கும் வரை அனுமதிப் போம்”

ஏதோ ஒரு ஆறுதல்.

இரவு 9.10வரை அம்மாவுடன் நின்று விட்டு மறுநாள் வருவோம் என வந்து விட்டோம்.

வீட்ட வந்தாலும் சாப்பிட முடியவில்லை.

உறங்க முடியவில்லை.

பயண அலைச்சல்களில் கால்கள் இரண்டும் ரணமாக இடுப்பும் இறுகிப் போய் நடக்க முடியாமல் இருக்கின்றது.

மூட்டு வலி எலும்புக்கை போய் நின்று என் ஆவியை பிடிச்சு இழுத்தபடி இருந்தது.

கண்கள் குழமாக...

மனசு ரணமாக...

இதயம் இலவம் பஞ்சாக...

நான் நானாக அன்றி...

காற்றில் பறக்கும் சருகாக...

என் வலதில் எதுவும் செய்ய முடியாது...

விதி இழுத்த இழுப்பில்...

அதன் வேகத்தில்...

நதியோடும் இலையாக...

அந்த இலையில் ஒரு எறும்பாக....

ஆடி அசைந்து...

கண்கள் களைத்து...

நித்திரை எனை அணைத்து...

எங்கேயோ கூட்டிப் போகிறது.

000

நான் விடமாட்டன்..

கையை விடமாட்டன்...

கெட்டியாக நான் பிடித்து வைத்திருந்த அந்தக் கொடி இப்போது ஆட்டம் காணுகிறது.

குளத்துக்கை தண்ணி குறையுற மாதிரி இருக்குது.

ஐயோ என்ன நடக்குது . . .

இப்ப தண்ணி இல்லாட்டி நான் செத்துப் போவன்

குளத்தால் எடுத்து கரையில் போடப்படும் மீன் குஞ்சாக நான்... நானா... உயிர் வாழ்வா... ஐயோ.. அம்மா... அப்பா...

வெளியில் "டக்"... "டக்" என்று கனபேர் நடக்கிற சத்தம் கேட்குது.

நான் இருக்கிற இந்தக் குளம் "குளுக்" "குளுக்" என ஆடுகிறது... அம்மாவை ஒப்பிரேசன் தியேட்டருக்கு கொண்டு போகினம் போலை இருக்கு.

"ஒண்டுக்கும் நீங்கள் பயப்பிட வேண்டாம்... இப்ப மயக்க மருந்து தந்தால் பிறகு உங்களுக்கு எந்த நோவும் தெரி யாது"சொல்லிய நேர்ஸ் தொடர்கிறார் "குளோரோபோம் கொடுக்க இப்ப டொக்டர் வந்திடுவார்".

மீண்டும் அந்த டொக்..டொக்.. டாக்டர் வந்திட்டார் போலும்.

"என்ன தங்கச்சி பயமாய் இருக்கா?"

"ஓம் டொக்டர்..."

"பன்னீர்க் குடத்தில் தண்ணி குறையுது... அதனல தொப்புள் கொடி கர்ப்பபையுடன் ஒட்டிப் போகலாம். அப்படிப் போனால் பிள்ளைக்கு ஆபத்து... அதுக்கு சாப்பாடும் சுவாசமும் இல்லாமல் போயிடும்... முக்கியமாக சுவாசம் இல்லாட்டி குழந்தையின் மூளை பாதிக்கப்படலாம். அதுபடியால்தான் இப்ப கட்டாயம் ஒப்பிரேசன் செய்ய வேணும்..."

"எல்லாம் கடவுள் சித்தம் டொக்டர்"

"நாங்க இப்ப 1-2-3 சொல்லி குளோரோபோம் தருவம்... உங்களுக்கு நித்திரை வாறமாதிரி இருக்கும் சரியா... 1...2...3..."

அம்மா உறக்கத்தில் போறா போலும்.

எனக்கு நெஞ்சிடியாய் இருக்குது.

டொக்டர் வயித்தில கத்தியை வைக்கிற மாதிரி இருக்குது. எனக்கு அந்த அசைவு தெரியுது.

உடம்பு எல்லாம் வலிக்குது.

யாரோ அம்மாவின் வயிற்றைப் பிரித்து என்னைத் தேடுற மாதிரி இருக்குது.

"ம்... தலை தெரியுது..." டாக்டர் சொல்லுகிறார்.

என்னைக் கண்டு பிடிச்சிட்டினம்... என்னைத் தூக்கப் போகினம்...

நான் கெட்டியாக தொப்புள் கொடியை பிடிச்சபடியே இருக்கிறன்.

வெளியில பிரச்சனை எண்டால் மீண்டும் அம்மாவின்டை வயித்துக்கை வந்திடலாம். ஆனால் இந்தக் கொடியை வெட்டாட்டி அம்மா செத்துப் போவா... இப்ப எனக்கு இந்த தொப்புள் கொடிதான் முக்கியம்..

என்ர தலையை பிடிச்சு இழுக்கினம்.

என்ன வந்தாலும் நான் தொப்புள் கொடியை இறுக்கிப் பிடித்திருக்கிறன்.

"கெதியாய் வாங்கோ..."

என்னை என்ர குளத்துக்க இருந்து தூக்கிப் போட்டார்கள்... என் கையில இருந்த தொப்புள் கொடி கை நழுவிப் போட்டுது.

கண் தெரியவில்லை. எல்லாம் வெள்ளையாக கறுப்பாக மங்கலாக இருக்குது... அட இதுதான் உலகமா? அம்மா எப்பிடி இருப்பா? அப்பா எங்கே??

“கத்திரிக் கோலை எடுங்கோ... தொப்புள் கொடியை வெட்டினால் தான் பிள்ளை தானாக சுவாசிக்கும்” டாக்டர் தனக்குப் பக்கத்தில் நின்ற தனது மாணவ மாணவிகளுக்கு சொல்லுகின்றார்.

டொக்டரின் கைக்கு ஒரு கத்தரிக்கோல் மாறுகிறது.

ஐயோ.. கத்தரிக்கோல்.. அம்மா வலிக்குது... ஐயோ என்ரை தொப்புள் கொடி... ஐயோ அம்மா வேற நான் வேறையாக.. நான் சத்தம் போட்டுக் கத்துகின்றேன்...

“பிள்ளை அழுகிற சத்தம் கேட்குது” அறைக்கு வெளியில் நிற்பவர்கள் ஆனந்தப்படுகிறார்கள்.

“நல்லாய் அழட்டும்... அப்பதான் சுவாசம் நல்லாய் நடக்கும்”

“பிள்ளையைக் கழுவி நல்லாய் துடையுங்கோ”

“தையல் போடவேணும்”

வெட்டுப்பட்ட...

இல்லையில்லை...

பிரிக்கப்பட்ட குருதி வடியும்...

நான்குடி இருந்த அம்மாவின் வயிற்றை மீண்டும் தைக்கப் போகின்றார்கள்

“பொம்பிளைப் பிள்ளை பிறந்திருக்கு” வெளியில் நிற்கும் உறவுகளுக்கு நேர்ஸ் தகவல் சொல்லுகின்றா.

“என்ர ஐயனாரே... அம்மாளாச்சி வீட்டை வந்திருக்கிறா...” அம்மம்மாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

கதைக்க முடியாமல் எங்கள் ஊர்ப்பக்கம் பார்த்துக் கும்பிடுகின்றா.

அம்மா வலிக்குது... யாரோ என்ரை தொப்பிளுக்கு பிளாஸ்டிக் போடுகிறார்கள்... வயித்தில வலிக்குதம்மா.. அம்மா எங்கை... ஏன் அம்மா என்னைக் கழுவினம்.. அம்மாவை நான் எப்ப பார்க்கிறது?

"என்னடா செல்லம்... ஏன் அழுகிறியள்... ஆராரோ... ஆராரோ.. கொஞ்சம் பொறுங்கோ... அம்மா மயக்கமாய் இருக்கிறா..."

நான் தொடர்ந்து அழுகிறேன்.

தொப்புள் கொடி இருந்த இடம் வலிக்கிறது.

"என்னட்ட தாங்கோ" நேர்ஸிடம் இருந்து பெரியம்மா என்னை வாங்குகின்றா.

"இவளுக்கு கலாநிதி என்று பெயர் வைப்பமா" எனக்கான நாமகாரணம் அந்த பூமாதேவியின் வாயில் இருந்து உதிர்கிறது.

"அவள் பெரியவளாகி பெரிய படிப்பு படிச்சு வந்தால் அவளை எல்லோரும் கலாதிநி. கலாநிதி சேதுகாவலர் எனக் கூப்பிடுவார் கள்.... பெருமையாக இருக்கும்"

"ஓமண்ணி... அப்படியே வைப்போம்" எனக் கூறியபடியே என்னை வாங்கி என் நெற்றியில் முத்தமிடுகிறார்", அப்பா.

"மகேசன் இஞ்ச வா... தங்கச்சி பாப்பாவ பார்" என பெரியய்யா

அண்ணாட்ட காட்டிறார்.

அண்ணா என்ர விரலை தொட்டுப் பார்க்கிறார்.

அம்மம்மா...ஐயா...மாமாமார்... எல்லோரும் மாறி மாறி தூக்கினம்..."

நான் அம்மாவைத் தேடுகிறன்.

ம்... ம்மா... கத்திக் கத்தி அழுகின்றேன்.

"பிள்ளை தாயைத் தேடுது.... தாய் எழும்பும் வரை பிள்ளையை கண்ணாடிப் பெட்டியுள் வைக்க வேண்டும்" எனக் கூறி நேர்ஸ் என்னையும் வேண்டிக் கொண்டு போறார்.

அம்மா... அப்பா... நான் தனிச்சுப் போறன்... ஐயோ அம்மா... அம்மா... எங்கே?"

000

# மாயப்பிறப்பறுத்த மன்னன் அடிபோற்றி

*"கலா.. நித்தன்... சரன் எழும்புங்கோ... அம்மாக்கு ஏலாமல் இருக்காம்... ஆஸ்பத்திரியில் இருந்து டெலிபோன் அடிக்கினம்"*

*27-11-2017. அதிகாலை 3.00 மணி.*

*எல்லோரும் எழுந்து ஆட்டோ பிடிச்சுக் கொண்டு ஓடிப் போறம்.*

*ஆட்டோ விரைகிறது.*

*பெருமாளே... என்ன இது... அம்மாவை உன்னிடம் அர்ப்பணிக்கும் நாள் வந்திட்டுதா?*

*பிரபஞ்ச நாயகியே மீண்டும் உன் மகளை உன் கர்ப்பத்துக்குள் எடுக்கப் போறியா...??*

*ஆஸ்பத்திரி வாசலில் இருந்து உள்ளே எப்படி போனோம்.. எப்படி நடந்தோம்.. எதுவும் ஞாபகம் இல்லை...*

*ஐ.சி. வாட்டினுள் போனால் அம்மா புறப்பட்டு விட்டா என்றனர்.*

*கட்டிலில் அம்மாவை மூடி வைத்திருந்தனர்.*

*"மாயப் பிறப்பறுத்த மன்னனடி போற்றி" சிவபுராண வரிகளை அம்மா சொல்வது போல இருந்தது.*

*அவன் அருளாலே அவன்தாள் வணங்கி*

சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை

முன்னை வினை முழுவதும்

ஓய உரைப்பன் யான்

என்னை அழ விடாது என் நா சிவபுராணத்தை ஓதியபடியே இருந்தது.

“மிகுதிக் காரியங்களைப் பார்க்க இங்கை ஒரு அந்திமக்காலச் சேவை உண்டு. பெட்டி எடுக்க... பூ எடுக்க.. வான் பிடிக்க.. மொத்தச் செலவு ஒரு இலட்சம் தான்” எங்கள் மூவரையும் அவர்களிடம் கிருபா அழைத்துப் போகின்றார்.

“எனக்கு என்ன நடந்தாலும் நித்தன் தந்த அம்மனுக்கு சாத்திய பச்சை சீலையை உடுத்தி விடு”

அம்மா போன கிழமை டெலிபோனிலை சொன்னது ஞாபகம் வருகிறது.

நானும் கிளியக்காவும் ஆட்டோவில் போய் அதனை எடுத்து வர...“நீங்கள் உடுத்த வேண்டாம்... நாங்களே அழகாய்ச் செய்து விடுவம்” என அந்திமச் சேவை அதிகாரி அம்மா எம்மிடம் அதனைப் பெற்றுக் கொண்டார்.

என் அம்மாவை விழுங்கிய சனியை விழுங்கியபடியே ஞாயிறு விடிகிறது.

எட்ட முடியாத வானத்தை எட்டிப் பிடிச்ச சூரியன் மெல்ல மெல்லமாக முகம் காட்டுகிறான்.

எம் அம்மா விட்ட மூச்சுக் காற்றை விழுங்கி விட்டு “கம்” என்று நிமிர்ந்து நிற்குது ஆகாயம்.

“என்ர பிள்ளை என்னிடம் வந்தாச்சு என பூமித்தாய் பூரித்து நிற்கின்றா”

என்ர அம்மா என்னிடம் இல்லையே.. எங்கட அக்கா எங்களிடம் இல்லையே... அம்மா வளர்த்த குஞ்சுகள் அத்தனையும் பரிதவிக்குதுகள்...

எம்மைச் சுமந்த அம்மாவை சுமந்து வருகிறது வெள்ளை நிற வான்.

என் நெஞ்சாங்கூட்டுக்குள் நெருப்பு பிடித்து பத்தி எரியுது உடம்பெல்லாம்.

யாரைக் கூப்பிட...

அயிகிரி நந்தினி நந்தித மேதினி

விச்வ வினோதினி நந்தநுதே

கிரிவர விந்த்ய சிரோதி நிவாஸினி

விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணு நுதே

பகவதி ஹே சிதிகண்ட குடும்பினி

பூரிகுடும்பினி பூரிக்ருதெ

ஜய ஜய ஹே மஹிஷாஸுர

மர்தினிரம்ய கபர்தினி சைலஸுதே

வா.. தாயே வா...

கண்களை மூடிக் கொண்டு அவளைக் கூப்பிடுகின்றேன்.

வீட்டுச் சுவரில் என்னை மறந்தபடி சாய்ந்தபடி இருந்த என்னை "கொஞ்சம் விலத்துங்கள்" என்ற குரல் கேட்டு நிமிர்கின்றேன்.

அம்மாவின் பெட்டியை கட்டிலில் வைத்து அதனைத் திறக்கின்றார்கள்.

சிப்பிக்குள் முத்தாக அந்தப் பெட்டிக்குள் அம்மா!

பெட்டியைத் திறக்க அதுவே கட்டிலாக விரிகிறது...

வெள்ளைக் கலையுடுத்து

வெள்ளைப் பணிபூண்டு

வெள்ளைக் கமலத்தில்

வீற்றிருக்க என்னைச்

சரியாசனத்தில் வைத்த

அந்தத் தாய்...

பச்சை சேலை உடுத்து

பக்குவமாய் கண்ணாடி போட்டு

உச்சிக் கொண்டையில்

நான் சூட்டி விட்ட

துளசி மணமணக்க...

மௌன குருவாக....

மரண ஒலம் ஊர் எல்லாம் ஒலிக்கத் தொடங்குகிறது.

ஊரில் இருந்து லோஞ்சி பிடிச்சு...அங்கிருந்து வான் பிடிச்சு எல்லாச் சொந்தங்களும் அம்மாவைத் தேடி ஓடி வருகின்றன.

துடிதுடித்த இதயங்களுடனும்...

கனகனத்த குரல்களுடன்...

கண்டங்கள் தாண்டி சோதிமாமா குடும்பம்... தம்பி மாமா குடும்பம்... சின்னமாமா குடும்பம்... பெரியய்ய குடும்ப அண்ணாமார் அக்காமார் அத்தனை பேரும்... அம்மாவைத் தேடி தொலைபேசியில் அழுதபடி...

"நீங்கதான் ஒரு குறையுமில்லாமல் லங்கா சிறிக்கு போட வேணும்" அம்மா ஜீவாக்கு இட்ட அன்புக் கட்டளை அடுத்த அடுத்த மணி நேரத்தில் உலகத்தில் உள்ள உறவுகள் எல்லாம் அறியும்படி அறிவிக்கப்படுகிறது.

ஓதுவார்கள் வந்து விட்டார்கள்.

"அம்மா தேவார திருவாசங்களைத் தான் சுவாசமாக சுவாசித்தவா"

எல்லோரும் தேவாரம் பாட வாங்கோ என பாய் போட்டு

தேவார திருவாசப் புத்தகங்களை அடுக்கி வைத்தபடி நாத உபாசனை செய்யத் தொடங்கினார் ஓதுவார்.

“சத்தியாய் விந்து சத்தி யாய் மனோன் மணிதா னாகி

ஒதது று மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி

வாயகி மாலினி வராகி சூலினி மாதற்கென்

றாயகி யாதியுடையாள் சரணம் அரணமக்கே”

அவர் பாடப்பாட...

பச்சைச் சீலையில்...

பார்வதியாய்..

லட்சுமியாய்...

சரஸ்வதியாய்...

என் குருவாய்...

என் தாயாய்...

என் அம்மா!

“நெற்றி வெறுமையாக இருக்கிறது.

அப்பா போன பின்பு அம்மாவின் நெத்தியில் அந்த பூரண நிலவான பொட்டு இல்லாது இருந்தது.

இன்று நான் நினைத்தேன்.

இவள் என் அம்மா...

இவள் சர்வ மங்கலமும் நிறைந்தவர்...

அவளுக்கு நெற்றியில் திலகம் இட வேண்டும்...

சாமியறையுள் போய் குங்குமம் எடுத்து வந்து பெரிதாக நெற்றியில் இட்டேன்.

அவாவின் கட்டிலைச் சுற்றி வேப்பிலை பரவினோம்

பவள மல்லிகையில் மாலை கட்டி கட்டிலைச் சுற்றி

தோரணமாக தொங்க விட்டோம்.

அயலவர்கள் எல்லோரும் பூப்படுக்கைகள் போல பூக்களைப் பரப்பி அம்மாவைத் தாலாட்டினார்கள்.

மீண்டும் என் நா உச்சரித்தது.

இவள் என் அம்மாவா?

“சர்வ மங்கள மாங்கல்யே சிவே

சர்வார்த்த சாதகே ”

சரண்யேத்ரியம்பகே தேவி

நாராயணி நமோஸ்துதே

என் நா மீண்டும் மீண்டும் உச்சரித்தது.

நீ என்ர பிள்ளை இல்லை

நீ சாமியிட பிள்ளை

சாமியிட பிள்ளை என்று சொல்லி வளர்த்தது இதற்குத் தானா?

மாறி மாறி தேவார ஒலிகள்..

இது கோயிலா.. மரண வீடா.. புரியவில்லை.

அம்மாவின் ஆன்மாவை

ஈடேற்ற நாம் பாடும் பஜனையா?

அது அப்படித்தானா?

இல்லவே இல்லை..

நான் போன வருசம் வந்த பொழுது அம்மா எனக்காகத் தான் சேர்த்து வைத்திருந்த பேப்பர் கட்டுகளை தந்து விட்டிருந்தா.... பல பல பத்திரிகைச் செய்திகளை எனக்கும் மிதிலா மீராக்குமாக சேர்த்து வைத்திருந்தா.

அந்தக் கட்டுக்குள் பெரியாழ்வார் பாசுரம்.

இப்ப நினைக்கும் பொழுது புரிந்தது அம்மா சொல்லாமல் சொல்லிப் போன செய்தி.

அம்மா படித்து படித்து நன்கு தேய்ந்திருந்தது அந்தப் பாசுரம் இருந்த பேப்பர்.

அம்மா தந்து விட்டதால் அதனை நான் மனப் பாடமாக்கி வைத்திருந்தேன்.

“துப்புடையாரை அடைவதெல்லாம்

சேர்விடத்தே துணையாவரென்றே

ஒப்பிலேனாகிலும் நின்னை அடைந்தேன்

ஆனைக்கு நீ அருள் செய்தமையால்

எய்ப்பு என்னை வந்து நலியும் போது

அங்கேயும் உன்னை நினைக்க மாட்டேன்.

என முடிகிறது அந்தப் பாசுரம்

மரணப் படுக்கையில் இருக்கும் பொழுது உன்னை நினைக்க என்னால் முடியாது. அதுபடியால் இப்பவே சொல்லி வைக்கிறன் - என்னை இறுதிக் காலத்தில் வந்து நீ கடைத்தேறு திருமாலே..

பூ அன்ரி சாப்பிடாமல் இருப்பதற்கு பேசினால் “நான் மேல போறதுக்கு வழி தேடினால் நீ இஞ்சை என்னை வைச்சிருக்கிறதுக்கு வழி பார்க்கிறாய்” எனப் பேசிவிட்டு தேவாரம் பாடுவாவாம்.

இரவு 2-3 மணி வரை பாடி ஓய்ந்து ஒவ்வொருவராக உறங்குகின்றார்கள்.

விசுவலிங்க மாமா அம்மாக்கு கொடுத்த திருவாசகப் பாடல்கள் ஒலித்தட்டில் இருந்து ஒலிக்கின்றன.

நான் அவற்றைக் கேட்படி அம்மாவின் கால் மாட்டில் கண் அயர்கின்றேன்.

000

# அம்மா பசிக்குது

என் தொப்புள் கொடியை வெட்டியதால் வலி பொறுக்க முடியாது கத்திக் கொண்டே இருந்தேன்.

என்னைக் குளிப்பாட்டி புதுத்துணியால் சுற்றி வெளியே நின்ற அப்பாவிடம் கொடுக்கிறார்கள்.

என் செல்வமே என அப்பா என் நெற்றியில் முத்தமிடுகிறார்.

அந்த முத்தம் என் வலிகள் எல்லாத்தையும் மறைத்து விட்டது.

சூரியன் இறங்கி பூமியை முத்தமிடுவது போல இருந்தது.

என்னை மாறி மாறி எல்லோரும் தூக்கி ஆனந்திக்கின்றார்கள்.

குகனுக்கும் சிவஞானத்திற்கும் தந்தி அடிக்க வேணும் என அப்பா போகின்றார்.

ஐயா.. பெரியய்யா... சோதி மாமா.. தம்பி மாமா எல்லோருக்கும் சொக்கிலேற் கொடுக்கிறார்கள்.

"இந்தா தங்கச்சிப் பாப்பாவைத் தூக்கு" என பெரியம்மா மகேசண்ணாவிடம் என்னைக் குடுக்கிறார்.

எல்லாம் சரி!

என் அம்மா எங்கே?... நான் அம்மாவைத் தேடு கின்றேன்...அம்மா பசிக்குது.. தொப்புள் கொடியையும் வெட்டிப் போட்டார்கள்.. எனக்கு சாப்பாடு இல்லை.. எனக்கு பசிக்குது... அம்மா எங்கே?...

"தாய்க்கு மயக்கம் தெளிய 5,6 மணித்தியாலம் ஆகும்...." யாரோ ஒரு நேர்ஸ் சொல்லிறா..

ஐயோ அம்மா...

எழும்பம்மா... அம்மா.. எழும்பம்மா...

நான் என்ன செய்ய?

000

எப்படி அயர்ந்தனோ தெரியாது.

நெஞ்சு படபடக்க எழும்புகின்றேன்.

"டம்பட்ட... டம்பட்ட... டம்பட்ட..."

பறைமேளம் வந்து விட்டது.

திங்கள் கிழமை விடிந்து விட்டது.

என் கைகள் மீண்டும் பதறுகின்றன.

இதயம் படபடக்கிறது.

என் உடலும் உயிரும் என் கட்டுப்பாட்டில் இல்லை.

ஊரிலிருந்து சொந்தங்கள் வந்தபடி உள்ளன.

ஆண்பிள்ளைகள் முழுகி விட்டு வாருங்கள்.

கிரியைக்கு குருக்கள் வரப் போறார்.

நானும் முழுகி விட்டு அவர்களுக்குப் பக்கத்தில் போய் இருக்கின்றேன்.

3, 4 பரம்பரையாக சைவமாக இருந்தவர்கட்கு மரண கிரியை யுடன் அந்தரட்டி கிரியையும் செய்யலாம் என குருக்கள் சொல்லுகிறார்.

2 பந்தல் போடப்படுகிறது.

"பெரியம்மா எனக்கு நெய்யும் சோறும் தந்து வளர்த்தவா. நான் தான் பெரியம்மாவைத் தூக்குவேன்" என கரன் அம்மாவைத்

தூக்கிப் போறான்...

கும்பத் தண்ணீர் கொண்டு சாமிக்கு அபிசேகம் நடப்பது போல அம்மாக்கு அபிசேகக் கிரியைகள் நடக்கிறன.

பஞ்ச வர்ணச் சேலை கட்டி....

படுக்கை எல்லாம் பூ பரப்பி...

எம் நெஞ்சை எல்லாம் வேக விட்டு...

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாய்...

சுற்றி வர மாலை போட்டு..

அம்மா மலர் படுக்கையில்...

நித்தனும் சரனும் சுண்ணம் இடிக்கின்றார்கள்.

அம்மா இரண்டு கிரியைகளின் பலன்களையும் ஒன்றாக வேண்டியபடி.. ஓம குண்டத்துப் புகையில் இருந்து கிரியையின் பலன்களை பெற்றுப் போவது போல,அக்னி சாட்சியாக சடங்குகள் எல்லாம் நடக்கின்றன.

பக்கத்து வீட்டுச் சோதி மாமா.. விசுவலிங்க மாமா... ஜீவா... இன்னும் பலர் அம்மாவுக்கு கண்ணீர் அஞ்சலிகள் படிக்கின்றார்கள்.

ஜீவா எங்கள் குடும்பத்தின் சார்பாக அம்மாவின் மூத்த மகனாக நன்றியுரை ஆற்றுகிறார்.

என் அடி வயிற்றில் வலி...

அக்கினி பிழம்பாக எரிகிறது..

அம்மா.. அம்மா... நான் அழுகின்றேன்.

என் தொப்புள் கொடி எங்கே...

என் தொப்புள் கொடியை வெட்டி விட்டார்கள்...

அம்மா எங்கே... என் வயிறு துடிக்குது....

அந்தரட்டி கிரியை செய்த ஆன்மாக்கு அழுகுரல் கேட்கப் படாது. எனவே எல்லோரும் நமசிவாய சொல்ல வேணும்

நம சிவாய

ஓம் நமசிவாய

சிவாய நம ஓம்...

சிவ சிவ சிவ சிவ

சிவாய நம ஓம்

கர கர கர கர

கராய நம ஓம்

நமச்சிவாய

ஓம் நமச்சிவாய...

ஓம் நமச்சிவாய...

நமச்சிவாய மந்திரம் வானை முட்டுது

அம்மாவை பெட்டியுள் வைக்கின்றார்கள்.

பிள்ளை அழப்படாது...

நமச்சிவாய.. சிவாய நம ஓம்...

அதுதான் அவா...என்ர அம்மா எங்கே..

அவ சாமியிட்ட போயிட்டா...

அவாவே சாமியாகிப் போட்டா...

நமசிவாய... சிவாய நம ஓம்.. ஓம்.. ஓம்.. நமச்சிவாய..

சரன் கொள்ளிக் குடம் தூக்குகின்றான்...

நித்தன் பின்னால் போகின்றான்..

நான் வெளிவாசல் கதவு வரை பின்னால் ஓடிப் போகின்றேன்.

கேற்றுக்குப் பக்கத்தில் இருந்த வேலி யைப் பிரித்து அம்மாவை

வெளியே கொண்டு போகின்றார்கள்.

"நமச்சிவாய "மந்திரம் வானை முட்டுது.

எல்லாச் சனமும் ஒத்து ஓதுகிறார்கள்.

"நமசிவாய... சிவாய நம.. நம ஓம்...

சிவ சிவ சிவ சிவ சிவாய நமஓம்"

தேர்த் திருவிழாவில் சாமி போறது போல இருக்குது.

சரி.. அம்மா எங்கே...

மேளம் இப்ப அடிக்க வேண்டாம்.

"றோட்டுத் தாண்டி சுடலையில் அடிக்கலாம்" குருக்கள் சொல்லுகின்றார்.

"சிவ சிவ சிவ சிவ

சிவாய நம ஓம்" வந்த அனைவரும் விண்ணை முட்ட

ஓதுகின்றார்கள்.

மூளாய் ஆஸ்பத்திரியில் தொப்புள் கொடி அறுபட்டு ஒரு குழந்தை... அனாதையாய் ஆதரவற்று வன்னி ஒழுங்கையில் அதே குழந்தை...இரண்டும் தொப்புள் கொடி அறுந்து!

எங்கே என் அம்மா?

அம்மா வலிக்குது...

என் அம்மா... நீ எங்கே??

"நான் உன்ரை அம்மா இல்லை!

நீ சாமியிட பிள்ளை..."

சொன்னது யாரு?

சாமியா?

அம்மாவா?

*அம்மா சாமியா?*

*அரங்காத்து அம்மாவா?*

*அம்மையே அப்பாவா?*

*தாயுமானவா... தந்தையானவா... அப்பா... அம்மா... எங்கே போனீர்கள்...*

*நானும் நித்தனும் சரனும் உங்கட பிள்ளைகளில்லையா...*

*சாமியிட பிள்ளைகளா?*

*அம்மையே அப்பா அரங்கத்து அம்மா*

*பிறப்பறுக்கும் பிஞ்ஞுகன்*

*தன் பெய்கழல்கள் வெல்க!*


*புறந்தார்க்குச் சேயோன்*

*தன் பூங்கழல்கள் வெல்க!!*

*காற்றில் கலந்து...*

*மாணிக்கவாசகர்.... எம்மைக் கட்டி அணைக்கின்றார்...*

*000*



சுபத்திரையின் கர்ப்பத்திலிருந்த போதே
அபிமன்யு கேட்கும் திறன்
பெற்றிருந்தான் என்கிறது மகாபாரதம்
இந்த இதிகாச அறிவியல் ருசுப்
படுத்துகிறது. அதன்படி பார்த்தால்
கலாநிதியும் கருவில் வாசம்
செய்கையிலே புறவுலகச்
சலசலப்புகளைக் கேட்டிருக்க நியாயம்
உண்டு. உள்ளும் புறமுமாக இருந்த
பழக்க வாசனை காரணமாகத் தானோ
என்னமோ கனவை நிமித்தமாக
வைத்துக் கொண்டு, தாம் குடியிருந்த
கோயிலுக்குள் அடிக்கடி போய் வருகிறார்.

முனைவர் ஹரி. பாலசுப்பிரமணியம்
முன்னாள் வருகைதரு பேராசிரியர்
ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம்
புதுடில்லி